# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி.

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

**முதுகலை நான்காம் பருவம்**

## தொல்காப்பியம் - பொருளதிகாரம்

**(பின் நான்கு இயல்கள்)**

# STAM42


முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா

உதவிப் பேராசிரியர்

தமிழியல்துறை


**2025– 2026**


மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி.

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்

## பொருளடக்கம்


1. மெய்ப்பாடுகள் - 3 - 28
2. உவமையியல் - 29 - 48
3. செய்யுளியல் - 48 - 182
4. மரபியல் - 183 - 213

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்

## *1. மெய்ப்பாட்டியல்*

செய்யுளில் அமைந்துள்ள சுவையே மெய்ப்பாடு எனப்படும். அச்சுவை மெய்யின்கண் புலப்பட நிற்றலின் மெய்ப்பாடாயிற்று. இது நாடகத்திலிருந்து இலக்கியத்திற்கு வந்தது என்பர். நாடகம் என்னும்போது காணப்படும் பொருளும் காண்பவரும் முக்கிய அடிப்படையில் தோன்றுவதாகும். 'சுவை என்பது காணப்படு பொருளால் காண்பவர் உள்ளத்தில் தோன்றும் விகாரம்' என்னும் இளம்பூரணர் கூற்றும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப" (மெய்ப்-3)

என நகையை முதற்கண் நிறுத்தி மெய்ப்பாடுகள் எட்டு எனக் கூறுகின்றார்.

நகை, அழுகை (அவலம்), இளிவரல் (இழிப்பு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (உருத்திரம்) உவகை (காமம்), நடுநிலைமை (சாந்தம்) என்னும் ஒன்பது சுவைகளுள் நடுநிலைமை. விகாரத்தைத் தோற்றுவிக்காமையால் அஃது இலக்கியத்தில் முதன்மை வகை மெய்ப்பாட்டின் கண் அடங்காதாயிற்று. அஃதொழிந்து எண்வகைச் சுவையும் எள்ளல் முதல் விளையாட்டு ஈறான் முப்பத்திரண்டு பொருளால் மெய்ப்பாடாக வெளிப்படுதல் இயற்கை. எனவே நகை முதலாக உவகை ஈறாகவுள்ள எட்டும் இலக்கியத்துக்குரிய மெய்ப்பாடுகள் என்பது தொல்காப்பியர் கருத்து.

நாடகத்தில் சுவைபட நடிப்பவன் அக்காட்சியைக் காண்பவரிடத்தும் அச்சுவை வெளிப்படுமாறு நடித்தாற்போல, செய்யுளைப் படைப்பவனும் அச்செய்யுட்பொருள் படிப்பவரிடத்து உணர்வு வெளிப்படும்படிச் சுவையுடன் படைக்க வேண்டுமாதாலால் மெய்ப்பாடு என்பது செய்யுட்குரிய இன்றியமையாத உறுப்புகளில் ஒன்னறாகத் தொல்காப்பியரால் கருதப்பட்டு அதன் விரிவினை மெய்ப்பாட்டியலில் தெளிவுற விளக்குகின்றார்.

நாடகச் சுவையும் சுவைக்குறிப்பும்

இலக்கியத்தில் பயன்பாடு

பண்ணைத் தோன்றிய எண்ணாக்கு பொருளும்

கண்ணிய புறனே நானான் கென்ப.

(இ-ள்) நாடகமாகிய விளையாட்டாயத்தின் கண் தோன்றிய முப்பத்திரண்டு பொருளையும் குறித்து அதன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று கூறுவர்.

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளாவன: நகை, அழுகை (அவலம்), இளிவரல் (இழிப்பு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (உருத்திரம்) உவகை (காமம்), நடுநிலைமை (சாந்தம்) என்னும் ஒன்பான் சுவைகளில் நடுவுநிலைமை நீங்கலாகவுள்ள எட்டு சுவைகளும் தோன்றுவதற்கு ஏதுவாகிய எள்ளல் முதல் விளையாட்டு ஈறாகவுள்ள முப்பத்திரண்டு பொருள்களுமாகும் என்பர் இளம்பூரணர். அவை,

“எள்ளல் இளமை பேதைமை மடனென்று

உள்ளப் பட்ட நகைநான் கென்ப”

முதலாக எட்டு நூற்பாவின்கண் கூறப்படும்.

**முப்பத்திரண்டு பொருளையும் குறித்துப் புறனாகத் தோன்றும் பதினாறு பொருள்:**

முப்பத்திரண்டு பொருளையும் குறித்து அதற்குப் புறனாய்த் தோன்றும் பொருளாவன, நகை முதலிய சுவையும் அவற்றது குறிப்புமாம். மருட்கை என்பது வியப்பு எனினும் அற்புதம் எனினும் ஒக்கும். உவகை எனினும் காமம் எனினும் சிங்காரம் எனினும் ஒக்கும். அழுகை எனினும் அவலம் எனினும் கருணை எனினும் ஒக்கும். வெகுளி என்னும் உருத்திரம் எனினும் ஒக்கும். நடுவுநிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும்.

**சுவை என்பதற்கு விளக்கம்:**

சுவையென்பது காணப்படு பொருளால் காண்பவர் உள்ளத்தில் உண்டாகும் விகாரம் (வேறுபாடு) என்பர் இளம்பூரணர். காணப்படு பொருள், காண்போர் என்னும் இருதிறமும் இணையும் போது சுவை தோன்றுகின்றது.

**குறிப்பு, சுவையுள் அடங்கி வருதல்:**

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட சுவையும் சுவைக் குறிப்புமாகிய பதினாறு பொருளும் எட்டென வரும் பக்கமும் உண்டு.

அ∴தாவது குறிப்பு எட்டனையும் சுவையுள் அடக்கிச் சுவை எட்டெனக் கூறுதல். ஆவையாவன: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன.

**எட்டுவகை மெய்ப்பாடுகள்**

(அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை)

நகையே அழுகை இனிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப.

(இ-ன்) நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று கூறுவர்.

**நகை தோன்றும் பொருள்**

எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைதான் கென்ப.

(இ-ள்) எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்று சொல்லப்பட்ட நான்கும் நகை தோன்றுவதற்குரிய பொருளாகும் என்பர்.

| | | |
|---|---|---|
| எள்ளல் | - | பிறரால் இகழப்படுதல் |
| இளமை | - | குழவித் தன்மை, அஃதாவது சிறு குழந்தைகள் பேச்சும் செயலும். |
| பேதைமை | - | கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல். |
| மடன் | - | பொருண்மையறியாது திரியக் கொள்ளுதல். |

**அழுகை தோன்றும் பொருள்**

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

(இ-ள்) இழிவு, இழவு, அசைவு, வறுமை என்று சொல்லப்பட்ட நான்கும் கேடில்லாத கோட்பாட்டினையுடைய அழுகை தோன்றும் பொருளாகும்.

| | | |
|---|---|---|
| **இழிவு** | - | பிறர் தன்னை எளியனாக்குதலால் பிறப்பது |
| **இழவு** | - | உயிரானும் பொருளானும் இழத்தல் |
| **அசைவு** | - | தளர்ச்சி. அதாவது தன்னிலையில் தாழ்தல் |
| **வறுமை** | - | நல்குரவு |

**இளிவரல் தோன்றும் பொருள்**

மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.

(இ-ள்) மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்று சொல்லப்பட்ட நான்கும் திட்பமுற வந்த இளிவரல் தோன்றும் பொருள்களாம்.

இந்நான்கு பொருளும் தன்மாட்டுத் தோன்றினும் பிறர் மாட்டுத் தொன்றினும் இளிவரல் பிறக்கும்.

மூப்பு - முதுமை

(எ-கா) "தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று" - (நாலடி -15)

இது பிறர்மாட்டு மூப்புபற்றி இளிவரல் தோன்றியது.

**பிணியென்பது–** பிணியுறவு கண்டு இழித்தல் அதனால் உடம்பு தூயதன்று என இழித்தலும் ஆகும்.

(எ-கா) "மாக்கேழ் மடநல்லாய் என்றாற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை – யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்" (நாலடி -41)

**வருத்தம்** - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தால் இழிவு பிறப்பது.

(எ-கா) "செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று" (குறள் - 1255)

இது பிறர் வருத்தம் கண்டு இழிப்புப் பிறந்தது.

(எ-கா) "தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே" (புறம் - 74)

இது தன்மாட்டு வருத்தத்தான் இழப்புப் பிறந்தது. மென்மையென்பது நல்குரவு. இஃது இல்லாமையால் வரும் இழிப்பு.

(எ-கா) "அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்" (குறள் - 1047)
"இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்" (குறள் - 1044)

என வரும்.

**மருட்கை தோன்றும் பொருள்**

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
முதிமை சாலா மருட்கை நான்கே.

(இ-ள்) புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்று சொல்லப்பட்ட நான்கும் அறிவொடு பொருந்தாத மருட்கை தோன்றும் பொருளாம்.

**புதுமையாவது** - எவ்விடத்தும் எக்காலத்தினும் காணப்படாததோர் பொருளைக் கண்டவித்து வியத்தல். அது, கந்திருவர் அந்தரம் செல்வதுகண்டு வியத்தல் போல்வன.

**பெருமையாவது** - இதுவரைக் கண்டிராத பெரிய பொருள் கண்டு வியத்தல். அவை, மலையும் யானையும் செல்வமும் மன்பு கண்ட அளவின் மிக்கவழி வியப்பு வரும்.

**சிறுமையாவது** - நுண்ணியன கண்டு வியத்தல். அது,கடுகின்கண் பலதுளை போல்வன.

**ஆக்கம்** என்பது - ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல். அது தன்னளவன்றித் தான் சார்பொருள் காரணம் கண்டு வியத்தலும் (நன்னிலம் சார்பாகச் செழித்தோங்கிய மரம் கண்டு வியத்தல்), காரணம் உணராது ஒன்றன் ஆக்கம் கண்டு வியத்தலும் (நல்கூர்ந்ததான் யாதென்றும் இலாதான் ஆக்கமுற்றானாயின் அதற்குக் காரணம் உணராதான் அது கண்டு வியத்தல்), இளையான் வீரங்கண்டு வியத்தலும் போல்வன.

'மதிமை சாலா மருட்கை' என்றதனால் அறிவுடையோர் இப்பொருட்கள் கண்டு வியவார் என்றவாறு.

(எ-கா) "பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்
கட்புலங் காண விட்புலம் போயது
இறும்பூது போலும்அஃ. தறிந்தருள் நீயென" (சிலப். பதிகம்)

என்றது புதுமை பற்றி வந்த மருட்கை.

**அச்சம் தோன்றும் பொருள்**

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.

(இ-ள்) அணங்கு, விலங்கு, கள்வர், தம் இறை என்று சொல்லப்பட்ட நான்கும் மாறுபடுதல் இல்லாத அச்சம் தோன்றும் பொருளாம்.

| | | |
|---|---|---|
| அணங்கு | - | தெய்வமும், பேயும், பூதமும், பாம்பும் போல்வன. |
| விலங்கு | - | அஞ்சத்தக்கனவாகிய சிங்கம், புலி போல்வன. |
| கள்வர் | - | ஆறலைப்போர், தீத்தொழில் புரிவோர். |
| இறை | - | அரசன். அவன் கொடுங்கோலனாய் வழியும் தன்பால் தவறு நேர்ந்த வழியும் அவனால் அச்சம் தோன்றும். |

'பிணங்கால் சாலா அச்சம்' என்றது. நடுக்கம் முதலியன உளவாதற் பொருட்டு பிணங்கல் சாலுமாயின் அவை உளவாக என்பது இளம்பூரணர் குறிப்பு.

(எ-கா) "மையல் வேழம் மடங்கலின் நெரிதர
உய்விடம் அறியே மாகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெளிப்ப நாண்மறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
குருறு மஞ்ஞையின் நடுங்கி" (குறிஞ்சி 165 – 169)

இது விலங்கு பற்றி வந்த அச்சம்.

**பெருமிதம் தோன்றும் பொருள்**

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.

(இ-ள்) கல்வி, தறுகண்மை, புகழ்மை, கொடை என்று சொல்லப்பட்ட நான்கும் பெருமிதம் தோன்றும் பொருளாம்.

பெருமிதம் என்பது தன்னைப் பெரியவனாக நினைத்தல்.

| | | |
|---|---|---|
| கல்வி | - | தவம் முதலாகிய வித்தை. |
| தறுகண்மை | - | அஞ்சத்தக்கன கண்டும் அஞ்சாமை |
| இசைமை | - | (புகழ்) பழியொடு வருவன செய்யாமை |
| கொடை | - | (ஈகை) உடல் பொருள் ஆவி எதுவாயினும் கொடுத்தல். |

(எ-கா) "ஊறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வந்த நின்னொடு

பாங்கலா வீரர் படை”. (புறப். வே: 7-8)

இது தறுகண்மை பற்றி வந்த பெருமிதம்.

**வெகுளி தோன்றும் பொருள்**

உறுப்பறை குடிகோள் அலைகொலை யென்றா
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

(இ-ள்) உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்று சொல்லப்பட்ட நான்கும் வெறுப்பின் வந்த வெகுளி தோன்றும் பொருள்களாகும்.

| | | |
|---|---|---|
| உறுப்பறை | - | கை, கால், கண் முதலாய அங்கங்களைக் குறைத்தல். |
| குடிகோள் | - | கீழ் வாழ்வாரை நலிதல் |
| அலை | - | வைதலும் புடைத்தலும் |
| கொலை | - | அறிவும் புகழும் உயிரும் என்பவற்றைக் கொல்லுதற்கு ஒருப்படுதல் |

**ஊடற்கண் தோன்றும் வெகுளி**

ஊடற்கண் வெகுளி தோன்றுமாயின், அ∴து இன்பத்துக்குக் காரணமாதலால் தலைமகள் புருவ நெளிவும் வாய்த்துடிப்பும் கண்ட தலைவற்கு வெகுட்சி பிறவாது உவகையே பிறக்கும். அதனால் அதுவெகுளிச்சுவையாகாது.

“ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்” (குறள் - 1330)

என்னும் நாயனார் கூற்றும் அதுவேயாகும்.

(எ-கா) “உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமோ
பொருங்ககப் படேஎ னாயின்” (புறம் - 72)

இது கொலை பற்றி வந்த வெகுளி.

**உவகை தோன்றும் பொருள்**

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே.

(இ-ள்) செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்று சொல்லப்பட்ட நான்கும் துன்பம் தவிர்த்த உவகை தோன்றும் பொருள்களாம்.

**செல்வம்** என்பது நுகர்ச்சி

**புலன்** என்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை.

**புணர்வு** என்பது காமப் புணர்ச்சி.

**விளையாட்டு** என்பது ஆறும் குளமும் காவும் ஆடிப்பதியிகந்து வருதல்.

## அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகிய வேறுசில மெய்ப்பாடுகள்

ஆங்கவை ஒருபால் ஆக வொருபா லாக
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனா அக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுஉயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே.

(இ-ள்) மேல் நகை முதல் உவகை ஈறாகிய எட்டு மெய்ப்பாடுகளும் அவற்றிற்கு அங்கமாகிய முப்பத்திரண்டு பொருள்களும் ஒருபுறம் இருக்க, ஒரு புறமாக உடைமை முதலாக நடுக்கம் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு பொருள்களும் உள. இப்பொருள்களும் மேற்கூறப்பட்ட எட்டு மெய்ப்பாடுகளுக்கு ஏதுவாகவிடத்து மெய்ப்பாடாம் உரிமை பெற்றுவரும்.

## உடைமை முதலாகிய மெய்ப்பாடுகள்

**உடைமை** - யாதானும் ஒரு பொருளை உடையவனாயிருத்தலால் வருதலாகும் மனநிகழ்ச்சி.

(எ-கா) "நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது" (புறம் - 72)

என வரும்.

**இன்புறல்:** நட்புக் கொண்டவர் தொடர்ந்து உடனிருக்கும் வாய்ப்பின்றி பிரிந்திருந்து, மீண்டும் வந்த போது காண்டலால் உண்டாகும் மனநிகழ்ச்சி போன்றது.

(எ-கா) விட்டகன் நுறைந்த நட்டோர்க் கண்ட
நாளினும் இனிய நல்லாள்"

எனக் காமநுகர்ச்சியின்றி வரும் இன்புறல்.

**நடுவுநிலைமை:** ஒரு பக்கம் சாயாது நிகழும் மனநிகழ்ச்சி.

(எ-கா) “சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க் கணி” (குறள் - 118)

என வரும்.

**அருள்:** எல்லா உயிர்க்கும் அளி செய்தல்.

(எ-கா) “அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்” (கலித் - 11)

என்றாற்போல வருவது.

**தன்மை:** சாதியியல்பு பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கும் தனியியல்பு.

(எ-கா) “வயலைக் கொடியின் வாடிய மருங்குல்

உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்” (புறம் - 315)

என்பது பார்ப்பான் இயல்பு.

“புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய

எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்

மறலி யன்ன களிற்றின்மிசை யோனே” (புறம் - 13)

என்பது அரசர் இயல்ப.

“காயாம்பூக் கண்ணிக் கருந்துவ ராடையை

மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோர்

ஆயனை யல்லை” (கலித். – 108)

என்பது இடையர் இயல்பு.

“தேனொடு நீடு மயிற்குற மாக்கள்”

என்பது குறவர் இயல்பு.

**அடக்கம்:** மனம், மொழி, மெய் இவற்றால் அடங்கி நடத்தல். அது பணிந்த மொழியும், தணிந்த நடையும், தன்னை அடக்கலும் வாய்ப்புதைத்தலும் போல்வன.

(எ-கா) “ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து” (குறள் - 126)

“யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு” (குறள் - 127)

“நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்

மலையினும் மாணப் பெரிது” (குறள் - 124)

என்றாற் போல்வன.

**வரைவு:**செய்யத் தகுவனவும் தவிரத் தக்கனவும் வரையறை செய்து கொண்டு ஒழுகும் ஒழுக்கம்.

(எ-கா) பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை

கண்விழைந்து கையுறினும் காதல் பொருட்கின்மை" (திரிகடுகம் - 29)

என்றாற்போல வருவன.

**அன்பு:** பழகியோர்மாட்டுச் செல்லும் காதல்.

(எ-கா) "புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை

அகத்துறுப் பன்பி லவர்க்கு" (குறள் - 79)

என வரும்.

**கைம்மிகல்:** குற்றமாயினும் குணமாயினும் அளவில் மிகுதல்.

(எ-கா) "காதல் கைம்மிகல்" (தொல். மெய்ப்பாட். -23)

"குணனிலனாய்க் குற்றம் பலவாயின்" (குறள் - 868)

என வரும்.

**நலிதல்:** பிறரை நெருக்குதல்.

(எ-கா) "பகைநலியப் பாசறையு ளான்" (நெடுநல்,வெண்பா)

என வரும்.

**சூழ்ச்சி:** எண்ணம்

(எ-கா) "சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்

சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" (குறள் - 445)

என வரும்.

வாழ்த்தல்: பிறனை வாழ்த்துதல்

(எ-கா) "வாழியாதன் வாழி" (ஐங்குறு. – 1)

"எங்கோ வாழிய குடுமி" (புறம். – 9)

என்பன.

வைதலும் மெய்ப்பாடாகாதோ எனின் அது வெகுளியின் முதிர்ச்சி. அவ்வாறாயின் இஃது அன்பின் முதிர்வாகாதோ எனின், அன்பின்றியும் அரசன் முதலாயினோரைச் சான்றோர் வாழ்த்துதலின் அதன்கண் அடங்காதென்க எனத் தெளிவுறு விளக்கம் தருவர் இளம்பூரணர்.

**நாணல்:** தமக்குப் பழி வருவன செய்யாமை.

(எ-கா) "பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)

உறைபதி என்னும் உலகு" (குறள் - 1015)

"நாணால் உயிரைத் துறப்பார் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்" (குறள் - 1017)

என வரும்.

**துஞ்சல்:** உறக்கம். அது நடந்து வருகின்றான் கண்ணும் விளங்கத் தோன்றலின் மெய்ப்பாடாயிற்று என்பர்.

(எ-கா) "……………….முனிவின்றி
நனந்தலை உலகமும் துஞ்சும்" (குறுந். – 6)

என வரும்.

**அரற்று:** உறக்கத்தின்கண் வரும். வாய்ச்சோர்வு. ஆத இயல்பான சொல்லின் வேறுபடுதலின் அரற்று என ஒரு மெய்ப்பாடாயிற்று.

(எ-கா) "பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப்பி யானை விலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்றும் அளவு" (கலித். – 24)

என வரும்.

**கனவு:**உறக்கத்தின்கண் வாய்வெருவுதல். இதனால் அவர் உள்ளத்துக்கண் கிடப்பதொன்றுண்டென உணரப்படுதலின் மெய்ப்பாடாயிற்று.

கனவுநிலை நனவுபோலாமையின் மெய்ப்பாடாயிற்று என்பர் இளம்பூரணர்.

(எ-கா) "நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது". (குறள் - 1215)

முனிதல்: வெறுத்தல்.

(எ-கா) "காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர் தரீஇச் சென்ற
மல்லல் ஊரன் மெல்லினன் பெரிதென
மறுவஞ் சிறுவர் தாயே
தெறுக அம்மஇத் திணைப்பிறத் தல்லே".

இது குடிப்பிறத்தலை வெறுத்துக் கூறியது.

**நினைத்தல்:**கழிந்தனை நினைத்தல். அது மறந்தாங்கு மறவாது பின்பும் தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

(எ-கா) "நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்

சினைப்பது போன்று கெடும்" (குறள் - 1203)

என வரும்.

வெரூதல்: அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதோர் குறிப்பு.

(எ-கா) "ஒரூஉ நீ எங்கூந்தல் கொள்ளல்யா(ம்) நின்னை

வெரூஉதும் காணுங் கடை". (கலித். 87)

என்ற வழி இஃது அச்சத்தின் வேறுபடுதலைக் காணலாம்.

**மடி:**சோம்பல்.

(எ-கா) "மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்

கடிமை புகுத்தி விடும்" (குறள் - 608)

என்ற வழி மடியென்பதோர் மெய்ப்பாடுண்மை உணரலாம்.

**கருதல்:** குறிப்பு.

(எ-கா) "குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்

சிறக்கணித்தாள் போல நகும்" (குறள் - 1095)

**சிறக்கணித்தல்** - சுருக்குதல். தலைவி கண்ணை நேரே வைத்துப் பார்க்காமல் ஒரு கண்ணைச் சுருக்கி வைத்துப் பார்ப்பதால் தன்பால் அவளுக்கு அன்பு உண்டு என்னும் குறிப்பினைத் தலைவனுக்கு உணர்த்தலின் மெய்ப்பாடாயிற்று.

**ஆராய்ச்சி:** ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்து என ஆராய்தல்.

ஆய்தல் எனினும் தெரிதல் எனினும் நாடல் எனினும் ஒக்கும்.

(எ-கா) "நன்மையும் தீமையும் நாடி நலம்புரி" (குறள் - 511)

"ஆயும் அறிவினார்" (குறள் - 918)

"தேரான் பிறரைத் தெளிந்தான்" (குறள் - 508)

என்பனவற்றுள் ஆராய்தல் என்பது தோற்றியவாறு காணலாம்..

**உயிர்ப்பு:** முன்பு விடும் அளவினன்றி சுவாதம் நீளவிடுதல் நெடுமூச்சு.

(எ-கா) "…………………….. பானாட்

பள்ளி யானையின் உயிர்த்தென்

உள்ள மின்னுந் தன்னுழை யதுவே" (குறுந். – 142)

என வரும்.

**கையாறு:** காதலர் பிரிந்தால் வரும் துன்பமும் அந்நிகரனவும் வருவது.

(எ-கா) "தொடிநிரைமுன்கையாள் கையாறு கொள்ளாள்

குடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ" (கலித். – 24)

ஏன வரும்.

**இடுக்கண்:** துன்பமுறுதல். கையாறாவது இன்பம் பெறாமையால் வரும் துன்பம். இடுக்கணாவது துன்பமாயின வந்தறுதல்.

(எ-கா) “அடுக்கி வரினும் அழிவிலா னுற்ற

இடுக்கண் இடுக்கட் படும்”. (குறள் - 625)

**பொச்சாப்பு:** மறத்தல்.

(எ-கா) “பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த

மாசறு காட்சி யவர்.” (குறள் - 199)

என்பதனால் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

**பொறாமை:** பிறர் ஆக்கம் கண்டவழி அதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி.

(எ-கா) “அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்

தீயுழி உய்த்து விடும்” (குறள் - 168)

என்ற வழி அழுக்காறென ஒரு மெய்ப்பாடு தோன்றியது.

**வியர்த்தல்:** தன் மனத்து வெகுட்சி தோன்றியவழிப் பிறப்பதோர் புழுக்கம்.

(எ-கா) “பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்

துள்வேர்ப்பர் ஒள்ள ியவர்” (குறள் - 108)

இதன்கண் உள்வேர்ப்பர் என்றதனால் மனநிகழ்ச்சி தோன்றியது.

**ஐயம்:** ஒரு பொருளைக் கண்டவழி இதுவெனத் துணியாத நிலைமை.

(எ-கா) “அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை

மாதர்கொல் மாலும்என் நெஞ்சு” (குறள் - 108)

என்றவழி ஐயம் ஏற்பட்டது.

**மிகை:** ஒருவனைத் தம் மனச்செருக்கினால் நன்கு மதியாமை.

(எ-கா) “மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்

தகுதியான் வென்று விடல்” (குறள் - 158)

**இதன்கண் ‘மிகுதி’** என்பது நன்கு மதியாத் தன்மையைச் சுட்டுகிறது.

நடுக்கம்: யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோம் என வரும் மனநிகழ்ச்சி.

(எ-கா) “கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்

நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே” (கலித். – 13)

என வரும்.

**அகத்திற்கே உரியவாகிய மெய்ப்பாடுகள்**

தொல்காப்பியர் அகத்திணைப் பகுதியாகிய களவு கற்பென்னும் ஒத்த காமத்துக்குரியனவும், கைக்கிளைக்குரியனவும் பெருந்திணைக்குரியனவுமாகிய மெய்ப்பாடுகளை கூறுகிறார்.

### களவிற்குரிய மெய்ப்பாடுகள்

#### முதலாவது அவத்தைக்கண் (காட்சி விகற்பமாகிய ஐயமும் துணிவும்) நிகழ்வன

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.

(இ-ள்) **புகுமுகம் புரிதல்** என்பது – தலைமகன் தலைமகளைப் புணர்ச்சிக் குறிப்பினனாய் நோக்க அவள் முகத்தினை மாறுபடாது விரும்பி நிற்றல்.

“கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து” (குறள் - 1085)

என்றாற்போலக் கூறியவழி தலைவி அவ்விடத்தினின்று நீங்காது விரும்பி நிற்றல்.

**பொறிநுதல் வியர்த்தல்** என்பது – முகம் புக்கவனை விரும்பிய தலைமகள் அச்சமும் நாணமும் எய்தியவழி நுதல் வியர்த்தல்.

**நகுநயம் மறைத்தல்** என்பது – அதன் பின்னர்த் தலைமகன் கூறுவன கேட்டு நகை வந்த விடத்துத் தான் நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனாகாதவாறு மறைத்தல்.

**சிதைவு பிறர்க்கின்மை** என்பது – அவ்வாறு மறைத்தவழித் தன் மனம் சிதைந்து அழிந்தமையைப் பிறர்க்குப் புலனாகாதவாறு நிறுத்தல்.

(எ-கா) “அகமலி யுவகையளாகி முகனிகுத்து
ஓய்யென இறைஞ்சி யோளே” (அகம் - 86)

என்பது தலைமகனன்றி பிறர்க்குப் புலப்படாத மனநிகழ்ச்சி.

#### இரண்டாம் அவத்தைக்கண்(வேட்கை) நிகழ்வன

கூழைவிரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.

(இ-ள்) **கூழை விரித்தல்** என்பது – மேல் நகுநயம் மறைத்தவள் தலைவன் மேல் கொண்ட வேட்கையால் வாளாது நிற்றற்காற்றாது தன் குறிப்பினை உணர்த்த வேண்டித்தன் தலைமயிரினைக் குலைத்தல். (கூழை - கூந்தல்)

**காதொன்று களைதல்** என்பது – காதிலணிந்த தொன்றை விழப்பண்ணி அதனைத் தேடுகின்றாள் போல் நிற்றல்.

**ஊழணி தைவரல்**என்பது– முறைமுறையாக அணிந்த அணியைத் தைவருதல். (தைவருதல் - தடவுதல்)

**உடைபெயர்த் துடுத்தல்** என்பது – ஆடையைக் குலைத்து உடுத்தல்.

இவை காட்சிக்குப் பின் உண்டாகும் வேட்கை காரணமாகத் தலைவியிடத்துத் தோன்றும் மெய்ப்பாடுகளாகும்.

**மூன்றாம் அவத்தைக் கண் (ஒருதலை உள்ளுதல்) நிகழ்வன**

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இவ்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

(இ-ள்) **அல்குல் தைவரல்** என்பது – உடைபெயர்த்து உடத்தவள் தனது இடுப்பின் இருபுறமும் அவ்வாடையைக் கைகளால் தடவிப் பேணிச் சரிசெய்தல்.

**அணிந்தவை திருத்தல்** என்பது – ஆடையைத் திருத்தியமைத்தாற்போல ஏனைய அணிகளையும் திருத்தியமைத்தல்.

**இவ்வலி யுறுத்தல்** என்பது –தனது இற்பிறப்புக்குரிய பெருமையை வலியுறுத்துதல். அது சார்நினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசைவில்லாரைப் போல மறுத்துக் கூறுதல்.

**இருகையும் எடுத்தல்** என்பது – அவ்வாறு மறுத்துக் கூறினும் புணர்ச்சிக் கொருப்பட்ட மனத்தினளாய் தன்னையறியாதே இருகைகளையும் மேலே எழுப்புதல்.

**நான்காம் அவத்தைக்கண் (மெலிதல்) நிகழ்வன**

பாராட் டெடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப.

(இ-ள்) **பாராட்டெடுத்தல்** என்பது – தலைமகன் நின்ற நிலையினையும் அவன் கூறிய கூற்றினையும் அவள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் எடுத்து மொழிதல்.

(எ-கா) “நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று” (குறுந். – 3)

**மடந்தப உரைத்தல்** என்பது – பெண்டிரது இயல்பாகிய மடப்பங்கெடச் சில கூறுதல். அது தலைவன் கூற்று நிகழும் வழியும் அதற்கு மறுமொழி கூறுதலன்றித் தனது வேட்கை தோன்றக் கூறுதலாகும். (தப – கெட)

**ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்** என்பது – ஊராரும் சேரியாரும் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றென நாணுதல்.

**கொடுப்பவை கோடல்** என்பது – கண்ணியாயினும் தழையாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கொள்ளுதல் மனத்தினால் உரிமை பூண்டாலல்லது பிறன்பொருள் வாங்காமையின் இதுவுமோர் மெய்ப்பாடாயிற்று.

**ஐந்தாம் அவத்தைக்கண் (ஆக்கம் செப்பல்) நிகழ்வன**

தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.

(இ-ள்) **தெரிந்துடம் படுதல்** என்பது – தலைமகன் கொடுப்பவற்றைக் கொண்ட தலைவி ஆராய்ந்து புணர்ச்சிக்கு உடன்படுதல். ஆற்றாமை பெருகுகின்ற காரணத்தால், இத்துணையும் மறுத்தவள் உடன்படுதல் இயல்பாகின்றது.

**திளைப்புவினை மறுத்தல்** என்பது – விளையாட்டாயமொடு திரிபவள் இப்பொழுது வேட்கையுற்று நலிதலால் அவர்களோடு விளையாடுதலை மறுத்தல்.

**கா்ந்திடத்தொழிதல்** என்பது – தலைமகனைக் காணும் வேட்கையால் ஒளித்துப் படத்தினின்று மொழிதல். அ∴தாவது அவள் தனது முகத்தைத் திரையில் மறைத்துக் கொண்டு பேசுதல்.

**கண்டவழி உவத்தல்** என்பது – தலைவனைக் கண்டவிடத்து மகிழ்தல்.

ஆறாவது அவத்தைக்கண் (நாணுவரையிறுத்தல்) நிகழ்வன

புறஞ்செயல் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தல்
விளம்பிய நான்கே ஆறென மொழிப.

(இ-ள்) **புறஞ்செயச் சிதைதல்** என்பது – தலைமகன் கோலம் செய்யும் வழி அதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதைந்த உள்ளத்தாள் ஆதல்.

**கலங்கி மொழிதல்** என்பது - கூறும் கூற்றுக் கலக்கமுற்றுக் கூறுதல்.

**கையறவுரைத்தல்** என்பது – கலங்காது சொல்லும் போதும் செயலற்ற நிலை தோன்றுமாறு கூறுதல்.

**மெய்ப்பாடுகள் கற்பொழுக்கம் நிகழக் கரணங்களாதல்**

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஆறு அவத்தைக்கண் நிகழும் இருபத்தினான்கு மெய்ப்பாடுகளும், அவை போல்வன பிறவுமாகிய மெய்ப்பாடுகளும் நிலைபெற்ற கற்பொழுக்கத்துக்குரிய கரணம் நிகழ்தற்குக் காரணமாய் அமைவன என்று கூறுவா்.

'அன்ன பிறவும்' என்றதனால் வருவன: நோக்கானை நோக்கி இன்புறல், தனியிடை நகுதல், நோக்குங்காலைச் செற்றாா் போல் நோக்குதல், மறைந்துக் காண்டல், தற்காட்டுறுத்தல் என்பா் இளம்பூரணா்.

**கரண நிகழ்ச்சியாகிய மெய்ப்பாடுகள்**
**முற்றுப்பெறாமலே புணா்ச்சி நிகழ்தலும் உண்டு**

வினையுயிா் மெலிவிடத் தின்மையும் உரித்தே.

(இ-ள்) கற்பிற்குரிய கரண நிகழ்ச்சி, காமவேட்கை மிகுதியால் உயிர் மெலிந்தவிடத்து இல்லாமல் போதலும் உண்டு.

எனவே மேற்கூறிய மெய்ப்பாடுகள் இருபத்துநான்கும் முற்றுப்பெறும் முன்பே இயற்கைப் புணர்ச்சி நிகழும் என்றவாறாம். உயிர் மெலிவிடம் என்றமையால் ஐந்தாம் அவத்தை முதலாக இயற்கைக் கூட்டம் நிகழும் என்று கொள்ளப்படும். அதனாலேயே ஐந்தாம் அவத்தைக்கண் 'தெரிந்துடம்படுதல்' எனக் கூறினார் என்றும் கருத்துரைப்பர் இளம்பூரணர்.

**கைக்கிளைக்குரியதோர் மரபு**

அவையும் உளவே அவையலங் கடையே

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலான மெய்ப்பாடுகள் நடுவண் ஐந்திணையல்லாத கைக்கிளைப் பொருண்மைக்குரியனவாய் வருதலும் உண்டு.

**பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்**

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயம் செய்தல் அவன்தமர் உவத்தல்
அறனழித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி யுறுத்தல் உறுபெயர்க் கேட்டல்
நலத்தக நாடின் கலக்கமும் அதுவே.

இன்பத்தை வெறுத்தல் முதலாக ஈண்டுக் கூறப்பட்ட இருபதும் பெருந்திணைப்பாற்படும். இவை களவுக் காலத்துக்கும் கற்புக் காலத்துக்கும் பொருந்தும். இவை அகத்திணையியலில் கூறப்பட்ட தேறுதல் ஒழிந்த காமத்தின்பாற் படுவனவும், மிக்க காமத்துமிடலின்பாற் படுவனவும் ஆகும் என்பர் இளம்பூரணர்.

(இ-ள்) **இன்பத்தை வெறுத்தல்** என்பது – கோலம் செய்தல் முதலியவற்றை வெறுத்தலும், தென்றல், நிலவு முதலானவற்றை வெறுத்தலும் ஆகும். (கோலம் செய்தல் - அழகுபடுத்துதல்)

(எ-கா) "கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து" (குறள் - 1127)

என வரும்.

**துன்பத்துப் புலம்பல்** என்பது – துன்பத்தின் கண்ணே புலம்பறுதல்.

(எ-கா) "இன்பங் கடல்மற்றுக் காமம் அ∴தடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது" (குறள் - 1166)

என வரும்.

**எதிர்பெய்து பரிதல்** என்பது – தலைமகன் தன்முன் இல்லாதிருப்பவும் அவன் நின்றானாகப் பெய்து கொண்டு வருந்துதல். (பெய்து– படைத்து)

(எ-கா) "கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்

நுண்ணியர்எம் காத லவர்" (குறள் - 1126)

என வரும்.

**ஏதம் ஆய்தல்** என்பது – குற்றம் ஆராய்தல்.

(எ-கா) "துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு

நுட்பினுள் ஆற்று பவர்" (குறள் - 1165)

என வரும். (துப்பு– துன்பம்)

**பசியட நிற்றல்** என்பது – உண்ணாமையால் வருந்துதல்.

(எ-கா) "நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்

அஞ்சுதும் வேபாக் கறிந்து" (குறள் - 1128)

என வரும்.

**பசலை பாய்தல்** என்பது – உடம்பில் பசலை பரத்தல்.

(எ-கா) "பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்

துறந்தார் அவரென்பார் இல்" (குறள் - 1188)

என வரும்.

**உண்டியில் குறைதல்** என்பது – உணவு சுருங்குதல்.

(எ-கா) "பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு" (அகம் - 48)

என வரும்.

**உடம்பு நனி சுருங்கல்** என்பது – உண்ணாமை காரணமாகத் தன் உடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

(எ-கா) "பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்

தொல்கவின் வாடிய தோள்" (குறள் - 1234)

என வரும்.

**கண் துயில் மறுத்தல்** என்பது – உறங்காமை.

(எ-கா) "மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா

என்னல்ல தில்லை துணை" (குறள் - 1168)

என வரும். (அளித்திரா– அளித்து + இரா)

**கனவொடு மயங்கல்** என்பது – கனவை நனவென மயங்குதல்.

(எ-கா) "நனவினால் நல்காக் கொடியார் கனவினால்

என்னெம்மைப் பீழிப் பது". (குறள் - 1217)

என வரும்.

**பொய்யாக் கோடல்** என்பது – தலைவன் கூற்றினைப் பொய்யாக் கொள்ளுதல்.

(எ-கா) "வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்
மாய மருள்வா ரகத்து" (கலித். – 88)

என வரும்.

**மெய்யே என்றல்** என்பது – தலைவன் உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல்.

(எ-கா) "மெய்யே வாழி தோழி சாரல்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயத் தப்பல் ஏற்ற
கோட்டொடும் போகி யாங்கு நாடன்
தான்குறி வாராத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் தடமென் தோளே" (குறுந். – 121)
"கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே" (குறுந். – 21)

என வரும்.

**ஐயம் செய்தல்** என்பது – தலைவன் குறிப்பு கண்டு ஐயப்படுதல்.

(எ-கா) "ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும்" (கலித். – 4)

என வரும்.

**அவன்தமர் உவத்தல்** என்பது – தலைவன் தமரைக் கண்டவழி உவத்தல்.

(எ-கா) "செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்
நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவேம் மன்" (கலித். – 83)

என்பது தலைவன் புதல்வனைக் கண்டு கூறியது.

**அறனழித் துரைத்தல்** என்பது – அறத்தினை அழித்துக் கூறுதல்.

(எ-கா) "விளியுமன் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து" (குறள் - 1209)

என வரும்.

**ஆங்கு நெஞ்சழிதல்** என்பது – அறன் அழிந்துரைக்குமிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

(எ-கா) "பெறாஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
ஆறாஅ விடும்பைத்தென் நெஞ்சு" (குறள் - 1295)

என வரும்.

**எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்** என்பது – யாதானும் ஓர் உடம்பாயினும் தன்னோடு ஒப்புமை கொண்டு பேசுதல்.

(எ-கா) “புன்கண்ணை வாழி மருண்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை” (குறள் - 1222)

என வரும்.

**ஒப்புவழி உவத்தல்** என்பது – தலைமகனோடு ஒக்குமெனப்பிறதொன்று கண்டவழி உவத்தல்.

(எ-கா) “யாவருங் காணுநர் இன்மையின் செத்தனள் பேணி”

என வரும். (செத்தனள் - போலக் கருதினள்)

**உறுபெயர்க் கேட்டல்** என்பது – தலைவன் பெயர் கேட்டு மகிழ்தல்.

(எ-கா) “நகைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு” (குறள் - 1199)

என வரும்.

**கலக்கம்** என்பது – மனங் கலங்குதல்

(எ-கா) “பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழிக் காட்டிமோ
காட்டியா யாயின் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன் ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீராய் எனின்” (கலித். – 144)

இது தலைவி மனங்கலங்கி மொழிந்தது.

## அகன் ஐந்திணையாகிய அழிவிற் கூட்டத்துக்குரிய எட்டு மெய்ப்பாடுகள்

முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்.

**“ஆயிரு நான்கே அழிவிற் கூட்டம்”**

‘முட்டுவயிற் கழறல்’ முதல் ‘காதல் கைம்மிகல்’ஈறாகக் கூறப்பட்ட எட்டும் ஐந்திணையாகிய அழிவில் கூட்டத்துக்குரிய மெய்ப்பாடுகளாகும். மேல் கூறப்பட்ட புகுமுகம்

புரிதல் முதலியவற்றோடு இவற்றிடையே வேறுபாடு யாதெனின் அவையெல்லாம் மனன் அழிவு நிகழ்ந்தவழி நிகழ்வன. இவை மனன் அழியாதவழி நிகழ்வன என்பது இளம்பூரணா் கருத்து.

(இ-ள்) **முட்டுவயிற் கழறல்** என்பது – களவு இடையீடு பட்டுழி அதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றது எனக் கழறியுரைத்தல்.(இடையீடாவன– நிலவு வெளிப்படுதல், காவலா் கடுகுதல், தாய் துஞ்சாமை, ஊா் துஞ்சாமை போல்வன). கழறுதல் - இடித்துக் கூறுதல்.

(எ-கா) "………………………………..

நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்

கன்முதி புறங்காட் டன்ன

பன்முட் டின்றால் தோழிநம் களவே" (அகம் - 122)

என வரும்.

**முனிவு மெய்ந்நிறுத்தல்** என்பது புணா்ச்சியின்மையால் வரும் வெறுப்பினைப் பிறா்க்குப் புலனாகாமல் மெய்யின் கண்ணே நிறுத்தல்.

(எ-கா) "நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே

இமைதீய்ப் பன்ன கண்ணீா் தாங்கி

அமைதற் கமைந்தும் காதலா்

அமைவிலா் ஆகுதல் நோமென் நெஞ்சே" (குறுந். – 4)

என வரும்.

**அச்சத்தின் அகறல்** என்பது - இவ்வொழுக்கம் பிறா்க்கு புலனாகுமெனக் கூட்டத்தின் அகன்று ஒழுகுதல்.

(எ-கா) "……………………………

கானல் ஆயம் அறியினும் ஆனாது

அலா்வந் தன்றுகொல் என்னும் அதனால்

புலா்வது கொல்அவன் நட்பென

அஞ்சுவல் தோழிஎன் னெஞ்சத் தானே" (நற். – 72)

என வரும்.

**அவன் புணா்வு மறுத்தல்** என்பது – தலைமகன் புணா்ச்சிக்கண் வாராக் காலத்துத் தான் மனனழியாது நிற்றல்.

(எ-கா) "யாரு மில்லைத் தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீா் ஆரல் பாா்க்கும்

குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே" (குறுந். – 25)

என வரும்.

தூது முனிவின்மை என்பது – தலைவன் தூதுவிட்டவழி வெறுப்பு கொள்ளாமை.

(எ-கா) “புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்

வரையிழி யருவியின் தோன்று நாடன்

தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்

வந்தன்று வாழி தோழி நாமும்

நெய்பெய் தீயின் எதிர்கொண்டு

தாம்வரைந் தனையமென விடுகம் தூதே” (குறுந். – 106)

என வரும்.

துஞ்சிச் சேர்தல் என்பது – கவற்சியான் உறங்காமையன்றி உரிமை பூண்டமையான் உறக்கம் நிகழ்தல். (கவற்சி – ஏக்கம்)

காதல் கைம்மிகல் என்பது – அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைமிக்கு வருதல்.

(எ-கா) “கன்றும் உண்ணாது கலத்தினும் படாது

நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு

எனக்கு மாகா தென்னைக்கும் உதவாது

பசலை உணீஇயர் வேண்டுந்

திதிலை அல்கல்என் மாமைக் கவினே” (குறுந். – 27)

என வரும்.

**கட்டுரையின்மை** என்பது – தலைவன் கூற்றிற்கு மறுமொழி கூறாதிருத்தல்.

ஈண்டுக் கூறப்பட்ட எட்டும் மனன் அழிவில்லாத நடுவண் ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகளாகும் என இளம்பூரணர் கூறுவர். இவ்வெட்டும் வரைந்தெய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடுகள் என்பர் பேராசிரியர்.

அழிவிற் கூட்டத்திற்குச் செப்பிய சிறந்த பத்து மெய்ப்பாடுகள்

தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்

இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்

புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்

அருண்மிக வுடைமை அன்புமிக நிற்றல்

பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்

புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ

சிறந்த பத்தும் செப்பிய பொருளே.

இது அழவிற் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று என்பர் இளம்பூரணர்.

(இ-ள்) **தெய்வம் அஞ்சல்** என்பது – தெய்வத்திற்கு அஞ்சிக் கூறுதல்.

(எ-கா) “மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தெறூஉம் என்ப” (குறுந் - 87)

எனவும்

“நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி

யார்மேல் விளியுமோ கூறு" (கலித் - 88)

எனவும் வரும்.

**புரையறந் தெளிதல்** என்பது – தலைவனது பரத்தமை கண்டு புலவாது இதனைப் போற்றல் இல்லற மகளிர்க்குக் கடன் என்னும் அறங்கருதித் தெளிவுடன் இருத்தல்.

(எ-கா) "விரியுளைக் கலிமான் தேரொடும் வந்த

விருந்தெதிர் கோடலின் மறப்பல் என்றும்" (கலித் - 75)

இதன்கண் தலைவன் விருந்தெதிர் கொண்டு வருதலின் அவன்மீது கொண்ட ஊடலை மறப்பேன் எனத் தலைவி கடமை கூறினாள்.

**இல்லது காய்தல்** என்பது – தலைமகன்கண் இல்லாத குறிப்பினை அவன்மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

(எ-கா) "யாரினும் காலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று" (குறள் - 1314)

இதனுள் சொன்ன மாற்றத்தை வேறாகப் பொருள் கொண்டு இல்லாததனைச் சொல்லிக் காய்தல்.

**உள்ளதுவர்த்தல்** என்பது – உள்ளதனை உவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

(எ-கா) "வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்

முகையலர்ந்த தன்ன முயக்கின் தொகையின்றே

தண்பனி வைகல் எமக்கு" (கலித். – 78)

என வரும்.

**புணர்ந்துழி உண்மை** யென்பது – ஊடற் காலத்துல் புணர்ந்தவழி தன் மனவிருப்பத்தினை மறைத்துக் கூறாது உண்மையுடன் உரைத்தல்.

(எ-கா) "…………………… ஒளியிழாய்

ஊடி யிருப்பினும் ஊரன் நறுமேனி

கூடல் இனிதாம் எமக்கு" (ஐந்திணையைம் - 30)

என வரும்.

**பொழுது மறுப்பாதல்** என்பது – தலைவன் வரும் பொழுது நியமமின்றி மறுப்பாகும் போது அப்பொழுதினை வெறுத்துரைத்தல்.

(எ-கா) "புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்

அல்லியா கெல்லையென் றாங்கே பகல்முனிவேன்

எல்லிய காலை இராமுனிவேன் யானுற்ற

அல்லல் களைவார் இலேன்" (கலித். – 144)

என வரும்.

**அருண்மிக வுடைமை** என்பது – தலைவன் மாட்டு அருள் புலப்பட நிற்றல்.

(எ-கா) “நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்

சென்றனன் கொல்லோ தானே..........

............................................

வடுவாழ் புற்றின் வழக்கறு நெறியே” (அகம் - 88)

என வரும். அவன் போயின பின்பு இடையூறின்றிப் பெயர்ந்தனன் கொல்லென அருள் மிகுந்தது.

**அன்பு மிக நிற்றல்** என்பது – அன்பு புலப்பட நிற்றல்.

(எ-கா) “கொடியன் ஆயினும் ஆக

அவனே தோழி என்னுயிர்க்கா வலனே” (சிற்றட்டகம்)

என வரும்.

**பிரிவாற்றாமை** என்பது – பிரிவின்கண் ஆற்றாதிருத்தல்.

(எ-கா) “செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்

வல்வரவு வாழ்வார்க் குரை” (குறள் - 1151)

என வரும்.

மறைந்தவை யுரைத்தல் புறஞ்சொல் மாணாக் கிளவி என்பது மறைந்த ஒழுக்கத்தை பற்றிய புறஞ்சொல்லாகிய அலமாட்சியமைப்படாதவாறு கற்புக்கடம் பூண்டு கூறுதல்.

(எ-கா) “நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு

செலவயர்ந் திசினால் யானே

அலர்சுமந் தொழிகஇவ் வழுங்கல் ஊரே” (நற். – 149)

இதன்கண் நள்ளிரவில் வரும் தலைவனுடன் தேரேறிச் செலவு மேற்கொண்டு விடுவேன்: அப்பொழுது ஆரவாரம் மிக்க இந்த ஊரார் அலர் உரைத்தொழிவதாக எனத் தலைவி கற்புக்கடம் பூண்டு உரைத்தாள்.

இவ்வாறு தெய்வம் அஞ்சல் முதலாகச் சொல்லப்பட்ட பத்து மேற்சொல்லப்பட்ட அழிவிற்கூட்டத்துக்கண் சிறந்து விளங்கு மெய்ப்பாடுகளாகும் என்பர் இளம்பூரணர்.

இப்பத்தினுள் இறுதியாய்க் கூறிய ‘மறைந்தவை யுரைத்த புறஞ்சொல் மாணாக்கிளவி’யினை இரண்டாக்கி பதினொன்று மெய்ப்பாடுகள் என எண்ணுவர் பேராசிரியர். மேலும் இப்பதினொன்றும் வரைந்தெய்தும் கூட்டம் நிகழ்ந்த பின்னர் நிகழும் மெய்ப்பாடுகள் என்பது ஆகும்.

### தலைமக்கட்குரிய ஒப்புமைப் பண்புகள்

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொ(டு)

உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

(இ-ள்) **பிறப்பாவது** – அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர், நுளையர் என்றாற்போல வரும் குலம்.

**குடிமையாவது** – குலத்தினுள்ளும் சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவு. (குடிவரவு குடிமை எனப்படும்). இது

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” (குறள் - 972)

என்பதாலும் அறியப்படும்.

**ஆண்மையாவது** – ஆண்மைத் தன்மை. அஃதாவது ஆள்வினையுடைமையும் வலிபெயராமையும். ‘முட்டின்று முடித்தல்’ என்பதனால் தலைமகள்மாட்டுப் பெண்மையும் கொள்ளப்படும். அது பெண்டிர்க்குரிய நாணம்.

**ஆண்டாவது** – ஒத்த பருவத்தினராதல். அதாவது குழவிப் பருவம் கழிந்து பதினாறு பிராயத்தானும், பன்னிரண்டு பிராயத்தாளும் ஆதல்.

**உருவாவது** – வனப்பு.

**நிறுத்த காமவாயில்** என்பது – நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயில். அஃதாவது ஒருவர்மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு.

**நிறையாவது** – அடக்கம்.

**அருள்** என்பது – பிறர் வருத்தத்திற்குப் புரியும் கருணை.

**உணர்வு** என்பது – அறிவு.

**திரு** என்பது – செல்வம்.

ஈண்டுக் கூறப்பட்ட பிறப்பு முதலாகிய பத்தும் தலைமகனுக்கும் தலைமகளுக்கும் உளதாகும் ஒப்புமைக் குணங்களாகும் என்பர் இளம்பூரணர். பேராசிரியர் இவற்றைத் தலைமகளுக்கு மட்டும் உரிமையாக்கி உரைப்பர்.

**தலைமக்கட்கு ஆகாத பண்புகள்**

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை
என்றிவை யின்மை என்மனார் புலவர்.

(இ-ள்) **நிம்பிரி** என்பது – அழுக்காறு. ஔவியம் என்பதும் அது.

**கொடுமை** என்பது – அறனழியப் பிறருக்குக் கேடு சூழ்தல்.

**வியப்பு** என்பது – தம்மைப் பெரியவராக நினைத்தல்.

**புறமொழி** என்பது – புறங்கூறுதல்.

**வன்சொல்** என்பது – கடுஞ்சொல் கூறுதல்.

**பொச்சாப்பு** என்பது – தம்மைத் தம் நிலையில் கடைப்பிடியாமை. அது சோர்வு.

**மடிமை** என்பது — முயற்சியின்மை.

**குடிமை இன்புறல்** என்பது — தம் குலத்தினானும் தம் குடிப்பிறப்பினானும் தம்மை மதித்து இன்புறுதல்.

**ஏழைமை** என்பது — பேதைமை.

**மறப்பு** என்பது — யாதொன்றாயினும் கற்றதனையும் கேட்டதனையும் பயின்றதனையும் மறத்தல்.

**ஒப்புமை** என்பது — ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வர் என ஆண்டு நிகழும் மனநிகழ்ச்சி. அது உலகியலில் கீழ்மக்கள் மாட்டும் கண்ணிலோர் மாட்டும் நிகழ்தலின் தலைமக்கட்காகாதென விலக்கப்பட்டது. (கண்ணிலோர் - கல்வியறிவில்லாதவர்)

ஈண்டுச் சொல்லப்பட்ட பத்தும் தலைமக்களிடம் இருக்கக் கூடாத பண்புகளாகும் என்று அறிவுடையோர் கூறுவர்.

**இவ்வியலுக்குப் புறனடை**

கண்ணினுஞ் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்ததே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப்பாடெல்லாம் ஆராயுங்கால் கண்ணாலும் செவியாலும் விளங்க உணரும் அறிவுடை மாந்தர்க்கல்லது உணர்தற்கு அரிதாகும்.

மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளத்துணர்வினால் முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலும் உடைமையின் அவற்றைக் கண்ணாலும் செவியாலும் தெளிவாக உணரும் உலகியல் உணர்வுடன் கூடிய அறிவு காண்பவருக்கு வேண்டும் என்றால் தான், 'பாம்பறியும் பாம்பின் கால்' என்றாற்போல காணப்படு பொருளின்கண் அமைந்துள்ள சுவையை இனிது நுகர முடியும். எனவே நாடகமாயினும் இலக்கியமாயினும் அதன்கண் அமைந்துள்ள சுவையை அனுபவிக்க விரும்புவர் மெய்ப்பாடு பற்றிய நல்லறிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

**<u>வினாக்கள்:</u>**

1. மெய்ப்பாடு பொருள் விளக்கம் தருக.
2. நாலிரண்டு ஆகும் பாலுமாருண்டே விளக்குக.
3. மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான நிலைக்களன்களாக தொல்காப்பியர் கூறுவன யாவை?
4. களவுக்கால மெய்ப்பாடுகளை விளக்குக.
5. கற்புக்கால மெய்ப்பாடுகளை விளக்குக.
6. எண்வகை மெய்ப்பாடுகளை சான்றுடன் விவரி.

7. இளிவரல் தோன்றும் நிலைக்களன்களை கூறுக.
8. மருட்கை தோன்றும் நிலைக்களன்களை கூறுக.
9. உவகை தோன்றும் நிலைக்களன்களை விளக்குக.
10. வெகுளி தோன்றும் நிலைக்களன்களை விளக்குக.

## 2. உவமையியல்

உலகியல் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் ஆழப்படும் உவமையது இலக்கணம் உணர்த்தினமையின் உவமையியல் என பெயர் பெற்றது. உவமையாவது ஒரு பொருளினோடு ஒரு பொருளினை ஒப்புமைப்படக் கூறுதல்.

பொருள்களை அவற்றையொத்த வேறு பொருளோடு ஒப்புமைப்படுத்தி உரைப்பது அன்றும் இன்றும் மக்களிடையே வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு ஒப்புமைப்படுத்தி உரைப்பதால் சொல்லப்படும் செய்தி பொருட்தெளிவும் வலிமையும் உளதாகின்றது. இது கருதியே பேராசிரியர் மெய்ப்பாடு போல உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறப்படுவதாக மொழிவர்.

இளம்பூரணர் உவமையின் பயன் புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் ஆகும். காட்டுப்பசுவை அறியாத ஒருவனுக்கு வீட்டில் வளர்க்கும் ஆவினைக் காட்டி 'ஆ போலும் ஆமா' என உணர்த்தியவழி அதனைக் காட்டகத்துக் கண்ட போது முன்பு கேட்ட ஒப்புமை பற்றி இஃது ஆமா என்பது எளிதில் புலனாகும். "தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்" என்ற வழி மகளிரின் முகம் அழகாய் உள்ளது என்பதை விட, 'பொய்கையிடத்துக் குளிர்ந்த நீரில் அன்றலர்ந்த தாமரை போல் மலர்ச்சியுடன் கூடி ஒளிவீசுகின்ற முகம்' என்று கூறும்போது கேட்டார்க்கு இன்பம் பயப்ப அமைகின்றது.

இது மேற்சொல்லப்பட்ட ஏழு திணைகளுக்கும் பொதுவாகி பெரும்பாலும் அகப்பொருள் பற்றி வரும் என்பது இளம்பூரணர் கருத்து.

தொல்காப்பியர் உவமையொன்றனையே அணியெனக் கொண்டு அதனை விளக்குமுகத்தான் இவ்வியலினை அமைத்துள்ளார். பிற்காலத்து இலக்கண ஆசிரியர் உவமையின் விகர்ப்பங்களையும் ஏனை இயல்களில் கூறப்பட்ட இலக்கணங்கள் சிலவற்றையும் கூட்டி பல்வேறு அணிகளாகக் கற்பித்துக் கொண்டனர்.

"உவமை யென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலமும் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதய
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே"

என வரும் சுலோகத்தால் இனிது உணரலாம்.

## உவமையின் வகைகள்

வினைபயன் மெய்உரு என்ற நான்கே

வகைபெற வந்த உவமைத் தோற்றம்.

(இ-ள்) வினையும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே வகைபெற வந்த உவமம் தோற்றங்கள் ஆகும். மெய் - வடிவம், உரு – நிறம்.

இந்நான்கும் **கட்புலனாம்** தன்மையுடையன. எனவே கட்புலமல்லாதனவும் உள என்றவாறாம். ஆவை செவியினாலும் நாவினாலும் மெய்யினாலும் மனத்தினாலும் அறியப்படுவன.

கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் முதலாயின. பயனாவது நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் என்பன. வடிவாவது வட்டம், சதுரம், கோணம், முதலாயின. நிறமாவது வெண்மை, பொன்மை, முதலாயின.

(எ-கா) “புலிபோலப் பாய்ந்தான்” என்பது வினை

“மாரி யன்ன வண்கை” (புறம் - 133) என்பது பயன்

“துடி போலும் இடை” என்பது வடிவு

“தளிர் போலும் மேனி” என்பது நிறம்.

**கட்புலனல்லாதன**

கட்புலனல்லாதவற்றுள் செவிப்புலனால் உணரப்படுவது ஓசை. நாவினால் அறியப்படுவன கைப்பு, கார்ப்பு முதலிய சுவை. மெய்யினால் அறியப்படுவன வெம்மை தண்மை முதலாயின. மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம், தீ நாற்றம் என்பன. மனத்தால் அறியப்படுவன இன்பதுன்பம் முதலியன.

(எ-கா) “குயில் போன்ற மொழி” – செவியால் அறியப்பட்டது.

“வேம்பு போலக் கைக்கும்” – நாவினால் அறியப்பட்டது.

“தீப்போலச் சுடும்” – மெய்யினால் அறியப்பட்டது.

“ஆம்பல் நாறுந் துவர்வாய்” (குறுந். – 300)

மூக்கால் அறியப்பட்டது.

“தம்பி லிருந்து தமதுபாத் துண்டற்றால்

அம்மா அரிவை முயக்கு” (குறள் - 1107)

மனத்தால் அறியப்பட்டது.

## உவமை இரண்டும் பலவும் விரவி வருதல்

விரவியும் வரூஉம் மரபின என்ப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஒரோவொரு பொருளான் வருதல் மட்டுமன்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபினை உடைய என்று கூறுவர்.

(எ-கா) “இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று” (அகம். கடவுள் வாழ்த்து) என்றவழி வடிவம்(கூர்மை) நிறனும் (வெண்மை) விரவி வந்தது.

இன்னும் “விரவியும் வருஉம் மரபின்” என்றமையால் பல பொருள் பலவற்றுக்கு உரிமையாய் விரவி வருதலும் ஒரு பொருள் பலவற்றுக்கு உரிமையாய் விரவி வருதலும் எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர்.

(எ-கா) “அடைமரை யாயிதழ்ப் போதுபோல் கொண்ட

குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ” (கலித். -84)

இதன்கண் தாமரையிலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமையாயின.

“தேமொழி” (தேன் போன்ற மொழி) என்ற வழி தேனின்கண் உளதாகிய நாவிற்கினிமையும், மொழிக்கண் உளதாகிய செவிக்கினிமையும் உவமிக்கப்பட்டன.

**உயர்ந்த பொருளின்மேல் வைத்தே உவமை கூறப்படும்**

உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை

(இ-ள்) வினை முதலிய உவமைகள் ஆராயுங்காலத்து உயர்ந்த பொருள்களின் மேல் வைத்தே மொழியப்படும்.

(எ-கா) “அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்” (பட்டினப் - 298)

என்றவழி துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது. (துப்பு – வலிமை)

“தாமரை புரையுங் காமர் சேவடி”(குறுந் - கடவுள் வாழ்த்து) என்றவழி சிவப்புடைய பலவற்றினும் தாமரை உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது. இனி

“கொங்கியர் ஈன்ற மைந்தரின்

மைந்துடை உழுவை திரிதருங் காடே”

என இழிந்ததன் மேல் உவமை வந்ததால் எனின், அதில் கொங்கியர் ஈன்ற மைந்தரின் என விஷேடித்த தன்மையான் அவர் பிறநிலத்து மக்களோடு ஒரு நிகரன்மையின் அவரும் உயர்ந்தோராகக் கொள்க என விளக்கம் தருவர் இளம்பூரணர்.

**உவமை தோன்றும் நிலைக்களன்கள்**

சிறப்பே நலனே காதல் வலியோடு

அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப.

(இ-ள்) சிறப்பு பற்றி வந்தது. இதன்கண் முரசு முழங்கும் தானைகளையுடைய சேர சோழ பாண்டியர் மூவரும் கூடி அரசவையில் இருந்தகாலை உண்டாகும் காட்சியின்பம் போல பல்வேறு பாடல் வகைகளையும் பற்றித் தோன்றும் இசைப்பயனையுடைய யாழ் எனச் செயற்கையாகப் பெறும் சிறப்பு கூறலின் சிறப்பு நிலைக்களனாயிற்று.

“ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்” (புறம் - 251) என்பது நலன் பற்றி வந்தது.

“காண்போல்வான் ஒருவன் உளன்” என்பது காதல் பற்றி வந்தது.

“அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்” (பட்டினப் - 218) என்பது வலிபற்றி வந்தது.

**இழிவுபடுத்திக் கூறும் பொருளோடு**

**நிலைக்களன் ஐந்தாகும்.**

கிழக்கிடும் பொருளோடு ஐந்து மாகும்.

(இ-ள்) சிறப்பு முதலிய உயர்ந்த பொருளுமன்றிக் கீழ்ப்படுத்திக் கூறும் பொருளும் சேர்க்க உவமை தோன்றும் நிலைக்களன் ஐந்தாகும்.

(எ-கா) “அரவு நுங்கு மதியின் நுதல்ஒளி சுரப்ப”

என்பது இழிவு பற்றி வந்தது. இதன்கண் இராகு கேது என்றும் பாம்புகளால் விழுங்கப்பட்ட மதிபோல நெற்றி தன் ஒளியை இழந்தது எனக் கூறப்படுவதால் இழிவாயிற்ளு.

ஆசிரியர் இளம்பூரணர்,

“ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்

ஊசி போகிய சூழ்செய் மாலையன்” (அகம் - 48)

என எடுத்துக்காட்டு கூறி, பொருள் உவமமாயும் உவமம் பொருளாயும் வருதலை இழிவெனப் புலப்படுத்துகின்றார்.

**முதலும் சினையும் உவமைக்கண் வருதல்**

முதலும் சினையுமென் றாயிரு பொருட்கும்

நுதலிய மரபின் உரியவை உரிய.

(இ-ள்) முதற்பொருள் சினைப்பொருள் என்று கூறப்பட்ட இருவகை பொருளுக்கும் புலவர் தாம் கருதிய மரபினானே உவமைசெய வரினும் அவை உரியவாறே உரிமையுடையனவாம்.

அஃதாவது முதலொடு முதலும், சினையொடு சினையும், முதலொடு சினையும், சினையொடு முதலும் என உவமம் வரினும் வரைவின்று.

(எ-கா) “ஒருகுழை யவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்” (கலி -26)

என்பது முதலுக்கு முதல் உவமமாயிற்று.

“அடைமரை யாயிதழ்ப் போதுபோல் கொண்ட

குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ” (கலி – 84)

என்பது முதலுக்குச் சினை உவமமாயிற்று.

“தாமரை புரையுங் காமர் சேவடி” (குறுந் - கடவுள் வாழ்த்து)

என்பது சினைக்குச் சினை உவமமாயிற்று.

“நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி” (அகம் - 84)

என்பது சினைக்கு முதல் உவமமாயிற்று.

சுட்டிக் கூறா உவமம்

சுட்டிக் கூறா உவம மாயின்

பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.

(இ-ள்) சுட்டிக் கூறா உவமமாவது, உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவென உவமச் சொல்லால் சுட்டிக் கூறாமை. அவ்வாறு வருமாயின் உவமையினை உவமிக்கப்படும் பொருளோடு இணைத்துத் தகுந்த உவமச்சொல் புணர்த்து உவமை வாய்ப்பாடு கொள்ள வேண்டும்.

உவமச் சொல் - உவம உருபு

(எ-கா) "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து" (குறள் - 90)

இதன்கண் 'அதுபோல' என்னும் உவமையுருபு வாராமையால் சுட்டிக்கூறா உவமமாயிற்று.

இதனை 'மோப்பக் குழையும் அனிச்சம்' (அதுபோல) 'நோக்கக் குழையும் விருந்து' என உவமையுருபு புணர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு உவமஉருபு கொடாது வருவதனை 'எடுத்துக்காட்டுவமை' என்பர் பிற்காலத்து இலக்கண ஆசிரியர்.

'பவளவாய்' என்பது 'செம்மை' என்னும் பொதுத்தன்மை மறைந்து வருதலின் சுட்டிக்கூறா உவமம் எனவும், 'பவளம் போற் செந்துவர்வாய்' என்பது பொதுத்தன்மை வெளிப்பட நிற்றலின் சுட்டிக்கூறிய உவமம் எனவும் விளக்குவர் பேராசிரியர்.

உவமைக்கும் பொருளுக்குமுள்ள இயைபு

உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

(இ-ள்) உவமையும் உவமிக்கப்படும் பொருளும் ஒத்த இயைபுடையதாக இருக்க வேண்டும்.

(எ-கா) "மயில் தோகை போலும் கூந்தல்" என்பது ஒத்த இயைபு.

"காக்கைச் சிறகன்ன கருமயிர்" என்பது ஒத்த இயைபன்று.

"புலிபோலப் பாய்ந்தான்" என்பது ஒத்த இயைபு.

"பூசை போலப் பாய்ந்தான்" என்பது ஒத்த இயைபன்று.

இளம்பூரணர் விளக்கம்

'இரட்டைக்கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச் கண்ணமாய் வரினும், மிக்குங்குறைந்தும் வருதலன்றி உவமை அடையடுத்துவரினும், தொழிற்பட்டு வரினும், ஒன்றும் பலவுமாகி வரினும், வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும்' எனவும், அவ்வழி வாராது மிக்குங்குறைந்தும் வருவது குற்றம் எனவும் விளக்கம் செய்வர் இளம்பூரணர்.

பொருளை உவமமாக்கி உரைத்தல்

பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்

மருளறு சிறப்பின.். துவம மாகும்.

(இ-ள்) உவமிக்கப்படும் பொருளையே உவமையாக்கிக் கூறினும் அது மயக்கந்தீர்ந்த சிறப்பு நிலைமையான் எய்தும் உவமையாகவே கொள்ளப்படும்.

(எ-கா) "இரும்பு முகஞ் செறிந்த ஏந்தெழில் மருப்பிற்

கருங்கை யானை கொண்மூ வாக

நீண்மொழி மறவ ரெறிவனர் உயர்த்த

வாள்மின் னாக வயங்குகடிப் பமைந்த

குருதிப் பல்லிய முரசுமுழக் காக

அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்

வெவ்விசைப் புரவி வீசுவளி யாக

……………………………….” (புறம் - 369)

இப்பாடலில் ‘யானை கொண்மூ வாக’ (யானை போன்ற மேகங்கள்), ‘வாள் மின்னாக’ (வாள் போன்ற மின்னல்), ‘பல்லியம் முரசு முழக்காக’ (பல்வகை இசைக் கருவிகளின் ஒலி போன்ற முரசங்களின் முழக்கு) ‘புரவி வீசுவளி யாக’ (குதிரைகள் போல விரைவாக வீசும் காற்று) என யானை, வாள், பல்லியம், புரவி என்னும் உவமேயங்கள் (உவமிக்கப்படு பொருள்) உவமையாகி நின்றமை அறியத்தக்கது.

இவ்வாறு வருவனவற்றைப் பிற்காலத்தார் ‘உருவகம்’ என ஓர் அணியாக்கி உரைப்பர்.

**பெருமையும் சிறுமையும் மனக்குறிப்பை**
**வெளிப்படுத்த வரும்**

பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்

குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

(இ-ள்) உவமையும் பொருளும் ஒத்தனவாகக் கூறலேயன்றிப் பெருகக் கூறலும் சிறுகக் கூறலும் உண்டு. அவ்வாறு கூறுவது சிறப்பு என்னும் நிலைக்களத்து நீங்காத மனக்குறிப்பின் வழி வரூஉம் வழக்கத்தினையுடையவாம்.

எனவே, வழக்கின்கண் பயின்று வாராத இறப்பவுயர்தலும் இறப்ப இழிதலும் ஆகாது.

(எ-கா) “அவாப்போல் அகன்றதன் அல்குல்மேல் சான்றோர்

உசாஅப் போல வுண்டே மருங்குல்”

என்றவழி அல்குல் பெரிதெனற் பொருட்டு உலகத்தார் ஆசையோடு உவமித்தலின் இது தக்கதாயிற்று. மருங்கில் நுண்ணிதெனற் பொருட்டுச் சான்றோர் உசாவோடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. (சான்றோர் மிகவும் சுருக்கமாகவே உசாவுவர். அதுபோல சுருங்கிய இடை என்பது)

**நெறிப்பாடின்றி வருவன**

இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் நெறிப்பாடின்றி வருவனவாம்.

(எ-கா) இந்திரனே போலும் இளஞ்சாத்தன்” (யாப். வி. ஒழி)

இது மிகவும் உயர்த்திக் கூறியது. வழக்கிறந்து வருதலில் இவ்வாறு உவமை கூறலாகாது என்பது இளம்பூரணர் கருத்து.

“வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்

எள்ளி யிரிவதுபோல் எங்கெங்கும் - வள்ளற்கு

மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை

மேலாரு மேவார் விரைந்து” (யாப். வி. ஒழி)

இவ்வாறு நாய் முன் மான் கூட்டம் நகையாடப்படுவது போல மிகவும் இழிவாக உவமம் கூறலும் கூடாது.

அவ்வாறாயின், “நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்” (நாலடி.213) என வந்துள்ளதெனில், அது நாயிடத்துள் நற்குணம் பற்றி வருதலின் இறப்ப இழிதல் ஆகாது.

**உவம உருபுகள்**

அவைதாம் ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை யெனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை யெனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ள கடுப்ப ஆங்கவை யெனாஅ
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை யெனாஅ
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ அங்கவை யெனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை யெனாஅ
ஆறா றவையும் அன்னவை பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள்தாம் அன்ன என்பது முதலாக புரைய என்பது ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறும். அவை, போல்வன பிறவுமாகிச் சொல்லுங்காலத்து பல்குறிப்பினையுடையவாய் வரும்.

‘அன்ன பிறவும்’ என்றதனால் நோக்க, நேர, அனை, அற்று, இன், ஏந்து. ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்றித் தொடக்கத்தனவும் என்பார் இளம்பூரணர்.

பல் குறிப்பின என்றதனால் இச்சொற்கள் பெயரெச்ச நீர்மையவாய் வருவனவும், வினையெச்ச நீர்மையவாய் வருவனவும், முற்று நீர்மையவாய் வருவனவும், இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் ஆகும்.

(எ-கா) ‘புலி போன்று வந்தான்’, புலி போலப் பாய்ந்தான்’ என்பன **பெயரெச்சம்**.

‘புலி போன்று வந்தான்’, ‘புலி போலப் பாய்ந்தான்’ என்பன **வினையெச்சம்**.

‘புலிபோலும்’, ‘புலி போன்றன’ என்பன **முற்று**.

‘துடி யன்ன இடை’, ‘யாழின் இன்ன இன்சொல்’ இவற்றுள் அன்ன, இன்ன என்பன **இடைச்சொல்**.

இன்னும் ‘பல்குறிப்பின’ என்றமையால் விரிந்தும் தொக்கும் வருவனவும் ஆகும்.

(எ-கா) ‘தேன் போலும் மொழி’, ‘தேன் போலும் இனிய மொழி’ என்பன **விரிந்து** வந்தன.

‘தேமொழி’ என்பது **தொக்கு** வந்தது.

**வினைஉவம உருபுகள்**

அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்.

(இ-ள்) அன்ன என்பது முதலாகக் கூறப்பட்ட எட்டும் வினையுவமத்திற்குரிய உருபுகள் ஆகும்.

(எ-கா) "கொன்றன்ன இன்னா செயினும்" (குறள் - 109)

"பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாங்கு" (திருமுருகு – 2)

"புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செல்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்" (பெரும்பாண் 269 – 271)

"புலி**யிறப்ப** வொலிதோற்றலின்"

"புலி**யென்னக்** கலிசிறந் துராஅய்"

"செறுநர் தேய்த்த செல்**லுறழ்** தடக்கை" (திருமுருகு – 5)

"பொருகளிற் றெருத்தின் புலி**தகையப்** பாய்ந்து"

"மானோக்கு **நோக்கு** மடநடை ஆயத்தார்"

என வரும்.

**அன்ன என்னும் உருபு**

அன்ன என் கிளவி பிறவொடுஞ் சிவணும்.

(இ-ள்) அன்ன என்னும் சொல் வினையுவமத்திற்கு மாத்திரமன்றி பயன், மெய், உரு என்பவற்றிற்கும் உருபாக வரும்.

(எ-கா) "மாரி யன்ன வண்கை" (புறம் - 133)

இது பயனுவமை.

"பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்
கருவிருந் தன்ன கண்கூடு சிறுதுளை" (பெரும்பாண்: 7-8)

இது மெய்யுவமை.

"செவ்வா னன்ன மேனி" (அகம். கடவுள் வாழ்த்து)

இது உருவுவமை.

**பயன் உவம உருபுகள்**

எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை யுவமம்.

(இ-ள்) என்ன என்பது முதலாகக் கூறப்பட்ட எட்டும் பயனிலை உவமத்திற்குரிய உருபுகளாம்.

(எ-கா) "எழினி வானம் **எள்ளி**னன் தரூஉங்
கவிகை வண்கைக் கடுமான் தோன்றல்"

"மழை**விழை** தடக்கை வாய்வாள் எவ்வி"

"புத்தே ளுலகின் பொன்மரம் **புல்ல**"

"விண்**பொரு**புகழ் விறல் வஞ்சி"

"கார்**கள்ள** வுற்ற பேரிசை யுதவி"

"இருநிதி **மதிக்கும்** பெருவளன் ஈகை"

"வீங்குசுரை நல்லான் **வென்ற** வீகை"

"விரிபுனற் பேர்யாறு **வீழ** யாவதும்

வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்"

என வரும்.

**மெய் உவம உருபுகள்**

**கடுப்ப** ஏய்ப்ப மருளப் புரைய

ஒட்ட ஒடுங்க ஒட்ட நிகர்ப்ப என்று

அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.

(இ-ள்) கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய உருபுகளாம்.

(எ-கா) "விண்ணதிர் இமிழிசை **கடுப்ப**" (மலைபடு -2)

"அகலிரு விசும்பின் குறைவில் **ஏய்ப்ப**"

"வேய்**மருள்** பணைத்தோள் நெகிழ" (அகம் - க)

"வேய்**புரை** மென்றோள்" (கலித் - 39)

"**முத்துடை வான்கோ டொட்டிய** முலைமிசை வியப்பன தழீஇ"

"பாம்புரு **வொடுங்க** வாங்கிய நுசுப்பின்"

"செந்தீ **யோட்டிய** வஞ்சுடர்ப் பருதி"

"கண்ணோடு **நிகர்க்கும்** கழிப்பூங் குவளை"

என வரும்.

உரு உவம உருபுகள்

போல மறுப்ப ஒப்பக் காய்த்த

நேர வியப்ப நளிய நந்தவென்று

ஒத்துவரு கிளவி உருவின் உவமம்.

(இ-ள்) போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவுவமத்திற்குரிய உருபுகளாம்.

(எ-கா) "தன்சொல் உணர்ந்தோர் மேனி

பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே" (ஐங்குறு – 4)

"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா"

"ஒண்செங் காந்தள் ஒக்கும் நின்னிறம்"

"கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்"

"கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்" (அகம். கடவுள் வாழ்த்து)

"தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி"

என வரும்.

பொதுச்சூத்திரத்தில் கூறப்பட்டு வகைச் சூத்திரத்தில் கூறப்படா உவம உருபுகளுக்கு எடுத்துக்காட்டு:

(எ-கா) "வேலொன்று கண்" – ஒன்ற

"கயலென்ற கண்" - என்ற

"மணிநிற மாற்றிய மாமேனி" – மாற்ற

"மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்" – பொற்ப

"வேயொடு நாடிய தோள்" - நாட

"படங்கெழு நாகம் நடுங்கும் அல்குல்" – நடுங்க

"குன்றின் அனையாரும் குன்றுவர்" (குறள் - 965) – அணை

"இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" (குறள் - 22) – அற்று

"மருப்பின் திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித் -15) - இன்

"துணைமலர் எழில்நீலத் தேந்தெழில் மலருண்கண் (கலித் - 14) – ஏந்து

"முத்தேர் முறுவலாய்" (கலித் -93) – ஏர்

"எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர்" (நாலடி – 345)

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்" (அகம். கடவுள் வாழ்த்து) – கெழு

"கிளைசெத்து மொய்த்த தும்பி" (நற் -35) – செத்து

ஈண்டுக் கூறிவற்றுள் அனை, அற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து என்பன பொதுச் சூத்திரத்து 'அன்ன பிறவும்' என்பதனால் பெறப்பெற்றவை.

உவம உருபுகள் தத்தம் மரபிற்கேற்ப மாறியும் வரும்

தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே.

(இ-ள்) வினை, பயன், மெய், உரு உவமங்களுக்கெனப் பாகுபடுத்து உணர்த்தப்பட்ட உவம உருபுகள் தத்தம் மரபுக்கு ஏற்ப வேறுவிதமாய் மாறிவருதலும் உண்டு.

(எ-கா) முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி (திருமுருகு – 215) என்பதில் வினையுவமத்திற்குக் கூறப்பட்ட 'உறழ' என்னும் உருபு மெய்யின்கண் வந்துள்ளது.

"மாவென்ற மடநோக்கின்" (கலித். – 57) என்பதில் பயனுவமத்திற்குக் கூறப்பட்ட 'வெல்ல' என்னும் உருபு வினையின்கண் வந்துள்ளது.

"வேய் வென்ற தோற்" (கலித் - 137) என்பதில் பயனுவமத்திற்குரிய 'வெல்ல' என்னும் உருபு வடிவிற்கு ஆகி வந்துள்ளது.

“மாரிவீழ் அருங்கூந்தல்” (கலித் - 14) என்பதில் பயனுவமத்திற்குரிய ‘வீழ்’ என்னும் உருபு உருவிற்கு ஆகி வந்துள்ளது.

“பொன்னுரை கடுக்கும் திதிலையா்” (திருமுருகு – 145) என்பதில் மெய்யவமத்திற்குரிய ‘கடுப்ப’ என்றும் உருபு உருவிற்கு வந்துள்ளது.

“செயலையந் தளிரேய்க்கும் எழினலம்” (கலித் - 15) என்பதில் மெய்யுவமத்திற்குரிய ‘ஏய்ப்ப’ என்னும் உருபு உருவின்கண் வந்துள்ளது.

நான்கு வகை உவமைகள் எட்டாதலும் உண்டு

நாலிரண்டாகும் பாலுமா ருண்டே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை நான்கு வகை ஆதலேயன்றி எட்டென வரும் பக்கமும் உண்டு.

ஆவையாவன: வினை என்பது வினையும் வினைக்குறிப்பும் என இருவகையாம். பயன் என்பது நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகையாம். மெய்யென்பது வடிவும் அளவும் என இருவகையாம். உரு என்பது நிறமும் குணமும் என இருவகையாம். இவ்வாறு அந்நான்கும் எட்டாயின.

(எ-கா) “புலிபோலப் பாய்ந்தான்” என்பது வினை.

“பொன் அன்ன செல்வத்தன்” என்பது வினைக்குறிப்பு.

“மாரி யன்ன வண்கை” (புறம் -133) என்பது நற்பயன்.

“ஞாயிறு அனையைநின் பகைவா்க்கு” (புறம் - 59)

என்பது தீப்பயன்.

“துடி போலும் இடை” என்பது வடிவு.

“நெடுவரை மிசையிற் பாம்பென இழிதருங்

கடுவரற் கலுழி” ஏ்னபது அளவு.

“தளிா் போலும் மேனி” என்பது நிறம்.

“பாலன்ன மொழி” என்பது குணம்.

குறிப்பு: இத்தொடரினாலான நூற்பா மெய்ப்பாட்டியலின் கண்ணும் வந்துள்ளது. (மெய்ப்பாட்டியல்-2)

**பெருமையும் சிறுமையும் மெய்ப்பாட்டு வழிப்பட்டன**

290. பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டின்
வழிமருங் கறியத் தோன்றும் என்ப.

(இ-ள்) உவமையைப் பெருக்கக் கூறலும் சிறுக்கக் கூறலும் எண்பகை மெய்ப்பாட்டின் வழிப்பக்கம் புலப்படத் தோன்றும் என்று கூறுவா்.

(எ-கா) “அவாப்போல் அகன்றதன் அல்குல்மேல் சான்றோா்
உசாஅப் போலுண்டே மருங்குல்”

என்பது முறையே பெருமையும் சிறுமையும் பற்றி **உவகை** தோன்ற வந்தது.

"கலங்கவிழ்ந்த நாய்கன்போல் களைதுணை பிறிதின்றி" (யாப். வி.ப.318)

என்பது துன்பப் பெருக்கம் பற்றி **அவலம்** தோன்ற வந்தது.

"பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு" (முத்தொள் - 88)

என்பது பெருக்கம் பற்றி இளிவரல் தோன்ற வந்தது.

**உவமையைக் கொண்டு உவமேயத்தை உய்த்தறிதல்**

291. உவமப் பொருளின் உள்ள துணரும்
தெளிமருங் குளவே திறத்திய லான.

(இ-ள்) உவமப் பொருளைக் கொண்டு அதில் அடங்கியுள்ள உவமேயப் பொருளினை இலக்கிய மரபின் கூறுபாட்டினை ஒட்டித் தெரிந்து தெளிவு செய்து கொள்ளும் பக்கமுமுள.

**தெளிமருங்காவது**. இன்னது எனத் துணியாது நின்றதனை இதுவெனத் துணிதல்.

(எ-கா) "ஐதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளரும் கிளியு மன்று" (கலித் - 55)

(ஐ – வியப்பு, மை – களங்கம், வேய் - மூங்கில்)

இப்பாடலில் பிறை, மதி, மலை, சுனை, மயில், கிளி என்னும் உவமப்பொருள்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் உவமேயப் பொருள்கள் கொடுக்கப்படவில்லை. எனவே இலக்கிய மரபின் கூறுபாட்டினைக் கொண்டு ஆராயுங்கால் அவை முறையே நுதலும் முகனும் தோளும் கண்ணும் சாயலும் மொழியும் எனத் துணிந்தது.

இன்னும் இதனானே,

"கயலெழுதி வில்லெழுதி காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்" (சிலப். – கானல்-11)

என்பதில் கண், புருவம், கூந்தல் ஆகியவற்றைக் கயல், வில், கார் என்னும் உவமப்பெயரான் வழங்குதலையும் இதனுள் அடக்கிக் காட்டுவர் இளம்பூரணர்.

**உவமையால் உவமிக்கப்படும் பொருளை உணரும் போது மருவிய மரபினைக் கொண்டு உய்த்தறிய வேண்டும்**

292. உவமப் பொருளை உணருங் காலை
மருவிய மரபின் வழக்கொடு படுமே.

(இ-ள்) உவமப் பொருளைக் கொண்டு அதில் அடங்கியுள்ள உவமேயப் பொருளை உணரும் போது இலக்கியத்துள் காலங்காலமாக வரும் வழக்கினைக் கொண்டு உய்த்தறிய வேண்டும்.

**இரட்டைக் கிளவி**

293. இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே.

(இ-ள்) **இரட்டைக் கிளவியாவது** உவமை இரண்டு சொல் அடுத்து வருவது. அவ்வாறு வருங்கால் உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல் வேண்டும்.

(எ-கா) "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோ டேனை யவர்" (குறள் - 410)

உவமை – விலங்கு, மக்கள்

உவமேயம் - கற்றார், ஏனையவர்

இவை எதிரெதிராக நின்று பொருள்படும்.

**உவமேயம் உவமேயப்பொருளுக்கு உவமையாதல்**

294. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி

முன்ன மரபிற் கூறுங் காலைத்

துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளலே.

(இ-ள்) (உவமைப்பொருள் தானன்மையான்) உவமைப் பொருளொடு படாது. உவமேயப்பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கி அவ்விடத்திற்கேற்பக் கூறுங்காலத்து, உவமைப்பொருளுணரும் துணிவுடையோர் கொள்வாராயின் அவ்விடத்து அவர் துணிவிற்கேற்ப உவமை தோன்றும்.

(எ-கா) "நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர" (கலித் - 119)

'தன் நிலவால் இருளினைப் புறங்காண்பது போல மதி அழகுடன் விளங்க' என்பது இதன் பொருள் இதன்கண் மதிக்கு நிலவு உவமையாயிற்று. மதியும் நிலவும் உவமேயங்கள் உவமேயத்துக்கு உவமேயமே உவமையாக வந்துள்ளது.

"வள்ளிதழ் கூம்பிய மணிமருள் இருங்கழிப்

பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப" (கலித் - 121)

என்பதும் அது.

**உவமப் போலி ஐந்து**

**295. உவமப் போலி ஐந்தென மொழிப.**

உவமப் போலி - உவமையைப் போல வருவது.

(இ-ள்) உவமையைப் போல வருவன ஐந்து என்று கூறுவர்.

அவையாவன: இதற்கு உவமையில்லை எனவும், இதற்கு இது தானே உவமை எனவும், பலபொருளினும் உளதாகிய உறுப்புகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டு சேர்த்தின் இதற்கு உவமையாம் எனவும், பல பொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்குவமையாம் எனவும், கூடாப்பொருளோடு உவமித்து வருவனவும் ஆகும் என்பர் இளம்பூரணர்.

(எ-கா) "நின்னோர் அன்னோர் பிறரிவர் இன்மையின்

மின்னெயில் முகவைக்கு வந்திசின் பெரும" (புறம் - 373)

என்பது இதற்கு உவமையில்லை (நினக்கு ஒப்பாரில்லை) என்று கூறியது.

"மன்னுயிர் முதல்வனை யாதலின்

நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே" (பரிபா – 1)

என்பது இதற்கிது உவமை (நினக்கு நீயே ஒப்பாவாய்) என்றது.

“நல்லார்கண் நல்ல உறுப்பாயின தாங்கள் நாங்கள்
எல்லாம் உடனாதுமென் றன்னவியைந்த வீட்டாற்
சொல்வாய் முகங்கண் முலைதோளிடை யல்குல் கைகால்
பல்வார் குழலென் றிவற்றாற்படிச் சந்த மானாள்”

என்பது பலபொருளினும் உளதாகிய உறுப்புக்களைச் சேர்த்திக் கூறியது.

“நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
வந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை” (பதிற்றுப் - 14)

என்பது பல பொருளின் உளதாகிய கவின் (விளக்கம்) ஓரிடத்துச் சேர்த்துக் கூறியது.

“வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்
ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருட் குவளைவெந் தற்று”

என்பது கூடாப்பொருளை உவமையாக்கிக் கூறியது.

“உவமைப்போலி என்பதனை ‘உள்ளுறை’ எனக் கொண்டு உள்ளுறை உவமை ஐந்து வகைப்படும் என உரை கூறுவர் பேராசிரியர்.

**உவமப்போலி கூறப்படும் திறம்**

**296. தவலருஞ் சிறப்பின்அத் தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வருஉம் திறத்திய லென்ப.**

(இ-ள்) குற்றமற்ற சிறப்பினையுடைய உவமைப்போலியின் தன்மையை ஆராய்ந்தால் வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்னும் ஐந்தும் ஏதுவாகக் கொண்டு கூறப்படும் திறத்தினையுடைய என்று கூறுவர்.

எனவே ‘நினக்கு உவமையில்லை’ என்றவழிச் செயலானாதல், பயனானாதல், உறுப்பானாதல், உருவானாதல், பிறப்பானாதல் ஒப்பாரில்லையெனல் வேண்டும் என்பது கருத்து அவ்வாறே பிறவற்றிற்கும் வரும்.

**உவமை கூறுதற்குரிய வரையறை**

**தலைவிக்குரிய பொருள்**

**297.கிழவி சொல்லின் அவளறி கிளவி.**

(இ-ள்) உவமைப் பொருளைத் தலைமகள் கூறின் அவளறிந்த பொருளினையே உவமையாகக் கூறல் வேண்டும்.

எனவே அவளறியாத பொருளை உவமை கூறினாளாகச் செய்யுள் செய்தல் கூடாது என்பது பெறப்படும்.

(எ-கா) "அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்எம் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே" (குறள் - 49)

இதில் நெய்தல் நிலத்துத் தலைவி தான் அறிந்த பொருள்களான அணில், முண்டகம் (கழிமுள்ளிச்செடி), நீலமணி, அன்னம் என்பவற்றைக் கொண்டு உவமை கூறியுள்ளது.

**தோழிக்குரிய பொருள்**

298. தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது.

(இ-ள்) தோழி உவமை சொல்லின் அந்நிலத்துள்ளனவன்றிப் பிற நிலத்துள்ளன கூறப்பெறாள்.

(எ-கா) "வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார.ஃதறிந் திசினோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறள் - 13)

இதில் குறிஞ்சி நிலத்துத் தோழி அந்நிலத்துப் பொருளான பலாப் பழத்தினைக் கொண்டு தலைவியின் காதல் மிகுதியை எடுத்துரைப்பது அறியத்தக்கது.

**தலைவனுக்குரிய பொருள்**

299. கிழோற் காயின் உரனொடு கிளக்கும்.

(இ-ள்) தலைவன் உவமை கூறுவானாயின் அறிவு தோன்றக் கூறுவான்.

(எ-கா) "உறுகழி மருங்கின் ஒதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தல் கண்போல் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை அருந்த அல்குல்
ஐய அரும்பிய சுணங்கின் வைஎயிற்று
மையீர் ஒதி வாணுதற் குறுமகள்
விளையாட் டாயமொடு வெண்மணல் உகுந்த
புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு
மனைபுறந் தருதி யாயின் எனையதூஉம்
இம்மனைக் கிழமை எம்மொடு புணரில்
தீதும் உண்டோ மாத ராய்எனக்
கடும்பரி நன்மாண் கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பாகன் பையென இயக்க
யாம்தற் குறுகினம் ஆக ஏந்தெழில்
அரிவே யுண்கண் பனிவர லொடுக்கிச்
சிறிய இறைஞ்சினள் தலையே

பெரிய எவ்வமொடு யாமி னுறவே" (அகம் - 230)

இது உள்ளப் புணர்ச்சியான் வரைதல் வேண்டிப் பாங்கற்கு உரைத்தது. மேல் 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' என்பதும்.

**ஏனோர்க்குரிய பொருள்**

300. ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.

(இ-ள்) தலைவி, தலைவன் என்னும் மூவருமல்லாத நற்றாய், செவிலி முதலாயினோர்க்கு உவமை கூறுமிடம் வரையறை இல்லை.

**இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**

301. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்

உவம மருங்கில் தோன்றும் என்ப.

(இ-ள்) மகிழ்ச்சி பயங்குங் கூற்றும், புலவி பயக்குங் கூற்றும் உவமைப் பக்கத்தால் தோன்றும் என்பர்.

(எ-கா) "…………………… வானத்

தணங்கருங் கடவு ளன்னோள்நின்

மகன்தாய் ஆதல் புரைவதாங் கெனவே" (அகம் - 16)

இதன்கண் வானத்து அருந்ததி போன்ற பரத்தையது மகனைத் தன் மகனாக ஏற்றுக் கொண்டமைத் தலைவி கூறலின் இனிதுறு கிளவி ஆயிற்று.

"மாரி யாம்பல் அன்ன கொக்கின்

பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு

கண்டல் வேரளைச் செலீய ரண்டர்

கயிறரி யெருத்தின் கதழ்பூந் துறைவன்" (குறுந் - 117)

என்பதில் தலைமகள் உவமை கூறியவழி, 'நின்ற பெண்டிர் தடுப்பக் கயிற்றை அறுத்த எருது போலப் போந்தனை' எனத் துனியுறு கிளவி வந்துள்ளது.

**தலைமகள் உவமை கூறுமிடம்**

302. கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே.

(இ-ள்) தலைமகள் உவமை கூறுங்கால் மேற்கூறப்பட்டவாறு இன்பம் துன்பம் என்னும் இரண்டிடத்தும் கூறுதற்கு உரியவளாவாள்.

எனவே இவ்விரண்டும் அல்லாதவழி உவமை கூறப்பெறாள் என்றவாறாம். பேராசிரியர் இரண்டிடம் என்பன மருதமும் நெய்தலும் என உள்ளுறைக் கேற்றவாறு கூறுவர்.

**தலைமகன் உவமை கூறுமிடம்**

303. கிழவோற் காயின் இடம்வரை வின்றே.

(இ-ள்) தலைமகன் உவமை கூறுவானாயின் இன்ன இடம் என்பதின்றி எவ்விடத்தும் கூறலாம்.

**தோழியும் செவிலியும் உவமை கூறுமிடம்**

304. தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்

கூறுதற் குரியர் கொள்வழி யான.

(இ-ள்) தோழியும் செவிலியும் உவமை கூறுங்கால் கேட்டோர் மனங்கொள்ளும் நெறியால் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர் ஆவர்.

(எ-கா) "பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்

கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்"

என்பது 'சூரியனது விரிந்த கதிர்களாகிய படையால் வளைப்புண்ட இருள் மயங்கி ஒளிவதற்கு இடம் தேடுவது போன்ற பூஞ்சோலை' எனப் பொருள் உணர்த்தி நிற்கின்றது.

**வேறுபட வந்த உவமைத் தோற்றம்**

305. வேறுபட வந்த உவமைத் தோற்றம்

கூறிய மருங்கில் கொள்வழிக் கொளாஅல்.

(இ-ள்) ஈண்டு எடுத்தோதப்பட்ட இலக்கணத்தினின்று வேறுபட்டு வந்த உவமைத் தோற்றங்களை, மேலே சொல்லப்பட்ட நெறிகளை மனதிற் கொண்டு எவ்வாறு கொள்ளவேண்டுமோ அவ்வழியில் பொருத்திக் கொள்ள வேண்டும்.

(எ-கா) "பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்

கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்"

என வரும்.

பேராசிரியர் வேறுபட வந்த உவமைத் தோற்றமாவன: உவமைக்கும் பொருட்கும் உவமை மாறுபட வருதலும், ஒப்புமை கூறாது பெயர் போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக் கூறுதலும், உவமானத்தை உவமேயமாக்கியும் அது விலக்கியும் கூறுதலும் இன்னோரன்ன என விளக்குவர்.

**உவமையை உவமிக்கப்படும் பொருளிலிருந்து ஒரீஇக் கூறுதல்**

306. ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

(இ-ள்) உவமையை உவமிக்கப்படும் பொருளிலிருந்து நீக்கிக் கூறலும் தொன்றுதொட்டு வரும் இயல்பினை உடையதாகும். (ஒரீஇ - நீக்கி)

(எ-கா) "கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்

பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி

மாறி வருதி மலைமறைந் தொளித்தி

அகலிரு விகம்பி னானும்

பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே" (புறம் - 8)

இதில் 'சேரலாதனுக்கு ஒப்பாகமாட்டாய்' என விலக்கிக் கூறுவதுபோல் அவனைச் 'சூரியனைப் போன்றவன்' எனப் புகழ்ந்தவாறு காண்கிறோம்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம்" (குறள் - 1120)

என்பதால் மாதரடி அனிச்சத்தினும் அன்னத்தின் தூவியினும் மென்மையானது என்பது புலனாகும்.

**உவமேயத்தினின்று உவமையை உயர்த்திக் கூறிவிடுதல்**

307. உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

(இ-ள்) உவமிக்கப்படும் பொருளோடு உவமையைப் பொருத்திக் கூறாது உவமையது தன்மையை உயர்த்திக் கூறலும் உவமையாதற்கு உரித்து என்று கூறுவர். அவ்வாறு வருவது பயனிலை பொருந்திய வழக்கின்கண்ணதாகும்.

(எ-கா) பாரி பாரி யென்றுபல எத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீன் டுலகுபுரப் பதுவே". (புறம் - 107)

இது 'மாரி போலும் பாரியது கொடை' என்னும் பொருளைத தந்து நிற்கின்றது.

**தடுமாறு உவமை**

308. தடுமாறு வரலும் கடிவரை வின்றே.

(இ-ள்) உவமை தடுமாறி வருதலும் நீக்கப்படாது.

தடுமாறி வருதல் - ஐயப்பட்டுக் கூறுவதாக வருதல்.

(எ-கா) "கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து" (குறள் - 1085)

என்றும்

"ஈங்கே வருவாள் இவள்யார்கொல் ஆங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாம் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்" (குறிஞ்சிக்கலி – 20)

என்றும் வரும்.

இதனை **ஐயவுவமை** எனவும் கூறுவர்.

**அடுக்கியல் உவமை வருமிடங்கள்**

309. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை கண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங் கடையே.

அடுக்கிய தோற்றம் - உவமை இரண்டும் பலவும் அடுக்கி வருதல்.

(இ-ள்) உவமை இரண்டும் பலவுமாக அடுக்கி வருதல் நிரனிறுத்தமைத்தல், நிரனிறை, கண்ணம் என்று வரையறுக்கப்பட்ட மூன்று இடங்களில் மட்டும் கொள்ளவரும். இம்மூன்றும் அல்லாதவழி அது கடியப்படத்தக்கதாகும்.

**நிரனிறுத்தமைத்தல்**

நிரனிறுத்தமைத்தலாவது, பல உவமைகளை வரிசைப்படுத்திக் கூறி உவமச்சொல்லால் உவமேயத்தை ஒப்புமைப்படுத்துதல்.

(எ-கா) "நிலநீர் வளிவசும் பென்ற நான்கின்

அளப்பரி யையே"                    (பதிற்று – 14)

இதன்கண் சேரலாதனது இயல்புக்கு நிலம், நீர், வளி, விசும்பு என்னும் நான்கு உவமைகள் அடுக்கி வந்தன. இன் - உவமையுருபு.

"மதிபோலும் தாமரை போலும்"

என ஒவ்வொரு உவமை தோறும் உவமையுருபு தொடர அடுக்கியும் வரும்.

**நிரனிறை**

நிரனிறையாவது உவமைகளை வரிசைப்பட நிறுத்தி அவை ஏற்கும் உவமேயங்களை அவ்வரிசைக்கு ஏற்ப நிறுத்திக் கூறுதல்.

(எ-கா) கொடிகுவளை கொட்டை நுசுப்புஉண் கண்மேனி
மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்கு சாயல்
வடிவினளே வஞ்சி மகள்.

| | | |
|---|---|---|
| **முதலடி** | : கொடி, குவளை, கொட்டை | – உவமைகள் |
| | நுசுப்பு, கண், மேனி | - உவமேயங்கள் |
| **இரண்டாமடி** | : மதி, பவளம், முத்தம் | - உவமைகள் |
| | முகம், வாய், முறுவல் | - உவமேயங்கள் |
| **மூன்றாமடி** | : பிடி, பிணை, மஞ்ஞை | - உவமைகள் |
| | நடை, நோக்கு, சாயல் | - உவமேயங்கள் |

**சுண்ணம்**

சுண்ணமாவது, உவமையையும் பொருளையும் துணித்து ஒட்டுதல்.

(எ-கா) "களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனும் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே"   - (அகத்திணை – 11.நச்)

என்றவழி 'களிறு போலக் கலன்' எனவும் 'கந்து போலக் கூம்பு' எனவும் துணித்துப் பொருத்திப் பொருள் கொள்ளும்படி அமைந்துள்ளது.

மேற்கூறிய மூன்று இடத்துமன்றி உவமைக்கு உவமையாக அடுக்கி வருவது கடியப்படத் தக்கது என்பது ஆசிரியர் கருத்து.

"வெண்திங்கள் போன்றுளது வெண்சங்கம் வெண்சங்கின்
வண்டிக்கு தாழை வளர்கோடு"

என்றவழி உவமைக்கு உவமையாய் அடுக்கிக் கூறுவதனால் போதுமானதோர் பயனில்லை. அதனால் இவ்வாறு அடுக்கி வருவது கடியத் தக்கது.

<u>**வினாக்கள்:**</u>

1. உவமையியலின் நுட்பத்தை விளக்குக.

2. விரவியும் வரூஉம் மரபின என்ப விவரி.
3. உவமை தோன்றும் நிலைக்களன்கள் யாவை?
4. உவம உருபுகளை தொகுத்தெழுதுக.
5. நாலிரண்டு ஆகும் பாலுமா ருண்டே… விளக்குக.
6. உவமப்போலி என்றால் என்ன?
7. சுட்டிக்கூறா உவமம் - விவரி?
8. உள்ளுறை உவமைகளை சான்றுடன் எழுதுக.
9. பயன் உவம உருபுகளை விளக்குக.
10. மெய் உவம உருபுகளை விளக்குக.

## 3.செய்யுளியல்

உரைநடையின் சுருங்கிய வடிவம் செய்யுள் எனப்படும். உரைநடையாகப் பத்துப் பதினைந்து பக்கங்களில் கூறவேண்டிய செய்தியைப் புலவர் இரண்டடிச் செய்யுளில் சுருங்கக் கூறலாம். எனவேதான் வான்புகழ் தமிழ்மறையானது

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்

குறுகத் தறித்த குறள்"

எனப் போற்றப்படுகின்றது. சொற்செட்டும் எதுகை மோனைத் தொடை நயங்களும் செய்யுளைப் பொருளுணர்ந்து மனப்பாடம் செய்தற்குக் கருவியாய் உள்ளன.

"பல்வகைத் தாதுவின் உயர்க்குடல் போல்பல

சொல்லால் பொருட்கிட னாக உணர்வினின்

வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" (நன் - 268)

எனச் செய்யுட்குரிய இலக்கணத்தை நன்னூல் எடுத்துரைக்கக் காணலாம்.

பா, பாட்டு, யாப்பு, கவிதை என்பன செய்யுட்குரிய வெவ்வேறு வகைகளைக் குறிப்பனவாகவுள்ளன. தொல்காப்பியர் செய்யுளியலில் கவிதை நீங்கலாக ஏனை மூவகைச் செய்யுளுக்கும் இலக்கணம் உணர்த்துகின்றார். அவற்றுள் பா என்பது ஓசை அடிப்படையில் அமைந்த செய்யுளைக் குறிப்பதாகும். 'பா என்பது சேட்புலத்தில் இருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' எனப் பேராசிரியர் விளக்குவர். ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனப் பா நான்கு வகைப்படும். இவை முறையே அகவல், தூங்கல், செப்பல், துள்ளல் என்னும் ஓசையினைக் கொண்டு இயல்வதால் அப்பெயர் பெற்றன. பழங்காலத்துச் செய்யுட்கள் பலவும் இந்நால்வகைப் பாக்களாலேயே அமைந்துள்ளன.

பாக்கள் பண் தோன்றப் பாடப்படும் போது அவை பாட்டென்னும் பெயர் பெறுகின்றன. இவை குறிப்பிட்ட அடிவரையறையும் தனித்தனி ஓசையுமாகிய இலக்கண முறைப்படி ஆக்கப்படுகின்றன.

"அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" (செய் - 34)

எனத் தொல்காப்பியர் கூறுவதைக் கொண்டு அடியின் அளவிற்கேற்பவும் அமைப்பிற்கேற்பவும் பொருந்தி வருதலே பாட்டு எனப்படும் என்பது புலனாகின்றது.

யாப்பு என்பது எழுத்து, அசை, சீர், அடி முதலியவற்றால் அமைந்த செய்யுள் வடிவிற்குள் புலவன் குறித்த பொருளை முடிய நிலைநிறுத்தலைக் குறிக்கின்றது. யாத்தல் - கட்டுதல் அல்லது தொடுத்தல், தொல்காப்பியர் ஏழு வகையான யாப்பு வகைகளைக் கூறி, பாட்டு என்பதையும் அவற்றுள் ஒன்றாக அடக்கி மொழிகின்றார்.

கவிதை என்பது பிற்காலத்தில் தோன்றிய செய்யுள் வகையாகும். இலக்கியத்தில் உரைநடையின் தாக்கம் ஏற்பட்ட காலத்தில் கற்பனையின் ஆற்றலால் தோன்றிய செய்யுள் வகையே கவிதை எனப்படுகின்றது. வசனகவிதை எனத் தன்பெயர் தோற்றியெழுந்த கவிதையானது தற்காலத்தில் புதுக்கவிதை எனப் புதுப்பிறப்பெடுத்துப் பெருஞ்செல்வாக்குடன் சான்றோர் நடுவில் நடம்புரியக் காணலாம். அதனால் அது தோன்றுவதற்கு முன்பிருந்த பா வடிவங்கள் யாவும் மரபுக்கவிதை என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன.

இவை கவிர எழுத்து, சொல், பொருள் முதலியவற்றது இலக்கணம் பகரும் செய்யுள் வகையானது நூற்பா அல்லது சூத்திரம் எனப்படுகின்றது. தொல்காப்பியர் சூத்திரத்திற்குரிய இலக்கணத்தைச் செய்யுளியலில் எடுத்துரைக்கின்றார்.

தொல்காப்பியர் செய்யுளுக்குரிய முழுமையான இலக்கணத்தையும் ஒன்றும் விடாமல் செய்யுளியலில் தெளிவுற எடுத்துரைக்கின்றார். "மாத்திரை எழுத்தியல் அசைவகை யெனாஅ" (செய். – 1) என்னும் தலைச் சூத்திரத்தில் செய்யுளுக்குரிய 34 உறுப்புகளை எடுத்துக்கூறி, பின்பு அவற்றை ஒவ்வொன்றாக ஐயம் திரிபற விளக்கியுரைத்திருப்பது அவரது ஈடுஇணையற்ற இலக்கணப் புலமையை வெளிப்படுத்துகிறது. சுருங்கக் கூறின் இலக்கியம் படைக்கும் இன்றமிழ்ப் புலவர்க்கும் பாடற்சுவை நாடிநிற்கும் ஆர்வலர்க்கும் செய்யுளியல் ஓர் ஒப்பற்ற வழிகாட்டி.

**செய்யுள் உறுப்புகள்**

310. மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்

ஆறுதலை யிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயையே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

**செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கு**

இத்தலைச் சூத்திரம் செய்யுளுக்குரிய 34 உறுப்புகளை எடுத்துரைக்கின்றது. அவற்றை 'ஆறுதலையிட்ட நாலைந்து' என 26 உறுப்புகள் ஒரு பகுதியாகவும், பொருந்தக் கூறிய எட்டு என எட்டு உறுப்புகள் ஒரு பகுதியாகவும் பகுத்துரைக்கின்றது.

**ஆறுதலையிட்ட நான்கு(இருபத்தாறு) உறுப்புகளாவன:**

1. **மாத்திரை** - செய்யுளின் அடிப்படை உறுப்பு இது. எழுத்துக்களின் கால அளவைக் குறிப்பது. அ∴து எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டவாறு வரும்.
2. **எழுத்தியல்** - எழுத்துக்களைச் செய்யுளுக்கு ஏற்ப அமைத்து கொள்ளும் இயல்பு. அசைக்கு உறுப்பாய் வருவது. உயிர், மெய், சார்பு என எழுத்து மூன்று வகைப்படும். இதுவும் எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டவாறு வரும்.
3. **அசைவகை**- எழுத்தினான் ஆக்கப்பட்டு பாடலின் ஓசையை உருவாக்கும் உறுப்பு. இது நேர், நிரை எனவும் நேர்பு, நிரைபு எனவும் வரும்.
4. **சீர்** - இரண்டு முதலிய அசைகள் இணைந்து ஓசைபட நிற்பது சீர் எனப்படும்.
5. **அடி** - சீர்கள் இரண்டு பலவும் தொடர்ந்து ஆவதோர் உறுப்பு அடி எனப்படும். நாற்சீர் கொண்டு நடத்தலே அடிக்குச் சிறப்பு.
6. **யாப்பு** - எழுத்து, அசை, சீர், அடி என்று கூறப்பட்ட உறுப்புகளான் அமைந்த செய்யுளில் புலவன் தான் கருதிய பொருளை முடிய நிறுத்தி விளங்க வைத்தல் யாப்பு எனப்படும்.
7. **மரபு** - வழிவழியாகக் காலந்தோறும் இடந்தோறும் வழங்கி வரும் சொல் வழக்குக்கு ஏற்ப எழுவகை வழுவும் படாமல் செய்யுள் புணர்க்கும் மரபு.
8. **தூக்கு** - தூக்காவது ஓசை, அ∴து அகவுதல் ஓசை, செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்கு வகைப்படும்.
9. **தொடைவகை**- சீரும் அடியும் பாடல்களில் தொடுத்து நிற்கும் முறைமை தொடை எனப்படும். அது மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவும் அவற்றின் விரியுமாம்.
10. **நோக்கு** - மாத்திரை முதல் அடியிறுதியாகவுள்ள உறுப்புகள் யாவும் ஒரு செய்யுளில் காரணகாரியத்தோடு அமையப்படும் நிலை நோக்கு எனப்படும்.
11. **பா** - இன்ன செய்யுள் என்றுணர்தற்கு ஏதுவாகி அதன்கண் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசையையுடையது பா எனப்படும். வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா எனப் பா ஐவகைப்படும்.

12. **அளவியல்** - பாக்களின் அடிவரையறை அளவியல் எனப்படும்.

13. **திணை** - செய்யுளில் காணப்படும் அகம், புறம் என்னும் ஒழுகலாறுகள் திணை எனப்படும். கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பன அகத்திணைகள். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன புறத்திணைகள்.

14. **கைகோள்** - களவு, கற்பு என்னும் இருவகை அகத்திணை ஒழுக்கங்கள்.

15. **கூற்று வகை**- ஓர் அகத்திணைப் பாடலில் கூறுகின்றார் இன்னார் என உணர்த்துதல். களவிலும், கற்பிலும் கூற்று நிகழ்த்தற்குரியார், அல்லாதார் எவர் என்பதும் இதனால் அறியப்படும்.

16. **கேட்பார்** - இன்னார்க்குக் கூறுவது என்பதைத் தெளிவுபடுத்தல்.

17. **இடம்** - இது களம் எனவும் கூறப்படும். ஒரு செய்யுள் கேட்டால் இஃது இன்னவிடத்து நிகழ்ந்தது என்றறிதற்கு ஏதுவாயதோர் உறுப்பு. 'ஒருவழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினைநிகழ்ச்சி இடம்' என்று கூறுவர் இளம்பூரணர்.

18. **காலவகை**- இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலமும் அறியும்படிப் பொருள் நிகழ்ச்சியைக் கூறுவது காலம் என்னும் உறுப்பாகும்.

19. **பயன்** - இதனான் இது பயக்கும் என்னும் எண்ணத்தோடு, அதனை வெளிப்படக் கூறாது உணரக்கூறல் பயன் எனப்படும். (எ-கா) வரைந்து கோடலாகிய பயனை வெளிப்படையாகக் கூறாது வழியது அருமை கூறல்.

20. **மெய்ப்பாடு** - பாட்டுச்சுவை ஆண்டு நிகழ்ந்தவாறே கேட்போர் எய்துமாறு செய்யுள் செய்வது மெய்ப்பாடு என்னும் உறுப்பாகும்.

21. **எச்சவகை** - பிறிதோர் சொல்லோடும், பிறிதோர் குறிப்போடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சம் என்னும் உறுப்புடையதாகும். இது சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இருவகைப்படும்.

22. **முன்னம்** - இவ்விடத்து இம்மொழி இவர்க்குச் சொல்லத்தகும் எனக் குறித்து உரைப்பது முன்னம் எனப்படும். அதாவது இடமும் காலமும் உணர்ந்து கேட்பவர்க்குத் தக்கவாறு மொழிவது.

23. **பொருள்வகை**- இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பட்டவை வழுவுநெறியின்றி இத்திணைக்குரிய பொருள். இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே, பொருள் வகையாம்.

24. **துறைவகை**- அகத்திணை ஏழனுக்கும், புறத்திணை ஏழனுக்கும் ஓதப்பட்ட மாந்தரும், விலங்குமன்றிப் பிற மாந்தர், விலங்குகள், பறவை முதலியனவும் வந்தவிடத்துத் திறப்பாடுடைத்தாக ஆராய்ந்து தத்தமக்குரிய பண்போடும் மரபோடும் முடியின். அவ்வாறு திறப்பாடுடைத்தாய் வருவது துறையெனப்படும்.

25. **மாட்டு** - ஒரு செய்யுளில் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும், அணுகிப் பொருள் கிடப்பச் செய்யினும் அவ்விரு வகையினும் முன்னும் பின்னும் உள்ள தொடர்களைக் கூட்டிப் பொருள் கொள்ளும்படி உணரச்செய்தல் மாட்டு என்னும் உறுப்பாகும்.

26. **வண்ணம்** - வண்ணம் என்பது பாவின்கண் நிகழும் ஓசை வேறுபாடு. அதனை உறழ்ச்சி வகையான் இருபது எனவும், நூறு எனவும் பலவாறாக வகை செய்வர்.

**பொருந்தக் கூறிய எட்டு வனப்பாவன**

27. **அம்மை** - சிலவாகிய மெல்லிய சொற்களால் தொடுக்கப்பட்ட குறைந்த அடிகளையுடைய செய்யுள் அம்மை எனப்படும். பதினென்கீழ்க்கணக்கு நூற்கள் போன்றவை.

28. **அழகு** - செய்யுளுக்குரிய சொல்லினாற் சீர் புணர்த்துத் தொகுப்பின் அஃது அழகு என்னும் வனப்பாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவை.

29. **தொன்மை** - உரை விரவி வரும் பழைய வரலாறு தொன்மை என்னும் வனப்பாகும். இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் போல்வன.

30. **தோல்** - இழும் என்னும் மொழியால் வழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும் அது தோல் என்னும் வனப்பாம். மலைபடுகடாஅம், மார்க்கண்டேயனார் காஞ்சி என்பன.

31. **விருந்து** - விருந்து என்பது புதிதாய்ப் புனைந்த யாப்பு வடிவினதாகும். அந்தாதி, கலம்பகம் போல்வன.

32. **இயைபு** - ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்களுள ஒன்றனை இறுதியாகக் கொண்டு வரும் செய்யுள் இயைபென்னும் வனப்பாம். மணிமேகலை, கொங்குவேளிர், பெருங்கதை போல்வன இதன்பாற்படும்.

33. **புலன்** - வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமல் பொருள் தோன்றுவது புலன் என்னும் வனப்பாகும். பள்ளு, குறம் போல்வன.

34. **இழைபு** - ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது ஆசிரியப்பாவிற்கு ஓதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபது எழுத்தின்காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் வனப்பாகும். கலியும் பரிபாடலும் ஆகிய இசைப்பாடல்கள் போல்வன.

இவ்வாறு செய்யுளுக்குரிய உறுப்புகள் 34 கூறுகின்றார். இவற்றின் விரிவான விளக்கத்தினை இனிவரும் சூத்திரங்களால் உணர்த்தப்படும். அவற்றுள் எழுத்து முதலாகிய இருபத்தாறு உறுப்புகள் ஒரு தொகுதியாகவும், வனப்பு வகைகளாகிய அம்மை முதலிய எட்டு உறுப்புகள் ஒரு தொகுதியாகவும் விளக்குவது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் முற்கூறிய இருபத்தாறு உறுப்புகள் பெரும்பான்மையும் தனிநிலைச் செய்யுளில் வரும் என்பதையும்,

பிற்கூறிய எட்டு உறுப்புகள் பெரும்பான்மையும் தொடர்நிலைச் செய்யுளில் வரும் என்பதையும் அறிவித்தற்கே அவ்வாறு இருகூறுபடக் கூறியுள்ளார் என்பது உணர்த்தக்கது.

## மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்

311. அவற்றுள்

மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்

மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட முப்பத்துநான்கு உறுப்புகளுள் மாத்திரை அளவும், எழுத்துக்களின் வகையும் மேல் எழுத்ததிகாரத்தில் சொல்லப்பட்டவாறு வரும் என்று புலவர் கூறுவர்.

**மாத்திரை அளவு**

மாத்திரை அளவு என்பது எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு. அ∴து எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டவாறு வரும். "இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை" (தொல். எழுத்து) என்பது மாத்திரைக்கு இலக்கணம்.

குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை, நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை, உயிரளபெடை மூன்று மாத்திரை குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் மெய்யும் ஓரோவென்று அரை மாத்திரை, ஒற்றளபெடை ஒரு மாத்திரை, ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை, மகரக்குறுக்கத்திற்குக் கால் மாத்திரை ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்கு அளவாம்.

**எழுத்தியல் வகை**

எழுத்துக்களைச் செய்யுளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளும் கூறுபாடு எழுத்தியல் வகை எனப்படும். எழுத்துகள் உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்து என மூவகைப்படும்.

**உயிரெழுத்து** குற்றெழுத்து (அ, இ, உ, எ, ஒ) நெட்டெழுத்து (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ), அளபெடை (ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ) என மூவகைப்படும்.

**மெய்யெழுத்து** வல்லினம் (கசடதபற), மெல்லினம் (ஙஞணநமன), இடையினம் (யரலவழள) என மூவகைப்படும்.

**குற்றியலுகரமாவது** நெட்டெழுத்தின் பின்னரும் மூன்றெழுத்து முன்னான மொழியிலும் வல்லெழுத்தை ஊர்ந்து வரும் உகரம். (எ-கா) நாகு-நாக்கு, காசு-காச்சு, காடு-காட்டு, காது-காத்து, காபு-காப்பு, காறு-காற்று என வரும்.

**குற்றியலிகரமாவது** உகரம் திரிந்தும், மகரம் ஊர்ந்து அதனோடியைந்தும் வரும். (எ-கா) நாகு + யாது = நாகியாது என உகரம் திரிந்து இகரம் வந்தது. கேள் + மியா = கேண்மியா என மகரமோடியைந்து இகரம் வந்தது.

**ஆய்தமாவது** குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையில் வரும். (எ-கா) எ∴கு என வரும். **ஒற்றளபெடையாவது** மெல்லினமும் வயலளவும் ஆய்தமும் அளபெடுத்து வருவது. (எ-கா) மங்ங்கலம், இலங்ங்கு, மஞ்ஞ்சு, எ∴∴கு என வரும்.

உயிரும் மெய்யும் கூடிப் பிறப்பது **உயிர்மெய்** எனப்படும். அவை ககர முதல் னகரவீறாகிய 216 எழுத்துகளாகும். க் அ = க, ன் ஔ = னௌ என வரும்.

**ஐகாரக்குறுக்கம்** அளபெடையும், தனித்தும் அல்லாதவழிக் குறுகும். (எ-கா) ஐவர், வளையல், தவணை என வரும். **மகரக்குறுக்கம்** ணகர னகர ஒற்றின் பின்வரும். புணர்மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரம் குறுகும். (எ-கா) மருண்ம், போன்ம், வரும் வண்ணக்கன் என வரும்.

ஈண்டுக்கூறிய எழுத்துகளை அசைக்கு உறுப்பாவன (குறில், நெடில், குற்றுகரம்), தொடைக்கு உறுப்பாவன (நெடில், அளபெடை, உயிர், உயிர்மெய், மூவினம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள்), வண்ணத்துக்கு உறுப்பாவன (குறில், நெடில், அளபெடை) எனப் பிரித்துக் கூறும் சான்றோரும் உளர்.

**அசை வகை**

**இயலசை – நேர், நிரை**

312. குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசிற் பெயரே.

(இ-ள்) குறிலும் நெடிலும், குறிலிணையும் குறில்நெடிலும் தனியே வரினும் ஒற்றடுத்து வரினும் ஆராயுங்காலத்து அவை முறையே நேரசையும் நிரையசையும் என்றாகும்.

**இயலசை**

செய்யுளில் ஓசையை உருவாக்கும் உறுப்பு அசை எனப்படும். இஃது எழுந்தான் ஆக்கப்படுவது. நேரசை, நிரையசை என அசை இரண்டு வகைப்படும். இவை இயலசை எனப்படும்.

**நேரசை**

குறில், நெடில் தனித்தும் அவற்றொடு ஒற்றடுத்தும் வருவது.

(எ-கா) நெடில் தனித்து வருவது - கோ
குறில் தனித்து வருவது - ழி
நெடில் ஒற்றடுத்து வருவது - வேந்
குறில் ஒற்றடுத்து வருவது - தன்

**நிரையசை**

குறிலிணை, குறில்நெடில் தனித்தும் அவற்றொடு ஒற்றடுத்தும் வருவது.

(எ-கா) குறிலிணை தனித்து வருவது - வெறி
குறில்நெடில் தனித்து வருவது - சுறா
குறிலிணை ஒற்றடுத்து வருவது - நிறம்
குறில்நெடில் ஒற்றடுத்து வருவது - குரால்

**அசைவகை குறித்து நச்சினார்க்கினியர் கூற்று**

"நேரசை நிரையசை என்பன ஆட்சியும் குணமும் காரணமாகப் பெற்ற பெயர்கள். இரண்டெழுத்தான் ஆகாது ஓரெழுத்தான் ஆதலின் நேரிதன்றே. அதனால் நேரசை என்றாயிற்று.

இரண்டெழுத்து நிரைதலின் இணையசை என்னும் பொருள்பட நிரையசை என்றாயிற்று" என்பர் நச்சினார்க்கினியர்.

**உரியசை – நேர்பு, நிரைபு**

313. இருவகை உகரமோ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப
குறிலிணை உகரம் அல்வழி யான.

(இ-ள்) நேரசை, நிரையசை ஆகிய இரண்டும் குற்றியலுகரமும், முற்றியலுகரமும் பொருந்திவரின் அவை முறையே நேர்பு அசை, நிரைபு அசை எனப் பெறும். அவ்வாறு வரும்வழி தனிக்குறிலாகிய நேரசையோடு இருவகை உகரமும் இணைந்து நேர்பு அசையாகாது என்பது.

(எ-கா) காது, காற்று, கன்று, சார்பு, கல்லு – நேர்பசை

வரகு, அரக்கு, மலாகு, பனாட்டு, கதவு, புணர்வு, உருமு – நிரைபசை

நேர்பு அசை, நிரைபு அசை ஆகிய இரண்டும் உரியசை எனப்படும்.

குறிலிணை உகரம்

(எ-கா) அது, வடு, கணு எனத் தனிக்குறிலோடு இணைந்து வந்த உகரம் நேர்பு அசையாகாது நிரையசை எனக் கொள்ளப்படும்.

**இயலசை உரியசை இன்னவென்பது**

314. இயலசை முதலிரண்டு ஏனைய உரியசை.

(இ-ள்) முற்கூறப்பட்ட நேரும் நிரையும் இயலசை எனப் பெயர் பெறும். ஏனைய நேர்பும் நிரைபும் உரியசை எனப் பெயர் பெறும்.

**நேர்பு, நிரைபு என அசை வகுத்தது ஏன்?**

"காக்கைப் பாடினியார் முதலாகிய ஒருசார் யாப்பிலக்கண ஆசிரியர் நேர்பசை, நிரைபசைகளையும் தேமா, புளிமா என்றே பிரித்துக் காட்டியுள்ளனர். ஆனால் வெண்பா ஈற்றில் வந்த குற்றுகர நேரீற்று இயற்சீரை மட்டும் தேமா, புளிமா என்று ஓசையூட்டினால் செப்பலோசை குன்றும் என்று அஞ்சி காசு, பிறப்பு என உகரவீற்றான் உதாரணம் காட்டியுள்ளனர். சீரும் தளையும் சிதையும்வழிக் குற்றியலுகரம் அலகு பெறாது என விதியும் வகுத்துள்ளார்கள். வெண்பா ஈற்றில் குற்றுகரம் போல முற்றுகரமும் சிறுபான்மை வரும் என உடன்பட்டும் உள்ளார்கள். எனவே நேர்பசை நிரைபசை என்று வருதல் வலியுடைதென்று கொள்க" என்கிறார் இளம்பூரணர். அவை

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா **தார்**" – நேர் அசை (குறள் - 10)

"வேண்டுதல் வேண்டாமை இலன்அடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை **இல**" - நிரையசை (குறள் - 4)

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் **மாட்டு**" – நேர்புஅசை (குறள் -5)

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்

மனக்கவலை மாற்றல் **அரிது**" – நிரைபு அசை (குறள் -7)

**அலகிடுதல்**

அலகிடுங்கால் நேரசை ஓரலகு: நிரையசை இரண்டலகு: நேர்பசை மூன்றலகு: நிரைபசை நான்கலகு பெறும் அலகிடுதல் என்பது பிற்காலத்தில் அசை பிரித்தாலாயிற்று என்பர்.

**தொடாமொழிக்கண் முதலில் தனிக்குறில் நேரசை ஆகாது**

315. தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது.

(இ-ள்) தொடர்மொழிக்கண் மொழியைச் சிதைத்து முதலிலுள்ள தனிக்குறிலை நேரசையாக எடுத்துக்கொள்ளலாகாது.

**மொழி சிதைத்தல்**

மொழிசிதைத்தலாவது – ஒற்றுமைப்பட்டு நிற்பதனைப் பிரித்தல். அ∴தாவது 'புளிமா' என்பதனை நிரை நேர் என அலகிடுதலே முறையாகும். அவ்வாறு அலகிடாது முதல் நின்றதனை (பு) நேரசையாக்கி, இடைநின்றதனையும் இறுதி நின்றதனையும் சேர்த்து (ளிமா) நிரையசையாக்குதல் மொழி சிதைத்தலாம். புளி என்பதனைப் பிரிக்கலாகாமையின் நிரையசையாகவே கொள்ள வேண்டும்.

இனி, மொழி சிதையாக்கால் தனிக்குறில் முதலில் நேரசையாக வரும். **மொழிசிதையாமையாவது** விட்டிசைத்தல்.

(எ-கா) "அஉ மறியா…னாட்டை நீ" (யாப்.வி.பக்.142) எனவும்

"அஆ இழந்தானென் றெண்ணப் படும்" (நாலடி -9) எனவும் வருவன விட்டிசைத்தலின் முதலசை நேரசையாகும்.

**ஒற்றெழுத்து போலக் குற்றியலிகரமும் அலகு பெறாது**

316. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

(இ-ள்) ஒற்றெழுத்து அலகு பெறாமைபோலக் குற்றியலிகரமும் அடியினது இடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் அலகு பெறாது.

(எ.கா) "பேதை யென்ப **தியா**தென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கண்டது தெளிதல்"

இ∴து ஆசிரியப்பா. இதன்கண் முதலடியில் 'யென்ப' - தேமா வருஞ்சீர் 'தியாதென' - கருவிளம் எனக் கொண்டால் மா முன் நிரை வந்து அகவலோசை பிறழ்கிறது. ஈண்டுக் குற்றியலிகரத்தைக் கணக்கில் கொள்ளாது (தி)யாதென - கூவிளம் என்று அலகிட்டால் அகவலோசை பிறக்கின்றது. எனவே குற்றியலிகரம் அலகு பெறாமை.

**முற்றியலுகரம் அசையாகாத இடம்**

317. முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ

நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.

(இ-ள்) நேரசையோடும் நிரையசையோடும் சேர்ந்த முற்றியலுகரமும் மொழி சிதைத்து நேர்பசை நிரைபசை என்று கொள்ளக்கூடாது. அஃது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் இல்லை.

எனவே குற்றியலுகரம் மொழி சிதையாமல் நின்றால் நேர்பசை நிரைபசை என்று கொள்ளப்படும். அது நிலைமொழியில் இயல்பாக முற்றுகரம் வரும்வழி அமையும்.

அடியினது இடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் முற்றியலுகரம் நேர்பசை நிரைபசையெனக் காட்டப்பட்டது. எனவே ஒற்றுமைப்படாத சொல்லின்கண் தனியசையாகும் என்பதும், ஈற்றடி மருங்கின் எவ்வழியானும் தனியசையாகாது என்பதும் பெறப்படும்.

(எ.கா) "அங்கண் மதியம் அரவுவாய்ப் பட்டென".

என்றவழி 'அரவு' என்பது மொழி சிதையாமையின் நிரைபசையாயிற்று.

"**பெருமுத்** தரையர் பெரிதுவந் தீயும்" (நாலடி, 200)

என்றவழி 'பெரு' முன்னர் வந்த 'முத்' என்பதனைப் பிரித்து மொழி சிதைத்தலின் நிரைபசை ஆகாதாயிற்று. பெருமுத்-நிரை நேர் எனத் தனியசை ஆகின்றது.

"இன்மலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் **புல்லு**" (யாப்.வி.பக். 209)

என்றவழி 'புல்லு' என்பது ஈற்றடி மருங்கினில் முற்றியலுகரம் தனித்து நில்லாது நேர்பசையாய் வந்தது.

"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் **கருளு**" (யாப்.வி.பக். - 219)

என்றவழி 'அருளு' என்பது ஈற்றடி மருங்கினில் முற்றியலுகரம் தனித்து நில்லாது நிரைபசையாய் வந்தது.

**குற்றியலுகரமும் முற்றியலுகரமும் ஒற்றுடன்கூடி தனி அசையாதல்**

318. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

(இ-ள்) குற்றியலுகரமும் முற்றியலுகரமும் ஒற்றொடு தோன்றித் தனியசையாகி நிற்கவும் பெறும்.

(எ.கா) "படுகிளி யாவும் பசுங்குரல் ஏனல்
கடிதின் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் **வேண்டும்**" (கலித் - 50)

இதன்கண் ‘வேண்டும்’ (வேண்/டும்) என்பதில் குற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையாயிற்று.

“**கண்ணும்** படுமோ என்றிசின் யானே” (நற் - 61)

இதன்கண் ‘கண்ணும்’ (கண்/ணும்) என்பதில் முற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையாயிற்று.

**ஓசைக்கு ஏற்பவே அசையும் சீரும் பகுக்க வேண்டும்**

319. அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே.

(இ-ள்) அசையையும் சீரையும் பாடலின் ஓசைக்கு ஏற்பச் சேர்த்திப் பாகுபாடு செய்தல் அறிவுடையோர் நெறியாகும்.

(எ.கா) “மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்”

என்றவழி பொருள் அடிப்படையில் ‘நீடு வாழ்வார்’ எனப் பிரித்தால் செப்பலோசை கெடும். எனவே ‘நீடு’ என்பதனோடு ‘வாழ்’ என்பதனை ஒன்றாக்கி நிறுத்தி ‘வார்’ என்பதைத் தனிச்சீராக்கி அலகிட வேண்டும். அப்பொழுது செப்பலோசை பிறக்கும்.

அலகிடுதல் வருமாறு:

நீ / டுவாழ் வார் நேர் / நிரை நேர்

**சீர்**

320. ஈரசை கொண்டும் மூவசை புணர்த்தும்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே

(இ-ள்) இரண்டசை கொண்டு புணர்த்தும், மூன்றசை கொண்டு புணர்த்தும் ஓசை பெற ஒன்றுபட்டு நிற்பது சீர் எனப்படும்.

(எ.கா) “தாமரை புரையும் காமர் சேவடி” (குறுந். கடவுள் வாழ்த்து) என்பது ஈரசைச் சீரான் வந்தது.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு” (குறள் -110)

என்றவழி முதலடி முழுவதும் மூவசைச் சீரான் வந்தது.

**ஈரசைச் சீர்கள் - இயற்சீர், உரிச்சீர்**

321. இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.

(இ-ள்) இயலசை தம்முள் மயங்கி வந்தன இயற்சீர் எனப்படும். உரியசை தம்முள் மயங்கி வந்தன ஆசிரியவுரிச்சீர் எனப்படும்.

**இயற்சீர்**

நேர் நேர் - தேமா

நிரை நேர் - புளிமா

நிரை நிரை - கருவிளம்

நேர் நிரை - கூவிளம்

இவை நான்கும் சிறப்புடைய இயற்சீர் எனப்படும்.

**ஆசிரிய உரிச்சீர்**

நேர்பு நேர்பு - ஆற்று நோக்கு

நிரைபு நேர்பு - வரகு சோறு

நிரைபு நிரைபு - வரகு தவிடு

நேர்பு நிரைபு - ஆற்று வரவு

**உரியசைகளுடன் 'நிரை' சேரினும் ஆசிரிய உரிச்சீரே**

322. முன்நிரை இறினும் அன்ன வாகும் .

(இ-ள்) நேர்பசை நிரைபசைகளுக்குப் பின் 'நிரை' இறுதியாக நிற்பினும் அ.்.து ஆசிரியவுரிச்சிரேயாகும்.

(எ-கா) நேர்பு நிரை - ஆற்றுமடை
நிரைபு நிரை - குளத்து மடை

என வரும்.

**உரியசைகளுடன் 'நேர்' வரின் இயற்சீராகும்**

323. நேர் அவண் நிற்பின் இயற்சீர்ப் பால.

(இ-ள்) நேர்பசை நிரைபசைகளுக்குப் பின் 'நேர்' இறுதியாக நிற்பின் அது இயற்சீரின்பாற் படும்.

(எ-கா) நேர்பு நேர் - நிரைபு நேர்
ஆற்றுக்கால்- குளத்துக்கால்

இவையிரண்டும் சிறப்பில்லா இயற்சீர் என்பர்.

**இயலசை முன் 'உரியசை' வரின் நிரையியல்பாகும்**

324. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல ஆகும் என்ப.

(இ-ள்) இயலசைகளுக்குப் பின் நேர்பு, நிரைபு என்னும் உரியசைகள் வருமாயின் அவை நிரையிற்று இயற்சீர் போன்ற இயல்பினைப் பெறும் என்பர்.

(எ-கா) நேர் நேர்பு - மாங்காடு
நிரை நேர்பு - களங்காடு

நேர் நிரைபு - பாய்குரங்கு

நிரை நிரைபு - கடிகுரங்கு

இயல்பினைப் பெறுமெனவே. சீராதல் மாத்திரமன்றி அவ்வாறு தளைபெறும் என்பதையும் அறியலாம்.

இவையும் சிறப்பில்லா இயற்சீர் என்பதன்பாற் படும்.

**உயிரளபெடை அலகு பெறுதலும் அசைநிலையாதலும்**

325. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே .

(இ-ள்) உயிரளபெடை அலகு பெறாது அசைநிலையாக நிற்கவும் பெறும்.

உம்மை எதிர்மறையாதலின் அசைநிலையாகாமையே பெரும்பான்மை.

(எ.கா) "கடாஅ உருவொடு………. வல்லதே ஒற்று" (குறள்-585)

இதன்கண் அளபெடை அலகுபெற்று வந்தது.

"இடைநுடங்க வீங்கோதை பின்தாழ வாட்கண்
காலய புடைபெயரப் போழ்வாய் திறந்த - கடைகடையின்
உப்போடு எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி உலகு".

இதன்கண் அளபெடை அசைநிலையாகி அலகு பெறாதாயிற்று. ஈண்டு 'உப்போஒ' என்பதில் அளபெடைக்கு அலகு கொண்டால் 'காய் முன் நிரை' வந்து செப்பலோசை பிறழும். அதனால் அளபெடையை அசைநிலையாகக் கொள்ள வேண்டும்.

**ஒற்றளபெடையும் உயிரளபெடையைப் போல அலகு பெற்றும் - அசைநிலையாகவும் வரும்**

326. ஒற்று அளபெடுப்பினும் அற்றென மொழிப.

(இ-ள்) ஒற்று அளபெடுத்து வரினும் அசைநிலையாக நிற்றலும் உரித்தென்று கூறுவர்.

இதுவும் அசைநிலையாகாமையே பெரும்பான்மை.

(எ.கா) "கண்ண் டண்ணெனக் கண்டும் கேட்டும்" (மலைபடு -252) என அலகு பெற்று வந்தது.

இது காறும் கூறியவற்றால் ஈரசைச்சீர் - 16 என்று கொள்ளலாம்.

**மூவசைச்சீர்கள்**

**வெண்பா உரிச்சீர் - நான்கு**

327. இயற்சீர் இறுதிமுன் நேர்அவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

(இ-ள்) இயற்சீர் நான்கின் பின் நேர் வந்து நிற்குமாயின் மூவசைச்சீராகிய வெண்பாவுரிச்சீராகும் என்று கூறுவர்.

(எ.கா) நேர் நேர் நேர் - மா வாழ் கான்

நிரை நேர் நேர் - புலி வாழ் கான்

நிரை நிரை நேர் - புலி வரு கான்

நேர் நிரை நேர் - மா வரு கான்

**வஞ்சி உரிச்சீர் - அறுபது**

328. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீர் அல்லா மூவசை என்ப.

(இ-ள்) வெண்பாவுக்குரிய நேரீற்று 'மூவசைச்சீர் நீங்கலாகவுள்ள மூவசைச்சீர் அனைத்தும் வஞ்சியுரிச்சீர் என்னும் வகைபெற்றனவென்று கூறுவர். அவ்வாறு வருவன மூவசைச்சீர் 60.

எடுத்துக்காட்டு

1.நேர் நேர் நிரை - மா வாழ் நெறி

2.நேர் நேர் நேர்பு - மப வாழ் காடு

**வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவிற்கே உரித்து**

329. தன்பா அல்வழித் தான்நடை இன்றே.

(இ-ள்) வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவினு ளல்லது பிற பாவின்கண் நடைபயின்று வருதலில்லை.

**வஞ்சிப்பாவில் ஏனைய சீர்களும் பயின்று வரும்**

330. வஞ்சி மருங்கின் எஞ்சிய வுரிய.

(இ-ள்) வஞ்சிப்பாவினுள் ஏனைய பாவினுக்குரிய சீர்களும் பயின்று வரும்.

அதாவது வெண்பா உரிச்சீரும், ஆசிரிய உரிச்சீரும் கலந்து வரும் அடியிறுதியில் நேர் ஈற்று இயற்சீர் (தேமா, புளிமா) வராது. அடிமுதற்கண் நிற்கப் பெறும்.

**வெண்பா நேரடிக்கண் வெண்பாவுரிச்சீரும்**
**ஆசிரியவுரிச்சீரும் ஒருங்கு வருதலில்லை.**

331. வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
சிந்திற இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே.

(இ-ள்) வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவினது நேரடிக்கண் ஒருசேர நிற்றலில்லை.

**கலிப்பாவில் வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும்**
**ஒருங்கு நிற்கவும் பெறும்**

332. கலித்தளை மருங்கில் கடியவும் பெறாஅ.

(இ-ள்) கலிப்பாவில் கலித்தளையோடு மேற்சொல்லப்பட்ட வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஒருங்கு நிற்கவும் பெறும்.

**கலிப்பாவில் நேர் ஈற்று இயற்சீர் வராது**

333. கலித்தளை அடிவயின் நேரிற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

(இ-ள்) கலிப்பாவில் கலித்தளையான் வரும் அடியின்கண் நேர் ஈற்று இயற்சீர் (தேமா, புளிமா) கலந்து வருதலில்லை என்பதை ஆராய்வோர் அறிவர்.

**வஞ்சியடி இறுதியிலும் நேர் ஈற்று இயற்சீர் வராது**

334. வஞ்சி மருங்கினும் இறுதி நில்லாது.

(இ-ள்) வஞ்சிப்பாவில் வரும் வஞ்சியடியின் இறுதிக்கண்ணும் நேர் ஈற்று இயற்சீர் நில்லாது,

எனவே அமுதற்கண் நிற்கப்பெறும் என்றவாறு அடியிறுதிக்கண் நிற்பின் தூங்கலோசை கெடும்.

### ஓரசை கொண்டு சீராமாறு (ஓரசைச்சீர்)

335. இசைநிலை நிறைய நிற்குவ தாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.

(இ-ள்) பாடலடியின் இசைநிலை முற்றப் பொருந்தி நிற்குமாயின் ஓரசையும் சீராம் தன்மை பெறுதலை நீக்கமாட்டார்.

ஓரசைச் சீராவன

நேர் - நாள்

நிரை - மலர்

நேர்பு - காசு

நிரைபு - பிறப்பு

### ஓரசைச் சீரைத் தளைகொள்ளும் முறை

336. இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மையான.

(இ-ள்) ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டுமிடத்து இயற்சீர் போலக் கொள்ள வேண்டும்

அதாவது தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் போலக் கருதித் தளைகொள்ள வேண்டும் என்பது.

### வெண்சீர் ஈற்றசை நிரை இயல்பு பெறுதல்

337. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.

(இ-ள்) வெண்சீரின் ஈற்றசை தளை வழங்குமிடத்து இயற்சீரின் நிரையீறு போலும் தன்மைத்து.

வெண்சீரின் ஈற்றசையாவது 'காய்' அது வருஞ்சீருடன் சேரும்போது இயற்சிரின் நிரை (விளம்) ஈறு போலத் தளைகொள்ள வேண்டும்.

'காய் முன் நேர்' என்பதை 'விளம் முன் நேர்' போல வெண்டளையாகக் கொள்ள வேண்டும்.

இரண்டுமே வெண்டளையெனினும் இயற்சீர் விளம்முன் நேர் வரும் போது அது ‘இயற்சீர் வெண்டளை’ யெனவும், வெண்சீர் காய் முன் நேர் வரும் போது அது 'வெண்சீர் வெண்டளை' யெளவம்: பெயர் பெறும்.

**ஆசிரியப்பாவில் வெண்சீர் கலந்து வருதல்**

338. இன்சீர் இயைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.

(இ-ள்) இனிய ஓசை பொருந்தி வருகுவதாயின் ஆசிரியவடியில் வெண்பாவுரிச்சீர் கலந்து வருதல் நீக்கமாட்டார் ஆசிரியர்.

**ஆசிரியப்பாவில் வஞ்சியுரிச்சீர் கலந்து வருதல்**

339. அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய ஓரொரு வழியே.

(இ-ள்) இனிய ஓசை பொருந்தி வருவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஓரோவழி ஆசிரிய அடிக்கண் கலந்து வரும்.

**தொகுத்துக் காண்டல் -சீர் இலக்கணம்**

**நால்வகைப் பாவிற்குமுரிய சீரிலக்கணம் அமையுமாறு:**

**1. வெண்பாவுக்குரிய சீர்கள்**

(1) இயற்சீர் நான்கின் பின் நேரசை வந்த மூவசைச் சீர் நான்கும் வெண்பாவிற்குரியனவாகும்.

“இயற்சீர் இறுதிமுன் நேர்அவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப” (தொல்.பொருள். 327)

என்பது நூற்பா.

(எ-டு)

நேர் நேர் நேர் - மா வாழ் கான்

நிரை நேர் நேர் - புலி வாழ் கான்

நிரை நிரை நேர்- புலி வரு கான்

நேர் நிரை நேர் - மா வரு கான்

இக்காலத்து இதனைக் காய்ச்சீர் எனப் பெயரிட்டு தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என வாய்ப்பாடு கூறுவர்.

(2) வெண்பாவின் நேரடியில் வெண்பா உரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஒருங்கு நிற்றல் இல்லை.

“வெண்பா உரிச்சிர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக்கு ஒருங்குநிலை இலவே” (தொல. பொரு. 331)

என்பது நூற்பா. இவ்விதியினை ஆசிரியப்பாவிற்கு உரித்தாக்கி உரைப்பர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.

## 2. வஞ்சிப்பாவுக்குரிய சீர்கள்

(1) மூவசைச்சீர் அறுபத்து நான்கனுள் வெண்சீர் நீங்கலாகவுள்ள அறுபதும் வஞ்சிப்பாவுக்குரிய சீர்கள் ஆகும்.

“வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீர் அல்லா மூவசை யான” (தொல். பொரு. 328)

என்பது நூற்பா.

(2) பொதுவாக வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவினுளல்லது பிற பாவினுள் பயின்று வருவதில்லை.

“தன்பா அல்வழி தான் நடை இன்றே” (தொல் பொரு.329)

என்பது நூற்பா.

(3) வஞ்சிப்பாவினுள் வெண்பா உரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் பயின்றுவரும். அடியிறுதியில் நேர் ஈற்று இயற்சீர் (தேமா, புளிமா) நிற்பதில்லை. எனவே அடிமுதற்கண் நிற்கப்பெறும் எண்பர் இளம்பூரணர்

“வஞ்சி மருங்கின் எஞ்சிய வுரிய” (தொல்.பொரு 330)
“வஞ்சி மருங்கினும் இறுதி நில்லாது” (தொல் பொரு 334)

என்பன நூற்பாக்கள்.

## 3. கலிப்பாவுக்குரிய சீர்கள்

(1) நேர் ஈற்று மூவசைச்சீர் (காய்) முன் ‘நிரை’ வருவது கலித்தளை எனப்படும்.

கவிப்பாவில் கலித்தளையோடு வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் சிறுபான்மை ஒருங்கு நிற்கவும் பெறும்.

“கலித்தளை மருங்கின் கடியவும் பெறா” (தொல் பொரு. 332) என்பது நூற்பா.

(1) கலித்தளையான் வரும் அடிக்கண் நேர் ஈற்று இயற்சீர் (தேமா, புளிமா) கலந்து

வருவதில்லை.

கலித்தளை அடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே (தொல்.பொரு. 333)

என்பது நூற்பா. எனவே இவையிரண்டும் ஒழிந்த எட்டு இயற்சீரும் கலிப்பாவில் வரப்பெறும்.

(கலிப்பாவில் இயற்சீர் எட்டும், வெண்சீர் நான்கும் ஆசிரியவுரிச்சீர் இரண்டு ஆக 14 சீர் பெறும் என்பர் பேராசிரியர்.

**4. ஆசிரியப்பாவுக்குரிய சீர்கள்**

(1) இனிய ஓசை பொருந்தி வருவதாயின் ஆசிரியப்பாவில் வெண்பாவுரிச்சீர் கலந்து வரும்.

"இன்சீர் இயைய வருகுதாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே" (தொல் பொரு. 338)

என்பது நூற்பா.

(2) அவ்வாறே வஞ்சியுரிச்சீரும் இனிய ஓசை பொருந்தி வரும்வழி ஆசிரியப்பாவில பயின்று வரப்பெறும்.

"அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுகல் உடைய ஒரொரு வழியே" (தொல் பொரு. 339)

என்பது நாற்பா.

"ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசையை ஆக்குவதுபோல வஞ்சியுரிச்சீர் அகவலோசையை ஆக்காது அதனால் வஞ்சியுரிச்சீர்கள் பெரும்பாலும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பாக்களில் பயின்று வராது" என்பது நச்சினனார்க்கினியர் கருத்து.

**அடி இலக்கணம்**

செய்யுள் உறுப்புகளில் சிறப்புடைய உறுப்பு அடி எனலாம். சீர்கள் இரண்டும் பலவும் தொடர்ந்து ஆவதோர் உறுப்பு அடியெனப்படும்.

**அடியெனப்படுவது நாற்சீரடியே**

340. நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே.

(இ-ள்) நான்கு சீர் கொண்டதே அடியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகும். இதனை அளவடி, நேரடி, கட்டளையடி என்றும் கூறுவர்.

தொல்காப்பியர் காலத்தில் எழுத்தெண்ணிப் பாடும் கட்டளையடிகளே வழக்கில் அதிகமாக இருந்துள்ளன. சீர்வகை அடிகள் சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் பெருவழக்கு

பெற்றிருக்க வேண்டும். ஆகவேதான் நாற்சீரடியினைக் கருத்திற்கொண்டு அடியிலக்கணம் கூறுகின்றார் என்பது புலனாகின்றது.

'அடியென்று சிறப்பித்துக் கூறப்படுவது நாற்சீரடியே' என்பதால் இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும், அறுசீர் முதலியவற்றானும் இயன்றுவரும் அடிகள் பல இருந்தாலும் அவை நாற்சீரடி போல அத்துணைச் சிறப்புடையனவல்ல என்பது அறியக் கிடக்கின்றது. அன்றியும் எழுத்து வகையில் எடுத்துக் கூறப்படும் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் ஐவகைப் பாகுபாடும் நாற்சீரடிக்கே ஏற்புடையன என்பதும் ஆசிரியர் கருத்தாகும்.

### தளையும் தொடையும் அடியின்கண் அமையும்

341. அடியுள் ளனவே தளையொடு தொடையே.

(இ-ள்) தளையும் தொடையும் அடியின்கண் பயின்று வருவனவாகும்.

அடியின்கண் பயின்று வருமெனவே தளையும் தொடையும் நாற்சீரடிக்கண் கொள்ள வேண்டும் என்பதும் மிக்கும் குறைந்தும் வரும் அக்கண் கொள்ளக் கூடாது என்பதும் பெறப்படும்.

'தளை' என்பதனைப் பிற்காலத்து யாப்பிலக்கண ஆசிரியர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகச் சேர்த்துக் கூறினர். ஆனால் தொல்காப்பியர் அடியின் உட்கூறுகளில் ஒன்றாகவே தளையைக் கொண்டுள்ளார். தளைப்பகுதியால் கட்டளையடியெனப் பெருக்குவதற்கும், அடி 625 என வரையறை செய்தற்கும் வாய்ப்பாக அமைந்த அளவடியைச் சங்ககாலத்தவர் பெரிதும் போற்றினமையால் தொல்காப்பியர் அதனை கருத்திற் கொண்டு அளவடிக்கண் தளையையும் தொடையும் சேர்த்துக் கூறினார்.

### தளையும் தொடையும் அடிவரையறையின்றி வாரா

342. அடியிறந்து வருதல் இல்லென மொழிப.

(இ-ள்) தளையும் தொடையும் நாற்சீரடிக்கண் அன்றி அடியின் நீங்கி வருதல் இல்லையென மொழிவர்.

அடியின் நீங்குதலாவது, அடிவரையறையின்றி அளவடியின் மிக்கும் குறைந்தும் வருதல். அவ்வாறு இருசீரடி, முச்சீரடி, ஐஞ்சீரடி, அறுசீரடி முதலியவற்றின் கண்ணும் சீர்வகையடிக் கண்ணும் தளை கொண்டால் அது வரையறையில்லாமல் பெருகும். எனவே அது கூடாது.

### அடியின் சிறப்பே. பாட்டெனப்படும்

343. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

(இ-ள்) அடியின் சிறப்பினாலேயே பாட்டு என்னும் சிறப்பு படும்.

எனவே பாட்டு என்னும் செய்யுளுக்கு அடி மிகவும் இன்றியமையாதது என்பது பெறப்படும். பாட்டாவன: வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்பன என்பர் இளம்பூரணர்.

அடியெனப்படுவது அளவடியைக் குறிப்பதாகும். ஒழிந்த அடிகளான் வருவன அவ்வாறு சிறப்பில் என்பதும், தலை இடை கடைச்சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும் செய்தார் என்பதும், வஞ்சிப்பா சிறுவரவிற்று என்பதும் பேராசிரியர் தரும் விளக்கம்.

**எழுத்து அடிப்படையில் அடிவகைகள்**

**குறளடி -நான்கு முதல் ஆறெழுத்து வரை**

344. நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி யென்ப.

(இ-ள்) நாலெழுத்து முதலாக ஆறெழுத்து ஈறாக ஏறிய மூன்று நிலத்தையுடையது குறளடி என்று கூறுவர்.

நிலம் மூன்றாவது நாற்சீரடி மூன்று வருவது. எனவே குறளீடி நான்கு, ஐந்து, ஆறு எழுத்துகளாலாகிய மூன்று நாற்சீரடிகளைக் கொண்டு வரும்.

நான்கெழுத்தான் வருதலே குறனடிக்குச் சிறப்பு. எழுத்து கணக்கிடுங்கால் ஒரு மாத்திரையில் குறைந்து வரும் மெய், ஆய்தம் குற்றியலுகரம், குற்றியலிகரம் என்னும் உயிரற்ற எழுத்துக்களை விடுத்து ஒரு மாத்திரை முதலா உயிருள்ள எழுத்துகளையே கணக்கிட வேண்டும்.

(எ-டு) ‘போந்து சென்று சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு வீங்கி”

இப்பாடலில் முறையே நான்கெழுத்தும், ஐந்தெழுத்தும், ஆறெழுத்தும் நாற்சீரடிக்கண் வந்தன.

**சிந்தடி ஏழு முதல் ஒன்பது எழுத்து வரை**

345. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அவ்வழியான்.

(இ-ள்) சிந்தடிக்கு அளவு ஏழெழுத்து என்பர். அவ்வழி இரண்டு எழுத்து ஏற்றம் பெற்று ஒன்பது எழுத்தின் மிகாது.

எனவே சிந்தடி ஏழு, எட்டு, ஒன்பது எழுத்துகளாலாகிய மூன்று நாற்சீரடிகளைக் கொண்டு வரும் ஏழு எழுத்தான் வருதலே சிந்தடிக்குச் சிறப்பு.

(எ-டு) “நீர்வாய் கொண்டு நீண்ட நீல
நீர்வா யூதை வீச வூர்வாய்
மணியே நுண்டோ டொல்கி மாலை”

இப்பாடலில் முறையே ஏழெழுத்தும், எட்டெழுத்தும், ஒன்பதெழுத்து நாற்சீரடிக்கண் வந்தன.

### அளவடி - பத்து முதல் பதினான்கு எழுத்து வரை

346. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே.

(இ-ள்) நேரடிக்கு அளவு பத்தெழுத்து என்று கூறுவர். அவ்வழி ஏற்புடைய நான்கு எழுத்து ஏறி பதினான்கு எழுத்தின் மிகாது வரும.

நேரடி எனினும் அளவடி எனினும் ஒக்கும். எனவே அளவடி பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு எழுத்துகளாலாகிய ஐந்து நாற்சீரடிகளைக் கொண்டு வரும்.

(எ-டு) "நன்மணங் கமழும் பன்னெல் லூர
வமையோர் மென்றோ எம்பரி நெடுங்க
ணிணையீ ரோதி யேந்திள வனமுலை
யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி
னறுந்தழைத் துயல்வரூஉம் செறிந்தேந் தல்குல்"

இப்பாடலில் முறையே பத்தெழுத்தும், பதினொன்றெழுத்தும் பன்னிரண்டெழுத்தும், பதின்மூன்றெழுத்தும், பதினான்கெழுத்தும், நாற்சீரடிக்கண் வந்தன. பத்தெழுத்தான் வருதலே அளவடிக்குச் சிறப்பு.

### நெடிலடி - பதினைந்து முதல் பதினேழு எழுத்து வரை

347. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

(இ-ள்) நெடிலடிக்கு அளவு பதினைந்து எழுத்தாகும். அவ்வழி இரண்டு எழுத்து மிகுந்து பதினாறு எழுத்தாலும் பதினேழு எழுத்தானும் வரப்பெறுதல் இயல்பெனக் கூறுவர்.

எனவே நெடிலடி பதினைந்து, பதினாறு, பதினேழு எழுத்துகளாகி மூன்று நாற்சீரடிகளைக் கொண்டு வரும்.

(எ-டு) "அணிநடை அசைஇய வரியமைச் சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வயரிளம் பிறைநுத
லொளிநிலவு வயங்கிழை யிருவுடை மகளிரொடு"

இப்பாடலில் முறையே பதினைந்தெழுத்தும் பதினாறெழுத்தும் பதினேழெழுத்தும் நாற்சீரடிக்கண் வந்தன. பதினைந்தெழுத்தான் வருதலே நெடிலடிக்குச் சிறப்பு.

## கழிநெடிலடி - பதினெட்டு முதல் இருபது எழுத்து வரை

348. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

(இ-ள்) கழிநெடிலடிக்கு அளவு பதினெட்டு எழுத்தாகும். அவ்வழி இரண்டெழுத்து மிகுந்து பத்தொன்பது எழுத்தானும் இருபது எழுத்தானும் வரப்பெறுதல் இயல்பெனக் கூறுவர்.

எனவே கழிநெடிலடி பதினெட்டு, பத்தொன்பது, இருபது எழுத்துகளாலாகிய மூன்று நாற்சீரடிகளைக் கொண்டு வரும்.

(எ-டு) "நளிமுழவு முழங்கிய வணிநிலவு மணிநக
ரிருந்தளவு மலரளவு கரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு"

இப்பாடலில் முறையே பதினெட்டெழுத்தும், பத்தொன்பதெழுத்தும், இருபதெழுத்தும் நாற்சீரடிக்கண் வந்தன. பதினெட்டெழுத்தான் வருதலே சிந்தடிக்குச் சிறப்பு.

## குறளடி முதலியன காரணப் பெயர்களே பேராசிரியர் கருத்து

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் குறிகள் காரணப்பெயர்களே. மக்களுள் தீரக் குறியானைக் குறளனென்றும் அவனின் நெடியானைச் சிந்தனென்றும் ஒப்பமைந்தானை அளவிற்பட்டான் என்றும் அவனின் நெடியானை நெடியானென்றும், அவனின் நெடியானைக் கழிநெடியானென்றும் சொல்லுப. அவை போற்கொள்க என்பர் பேராசிரியர்.

## குறளடி முதலியன சீர்வகை அடிக்கும் பொருந்துமாறு நச்சினார்க்கினியர் கூறுவது

எழுத்து வகையாற் கூறப்படும் குறளடி முதலியன பிற்காலத்தவர் கூறும் சீர்வகையடிக்கும் பொருந்தும் என்பர் நச்சினார்க்கினியர். அது வருமாறு:

"சுருங்கிய எழுத்தானும் இருசீரானும் வருவன குறளடி எனவும், ஏறியவெழுத்தானும் முச்சீரானும் வருவன சிந்தடி எனவும், இடைநிகரான எழுத்தானும் நாற்சீரானும் வருவன அளவடி எனவும், மிக்கவெழுத்தானும் ஐஞ்சீரானும் வருவன நெடிலடி எனவும், அவற்றின் மிக்கவெழுத்தானும் அறுசீர் முதலிய சீரானும் வருவன கழிநெடிலடி எனவும் இங்ஙனம் இருவகையடிக்கும் ஒரே பெயரே கொள்க" என விளக்குவர் நச்சினார்க்கினியர் எண்சீரின் மிக்கு வருவன சிறப்பில என்பதும் அவர் கருத்து.

## சீர்க்கு எழுத்து வரையறை

349. சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிரை வஞ்சிக் காறும் ஆகும்.

(இ-ள்) நேர் இறுதியாகிய சீர்க்கு ஐந்தெழுத்தின் மிகுந்து வராது. நிரை இறுதியாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்து எல்லையாகும்.

வஞ்சியுரிச்சீர் முச்சீரடியாக அல்லது நாற்சீரடியாக வருவதில்லை. எனவே இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி இல்லை என்பர் இளம்பூரணர்.

**எழுத்தளவு எஞ்சினும் சீர்நிலை மாறாது**

350. எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இன்றென மொழிப.

(இ-ள்) அடிகள் பல தொடுக்கும்வழி ஓரடிக்கோரடி எழுத்தளவு குறைந்து வரினும் சீர்கள் நான்கைவிடக் குறைவதும் மிகுவதும் இல்லை.

**உயிரில் எழுத்து எண்ணப்படா**

351. உயிரில் எழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான.

(இ-ள்) உயிரில்லாத எழுத்துகளும் எண்ணப் படா ஏனெனில், உயிர்போல இயங்கும் திறம் அவற்றுக்கு இல்லை.

உயிரில்லாத எழுத்துகளாவன மெய்யும் ஆய்தமும்: உம்மை எச்சவும்மையாகலான் குறுகிய உயிர்த்தாகிய குற்றியலுகரமும் குற்றியலிகரமும் கூட எண்ணப்படா என்க, எனவே ஒரு மாத்திரையிற் குறையாத உயிரும் உயிர்மெய்யுமே எழுத்துகளாக எண்ணப்படும்.

**வஞ்சிப்பாவிற்கு அடிவரையறை**

352. வஞ்சி அடியே இருசீர்த் தாகும்.

(இ-ள்) வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டு சீரை உடைத்தாய் வரும்.

**வஞ்சியுரிச்சீர்க்குச் சிறுமை மூன்றெழுத்து**

353. தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே.

(இ-ள்) வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்து ஆகும்.

எனவே மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீர்க்கு எழுத்தளவாகும்.

**வஞ்சியடி மூச்சீரானும் வரப்பெறும்**

354. முச்சீரானும் வரும்இடன் உடைத்தே.

(இ-ள்) வஞ்சியடி முச்சீரான் வரும் இடனும் உண்டு

எனவே வஞ்சியடி இருசீரானும் முச்சீரானும் வரும் என்றவாறு,

(எ-டு) “தூங்குகையான் ஓங்குநடைய

உறழ்மணியான் உயர்மருப்பின்" (புறம் - 22)
என்பன இருசீரான் வந்த வஞ்சியடி.

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்" (யாப்.வி.பக்- 108)

என்பது முச்சீரான் வந்த வஞ்சியடி.

### வஞ்சியடியில் அசை கூனாக வரும்

355. அசைகூன் ஆகும் அவ்வயின் ஆன.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட இருவகை வஞ்சியடியினும் அசை கூனாகி வரும்.

கூன் - தனியே நிற்றல்.

(எ-டு) "**வாள்**, வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன"

வாள் - நேரசை கூனாக வந்தது.

### அளவடியில் சீர் கூனாக வரும்

356. சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே.
(இ-ள்) சீர் கூனாகி வருதல் அளவடிக்கு உரித்து.

(எ-டு) "**அவரே**", கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந் - 216)

அவரே - ஆசிரியப்பாவில் சீர் கூனாகி வந்தது.

"**உதுக்காண்**, சுரந்தானா வண்மைச் சுவர்னமாப் பூதன்
பாந்தானாப் பல்புகழ் பாடி - இரந்தான்மாட்
டின்மை அகல்வது போல இருள்நீங்க
மன்னும் அளிதேர் மழை" (யாப்.வி.பக். 356)

உதுக்காண் - வெண்பாவில் சீர் கூனாகி வந்தது

"**நீயே,** வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் வரிஇய அம்பு தெரிதியே" (கலித் - 7)
நீயே - கலிப்பாவில் சீர் கூனாகி வந்தது.

### ஐவகை அடிகளின் விரி

357. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி

அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

(இ-ள்) நாற்சீரடியை எழுத்தளவு பற்றி வகுக்கப்பட்ட குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் ஐவகை அடிகளையும் விரித்துணர்த்தும் காலத்து, அசையும் சீரும் தோன்றுதற்கு இடமாகிய எழுத்து அமைந்த பதினேழு நிலத்தினும் எழுபது வகைப்பட்ட உறழ்ச்சியின் வழுவுதலின்றி அடி 625 ஆகும்.

எழுபது வகையாவது - இரண்டு சீர் தம்முள் புணரும் புணர்ச்சி எழுபது வகையாகும்.

மேற்சொல்லப்பட்ட எண்பத்து நான்கு சீரினும் இயற்சீரான் வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரியவுரிச்சீரான் வருவதனை ஆசிரியவுரிச்சீரடி எனவும், இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி எனவும். நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசையீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும், ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

**அடி 625 ஆமாறு**

அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்பாவுரிச்சீர். வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ்வைந்தும் வருஞ்சீராக உறழும் வழி இருபத்தைந்து விகற்பமாகும். அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்து சீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும். அந்நூற்றிருபத்தைந்தின் கண்ணும் நான்காவது ஐந்து சீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம்.

## ஐஞ்சீர் முதலாக விரிப்பின் அடி அளவிலவாகும்

358. ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை.

(இ-ள்) முற்கூறிய ஐந்து சீரினையும் ஐஞ்சீரடி முதலாக உறழத் தொடங்கினால் அடிகளின் விரிவு வரம்பின்றிச் செல்லும் என்று தெளிவுற உணர்ந்தோர் ஆராய்ந்து கூறுவர்.

அதாவது அறுநூற்றிருபத்தைந்து அடியினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத்தொருநூற்று இருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஆறாவது இவ்வகை ஐஞ்சீரையும் உறழப் பதினைந்தாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும்சீர் ஐந்தினையும் உறழ எழுபத்தெட்டாயிரத்தொருநூற்று இருபத்தைந்து விகற்பமாம். இவ்வாறு உறழ அடிகள் வரம்பிலவாய் விரியும். அன்றியும் ஈண்டுச் சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாகும்.

## ஐவகை அடியும் ஆசிரியப்பாவுக்கு உரியன

359. ஐவகை அடியும் ஆசிரியக் குரிய.

(இ-ள்) நூற்சீரடிக்கண் எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட குறளடி முதலா ஐவகையடியும் ஆசிரியப்பாவிற்கு உரித்தாய் வரும்.

(எ-டு) "தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து

நேர்ந்து வாமனை நினையின்
சேர்ந்த வல்விளை தேய்ந்தக லும்மே"

இதன்கண் முதலடி நான்கெழுத்தான் வந்தது.

"குன்று கொண்டு நின்ற மாடு
பொன்ற வந்த மாரி
சென்று காத்த திறலடி தொழுமே"

இதன்கண் முதலடி ஐந்தெழுத்தான் வந்தது.

"ஆறு சூடி நீறு பூசி
ஏறும் எறும் இறைவனைக்
கூறுநெஞ்சே குறையிலை நினக்கே"

இதன்கண் முதலடி ஆறெழுத்தான் வந்தது.

"போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே"

இதன்கண் முதலடி ஏழெழுத்தான் வந்தது.

"தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிக்கூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியஎன் நெஞ்சே"

இது முதலடி எட்டெழுத்தான் வந்தது.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" (குறுந் -2) என்பது ஒன்பது எழுத்தான் வந்தது.

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந் -2) என்பது பத்தெழுத்தான் வந்தது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்.கடவுள் வாழ்த்து) என்பது பதினோரெழுத்தான் வந்தது.

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை (அகம் - 61) என்பது பன்னிரண்டு எழுத்தான் வந்தது.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" (பெரும்பாண் - 1) என்பது பதின்மூன்று எழுத்தான் வந்தது.

“யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை” (அகம் -16) என்பது பதினான்கு எழுத்தான் வந்தது.

“ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை (புறம் -56) என்பது பதினைந்தெழுத்தான் வந்தது.

“விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்” (குறுந் - 101) என்பது பதினாறு எழுத்தான் வந்தது.

“தேன்தூங்கும் உயர்சிமைய மலைநாறிய வியன்ஞாலம் (மதுரைக் - 3) என்பது பதினேழு எழுத்தான் வந்தது.

“கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்” (புறம் -55) என்பது பதினெட்டு எழுத்தான் வந்தது.

“நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும் (புறம் -55) என்பது பத்தொன்பது எழுத்தான் வந்தது.

“அமர்காணின் அமர்கடந்தவர் படைவிலக்கி எதிர்நிற்றலின் (புறம் -167) என்பது இருபது எழுத்தான் வந்தது.

**ஆசிரியப்பாவில் ஐவகை அடியும் விரவியும் வரும்**

360. விராஅய் வரினும் ஒரூஉ நிலை இலவே.

(இ-ள்) ஆசிரியப்பாவில் ஐவகை அடியும் தனித்தனி வருதலேயன்றி விரவி வரினும் நீக்கப்படாது.

‘ஒரூஉ நிலை’ என்றதனால் தனித்தனியே வரினும் விரவி வரினும் ஒக்கும் என்பர் இளம்பூரணர்.

(எ-டு) “செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய்க் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே” (குறுந் - 1)

இதனுள் பலவடியும் வந்தவாறு காணலாம்.

**தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா**

361. தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா.

(இ-ள்) தத்தம் சீர்நிலை வகையானும் தளைநிலை வகையானும் ஓசை வேறுபாட்டினையுடைய ஐந்தடிக்குமுரிய தன்சீர் உள்வழித் தளை வேறுபாடு கோடல் வேண்டா சீர்தானே பாவினது ஓசையைத் தரும்.

தன்சீர் என்றது, ஐந்தடியினும் ஏற்றவழி நிலைபெறும் தன்சீர் என்று கொள்க. எடுத்துக்காட்டாக குறளடியாகிய ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவசைச்சீர் வாராமை. பிறவும் அவ்வாறே தன்சீர் வருதல் கொள்க.

தனது சீரே ஒரு பாவினுள் வரும்போது தளைபற்றிக் கருதவேண்டா சீர்களே பாவினது ஓசையைத் தரும்.

**ஒரேவகை அசை ஒன்றி வருவது ஆசிரியத்தளை**

362. சீரியை மருங்கின் ஓரசை யொப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும்.

(இ-ள்) சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமிடத்து நிலைமொழி இயற்சீர் இறுதியசையும் வருமொழி முதலசையும் ஒரே வகையாக இருப்பின் அஃது ஆசிரியத்தளை என்று அறிதல் வேண்டும்.

நேரும் நேரும் ஒன்றி வருவது **நேரொன்றாசிரியத்தளை** எனவும், நிரையும் நிரையும் ஒன்றி வருவது **நிரையொன்றாசிரியத்தளை** எனவும் வழங்கப்பெறும். (மா முன் நேர், விள முன் நிரை)

**ஆசிரியவடிக்கண் வஞ்சியுரிச்சீர் வந்து கலத்தல் இல்லை**

363. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ட

(இ-ள்) குறளடி முதலாக அளவடியளவும் உள்ள ஆசிரியவடிக்கண் வஞ்சியுரிச்சீர் வந்து உறழும்நிலை இல்லை என்று கூறுவர்.

எனவே நெடிலடியினும் கழிநெடிலடியினும் வஞ்சியுரிச்சீர் வந்து மயங்கப்பெறும் என்றவாறு.

**வெண்பாவிற்குரிய அடியும் தளையும்**

364. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான.

(இ-ள்) தளைவகை ஒன்றிவராத தன்மைக்கண் அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரியனவாகும்.

எனவே தளைவகை ஒன்றும் தன்மைக்கண் நெடிலடியும் சில வரப்பெறும்.

**தளைவகை ஒன்றாத தன்மையாவன**

நேரிற்று இயற்சீர் முன்நிரையும், நிரையீற்று இயற்சீர் முன் நேரும் வருதல். (மா முன் நிரையும், விளமுன் நேரும் வருவது ) இவையிரண்டும் 'இயற்சீர் வெண்டளை' எனப்படும்.

**ஒன்றும் தன்மையாவது:** வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது. (காய்முன் நேர் வருவது). இது **'வெண்சீர் வெண்டளை'** எனப்படும்.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இரண்டும் வெண்பாவிற்குரிய தளைகளாகும்.

(எ-டு) “மட்டுத்தா னுண்டு மணஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்” (யாப்.வி.பக். 163)

இவ்வெண்பாவின் முதலடி ஏழெழுத்தான் வந்தது. இரண்டு தளைகளும் வந்தன.

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு” (குறள் -12) இது பத்தெழுத்தான் வந்த அடி.

“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்” (குறள் -2) இது பதினான்கெழுத்தான் வந்த அடி.

“படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்” (குறள் -606) இது பதினாறெழுத்தான் வந்த அடி.

**கலிப்பாவிற்குரிய அடியாமாறு**

365. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியும் கலியிற் குரிய.

(இ-ள்) அளவடியின் மிகுதியாகிய பதின்மூன்று எழுத்து முதலாக நெடிலடியும் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்து ஈறாக வரும் அடிகள் கலிப்பாவிற்குரியன.

(எ-கா) “மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க” (கலித் -13) இது பதின்மூன்று எழுத்தான் வந்த அளவடி.

“வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட” (கலித் -66) இது பதினான்கு எழுத்தான் வந்த அளவடி.

“அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்” (கலித்-11) இது பதினாறெழுத்தான் வந்த நெடிலடி.

“முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென” (கலித் -56) இது பதினேழெழுத்தான் வந்த நெடிலடி.

“நிலங்கிளையா நெடிதுயிரா நிறைதளரா நிரைதொடியாள்” (யாப்.வி.பக். 468) இஃது இருபதெழுத்தான் வந்த கழிநெடிலடி.

**கலித்தளை வருமாறு**

366. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை இன்றே அவ்வடிக் கென்ப.

(இ-ள்) நிலைமொழி வெண்சீர் நிற்ப, வருமொழி நிரைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நேர்முன் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு விலக்குதலில்லை என்பர் ஆசிரியர்.

(எ-டு) "அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்" (கலித் 11) இதன்கண் காய்முன் நிரை வந்து கலித்தளை ஆயிற்று.

**இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் பொருள்கொள்ளும் முறை:**

"நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரியவுரிச்சீரும் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையாய் ஒன்றியக்காலும் கலித்தளையாம்" என்பது இவ்விரு உரையாசிரியர் கருத்து.

**கலிப்பாவில் கலித்தளையே யன்றி வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வரும்**

367. விராஅய தளையும் ஒரூஉநிலை யிலவே.

(இ-ள்) கலிப்பாவில் கலித்தளையே யன்றி பிறவாகிய வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வருதல் நீக்கும் நிலைமைத்தன்று.

(எ-டு) "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்" (கலித்-38)

இதன்கண் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வந்தன.

**ஆசிரியப்பாவில் வெண்பாவடி மயங்கி வருதல்**

368. இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே.

(இ-ள்) இயற்சீர் வெண்டளையால் ஆகிய வெண்பா அடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபினான் நிற்பனவும் உள.

'உள' என்றதனால் பலவடியும் வரப்பெறும. வெண்டளை என்னாது 'அடி' என்றதனால் தளைவிரவுதல் பெரும்பான்மை அடி விரவுதல் சிறுபான்மை என்பது இளம்பூரணர் கருத்து.

(எ-கா) "நெடுங்கயிறு வலந்த" என்னும் பாட்டினுள்,
கடல்பா பொழிய இனமீன் முகந்து' (அகம்-30)

என்றது இயஞ்சி வெண்டளையடி.

### ஆசிரியப்பாவில் ஐஞ்சீரடியும் கலந்து வரப்பெறும்

369. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப.

(இ-ள்) இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சிடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள.

உண்டு என்னாது ‘உள’ என்றதனால் ஒரு பாடலில் ஐஞ்சீரடிகள் வருதலும் கொள்க.

(எ-டு) “சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே” (புறம்- 235)

### ஆசிரியப்பாவில் அறுசீரடியும் கலந்து வரப்பெறும்

370. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறி பெற்று வரூஉம் நேரடி முன்னே.

(இ-ள்) ஆசிரியப்பாவில் நேரடிக்கு முன்னாக அறுசீரடி ஆசிரியத்தளையோடு பொருந்தி நடைபெற்று வரும்.

(எ-டு) “சிறியகட் பெறினே யெமக்கியு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே” (புறம் - 235)

இதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது. இரண்டாமடி ஆசிரியத் துளையொடு பொருந்தி அறுசீரடியான் வந்தது.

### எழுசீரடி முடுகியல் நடைத்தாய் வரும்

371. எழுசீர் அடியே முடுகியல் நடக்கும்.

(இ-ள்) எழுசீரான் வரும் அடி முடுகியல் நடையினதாய் வரும்.

முடுகியலாவது, விரைந்த நடையுடைத்தாய் வருவது.

(எ-டு) “அவருள் மலர்மலி புகல்எழ அலர்மலிர் மணிபுரை
நிமிர்தோள் பிணைஇ” (கலித் -102)
இஃது எழுச்சீரடி முடுகியல் பெற்று வந்தது.

### ஐஞ்சீரடியும் அறுசீரடியும் முடுகியல் பெற்றுவரும்

372. முடுகியல் வரையார் முதல் ஈரடிக்கும்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐஞ்சீரடியும் அறுசீரடியும் கூட முடுகியல் பெற்று வருதல் நீக்கமாட்டார்.

(எ-டு) "நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறிஇ" (கலித் - 39)

இ.்.து அறுசீரடி முடுகியல் பெற்று வந்தது.

### முடுகி இயலும் இம்மூவகை அடியும் ஆசிரியம், வெண்பாவில் வருதல் இல

373. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே.

(இ-ள்) முடுகியல் நடைத்தாய் வரும் ஐஞ்சீரடி, அறுசீரடி. எழுசீரடி என்ற மூன்றும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் வருதல் இல்லை.

எனவே, கலிப்பாவில் இவை நிற்கப்பெறும் என்பது.

### சீர்வகை அடியும் தொல்காப்பியர்க்கு உடன்பாடே

**இளம்பூரணர் தரும் விளக்கம்:**

எழுத்தெண்ணி அடிவகை கூறிய தொல்காப்பியருக்குப் பிற நூலாசிரியர் கூறிய அடியிலக்கணமும் உடன்பாடென்பது இளம்பூரணர் கருத்து. அது வருமாறு:

"நாற்சீர் கொண்டதடி" எனவோதிப் பின்னும் இருசீரடி வஞ்சிக்கண் உரித்தென ஓதி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் எழுசீரடியும் உள என ஓதினமையான், அடியாவது இரண்டு முதலாக வருமெனவும் அவற்றுள் இருசீரடி குறளடி எனவும், முச்சீரடி சிந்தடி எனவும், நாற்சீரடி அளவடி எனவும், ஐஞ்சீரடி நெடிலடி எனவும், அறுசீர் முதலாக வரும். அடியெல்லாம் கழிநெடிலடி எனவும் பிறநூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடன்பாடென்று.

அறுசீர் முதலான அடிகளுள் எழுசிர் எண்சீர் சிறப்புடையன எனவும். எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் பிறநூலாசிரியர் உரைப்பர். அவ்வாறே இவ்வாசிரியரும் அடிக்குச் சீர் வரையறையின்மை 'ஆங்கனம் விரிப்பின் அளவிறந்தனவே, பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை' (செய் -49) என்றதனால் உணர்த்தினார்.

ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும் அவ்வடியினால் வருதலின் என்று கொள்க" என விளக்குவர் இளம்பூரணர்.

### ஆசிரியப்பா ஈற்றயலடி முச்சீர் பெறும்

374. ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்
தோற்றம் முச்சீர்த் தாகும் என்ப.

(இ-ள்) ஆசிரியப்பாவின் ஈற்றயலடியின் தோற்றம் முச்சீராக அமையப்பெறும்.

(எ-டு) 'முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தன்ளே

மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே”

இதில் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

**ஆசிரியப்பாவின் இடையடியும் முச்சீரடியான் வரப்பெறும்**

375. இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே.

(இ-ள்) ஆசிரியப்பாவின் இடையடிகளில் முச்சீர் தொடுத்தலையும் அறிந்தோர் தவிர்க்கமாட்டார்.

(எ-டு) “நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சார்ல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே”

இதன்கண் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தது.

**கலிப்பாவின் ஈற்றயலடி நான்கு சீராகவும் வரும்**

376. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.

முரற்கை - கலிப்பா (முரல்தல் போலும் ஓசையுடையது)

(இ-ள்) கலிப்பாவின் ஈற்றயலடி முச்சிரென ஓதப்பட்டது நாற்சீராகவும் வரப்பெறும்.

(எ -டு) ‘அரிமான் இடித்தன்ன’ என்ற பாலைக்கலியுள், கரிதகம்

“முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே” (கலித்-15)

என ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

**வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இறுதியை ஒக்கும்**

377. வஞ்சித் தூக்கே செந்தூக்கு இயற்றே .

தூக்கு - இறுதி (ஈண்டு ஈற்றயலடி)

(இ-ள்) வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இறுதியைப் போல அமையும்.

அஃதாவது ஈற்றயலடி முச்சீரானும், நாற்சீரானும் வரும்.

(எ-டு) ‘தொடியுடைய தோள்மணந்தனன்’ என்னும் பாட்டுள்,

“இடுக ஒன்றோ கடுக ஒன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே” (புறம்-239)

இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

‘பூந்தாமரைப் போதலமா’ என்னும் பாட்டுள்

“மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே” (யாப்.வி.பக்.74)

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

**வெண்பாவின் ஈற்றடி முச்சீரான் வரும்**

376. வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றடி மூன்று சீரையுடைத்தாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும்.

அசைச்சீர் - ஓரசைச்சீர் அவையாவன:

நேர் - நாள்

நிரை - மலர்

நேர்பு - காசு

நிரைபு - பிறப்பு

என வரும்.

**வெண்பா ஈற்றயற்சீர் ‘நேர்’ முன், நிரையும் நிரைபும் வரும்**

379. நேரீற் றியற்சீர் நிரையும்
நிரைபும் சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப.

(இ-ள்) வெண்பாவின் இறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்று இயற்சீராயின் நிரையசையும் நிரைபசையும் சீராம் தன்மையைப் பெற்று முடியும்

(எ -டு) “கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் **தலை**” (குறள் 9)

“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் **அரிது**” (குறள் - 7)

என வரும்.

**வெண்பா ஈற்றயற்சீர் 'நிரை' முன், நேரும் நேர்பும் வரும்**

380. நிரையவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

(இ-ள்) வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்று இயற்சீராயின் நேரசையும் நேர்பசையும் பெற்று முடிதல் நீக்கப்படாது என்பர் வாய்மொழிப்புலவர்.

(எ-டு) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (குறள் -1021)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (குறள் - 108)

என வரும்.

**ஈற்றயற்சீர் 'வெண்சீர்' முன்னும் நேரும் நேர்பும் வரும்**

"வெண்சீர் ஈற்றசை நிரையசை யியற்றே" (செய் -28)

என்பதனால் ஈற்றயற்சீர் வெண்சீரான் (காய் -நேர்) வரினும் இயற்சீரின் நிரையீறுபோலக் கொள்ளப்பட்டு நேரும் நேர்பும் பெற்று முடியும்.

(எ-டு) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா **தார்**. (குறள் - 10)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் **மாட்டு** (குறள் - 5)

என வரும்.

**ஆசிரியச் சுரிதகத்தால் முடிவுறும் கலிப்பாவின்**
**ஈற்றயலடி ஆசிரியப்பா போல முச்சீரான் வரும்**

381. எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே.

(இ-ள்) ஆசிரியச் சுரிதகத்தால் முடிவுறும் கலிப்பாவின் ஈற்றயலடி ஆசிரியப்பா போல முச்சீரான் வரும்.

**எழுசீர் இறுதி** - ஈற்றயல் முச்சீரும், இறுதி நாற்சீருமாக ஏழுசீர்கள்.

(எ-டு) ‘தொடங்கற்கட் டோன்றிய’ என்னும் கலியுள் சுரிதகம்,
“தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே” (கலித்-2)

என ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

**கலிப்பா, வெண்பாச் சுரிதகத்தால் முடியவும் பெறும்**

382. வெண்பா இயலினும் பண்புற முடியும்.

(இ-ள்) கலிப்பா வெண்பாச் சுரிதகம் கொண்டு முடியவும் பெறும். அப்பொழுது ஈற்றடி முச்சீரான் வரும்.

(எ-டு) ‘அறனின்றி அயல்தூற்றும்’ என்னும் கலியுள் சுரிதகம்,

“யானிற் கூறவும் எமக்கொள்ளாய், ஆயினை
ஆனா திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லும்
கானந் தகைப்ப செலவு” (கலித்-3)

என வெண்பாவியலான் முடிந்தது.

**தொகுத்துக் காண்டல் - அடியிலக்கணம்**

**நால்வகைப் பாக்களுக்குமுரிய அடியிலக்கணம் அமையுமாறு**

**1. வஞ்சிப்பா அடியிலக்கணம்**

(1) வஞ்சிப்பாவிற்குரிய அடியானது இரண்டு சீரை உடையதாகும்.

“வஞ்சி அடியே இருசீர்த்தாகும்” (தொல். பொரு. இள -352) என்பது நூற்பா.

(2) வஞ்சியுரிச்சீர் சிறுமை மூன்றெழுத்தும் பெருமை ஆறெழுத்தும் பெற்று வரும்.

“தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே” (தொல். பொரு-352) என்பது நூற்பா.

(3) பொதுவாக வஞ்சியடி இருசீரான் வருதலே இயல்பு. சிலவிடங்களில் முச்சீரானும் வரப்பெறும்.

“முச்சிரானும் வரும்இடன் உடைத்தே” (தொல். பொரு. - 354) என்பது நூற்பா.

(எ-டு) “தூங்குகையான் ஓங்குநடைய
உறழ்மணியான் உயர்மருப்பின்” (புறம் -22)

என்பன இருசீரான் வந்த வஞ்சியடி.

“தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்” (யாப்.வி.யக் 108)
என்பது முச்சிரான் வந்த வஞ்சியடி.

(4) வஞ்சிப்பாவில் இருசீரடி, முச்சீரடி ஆகிய இருவகை அடியிலும் அசை கூனாகி வருதலும் உண்டு.

“அசைகூன் ஆகும் அவ்வயி னான” (தொல் பொரு -355) என்பது நூற்பா.

“**வாள்**, வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன”

இதில் ‘வாள்’ (நேரசை) கூனாகி வந்தது எனக் காட்டுவர் பேராசிரியர்.

(5) குறளடி முதலாக அளவடியளவும் உள்ள ஆசிரியவடிக்கண் வஞ்சியுரிச்சீர் வந்து உறழும் நிலை இல்லை. இது,

“குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப” (தொல்.பொரு - 363) என்னும் நூற்பாவான் பெறப்படும்.

(6) வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இறுதியைப் போல அமையும். அ.்.தாவது ஈற்றயலடி முச்சீரானும் நாற்சீரானும் வரும்.

“வஞ்சித் தூக்கே செந்தூக்கு இயற்றே” (தொல். பொரு. -377) என்பது நூற்பா.

(எ-டு) “மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே” (யாப்.வி.பக். 74) என்பது ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

“இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே” (புறம் -239) என்பது ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

**2. ஆசிரியப்பா அடியிலக்கணம்**

(1) நாற்சீரடிக்கண் எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட குறளடி முதலா ஐவகை அடியும் ஆசிரியப்பாவிற்கு உரித்தாய் வரும்.

“ஐவகைய அடியும் ஆசிரியக் குரிய” (தொல். பொரு. -359) என்பது நூற்பா.

(எ-டு) “தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து
நேர்ந்து வாமனை நினையின்

சேர்ந்த வல்வினை தேய்ந்தக லும்மே"

இதன்கண் முதலிடி தான்கெழுத்தான் வந்த குறளடி.

"போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே"

இதன்கண் முதலடி ஏழெழுத்தான் வந்த சிந்தடி.

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந் - 2)

என்பது பதினைந்தெழுத்தான் வந்த நெடிலடி.

"கடுஞ்சினத்த கொல்களிலும் கதழ்பரிய கலிமாவும்" (புறம்-55)

என்பது பதினெட்டெழுத்தான் வந்த கழிநெடிலடி.

(2) ஆசிரியப்பாவில் ஐவகை அடியும் தனித்தனி வருதலேயன்றி விரவி வருவதும் நீக்கப்படாது.

"விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே" (தொல். பொரு.360) என்பது நூற்பா.

(எ-டு) "செங்களம் படக்கொன் றவுணர் தேய்த்த
செங்கோ லன்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய்க்குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந்-1)

(3) சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமிடத்து நிலைமொழி இயற்சீர் இறுதியசையும் வருமொழி முதலசையும் ஒரே வகையாக இருப்பின் அஃது ஆசிரியத்தளையாகும். அது நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை என இருவகைப்படும்.

நேரும் நேரும் ஒன்றி வருவது நேரொன்றாசிரியத்தளை. நிரையும் நிரையும் ஒன்றி வருவது நிரையொன்றாசிரியத்தளை.

(4) இயற்சீர் வெண்டளையால் ஆகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் மயங்கியும் வரப்பெறும்.

(எ-டு) 'நெடுங்கயிறு வலத்த' என்னும் பாட்டில்

"கடல்பா டொழிய இனமீன் முகந்து" (அகம்-30)

என இயற்சீர் வெள்ளடி ஆசிரியப்பாவில் வந்துள்ளது.

“இயற்சீர் வெள்ளடி ஆசிரிய பருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே” (தொல்.பொரு -368) என்பது நூற்பா.

(5) ஆசிரியப்பாவில் இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடியும் வருவன உள.

“வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப” (தொல். பொரு. - 369) என்பது நூற்பா.

‘உள’ என்பதனால் ஒரு பாடலில் ஐஞ்சீரடிகள் பல வருதலும் கொள்க என்பர் இளம்பூரணர்.

(எ -டு) “சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானுநனிபல கலத்தன் மன்னே” (புறம் - 235)
என வரும்.

(6) நேரடிக்கு முன்னாக அறுசீரடி ஆசிரியத் தளையோடு பொருந்தி நடைபெற்று வரும்.

“அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே” (தொல்.பொரு.370)

என்பது நூற்பா.

(எ.கா) “சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே” (புறம் -235)

இதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது. இரண்டாமடி ஆசிரியத்தளையொடு பொருந்தி அறுசீரடியாகி வந்தது.

(7) ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீராக வரும. இடையடிகளில் முச்சீர் தொடுத்தலையும் நீக்கமாட்டார்.

“ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்
தோற்றம் முச்சீர்த் தாகும் என்ப” (தொல்.பொரு.-374)

“இடையும் வரையார் தொடையுணர் தோரே” (தொல் பொரு. 375)
என்பன நூற்பாக்கள்.

(எ-டு) “முதுக்குறைந் தனனே முதுக்குறைந் தனனே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே”

இதில் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே"

இதன்கண் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தன.

(7) ஆசிரியப்பாவில் சீர் கூனாகி வருதலும் உண்டு.

"சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே" (தொல். பொரு.-356) என்பது நூற்பா.

(எ-டு) "**அவரே**, கேடில் விழுப்பொருள் தருமார்
பாசிலை வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறுந் - 216)

அவரே - ஆசிரியப்பாவில் சீர் கூனாகி வந்தது.

**3. வெண்பா அடியிலக்கணம்**

(1) வெண்பாவில் தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் அளவடியும் சிந்தடியும் பயின்று வரப்பெறும். சிந்தடியாவது ஏழு எழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறாக வருவது அளவடி என்பது பத்தெழுத்து முதல் பதினான்கு எழுத்து ஈறாக வருவது.

தளைவகை ஒன்றாத் தன்மையாவது, நேரீற்று இயற்சீர்முன் நிரையும், நிரையீற்று இயற்சீர் முன் நேரும் வருவது. (மா முன் நிரையும் விள முன் நேரும் வருவது) இவையிரண்டும் இயற்சீர் வெண்டளை எனப்படும்.

(2) தளைவகை ஒன்றிவரும் தன்மைக்கண் நெடிலடியும் சில வரப்பெறும். நெடிவடி என்பது பதினைந்து எழுத்து முதல் பதினேழு எழுத்து ஈறாக வருவது. ஒன்றும் தன்மையாவது. வெண்சீர் நிற்க வருஞ்சீர், முதலசையோடு ஒன்றுவது (காய் முன் நேர் வருவது). இது 'வெண்சீர் வெண்டளை' எனப்படும்.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இரண்டும் வெண்பாவுக்குரிய தளைகளாகும்.

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான" (தொல் பொரு.364) என்பது நூற்பா.

(எ-டு) "மட்டுத் தானுண்டு மணஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்" (யாப்.வி.பக்-163)

இவ்வெண்பாவின் முதலடி ஏழெழுத்தான் வந்தது. இரண்டு தளைகளும் வந்தன.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு" (குறள்-12)

என்பது பத்தெழுத்தான் வந்த அடி.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்" (குறள் - 2)

என்பது பதினான்கெழுத்தான் வந்த அடி.

"படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்" (குறள் -606)

என்பது பதினாறெழுத்தான் வந்த அடி.

(3) முடுகியல் நடைத்தாய் வரும் ஐஞ்சீரடி, அறுசீரடி. எழுசீரடி என்ற மூன்றும் வெண்பாவில் வருதல் இல்லை.

"ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே" (தொல். பொரு. - 373)

என்பது நூற்பா.

(4) வெண்பாவின் ஈற்றடி மூன்று சீரையுடைத்தாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும்.

"வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான" (தொல்.பொரு. - 378)

என்பது நூற்பா.

அசைசீர்- ஓரசைச்சீர். அவையாவன:

நேர் - நாள்

நிரை - மலர்

நேர்பு - காசு

நிரைபு - பிறப்பு

என வரும்.

(5) வெண்பாவின் இறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்று இயற்சீராயின் நிரையசையும் நிரைபசையும் சீராம் தன்மையைப் பெற்று முடியும்.

"நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றிறூஉம் இயற்கைய வென்ப" (தொல். பொரு. -379)

என்பது நூற்பா.

(எ-டு) கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் **தலை.** (குறள் - 9)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற **லரிது**. (குறள் -7)

என வரும்.

(6) வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்று இயற்சீராயின் நேரசையும் நேர்பசையும் சீராம் தன்மையைப் பெற்று முடியும்.

"நிரையவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்" (தொல். பொரு. -379)

என்பது நூற்பா.

(எ -டு) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய **நீர்**" (குறள் - 1021)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது **நன்று**" (குறள் -108)

என வரும்.

(7) "வெண்சீர் ஈற்றசை நிரையசை யியற்றே" (தொல். பொரு. – 337)

என்பதனால் வெண்பாவின் ஈற்றயற்சீர் வெண்சீரான் (காய்-நேர்) வரினும் இயற்சீரின் நிரையீறு போலக் கொள்ளப்பட்டு நேரும் நேர்பும் சீராம் தன்மை பெற்று வரும்.

(எ-டு) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா **தார்**" (குறள் -10)

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் **மாட்டு**" (குறள் -5)

என வரும்.

(7) வெண்பாவில் அளவடிக்கண் சீர் கூனாகி வருதலும் உண்டு.
"சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே" (தொல்.பொரு. -356)
என்பது நூற்பா.

(எ-டு) "**உதுக்காண்**, சுரந்தானா வண்மைச் சுவர்னமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி"

என்பதன்கண் ‘உதுக்காண்’ என்பது சீர் கூனாகி வந்தது.

**4. கலிப்பா அடியிலக்கணம்**

(1) அளவடியின் மிகுதியாகிய பதின்மூன்று எழுத்து முதலாக நெடிலடியும் கழிநெடிலடியுமாகிய இருபது எழுத்து ஈறாக வரும் அடிகள் கலிப்பாவிற்குரியன.

“அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியும் கலியிற் குரிய” (தொல்.பொரு -365)

என்பது நூற்பா.

(எ-டு) “மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க” (கலித்-13)

இது பதின்மூன்று எழுத்தான் வந்த அளவடி.

“வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட” (கலித்-66)

இது பதினான்கு எழுத்தான் வந்த அளவடி.

“அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்” (கலித்- )

இது பதினைந்து எழுத்தான் வந்த நெடிலடி.

“அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்” (கலித்-11)

இது பதினாறு எழுத்தான் வந்த நெடிலடி.

“முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென” (கலித்-11)

இது பதினேழு எழுத்தான் வந்த நெடிலடி.

“நிலங்கிளையா நெடிதுயிரா நிறைதளரா நிரைதொடியாள்” (யாப்.வி.பக்.468)

இ∴து இருபது எழுத்தான் வந்த கழிநெடிலடி.

(2) நிலைமொழி வெண்சீர் நிற்ப, வருமொழி நிரைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நேர்முன் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு விலக்குதல் இல்லை.

“நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்டல்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப” (தொல் பொரு - 366)

என்பது நூற்பா.

(எ-டு) “அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்” (கலித் - 11)

இதன்கண் காய் முன் நிரை வந்து கலித்தளை ஆயிற்று.

(3) கலிப்பாவில் கலித்தளையே யன்றி பிறவாகிய வெண்டளையும் ஆசிரியத் தளையும் விரவி வருதலும் நீக்கும் நிலைமைத்தன்று.

"விராய தளையும் ஒருஉ நிலை யிலவே" (தொல்.பொரு. -367)

என்பது நூற்பா.

(எ-டு) "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்" (கலித்-38)

இதன்கண் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வந்தன.

(4) முடுகியல் நடைத்தாய் வரும் ஐஞ்சீரடி, அறுசீரடி, எழுசீரடி ஆகிய மூன்றும் ஆசிரியப்பாவினும் வெண்பாவினும் நிற்றல் இல்லை. ஆனால் கலிப்பாவில் நிற்கப்பெறும். இ∴து

"ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே" (தொல். பொரு. – 3737)

என்பதனால் பெறப்பட்டது.

(5) ஆசிரியச் சுரிதகத்தால் முடிவுறும் கலிப்பாவின் ஈற்றயலடி ஆசிரியப்பா போல முச்சீரான் வரும்.

"எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே" (தொல் பொரு -381)

என்பது நூற்பா.

(எ-டு) "தொடங்கற்கட் டோன்றிய" என்னும் கலியுள் சுரிதகம்,
"தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே" (கலித்-2)

என ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

(6) கலிப்பாவின் ஈற்றயலடி முச்சீர் என ஓதப்பட்டது நாற்சீராகவும் வரப்பெறும்.

"முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்" (தொல் பொரு - 376)

என்பது நூற்பா.

(எ -டு) 'அரிமான் இடித்தன்ன' என்ற பாலைக்கலியுள் சுரிதகம்.

"முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே" (கலித்-15)

என ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

(6) கலிப்பா வெண்பாச் சுரிதகம் கொண்டு முடியவும் பெறும் அப்பொழுது ஈற்றடி முச்சீரான் வரும்.

"வெண்பா இயலினும் பண்புற முடியும்" (தொல் பொரு. -382)

என்பது நூற்பா.

(எ - டு) 'அறனின்றி அயல்தூற்றும்' என்னும் பாலைக்கலியுள் சுரிதகம்.

"யானிற் கூறவும் எமக்கொள்ளாய் ஆயினை
ஆனா திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போல் நீ செல்லும்
கானந் தகைப்ப செல்வு" (கலித்-3)

என வெண்பாவியலான் முடிந்தது.

## யாப்பு

### யாப்பின் இலக்கணம்

383. எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

(இ-ள்) எழுத்து முதலாக அசை, சீர், அடி என இங்குச் சொல்லப்பட்ட உறுப்புகளைக் கொண்ட அடியில், புலவன் தான் கூறக்கருதிய பொருளை முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு எனக் கூறுவர் யாப்பிலக்கணம் அறிந்த புலவர்.

யாக்கப் படுவது யாப்பு யாத்தல் கட்டுதல், அடி என்று பொதுவாகக் கூறியதால் அது நாற்சீரடி மாத்திரமன்றி இருசீரடி, முச்சீரடியையும் குறித்து நின்றது.

'ஈண்டிய அடி' என்றமையால் எழுத்து முதலிய உறுப்புகள் பொருள் தொடர்புபட நிற்றல் வேண்டும் என்பர் பேராசிரியர்.

### யாப்பின் வகைகள்

384. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

(இ-ள்) பாட்டு, உரை, நூல், வாய்மொழி (மந்திரம்), பிசி (விடுகதை) அங்கதம், முதுசொல் (பழமொழி) என்று சொல்லப்பட்ட ஏழு வகையினும், வளவிய புகழையுடைய சேர சோழ பாண்டியரது நாற்பேரெல்லைகளைக் கொண்ட குளிர்ந்த தமிழ்நாட்டின்கண் வழங்கும் இலக்கியத்துள் தொடுக்கப்படும் மொழி யாப்பின் வழிப்பட்டது என்று கூறுவர்.

எனவே யாப்பாவது, பாட்டு யாப்பு, உரை யாப்பு, நூல் யாப்பு, மொழி யாப்பு, பிசி யாப்பு, அங்கத யாப்பு, முதுசொல் யாப்பு என ஏழு வகைப்படும்.

'நாற்பேர் எல்லை அகத்தவர்' என்றமையா இவற்றுள் சில நாட்டுப்புறத்தவர் வழங்குவன என்பது அறியலாகும். அவை வாய்மொழி, பிசி, முதுசொல் என்பன. நாற்பேர் எல்லையாவன: வடவேங்கடமும் தென்குமரியும் குணகுட கடலுமாம்.

(எ-டு) "தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனி திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே" (குறுந் -கடவுள்வாழ்த்து)

இப்பாடலில் 'முருகவேள் காப்ப உலகம் காவற் பட்டது' என்பது புலவன் கூறக்கருதிய பொருள். இதனை முற்றுப்பெற நிலைநிறுத்தற்கு எழுத்து முதலா அடியளவும் பொருத்தமுற மொழி தொடுத்தவாறு காணப்படுகிறது.

**மரபு**

385. மரபே தானும்
நாற்சொல் லியான் யாப்புவழிப் பட்டன்று.

(இ-ள்) மரபாவது, புலவன் தான் குறித்த பொருளை முடியச் சொல் தொடுக்குங்கால் இயற்சொல்லாகிய பெயர் வினை இடை உரியானும், ஏனைத் திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும் எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பதாகும்.

நாற்சொல் - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன.

(இயற்சொல் - பெயர், வினை, இடை, உரி என்ற நான்கும்)

இவற்றுள் இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்.

திரிசொல் மரபாவது தமிழ்நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு.

திசைச்சொல் மரபாவது செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொல் மரபாவது திரிந்த வகையாகிய மரபு

**மரபிலக்கணம் கூறக் காரணம்**

யாதானும் ஒரு செய்யுட் செய்யுங்காலத்துப் பொருளுணர்த்தும் சொற்கள் இயற்சொல் முதலிய இந்நால்வகைச் சொற்களுமேயாம். அன்றியும் இவை ஒருபொருட்கு உரித்தாகிய ஆண்பெயரும் பெண்பெயரும் குழவிப்பெயரும் முதலாயின பிறபொருட்கண் வாராமையான் அவற்றை அம்மரபினாற் கூறுதலும், ஒருமை பன்மை மயங்காமையும், பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுதலும் வேண்டுதலின் இவ்விலக்கணமும் கூறல் இன்றியமையாதாயிற்று என விளக்குவர் இளம்பூரணர்.

## தூக்கு

தூக்காவது பாக்களில் அமைந்துள்ள ஓசை

## ஆசிரியப்பா - அகவலோசை

386. அகவ லென்ப தாசிரி யம்மே.

(இ-ள்) அகவல் என்பது ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ஆகும்.

அகவிக் கூறுதலால் **அகவல்** எனப்பட்டது என்பர் பேராசிரியர். அஃது ஒருவன் ஒன்றைக் கூறுதலும் அதுகேட்டு மற்றொருவன் மறுமொழி சொல்லுதலுமாகிய முறையிலன்றி, ஒருவன் தான் கருதிய எல்லாவற்றையும் விடாது தொடர்ந்து கூறுதல் போன்றது. தக்கவினை புரிவார் கண்ணும், களம்பாடுவார் கண்ணும், கட்டுங்கழங்குமிட்டு உரைப்பார்கண்ணும், தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும், பூசலிசைப்பார் கண்ணும் இவ்வோசை வெளிப்படக் காணலாம்.

(எ-டு) "செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியானை
கழல்தொடிச் சோய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந்-1)

இதனுள் எழுத்தளவு மிகாமல் குறையாமல் உச்சரிக்க அவ்வழி நின்ற ஒசையால் ஆசிரியம் வந்தவாறு காணலாம்.

## வெண்பா - செப்பலோசை

387. அஃதான் றென்ப வெண்பா யாப்பே.

(இ-ள்) (அஃது + அன்று = அஃதான்று. அஃது அல்லாதது)

அகவலோசை யல்லாதது வெண்பா யாப்புக்குரிய ஓசையாகும். அதனைச் **செப்பலோசை** என்பர்.

அகவுதல் என்பது ஒரு தொழில் அத்தொழில் இதன்கண் இல்லாமையால் 'அஃதான்று' என்றார் என விளக்குவர் இளம்பூரணர். எனவே இது ஒன்றைச் செப்புவது போன்ற ஓசையுடையது.

(எ-டு) பொன்னார மார்பிற் புனைகழற்கால் கிள்ளிபோர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் -கன்னோ
மனனொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்

புனல்நாடன் பேரே வரும். (முத்தொள்-104)

இப்பாடல் அகவியிசைத்தலின்றிச் செப்புதலாகிய வாக்கியம் போன்ற ஓசைத்தாகி வந்தவாறு காணலாம்.

**கலிப்பா - துள்ளலோசை**

388. துள்ளல் ஓசை கலியென மொழிப

(இ-ள்) துள்ளலோசை கலிப்பாவுக்கு உரித்தென மொழிவர்.

**துள்ளுதலாவது** ஒழுகுநடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற் போல என்பார் இளம்பூரணர்.

(எ-டு) "அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (கலித்-11)

இதன்கண் 'அரிதாய வறன்' எனச் செப்பலோசைத்தாகிய வெண்சீரின் பின்னால் வெண்டளைக்கேற்ற நேர் வந்து புணராது நிரை வந்து புணர்ந்து துள்ளலோசை பிறந்தமை காணலாம்.

**வஞ்சிப்பா - தூங்கலோசை**

389. தூங்கல் ஓசை வஞ்சி யாகும்.

(இ-ள்) தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியதாகும்.

**'தூங்கலாவது** அறுதியற்ற ஓசைத்தாகி வரும் வஞ்சி'

என்பர் இளம்பூரணர்.

எனவே இது அடியின் இறுதிவரைத் தொடராது சீர்தோறும் ஓசை அற்றற்று ஒழுகி வருவது.

(எ-டு) "கரமறிவன துறையெல்லாம்
இறவீன்பன இல்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாந்
தேன்தாழ்வன பொழிலெல்லாம், எனத்
தண்பனை தழீஇய இருக்கை
மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே" (யாப் வி. பக் -63)

இதனுள் சீர்தோறும் ஓசை யற்றவாறு கண்டுகொள்ளலாம்.

### மருட்பாவிற்கு ஓசை - செப்பலும் அகவலும்

390. மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னுந் தன்மை இன்றே.

(இ-ள்) மருட்பாவிற்கு ஓசை இதுவென்னும் தன்மை இல்லை. அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக, இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசையாம்.

எனவே, **மருட்பா** செப்பலோசை முன்னும் அகவலோசை பின்னுமா வரும் என்பதாம்.

(எ-டு) "திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடி யெய்தும் - அரிபரந்த
போகிதழ் உண்கண் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே" (பு.வெ.கைக்கிளை- 3)

இதில் முன்னிரண்டடிகளிலும் செப்பலோசையும் பின்னிரண்டடிகளிலும் அகவலோசையும் மயங்கி வந்தவாறு காணலாம்

### ஓசையில்லாயின் பாட்டெனப் பெறாது

391. அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ஓசை வகையான் அமையாதது பாட்டெனக் கூறமாட்டார்.

பாட்டாங்காவது பாட்டின் இலக்கணத்தொடு ஒத்திருத்தல். பாட்டுக்குரிய இலக்கணங்களில் ஓசை மிகமிக இன்றியமையாதது. எனவே ஓசையில்லாதது பாட்டாகாது. அ∴து ஏனைய சீர், தளை, அடி. தொடை என்னும் உறுப்பெல்லாம் பெறவந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின் பாற்படுதலல்லது பாட்டெனப்படாது.

(எ-டு) "ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே" (செய்-48)

இ∴து ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணம் உடைத்தேனும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது. நூலெனப்பட்டது.

### ஓசை வகைகள் மேற்கூறிய நான்குமே

392. தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

(இ-ள்) பாக்களுக்குரிய ஒசை வகை மேற்கூறப்பட்ட நான்குமே என அறுதியிட்டு மொழிவர்.

எனவே இதுகாறும் கூறிய அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்னும் நான்குவகை ஓசையேயன்றி இதற்கு மேலும் ஓசை இல்லை என்று வரையறுத்தவாறு.

### தொடை

தொடை என்பது தொடுக்கப்படுவது எனப் பொருள் பெறும். மலர்களைக் கொண்டு அழகுறத் தொடுக்கப்படும் பூமாலை 'தொடையல்' எனப்படும். அதுபோல பாக்களிலுள்ள சீர்களையும் அடிகளையும் அழகு மிளிர ஓர் ஒழுங்குபடுத்தித் தொடுப்பது தொடை எனப்படும்.

### தொடை வகைகள்

393. மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப.

(இ-ள்) மோனை, எதுகை, முரண், இயைபு எனத் தொடைவகை நான்கு நெறிப்பட்ட மரபினையுடைய எனக் கூறுவர்.

### அளபெடை சேர்க்கத் தொடை ஐந்தாகும்.

394. அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.

(இ-ள்) அளபெடைத் தொடையைக் கூட்டத் தொடை ஐந்து வகைப்படும்.

அளபெடையெனவே உயிரளபெடையும். ஒற்றளபெடையும். அடங்கும்.

### ஓரடியுள்ளும் வேறுபட்டும் வரும் தொடை வகைகள்

395. பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்
அமைந்தவை தெரியின் அவையுமார் உளவே.

(இ-ள்) ஓரடிக்கண் வரும். பொழிப்பும், ஒரூஉவும், பலவடிக்கண் வேறுபட வரும் செந்தொடையும் ஆராயின் அவையும் தொடையின்பாற் படும்.

**பொழிப்பாவது** - ஒருசீர் இடையிட்டு வருவது.

**ஒரூஉ**வாவது - இருசீர் இடையிட்டு வருவது. அஃதாவது முதல் சிரினும் நான்காம் சீரினும் மோனை முதலியன வருவது.

**செந்தொடையாவது** - மோனை முதலிய எந்தத் தொடையும் தொடை விகற்பமும் இல்லாமல் வருவது.

### நிரனிறையும் இரட்டை யாப்பும்

396. நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.

(இ-ள்) நிரலே நிறுத்திப் பொருள் கொள்ளும் நிரனிறையும், வந்த சொல்லே வருத வருதலாகிய இரட்டை யாப்பும் மேற்சொல்லப்பட்ட தொடையின்பாற் படும் எனக் கூறுவர்.

**நிரனிறைத் தொடை**யாவது - பொருளைச் சேரநிறுத்திப் பயனையும் சேர நிறுத்துதல்.

**இரட்டைத் தொடை**யாவது - ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருதல்.

இத்துணையும் கூறப்பட்ட பத்து தொடைகளில் அடிதோறும் வருவன மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என ஐந்து அடிக்கண் வருவன: பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரனிறை, இரட்டை என ஐந்து. அவ்வைந்தும் மூன்றாகி அடங்கும் என்பர் இளம்பூரணர்.

### மோனைத் தொடை

397. அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை.

(இ-ள்) அடிதோறும் முதலெழுத்து ஒத்து வருவது மோனைத் தொடை எனப்படும்.

(எ -டு) "**மா**வும் புள்ளும் பதிவயின் படர
**மா**நீர் விரிந்த பூவுங் கூம்ப
**மா**லை தொடுத்த கோதையுங் கமழ
**மா**லை வந்த வாடையும்
**மா**யோய் நின்வயின் புறத்திறுத் தற்றே" (யாப்.வி.ப. 130)

இதன்கண் அடிதோறும் முதலெழுத்து 'மா' என வந்துள்ளது காணலாம். பாக்களில் எல்லா அடிகளிலும் இவ்வாறு முதலெழுத்து ஒத்து வருவது அருகியே காணப்படும்.

'அடிதோறும்' என்பதால் பலவடிக்கண் முதல் எழுத்து ஒத்து வருதலாகிய அடிமோனையும், ஓரடிக்கண்ணுள்ள சீர்களில் முதல் எழுத்து ஒத்து வருதலாகிய இணைமோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்றுமோனை என்பனவும் சேர்த்து மோனைவகை எட்டாக்கி உரைப்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் அவற்றைத் 'தெரிந்தனர் விரிப்பின் வரம்பில' (செய்-98) என்பதன்கண விரித்து உரைப்பர்.

### எதுகைத் தொடை

398. அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும்.

(இ-ள்) அடிதோறும் முதலெழுத்து ஒன்றாமல் இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகைத்தொடை எனப்படும்.

(எ-டு) "அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சீன்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே" (கலித் - 11)

இதில் அடிதோறும் இரண்டாம் எழுத்து 'டி' வந்துள்ளமையை காணலாம்.

**குறிப்பு:** ஒரு பாடலில் அடிதோறும் முதலெழுத்தும் இரண்டாம் எழுத்தும் ஒத்திருப்பின் அது முந்துற்ற மோனைத் தொடைப்பாற்படும் என்பர் இளம்பூரணர்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் மோனையைப் போலவே எதுகையையும் அடியெதுகை, இணை எதுகை, பொழிப்பு எதுகை, ஒரூஉ எதுகை கூழை எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க்கதுவாய் எதுகை, முற்று எதுகை என வகைப்படுத்தியுரைப்பர்.

**மோனை, எதுகைத் தொடைகளுக்குக் கிளையெழுத்தும் உரியதாகும்**

399. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

(இ-ள்) மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் வந்த எழுத்தே வருதலன்றி வருக்க எழுத்தும் இனவெழுத்தும் உரியவாகும்.

**கிளையெழுத்தாவன** - வருக்கமும், இனமுமாம். எனவே அவை வருக்க மோனை, இனமோனை எனவும், வருக்க எதுகை இனவெதுகை எனவும் வழங்கப்பெறும்.

**வருக்கமோனை**

(எ.கா) "**ப**கலே பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்
**பா**சிலைக் குளவியொடு கூதளம் விரைஇய
**பி**ன்னுப்பிணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
**பீ**ங்கப் பெய்து தேம்படக் கருதி" (யாப். வி. ப.135)

இப்பாடலில் அடிதோறும் முதலெழுத்து பகர் வருக்கமா வந்துள்ளதை காணலாம். எனவே இது வருக்க மோனை.

**வருக்க எதுகை**

(எ.கா) "ஆ**று**றி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தே**று**நீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூ**றா**மற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மா**றா**ப்போர் மணிமிடற் றெண்கையாய் கேள்இனி"

இப்பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்து 'றகர' வருக்கம் வந்துள்ளது. எனவே இது வருக்க எதுகை.

**முரண் தொடை இலக்கணம்**

400. மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

(இ-ள்) அடிதோறும் சொல் அல்லது பொருள் மாறுபடத் தொடுப்பது முரண்தொடை எனப்படும்.

(எ.கா) "**சிறுகுடிப்** பரதவர் மடமகள்
**பெருமதர்** மழைக்கணும் உடையவால் அணங்கே" (யாப்.வி.ப. 146)

என்பது **சொல் முரண்**. இதில் சிறுமை, பெருமை என்பன முரண் சொற்கள்.

(எ.கா) "இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்" (யாப்.வி.ப 146)

என்பது **பொருள் முரண்**. இதில் இரும்பு, பொன் என்பன மாறுபாடுடைய பொருள்கள்.

### இயைபுத் தொடை இலக்கணம்

401. இறுவாய் ஒப்பின் அஃ தியைபென மொழிப

(இ-ள்) அடிதோறும் இறுதியெழுத்து ஒன்றிவரின் அஃது இயைபுத்தொடை என மொழிவர்.

'இறுவாய்' என்றமையால் இறுதிச்சீர், இறுதியசை, இறுதியெழுத்து ஒன்றிவரினும் இயைபெனக் கொள்ளப்படும்.

(எ-கா) "இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் **அணங்கே**
நண்பா மேனிச் சுணங்குமார் **அணங்கே**
ஆடமைத் தோளி கூடலும் **அணங்கே**
அரிமதர் மழைக்கனும் **அணங்கே**
திருநுதற் பொறித்த திலகமும் **அணங்கே"** (யாப்.வி.ப. 153)

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவந்து இயைபுச் தொடையாயிற்று.

### அளபெடைத் தொடை இலக்கணம்

402. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.

(இ-ள்) அடிதோறும் அளபெழத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடை எனப்படும்.

(எ-கா) '**ஓஒ** இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
**தாஅம்** இதற்பட் டது" (குறள் - 1176)

என அடிமுதலில் உயிரளபெடை வந்தது.

"**கஃஃ** றென்னுங் கல்லதர்க் கானிடைச்
**கஃஃ** றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை"

என அடிமுதலில் ஒற்றளபெடை வந்தது.

### பொழிப்புத் தொடை அமையுமாறு

403. ஒருசீர் இடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே .

(இ-ள்) ஒருசீர் இடையிட்டு வந்த எதுகையாயின் பொழிப்புத் தொடை எனப் புலவர் கூறுவர்.

எதுகையெனக் கூறினும் 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனான் மோனை, இயைபு, முரண், அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் என்று கொள்ளப்படும்.

(எ.கா) '**அ**ரிக்குரற் கிண்கிணி யாற்றுஞ் சிறடி' (யாப்.வி.ப. 130)

என்பது பொழிப்பு மோனை (1, 3 சீர்களில் மோனை வந்தது)

'**பன்**னருங் கோங்கின் நன்**ன**லங் கவற்றி' (யாப்.வி.ப. 134)
என்பது பொழிப்பு எதுகை.

'**சுருங்கிய** நுகப்பிற் **பெருகுவடந்** தாங்கி' (யாப்.வி.ப. 147)
என்பது பொழிப்பு முரண்.

'கட**லே** கானலங் கழி**யே** கைதையந் துறை**யே'** என்பது பொழிப்பு இயைபு.

'**பூ**உங் குவளைப் **போஒ** தருந்தி' (யாப். வி. ப. 158)
என்பது பொழிப்பு அளபெடை.

**ஒரூஉத் தொடை அமையுமாறு**

404. இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப.

(இ-ள்) இருசீர் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடை என மொழிவர்.
அஃதாவது முதல் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை முதலியன வருவது.

(எ.கா) **அம்**பொற் கொடிஞ்சி நெடுந்தேர் **அ**கற்றி' (யாப்.வி.ப. 130) என்பது ஒரூஉ மோனை.

'மி**ன்**னிவர் ஒளிவடந் தாங்கி ம**ன்**னிய' (யாப். வி.ப.134) என்பது ஒரூஉ எதுகை.

'**குவிந்து**கணங் கரும்பிய கொங்கை **விரிந்து**' (யாப். வி. ப.147) என்பது ஒரூஉ முரண்.

'நிழ**லே** இனியதன் அயலது கட**லே'** (யாப்.வி.ப. 153) என்பது ஒருஉ இயைபு.

'**காஅ**ய்ச் செந்நெற் கறித்துப் **போஒ**ய் (யாப்.வி.ப 158) என்பது ஒரூஉ அளபெடை.

**செந்தொடை அமையுமாறு**

405. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லியற் புலவர்அது செந்தொடை என்ப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்.

(எ.கா) "பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" (யாப்.வி.ப 179)

இதன்கண் மேற்சொல்லப்பட்ட மோனை முதலான எந்தத் தொடையும் தொடை விகற்பங்களும் இல்லாமையால் இது செந்தொடை ஆயிற்று.

**நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையும் அமையுமாறு**

நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையும் மேல்மொழிந்தவற்றியலான் (செய்-87) வருமாறு கொள்ளப்பட்டும்.

**நிரனிறைத்தொடை**யாவது பொருளைச் சேர நிறுத்திப் பயனையும் சேர நிறுத்துதல்.

(எ.கா.) "அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழ்அலரும் - பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதியம் யாமென்று தாம்" (யாப்.வி.ப. 182)

இப்பாடலில் கடல், இருள், ஆம்பல், பாம்பு என்பவற்றை வரிசையாக நிறுத்தி அவற்றின் வினைகளாக உடலுதல் (ஆரவாரித்தல்), இரிந்தோடுதல் (விலகியோடுதல்), அலர்தல், பார்த்தல் ஆகியவற்றை நிரனிறையாகக் கூறியிருப்பதால் நிரனிறைத் தொடையாயிற்று.

**இரட்டைத் தொடை**யாவது ஓரடி முழுவதும் வந்த சொல்லே வருமாறு தொடுத்தல்.

(எ கா ) 'ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்" (யாப்.வி.ப. 180)

இதன்கண் முதலடியில் 'ஒக்கும்' என வந்த சொல்லே மீண்டும் வந்து இரட்டைத் தொடையாயிற்று.

**தொடைவகை விரிகள்**

406. மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் நூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்ப.'. தென்ப உணர்ந்திசி னோரே.

(இ-ள்) வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது (13699) என்பர் தொடையின் இயல்பினை ஆராய்ந்துணர்தோர்.

ஐயீராயிரம் - 5×2000=10000
ஆறைஞ்ஞூறு - 6×500 = 3000
தொண்டு - ஒன்பது

தொண்டு தலையிட்ட (ஒன்பதை இறுதியாகவுடைய)
பத்துக்குறை எழுநூற்றொன்பது 709 - 10 = 699
ஆக தொடை வகை = 10000 +3000+699 = 13699

### தொடைவகை அமையுமாறு

**மோனைத் தொடை**

மொழி முதலாகிய எழுத்து உயிர் 12. அதன் கிளை எழுத்து ஒரோவொன்றுக்கு 11. இவை தம்முடன் உறழ 132 ஆகும்.

கதநபம என்பவற்றை உயிர் 12 உடன் உறழ 60 ஆகும். இவ்வறுபதையும் முதல் தொடையாக்கிக் கிளையெழுத்து 11 உடன் உறழ 660 ஆகும்.

சகரத்தின் முதலாகெழுத்து 9. அவற்றைக் கிளை எழுத்தோடு உறழ 72 ஆகும்.

வகரத்தின் முதலாகெழுத்து 8 அவற்றைக் கிளையெழுத்தோடு உறழ 56 ஆகும்.

யகரத்தின் முதலாகெழுத்து 1 ஆகும். கிளையெழுத்து இல்லை.

ஞகரத்தின் முதலாகெழுத்து 3. கிளையெழுத்தோடு உறழ 6 ஆகும்.

இவ்வகையான் முதலெழுத்து 93-ம் கிளையெழுத்து 926-ம் கூட்டி மோனைத்தொடை 1019 ஆகும்.

**எதுகைத் தொடை**

மொழியிடையில் உயிரெழுத்து வாராது. உயிர்மெய் எழுத்து இருநூற்றுப் பதினாறில் ஙகர வருக்கம் ஒழிந்த எழுத்து 204, இவற்றைக் கிளையெழுத்து 12 உடன் உறழ 2448 ஆகும். இதனோடு 19 ஒற்றும் குற்றுகரம் 6-ம் கூட்ட எதுகைத் தொடை 2473 ஆகும்.

**முரண் தொடை**

இது சொல் முரண், பொருள் முரண் என 2 ஆகும்.

**இயைபுத் தொடை**

உயிர்மெய் 216-ல் இறுதியில் வாராத ஙகர உயிர்மெய் 12-ம் அகரம் 17-ம், இகரம் 14-ம், உகரம் 2-ம், எகரம் 1ம், ஒகரம் 1ம் ஒழித்து நின்ற எழுத்து 165-ம், ஞணநமன யரலவழள என்னும் புள்ளியிறுதி 11-ம் குற்றுகரவீறு 6-ம் ஆக இயைபுத்தொடை 182 ஆகும்.

**அளபெடைத் தொடை**

மொழி முதலாகும் உயிரளபெடை 7, கதநபம் என்னும் உயிர்மெய்யளபெடை 35, சகர அளபெடை 5, வகர அளபெடை 5, யகர அளபெடை 2 இவை 54-ல் உயிரளபெடை தனிநிலையாம். ஏனையவற்றை முதனிலை, இடைநிலை, இறுதிநிலை எனவுறழ 141 ஆகும்.

ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் மகரமும் ழகரமும் ஒழித்து ஏனைய 11-ம் அளபெடுக்க ஒற்றளபெடை 11-ஆம். இவ்வகையினான் அளபெடைத்தொடை 159 வகையாம்

ஆக இதுகாறும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடைத் தொடை வகைகள் கூட்டி 3,835 ஆகும்.

**பொழிப்புத் தொடை**

பொழிப்புத் தொடையில் கிளையெழுத்து வாராது. மோனைப் பொழிப்பு 93, எதுகைப் பொழிப்பு 229, முரண் பொழிப்பு 2, இயையுப் பொழிப்பு 182 அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு 148. இவையெல்லாம் கூட்டப் பொழிப்புத் தொடை 654.

**ஒருஉத் தொடை**

ஒருஉத் தொடையும் மேற்கூறிய வகையினால் 654 ஆகும்.

**செந்தொடை**

செந்தொடையில் மொழி முதலாகும் எழுத்து 93. மற்றையடியினும் ஒத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றையொழித்து ஏனை எழுத்து 92 உடன் உறழ 8556 ஆகும்.

ஆக தொடை விகற்பம் 13,699 ஆகும்.

'தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்றொன்பது' என்பதற்கு, 9-ஐ முதற்கண் கூட்டிக் கணக்கிட்டுத் தொடை வகை 19291 என நச்சினார்க்கினியரும் 13,708 எனப் பேராசிரியரும் விளக்குவர்.

'தலையிட்ட' என்பதற்கு 'இறுதியாகவுடைய' என்று பொருள் கொள்தலே மரபு. அது 'மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்' (தொல். எழுத்து -104) என்பதனாலும் பெறப்படும்.

**தொடை வகைகளை விரித்தால் வரம்பின்றி முடியும்**

407. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்.
(இ-ள்) தொடை வகைகளை ஆராய்ந்து விரித்தால் வரம்பில்லாமல் போகும்.

அவையாவன : மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை, முற்று. மேற்கதுவாய். கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணர் என வேறுபடுத்து உறழ்ந்தும், எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி. அடியந்தாதி எனவும், உயிர்மோனை, உயிர் எதுகை, நெடில் மோனை, நெடில் எதுகை, வருக்க மோனை, வருக்க எதுகை, இனமோனை, இனவெதுகை, ஆசெதுகை எனவும், மூன்றாம் எழுத்தொன்று எதுகை. இடையிட்டெதுகை எனவும், இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினாலும் எழுத்து வேறுபாட்டினாலும் உறழவும், நிரனிறையாகிய பொருள்கோள் வகையானும், ஏகபாதம், எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப் பாக்களானும் உறழவும் வரம்பின்றி விரியும்.

**சிலவற்றுக்கு எடுத்துக்காட்டு**

**இணை**

இணையாவது முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது.

(எ.கா) "அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி" (யாப்.வி.ப 130) என்பது இணை மோனை.

"பொன்னின் அன்ன பொறிகணங் கேந்தி" (யாப்.வி.ப 134) என்பது இணையெதுகை.

"**சீறடிப் பேரகல்** அல்குல் ஒல்குபு" (யாப்.வி.ப. 147) என்பது இணை முரண்.

"மொய்த்துடன் தவழு முகி**லே** பொழி**லே"** (யாப் வி.ப 153)

என்பது இணையியைபு (இயைபுத் தொடை இறுதியிலிருந்து கணக்கிட வேண்டும்)

"தா**அட்** டா**அ** மரைமல ருழக்கி" (யாப்.வி.ப. 158) என்பது இணையளபெடை.

**கூழை**

கூழையாவது முந்துற்ற மூன்று சீர்களிலும் வருவது.

(எ-கா) "**அ**கன்ற **அ**ல்குல் **அ**ந்நுண் மருங்கில் (யாப்.வி.ப 130)

என்பது கூழை மோனை.

"ந**ன்**னிற மெ**ன்**முலை மி**ன்**னிடை வருந்த" (யாப். வி. ப. 134) என்பது கூழையெதுகை.

**சிறிய பெரிய நிகர்**மலர்க் கோதை தன் (யாப்.வி.ப. 147 என்பது கூழை முரண்.

மாதர் நகி**லே** வல்**லே** இய**லே** (யாப்.வி.ப. 153) என்பது கூழை இயைபு.

"**மாஅ**த் **தாஅ**ண **மோஒ**ட் டெருமை" (யாப் வி.ப. 158) என்பது கூழையளபெடை.

**முற்று**

முற்றாவது நான்கு சீர்களிலும் ஒத்து வருவது.

(எ-கா) "**அ**யில்வேல் **அ**னுக்கி **அ**ம்பலைத் **த**மர்த்த" (யாப்.வி.ப. 130)

என்பது முற்று மோனை, பிறவும் இதுபோல் வரும்.

**மேற்கதுவாய்**

இரண்டாம் சீரொழிய ஏனைய வருவது.

(எ-கா) "**அ**ரும்பிய கொங்கை **அ**வ்வளை **அ**மைத்தோள்" (யாப்.வி.ப. 131)

என்பது மேற்கதுவாய் மோனை, பிறவும் இதுபோல் வரும்.

**கீழ்க்கதுவாய்**

மூன்றாம் சீரொழிய ஏனைய வருவது.

(எ.கா) "**அ**விர்மதி **அ**னைய திருநுதல் **அ**ரிவை" (யாப். வி.ப. 131)

என்பது கீழ்க்கதுவாய் மோனை. பிறவும் இதுபோல் வரும்.

**அந்தாதித் தொடை**

ஒன்றன் இறுதி மற்றொன்றின் ஆதியாய் வருவது.

(எ.கா) "உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர் **மதி**
**மதி**நலன் அளிக்கும் வளங்கெழு முக்குடை" (யாப். வி. ப.131)

என்பது அந்தாதித் தொடை.

**ஆசு எதுகை**

ஆசு எதுகையவாது இடையினவொற்று இடைவரத்தொடுப்பது.

(எ.கா) "கா**ய்**மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எ**ற்**றி" (சீவகசிந். 31)

என்பது ஆசெதுகை.

## தொடைவகை குறித்த முடிபு

408. தொடைநிலை வகையே ஆங்கென மொழிப.
(இ-ள்) தொடைகளின் வகை இதுகாறும் கூறப்பட்டனவாகும்.

## நோக்கு

செய்யுட்குச் சிறப்பு செய்யும் இன்றியமையாத உறுப்புகளில் நோக்கு என்பதும் ஒன்று நோக்கு என்னும் உறுப்புப் பெறுதலினாலேயே அது செய்யுள் என்னும் சிறப்பெய்துகின்றது என்பது பேராசிரியர் கருத்து. எனவே நோக்கு இல்லாதது பாட்டாகாது என்பது உண்மை.

## நோக்கின் இலக்கணம்

409. மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.

(இ-ள்) மாத்திரை முதலாக அடிநிலையளவும் செய்யுளை மறித்து நோக்கிப் பயன்கொள்தற்குக் காரணமாய் அமைந்தது நோக்கு என்று சொல்லப்படும்.

செய்யுளென்பது வெறும் சொற்களை மட்டும் அடுக்கி வைத்துள்ள சொற்சட்டகம் அன்று. மாறாக அதில் இடம்பெறும் சொல் ஒவ்வொன்றும் படிப்பவர் அல்லது கேட்பவர் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் காரணத்தோடு அமையவேண்டும். செய்யுளைப் படிப்பவர் அதில் அமைந்துள்ள மாத்திரை, அசை, சீர், அடி முதலான உறுப்பளவும் சிந்தித்து ஏன்? எப்படி? என்று மறித்து நோக்கிப் பயன்கொள்ளும் வகையில் அமைந்தால்தான் அவரால் இலக்கிய இன்பம் துய்க்க முடியும். அவ்வாறு அறிதற்குக் காரணமாய் அமைந்துள்ள உத்தியே நோக்கு என்பது.

நோக்கு, படைப்பாளியின் சொல்லாற்றலையும் திறனையும் காட்டுவதோடு அப்படைப்பு காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்டு அழிவிலா அமுதம் போல் அனைவர் கவனத்தையும் ஈர்க்கக் காரணமாகின்றது. சங்க இலக்கியங்கள் பலவும், அருமைத் திருக்குறளும் இன்றும் மாறா இளமையுடன் திகழக்காரணம் அவை நோக்குப்பட அமைந்துள்ளமையே என்றால் மிகையாது.

(எ.கா) “காமர் கடும்புனல் கலந்தெம்மொடு ஆடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோடு ஒழுகலான்
நீணாக நறுந்தண்தார் தயங்கப்பாய்ந்து அருளினால்
பூணர்கம் உறத்தழீஇப் போதந்தாள் அகளகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தால்வேண்டின் தருகிற்கும் பெருமையளே” (கலி-39: 1-6)

இக்குறிஞ்சிக்கலி தலைவியின் களவொழுக்கம் குறித்துத் தோழி தாயிடம் அறத்தொடு நின்றதைக் கூறுகின்றது. இதனுள் கபிலர் பெருமான் மாத்திரை முதற்கொண்டு பாட்டின் அடியளவுமுள்ள சொற்களைக் காரணகாரியத்துடன் விளக்கியிருப்பதைக் கண்டுணரலாம்.

பெற்றோர் எவலால் தினைப்புனம் காக்கச் சென்ற தலைவிக்கும் கட்டிளங்காளை யொருவனுக்கும் ஏற்பட்ட காதல் தொடர்பினைத் தோழி இதன்கண் நயமாக எடுத்துரைக்கின்றாள் நீங்கள் தினைப்புனம் காக்கச் சென்றீர்களா? நீராடச் சென்றீர்களா?” எனத் தாய் கேட்பாளல்லவா? அதனால் அதையுணர்ந்த தோழி அம்மா! உச்சி வேளை வெயிலின் கொடுமையோ நெருப்பையும் விஞ்சுவதாய் இருந்தது. ஆற்றுப் புதுப்புனலைக் கண்டதுமே நீராட வேண்டும் போல் தோன்றிற்று; அதனால் “நீராடினோம்” என உணர்த்த ‘காமர் புனல்’ என்கிறாள். நீராடினால் என்ன, ன்ன, நீரில் அடித்துச் செல்லும் படியாகவா நீராடுவது? கவனமாகவல்லவா நீராட வேண்டும்” வேண்டும் எனத் தாய் கேட்கக்கூடும் என்பதை உணர்ந்த தோழி ”கவனமாகத்தான் நீராடினோம்; ஆனால் திடீரென நீரின் வரவு கடினமாக இருந்தது. மலையில் பெய்த மழையினால் அது விரைந்து ஓடக்கூடியதாய் இருந்தது” என விளக்க வேண்டிக் ‘கடும்புனல்’ எனக் கூறுகின்றாள். அப்படியானால் அவளை மட்டும் தனியே விட்டுவிட்டு நீ எங்குச் சென்றாய்? எனத் தாய் கேட்பாளன்றோ! அதனால் தோழி ‘கலந்து எம்மோடு ஆடுவாள்’ (எம்முடன் சேர்ந்துதான் நீராடினாள்) என எடுத்துரைக்கின்றாள். ஆனால் பெருவெள்ளம் அவளை மட்டும் அடித்துச் சென்று விட்டது என்பதையும், அதனால் அவள் உயிருக்குப் பேரிடர் நேர்ந்தது என்பதையும் ‘தாமரைக்கண் புதைத்தஞ்சி அதனோடு ஒழுகலான்’ என்னும் தொடரினால் உணர்த்துகின்றாள்.

தலைவன் நீரில் குதித்துச் சென்று அவளைக் காப்பாற்றியதையும் அதன் பயனாக ஊழ் அவ்விருவரையும் ஒன்றுகூட்டிவிட்டது என்பதையும் ‘நீணாக நறுந்தண்தார் தயங்கப் பாய்ந்து பூணாகம் உறத்தழீஇப் போதந்தான்’ என விளக்குகின்றாள். அந்தக் கணம் தொடங்கித் தலைவி

அவனுக்கே உரிமை பூண்டமையும் அவனையேயன்றித் தெய்வத்தைக் கூட நினையாத அவள் கற்பின் மேன்மையையும் உணர்த்த வேண்டி "என் தோழி அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே" நம்பும்படிச் செய்கின்றாள். என விளக்கித் தாயை நம்பும்படிச் செய்கின்றாள்.

இவ்வாறு இப்பாடலில் அடைமொழி முதற்கொண்டு சொற்கள் அனைத்தும் மறித்து மறித்துப் பொருள் காணும்படிக் காரணம் கருதி அமைந்திருப்பதைப் படித்தின்புற முடிகின்றது.

**இளம்பூரணர் விளக்கமும் எடுத்துக்காட்டும்**

இளம்பூரணர் நோக்கு என்பதற்கு 'செய்யுளில் பொருள் குவிந்து கிடக்கும் நிலை' என்னும் பொருளில் விளக்கியுரைக்கக் காணலாம். அவர் விளக்கம் வருமாறு:

"யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. அடிநிலை காறும் என்றதனால் ஓரடிக் கண்ணும், பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும் என விளக்கி எடுத்துக்காட்டு தருகின்றார் இளம்பூரணர்.

(எ.கா) "அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று" (நாலடி-1)

இதன்கண் 'செல்வம் நில்லாது' என்ற ஒரு பொருளே கூறப்பட்டதால் இஃது ஒரு நோக்காக ஓடிற்று என்பர்.

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். (நாலடி-172)

இதன்கண் பல அறநெறிகள் கூறியுள்ளதால் இது பலநோக்காகி வந்தது என்பர்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்ந்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" (முருகாற் 1-6)

இதன்கண் 'ஒளி' என்பது அதனயற் கிடந்த தாளை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு வந்த நோக்கு என்பர் இளம்பூரணர்.

பா

செய்யுள் வகைகளில் பா அல்லது பாட்டு என்பது தலைமை சான்றது. இஃது அடிவரையறைக்கு உட்பட்டது. பாட்டுக்கு ஓசை இன்றியமையாதது. பண்ணுடன் பாடப்பட்டதாலேயே பாட்டெனப்பட்டதாகக் கருதலாம். காட்டுமிராண்டி ஒருவன் காட்டில் தனக்குக் கிடைத்த பறையைத் தட்டி முழக்கியதன் பயனாகவே முதல் முதலில் பாட்டுத் தோன்றியதாக விளக்குவா் டி.எஸ். இலியட். நமது இலக்கண ஆசிரியரும் பா என்பதை ஓசை என்ற பொருளிலேயே கொண்டுள்ளனா்.

பா என்பது சேட்புலத்து இருந்த காலத்தில் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஒதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணா்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோா் ஓசை' எனப் பேராசிரியா் விளக்குதல் நோக்கத்தக்கது.

**பா வகைகள்**
**நான்குவகைப் பாக்கள்**

410. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.

(இ-ள்) பாவினது வகையை விரித்துக் கூறுமிடத்து ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்று நான்கு இயல்பினையுடையது என்று கூறுவா்.

**ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி' என ஆசிரியா் முறை வைத்தது ஏன்?**

'பதினேழ் நிலத்தினும் வருதலானும், இனிய ஓசைத்தாகவானும் அடிப்பரப்பினானும் ஆசிரியப்பா முற்கூறினாா். அதன்பின் ஆசிரிய நடைத்தாகி இறுதி ஆசிரியத்தான் இறுதலின் வஞ்சிப்பா கூறினாா். இந்நிகா்த்தன்றி வேறுபட்ட ஓசைத்தாகலான் வெண்பா அதன்பின் கூறினாா். அதன்பின் வெண்சீா் பயின்று வருதலானும் வெண்பா உறுப்பாகி வருதலானும் கலிப்பா கூறினாா் என்றறிக' என இம்முறைவைப்பு குறித்து இளம்பூரணா் விளக்குவா்.

**பிறநூலாா் வெண்பாவை முதல் வைத்துக் கூறியது ஏன்?**

ஒருசாா் யாப்பிலக்கண ஆசிரியா் பாவகைகளை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என முறைப்படுத்தி உரைப்பதன் காரணங்களை இளம்பூரணா் உரைக்குமாறு:

வெண்பாவானது பிறதளையோடு மயங்காமையானும் மிக்கும் குறைந்தும் வாராத அடியான் வருதலானும் அந்தணா் நீா்மைத்தென முற்கூறினாா். அதன்பின் அந்நிகா்த்தாகிப் பிறதளையும் வந்து இனிய ஓசையுடைத்தாய்ப் பரந்து வருதலின் அரசத்தன்மையது என்பதனால் ஆசிரிப்பா கூறினாா். அதன்பின் அந்நிகா்த்தாகிச் சிறுபான்மை வேற்றுத்தளை விரவலின் வணிகா் நீா்மைத்தெனக் கலிப்பா கூறினாா். அதன்பின் வஞ்சிப்பா அளவடியான் வருதலின்றிக் குறளடியும் சிந்தடியுமாய் வந்து பல தளையும் விரவுதலின் வேளாண்மாந்தா் இயல்பிற்றென வஞ்சிப்பா கூறினாா் என நயம்பட விளக்குவா்.

**நால்வகைப் பாக்களும் அறம் முதலிய மும்முதற் பொருட்கும் உரியவாய் வரும்**

411. அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப.

(இ-ள்) அந்நான்கு பாக்களும் பொதுப்பட நின்றவழி அறம் முதலிய மூன்று உறுதிப்பொருளுக்கும் உரியவாய் வரும் என்று கூறுவர்.

**மும்முதற் பொருள்** - அறம், பொருள் இன்பம்.

'இம்மூன்று பொருளுக்கும்' என்றது அகப்பாட்டு எல்லையைக் கருத்திற்கொண்டு கூறியது. புறப்பாட்டாயின் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கிற்கும் உரியவாய் அந்நான்கு பாக்களும் வருதல் இயல்பு.

**நால்வகைப் பாக்களும் இருவகையுள் அடங்கும்**

412. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நான்குவகைப் பாக்களையும் ஒழுங்குறத் தொகுப்பின் ஆசிரியப்பா, வெண்பா என்று இரண்டாய் அடங்கும் என்று கூறுவர்.

**வஞ்சிப்பாவும் கலிப்பாவும் நடைபயின்று வருதல்**

413. ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

(இ-ள்) வஞ்சிப்பா ஆசிரிய நடைத்தாய் வருமெனவும், கலிப்பா வெண்பா நடைத்தாய் வருமெனவும் அறிவுடையோர் மொழிவர்.

வஞ்சிப்பா சீர்வகையினாலும் அடி வகையினாலும் ஆசிரியப்பாவின் இயல்பினை ஒத்து முடியும். மேல் 'வஞ்சித் தூக்கே செந்தூக்கு இயற்றே' (செய்-68) என வருவதும் காணலாம்.

அவ்வாறே கலிப்பாவில் வெண்பாவின் இயல்புகள் ஒத்துக் காணப்படும். 'வெண்பா இயலினும் பண்புற அமையும்' (செய் -73) என்பது இதற்குச் சான்றாகும்.

எனவே ஆசிரியப்பா, வெண்பா ஆகிய இருவகைப்பாக்களுமே இயல்பானவை என்றும், ஏனைய வஞ்சிப்பாவும் கலிப்பாவும் அவ்விரு பாக்களினின்றும் கிளைத்தெழுந்தவை என்றும் கருத இடமுள்ளது.

**வாழ்த்தியல் வகை நான்குவகைப் பாக்களாலும் பாடப்படும்**

414. வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே.

(இ-ள்) வாழ்த்தியல் வகைச் செய்யுட்கள் நான்குவகைப் பாக்களாலும் பாடப்படும்.

வகையாவது தேவரை வாழ்த்தலும் முனிவரை வாழ்த்தலும் ஏனையோரை வாழ்த்தலும்' என்பர் இளம்பூரணர்.

‘வாழ்த்தப்படும் பொருளாவன: கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன’ என விளக்குவர் பேராசிரியர்.

### புறநிலை வாழ்த்து கலிப்பாவினும் வஞ்சிப்பாவினும் வரப்பெறாது

415. வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா.

(இ-ள்) ‘நீவிர் வழிபடும் தெய்வம் உம்மை எந்நாளும் புறத்தே காவலாகி நின்று அருள் செய்ய குற்றமற்ற செல்வத்தோடு வாழையடி வாழையாகச் சிறந்து விளங்குவீராக’ என்னும் புறநிலை வாழ்த்து கலிப்பா வகையினும் வஞ்சிப்பா வகையினும் பாடப்பெறாது.

தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்தலின் புறநிலை வாழ்த்தாயிற்று எடுத்துக்கொண்ட ஒரு காரியத்துக்கு ஏதுவாய் கடவுள் நிற்ப அக்கடவுளால் பயன்பெற நின்றானொருவனை முன்னிலையாக்கி அவற்குக் காரியம் கூறலின் இது புறநிலையாயிற்று என்பர் பேராசிரியர்.

இத்தகைய வாழ்த்துக்களில் கலியும் வஞ்சியும் வாராது. எனவே ஆசிரியப்பா வெண்பா என்னும் தலைமைப் பாக்களாலும் இவையிரண்டும் கலந்த மருட்பாவினாலும் மட்டும் பாடப்பெறுதல் வேண்டும் என்பது மரபு.

### வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ<br>என்பனவும் கலியும் வஞ்சியும் பெறா

416. வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉஎன அவையும் அன்ன.

(இ-ள்) வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ என்னும் பொருளில் அமைந்த செய்யுட்களும் கலியும் வஞ்சியும் பயின்று வரப்பெறா.

எனவே இவையும் பறநிலைவாழ்த்துப் போல ஆசிரியத்தானும் வெண்பாவாலும் மருட்பாவானும் வரப்பெறும் என்றவாறு.

### வாயுறை வாழ்த்துக்கு இலக்கணம்

417. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

(இ-ள்) வாயுறை வாழ்த்தை விளங்க ஆராயின் வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்லைத் தவிராது பின்னால் நற்பயன் விளைவிக்கும் என்னும் நோக்கத்துடன் பாதுகாவற் சொல்லால் மெய்யறிவித்தல் என்றவாறாம்.

வாய் + உறை = வாயுறை. வாயால் இடப்படும் சொன்மருந்து. இது வெஞ்சொல்லால் கடுமையாக மொழியப்படுவதாகையால் வேம்பும் கடுவும் (கடுக்காய்) உவமை கூறப்பட்டது. வேம்பும் கடுவும் முதலில் கசப்பினும் பின்பு உடலுக்கு உறுதியைத் தரும் நன்மருந்தாய் பயன் தந்து நிற்கும் அவ்வாறே வெஞ்சொல்லும் முதலில் வெறுப்பைத் தரினும் பிற்காலத்தில் ஆன்மாவிற்கு உறுதி பயக்கும் அருமருந்தாய் நின்று பயன் விளைவித்தலின் வாயுறை வாழ்த்து என்றாயிற்று.

(எ.கா) "இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே
அதனால்……………………………..
………………………………………
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே" (புறம் -363)

இப்பாடலில் 'நாடு முழுமையும் தமதாக்கி ஆண்ட எண்ணிறந்த மன்னர் நாடு பிறர்கொளத் தாம் மாய்ந்தனர். அதனால் இறுதிக்காலம் வருமுன் உயிர்க்கு உறுதியைத் தரும் நல்வினை செய்க' வஞ்சொல்லால் மெய்யறிவித்தலின் வாயுறை வாழ்த்தாயிற்று.

### அவையடக்கியல் இலக்கணம்

418. அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லாக் கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

(இ-ள்) அவையடக்கியலைக் குற்றமற ஆராயின் அறியாதன சொல்லினும் நல்லனவற்றையும் அல்லனவற்றையும் பகுத்துணர்ந்து அல்லது நீக்கி நல்லது கொள்வீராக என எல்லா மாந்தர்க்கும் வாழ்த்துக் கூறுதல் ஆகும்.

**அவையடக்கியல்** - பணிவான சொற்களால் அவையை வாழ்த்துதல். வல்லக் கூறினும் என்பது கருதியதனை நிரல்படக் கோத்துக் கூறும் திறமில்லாத சொற்களால் கூறினும் என்பதாம். எல்லா மாந்தர்க்கும் என்பது தன்னொடு ஒப்பாரும். தன்னில் மிக்காரும் தன்னின் இழிந்தாகும் என இம்முத்திறத்தாரையும் சேர்த்துக் கூறியது.

'வழிமொழிந்து' என்றதனால் தான் அடங்கி மொழிதலும் தன் பொருட்டு ஏனையோர் அடங்கி மொழிதலும் கொள்ளப்படும்.

(எ.கா) "அறையும் ஆடாங் கும்மடப் பிள்ளைகள்
தறையுங் கீறிடில் தச்சருங் காய்வரோ
இறையும் ஞானமும் இலாதஎன் புன்கவி
முறையில் நூலுணர்ந் தாரும் முனிவரோ" (கம்ப. பால. 30)

என்பது தான் அடங்கி மொழிந்தது.

"நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்குமவன் சுற்றத் தொழுக்கமும்" (மலைபடு, 77-80)

என்பது மற்றவர் அடங்கி மொழிந்தது.

**செவியறிவுறூஉ இலக்கணம்**

419. செவியுறை தானே,
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பன்
அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே.

(இ-ள்) செவியுறையாவது, பெரியோர் நடுவில் வெகுளலின்றித் தாழ்ந்தொழுகல் கடன் எனச் செவிக்கண் அறிவுறுத்தல் ஆகும்.

செவி + உறை = செவியுறை செவிக்கண் இடப்படும் மருந்து. அ∴தாவது அறிவுரையாகிய மருந்து என்பது பொருள். அவிதல் பணிந்து ஒழுகுதல். நாலடியார், திருக்குறள் திரிகடுகம், ஏலாதி ஆசாரக்கோவை போன்ற அறநூல்கள் பலவும் செவியுறைச் செய்யுட்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன.

(எ.கா) அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார்க் கேண்மை எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல் (நாலடி 172)

**நாற்சீரடி பொருந்தி வரும் பாவகைகள்**

420. ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின என்ப.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பா வகைகளான நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம் என்பனவும், ஒத்தாழிசைக்கலிக்கும் கொச்சகக் கலிக்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடியினைப் பொருந்தி வருவன என்பர்.

**நேரடி** - நாற்சீரடி (அளவடி). ஒத்தாழிசைக்கலி, கொச்சகக்கலி என்பன கலிப்பா வகைகள் கலிப்பாவின் உறுப்புகள் - தரவு. ஒத்தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனப்பல. ஒத்தாழிசை நாற்சீரடியான் வரும். குட்டம்-தரவு. இதுவும் நாற்சீரடியான் வரும்.

மண்டில யாப்பு - நாற்சீரடி பெற்று வருவன. நிலைமண்டிலம், அடிமறிமண்டிலம் என்பன ஆசிரியப்பா வகைகள் இவை எல்லா அடியும் நாற்சீர் பெற்று வரும்.

**கலிப்பாவின் தரவு ஈற்றயலடி மூச்சிரானும் வரப்பெறும்**

421. குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்.

(இ-ள்) கலிப்பாவில் தாவு ஈற்றயலடி மூச்சீரான் வரவும் பெறும் .

எருத்தடி என்றதனான் ஈற்றயலடி முச்சீர் எனப் பொருள்பட்டு நின்றது.

### மண்டிலமும் குட்டமும் அகவலோசை இயன்று வரும்

422. மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக்கு இயல என்மனார் புலவர்.

(இ-ள்) மண்டிலமாகக் கூறப்படும் பாவும், குட்டமெனக் கூறப்படும் பாவும் அகவலோசை பொருந்தி வருவன என்று புலவர் கூறுவர்.

### ஆசிரியப்பா இலக்கணம்

ஆசிரியப்பா பெரும்பான்மையும் இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும் சிறுபான்மை ஏனைய சீரானும் தளையானும் அடியானும் வருவது. ஏ, ஓ, ஈ, ஆ, என், ஐ என்பனவற்றுள் ஒன்றாய் முடிவது.

'ஈற்றெழுத்து எல்லா எழுத்தானும் வரும்' என்பது இளம்பூரணர் கருத்து.

### ஆசிரியப்பா வகைகள்

தொல்காப்பியர் ஆசிரியப்பாவின் வகைகளைக் குறித்துத் தனியாக இலக்கணம் கூறினாரில்லை. அவர் மண்டிலம் எனவும் குட்டம் எனவும் வகைப்படுத்தி அவை அகவல் ஓசை இயன்று வருமெனக் கூறிச்சென்றுள்ளார். ஆனால் யாப்பருங்கலம் முதலிய நூல்கள் ஆசிரியப்பாவின் வகைகளை அடிவகையால் தெளிவாக எடுத்துரைக்கக் காணலாம்.

### 1. நேரிசை ஆசிரியப்பா

ஈற்றயலடி முச்சீரான் வருவதனை நேரிசை ஆசிரியப்பா என்பர்.

(எ.கா) "முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி

"முலையும் வாரா முதுக்குறைந் தனளே" (யாப்.வி.ப. 122)

என வரும்.

### 2.இணைக்குறள் ஆசிரியப்பா

இடையிடை முச்சீர் வரின் இணைக்குறள் ஆசிரியப்பா என்பர்.

(எ.கா) "நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே" (யாப். வி. ப. 257)

என வரும்.

### 3. நிலைமண்டில ஆசிரியப்பா

எல்லா அடியும் நாற்சீரான் ஒத்து வருவதனை நிலைமண்டில ஆசிரியப்பா என்பர்.

(எ.கா) "வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார.். தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறள் -18)

என வரும்.

**4. அடிமறிமண்டில ஆசிரியப்பா**

இதுவும் எல்லா அடியும் ஒத்து வரும். இதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருதலின் அடிமறிமண்டிலம் எனப்பட்டது.

(எ.கா) "சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் கவலே
சாரல் நாட நீவர லாறே" (யாப். வி. ப.259)

என வரும்.

தொல்காப்பியர் அடியிலக்கணம் கூறுமிடத்து ஆசிரியத்துள் முச்சீரடி முதலா அறுசீரடியும், வெண்பா அடியும் மயங்கி வரப்பெறும் எனவும், ஆசிரிய நடைத்து வஞ்சி எனவும் கூறியதைக் கொண்டு ஆசிரியப்பாவினை அடிமயங்காசிரியம், வெள்ளடி மயங்காசிரியம், வஞ்சியடி மயங்காசிரியம் என மேலும் வகைப்படுத்திக்காட்டுவர் இளம்பூரணர்.

**அடிமயங்காசிரியம்**

முச்சீரடி முதலாக அறுசீரடி யீறாக மயங்கி வரும் ஆசிரியப்பா அடிமயங்காசிரியம் எனப்படும்.

**ஆதாரம்**

"வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீரடியும் உள்வென மொழிப" (செய் - 60)

"அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே" (செற் - 61)

என்பன நூற்பாக்கள்.

(எ.கா) "சிறியகட் பெறினே யெமக்கீயும் மன்னே" (புறம் 235)

இப்பாடல் முச்சீரடியும் நாற்சீரடியும், ஐஞ்சீரடியும், அறுசீரடியும் மயங்கி வந்து அடிமயங்காசிரியம் ஆயிற்று.

**வெள்ளடி மயங்காசிரியம்**

வெண்பா அடி மயங்கி வரும் ஆசிரியப்பா வெள்ளடி மயங்காசிரியம் எனப்படும்.

**ஆதாரம்**

"இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே" (செய் - 59)

(எ.கா) "எறும்பி அளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை யேறிக்
கொடுவில் எயினர் பகழிமூ மாய்க்கும்
கவலைத் தென்ப அவர்தேர் சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கலிமுமிவ் வழுங்கல் ஊரே" (குறுந் - 12)

இதனுள் முதலடி இயற்சீர் வெண்டளையாதலின் வெள்ளடி மயங்காசிரியம் ஆயிற்று.

**வஞ்சியடி மயங்காசிரியம்**

வஞ்சியடி மயங்கி வரும் ஆசிரியப்பா வஞ்சியடி மயங்காசிரியம் எனப்படும்.

**ஆதாரம்**

"ஆசிரிய நடைத்தே வஞ்சி" (செய் - 104)

என்பது நூற்பா.

(எ.கா) 'இருங்கடல் உடுத்த பெருங்கண் மாநிலம்' (புறம் 363)

என்னும் புறப்பாடலில்,

"உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோன் ஈயப்பெற்று"

என மூன்று அடிகளும் வஞ்சியடியாதலின் வஞ்சியடி மயங்காசிரியம் ஆயிற்று.

**வஞ்சிப்பா இலக்கணம்**

வஞ்சிப்பாவானது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச்சீரானும் இருசீரடியானும் முச்சீரடியானும் தூங்கலோசையானும் வந்து தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது.

**ஆதாரம்**

"வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீர் அல்லா மூவசை என்ப" (செய் - 19)

"தன்பா அல்வழி தான்நடை இன்றே" (செய் - 20)

"வஞ்சி மருங்கினும் எஞ்சிய வுரிய" (செய் - 21)

"வஞ்சியடியே இருசீர்த் தாகும்" (செய் - 21)

"முச்சீ ரானும் வருமிடன் உடைத்தே" (செய் - 45)

"வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே" (செய் - 68)

என்பன நூற்பாக்கள்.

**வஞ்சிப்பா வகைகள்**

இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என வஞ்சிப்பா இருவகைப்படும்.

**1. இருசீரடி வஞ்சிப்பா**

இருசீரடியான் வரும் வஞ்சிப்பா இருசீரடி வஞ்சிப்பா எனப்படும்.

(எ.கா) "பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசமும்
வயற்கம்பலைக் கயலார்ப்பவும் நாளும்
மகிழின் மகிழ்தூங் கூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே" (யாப்.வி.ப. 336)

இது குறளடியான் வந்து 'நாளும்' எனத் தனிச்சொல் பெற்று ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற இருசீரடி வஞ்சிப்பா தனிச்சொல் பெறுதல் ஆசிரியர் எடுத்துரைக்காவிடினும் 'உரையிற் கோடல்' என்பதனாற்கொள்க என்பர் இளம்பூரணர்.

**முச்சீரடி வஞ்சிப்பா**

முச்சீரடியான் வரும் வஞ்சிப்பா முச்சீரடி வஞ்சிப்பா எனப்படும்.

(எ-கா) "கொடிவாலன கருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தின் இணையரிமான் அணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயில்நடுவண் இனிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன், புணையெனத்

திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே" (யாப். வி. ப. 337)

இப்பாடல் முச்சீரடியான் வந்து 'புணையென' எனத் தனிச்சொல் பெற்று ஈற்றயலடி முச்சீராய் ஆசிரியச் சுரிதகத்தான் முடிந்தது.

### வஞ்சிப்பா ஆசிரியவடியோடும் வெண்பாவடியோடும் கலிப்பாவடியோடும் மயங்கி வருதல்

"வஞ்சி மருங்கினும் எஞ்சிய உரிய" (செய்-21) என்றதனால் வஞ்சிப்பா ஆசிரியவடியினோடும் வெண்பாவடியினோடும் கலிப்பா அடியினோடும் மயங்கி வருதலும் கொள்ளப்படும் என்பர் இளம்பூரணர்.

(எ.கா) "வசையிற்புகழ் வயங்குவெண்மீன்" (பட்டினப்பாலை)

என்ற பாடலில்,

:நேரிழை மகளிர் உணங்குண கவரும்"

என்பது ஆசிரியவடி.

"கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை"

என்பது வெண்பாவடி.

"வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்" (64-65)

என்பது கலியடி.

### வெண்பா இலக்கணம்

வெண்பாவானது வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளையானும் செப்பலோசையானும் அளவடியானும் ஈற்றடி முச்சீரானும் வருவது.

### வெண்பா யாப்பு வகைகள்

423. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளோடு
ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.

(இ-ள்) நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் என்பனவும், அளவொத்து வருவனவும் எல்லாம் வெண்பா யாப்பினையுடையனவாம்.

ஈண்டுக் கூறிய வெண்பா வகைகள் யாவும் ஓசையால் ஒத்தனவேயாகும். (அஃதாவது செப்பலோசை பெற்றுவருவன). ஆனால் அளவானும், தொடையானும், பொருளானும், இனத்தானும் வேறுபடுதலின் வேறுபடுத்தி வகைப்படுத்தினார் என்று கொள்ள வேண்டும்.

**நெடுவெண்பாட்டு** - அடியான் நெடிய பாட்டு. அ∴து அளவடியின் மிக்கு வருவது. ஐந்து அடிமுதல் பன்னிரண்டு அடிகாறும் வருவது.

**குறுவெண்பாட்டு** - அளவடியிற் குறைந்து வரும் பாட்டு இரண்டடியானும் மூன்றடியானும் வரும்.

**ஒத்தவை** - அளவான் ஒத்துவருதல் அ∴தாவது நான்கடியான் வருதல். இது **சமநிலை வெண்பா** எனப்படும்.

இம்மூன்றும் அளவால் பெயர் பெற்றன.

**கைக்கிளை** - ஒருதலைக்காதற் பொருண்மை கொண்டு பாடப்பெறுவது.

**அங்கதச் செய்யுள்**- கேலிச் செய்யுள் இது வசையோடும் நசையோடும் பாடப்படும்.

கைக்கிளையும் அங்கதமும் பொருளானாகிய பெயர் பெற்றன.

**பரிபாட்டு** - பரிந்த பாட்டு. அ∴தாவது ஒரு வெண்பாவாக வருதலின்றி பலவுறுப்புகளோடு தொடர்ந்த ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது.

**குறுவெண்பாட்டு வகைகள்**

குறுவெண்பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வருவது.

இவற்றுள் இரண்டடியான் வருவது குறள் வெண்பா எனப்படும். இது குறள் வெண்பா, விகற்பக் குறள் வெண்பா என இரண்டு வகைப்படும்.

**குறள் வெண்பா**

இரண்டடியும் ஒரே எதுகைத் தொடையான் வருவது குறள் வெண்பா எனப்படும்.

(எ.கா) “அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை” (குறள் - 37)

என்பது குறள் வெண்பா.

**விகற்பக் குறள்வெண்பா**

விகற்பத் தொடையான் வருவது விகற்பக் குறள் வெண்பா எனப்படும்.

(எ.கா) “உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து” (குறள் - 667)

என்பது விகற்பக் குறள் வெண்பா.

**சிந்தியல் வெண்பா**

மூன்றடியான் வரும் வெண்பா சிந்தியல் வெண்பா எனப்படும். இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா என இருவகைப்படும்.

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

மூன்றடியும் ஒத்து ஒரு தொடையான் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

(எ.கா) "ந**று**நீல நெய்தலும் கொட்டியந் தீண்டப்
பி**ற**ர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பி**ற**நாட்டுப் பெண்டிர் அடி" (யாப்.வி.ப. 226)

என்பது இன்னிசைச் சிந்தியல் வெண்பா

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

வேறுபட்ட தொடையான் வரும் சிந்தியல் வெண்பா நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

(எ.கா) "சு**ரை**யாழ அம்மி மிதப்ப வரையனைய
யா**னை**க்கு நீத்து முயற்கு நிலையென்ப
கா**ன**க நாடன் சுனை" (யாப்.வி.ப 229)

என்பது நேரிசைச் சிந்தியல் வெண்பா

**சமநிலை வெண்பா வகைகள்**

நான்கடியான் வருவது சமநிலை வெண்பா எனப்படும். இது நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என இருவகைப்படும்.

**நேரிசை வெண்பா**

இரண்டாம் அடியின் இறுதியில் ஒருஉத்தொடை பெற்று வருவது நேரிசை வெண்பா எனப்படும் ஒருஉத் தொடை வருக்க எதுகையாகவும் வரப்பெறும்.

(எ.கா) "அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று" (நாலடி -1)

என்பது நேரிசை வெண்பா.
மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்றுவரினும் அது நேரிசை வெண்பாவின்பாற்படும்.

**இன்னிசை வெண்பா**

நான்கடியாய் ஒரூஉத் தொடை பெறாது வருவது இன்னிசை வெண்பா எனப்படும்.

(எ.கா) "கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை

எல்லுறு போழ்தின் இனிய பழங்கைக்கொண்
டொல்லொலை யோடு மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை"  (கைந்நிலை-7)

என்பது இன்னிசை வெண்பா.

**நெடுவெண்பாட்டு (ப∴றொடை வெண்பா) வகைகள்**:

இது ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிகாறும் வருவது இதனைப் ப∴றொடை வெண்பா என்று கூறுவர். இது நேரிசைப் ப∴றொடை வெண்பா, இன்னிசைப் ப∴றொடை வெண்பா என இரண்டு வகைப்படும்.

**நேரிசைப் ப∴றொடை வெண்பா**

ஒரூஉத் தொடை பெற்று வருவது நேரிசைப் ப∴றொடை வெண்பா எனப்படும்.

(எ-கா) "பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருந்தார்நன் றென்றேன் தியேன்"  (யாப்.வி.ப. 237)

என்பது மூன்றாமடியில் ஒரூஉத் தொடை பெற்று வந்தமையால் நேரிசைப் ப∴றொடை வெண்பா.

**இன்னிசைப் ப∴றொடை வெண்பா**

ஒரூஉத் தொடை பெறாது வருவது இன்னிசைப் ப∴றொடை வெண்பா எனப்படும்.

(எ.கா) "சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்"  (யாப்.ப. 236)

என்பது இன்னிசைப் ப∴றொடை வெண்பா.

**கலிவெண்பா, கொச்சகம்,பரிபாடல்**

புணர்தல் முதலாகிய பொருள்களுள் யாதானும் ஒரு பொருளைக் குறித்துத் திரிபின்றி முடியும் ப∴றொடை வெண்பாவைக் கலிவெண்பா அல்லது வெண்கலிப்பா எனக் கூறுவர்.

குறள் வெண்பா முதலாகிய எல்லா வெண்பாக்களும் கொச்சகக் கலிப்பாவிற்கு உறுப்பாய் வரும் ப∴றொடை வெண்பா **கொச்சகம்** எனப்படும்.

மேற்குறித்த வெண்பா வகைகள் பரிபாடற்கு உறுப்பாய் வரும் ப∴றொடை வெண்பா பரிபாடல் என வழங்கப்பெறும்.

**கைக்கிளை வெண்பா**

கைக்கிளை என்பது கைக்கிளைப் பொருண்மை பற்றி வருவது. மேற்சொல்லப்பட்ட வெண்பாக்கள் இப்பொருள்மேல்வரின் கைக்கிளை வெண்பா எனப்படும்.

(எ.கா) "பொன்னார மார்பிற் புனைகழற்கால் கிள்ளிபோ்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் கன்னோ
மன்னோடு வாயெல்லாம் ம மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்" (யாப்.வி.ப. 62)

கைக்கிளை, வெண்பா யாப்பினால் வரப்பெறும். பாடாண்பாட்டுக் கைக்கிளையாயின் ஆசிரியத்தானும் வரப்பெறும்.

**கைக்கிளை, வெண்பாவில் தொடங்கி ஆசிரியத்தால் முடியவும் பெறும்**

424. கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் வரவும் பெறுமே.

(இ-ள்) கைக்கிளைப் பொருண்மை வெண்பாவால் வருதலேயன்றி, முதலிரண்டு அடியும் வெண்பாவாகிக் கடையிரண்டு அடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வரப்பெறும்.

இவ்வாறு வருவதனை **மருட்பா** என்பர்.

(எ.கா) "உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன
கரவரு காமங் கனல இரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிணகை
வெள்வளை நல்காள் வீடுமென் உயிரே" (பு.வெ.கைக்கிளை - 6)

என வரும்.

**பரிபாடல் இலக்கணம்**

425. பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

(இ-ள்) பரிபாடலாவது தொகைநிலை வகையால் இன்னபாவிற்கு உரிமையுடையது என்னும் இலக்கண நெறியின்றி எல்லா பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரித்தென்று கூறுவர்.

மேல் வெண்பா உறுப்பினால் வரும் எனக் கூறினார். அவ்வாறு வருதலேயன்றி ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி, மருட்பா என்று கூறப்பட்ட எல்லாப் பாவின் உறுப்பாகவும் பாடப்படும் என்பது இதனாற் கொள்ளப்படும்.

**பரிபாடலின் உறுப்புகள்**

426. கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

(இ-ள்) பரிபாடற் பாட்டுப் பொதுவாய் நிற்றலேயன்றிக் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்று சொல்லப்பட்ட நான்கும் தனக்கு உறுப்பாகப் பெற்றுக் காமங் கண்ணிய நிலைமைத்தாய் வரும்.

எனவே அறத்தினும் பொருளினும் பரிபாடல் வரப்பெறாது என்பதாம்.

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே" (செய்-105) என்றதனால் நான்குவகைப் பாவினும் பரிபாடல் வெண்பா யாப்பிற்றாதலின் கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறும்.

**கொச்சக**மென்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும், ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகையடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி வெண்பாவியலான் புலப்படத் தோன்றுவது. இதனுள்,

"சொற்சீர் அடியும் முடுகியல் அடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்" (செய் - 118)

என வேறு ஓதினமையால் இவ்விரண்டும் நீக்கி, ஏனை நான்கும் கொச்சகப் பொருளாகக் கொள்ளப்படும்.

"தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்
……………………………………………
பாநிலை வகையே கொச்சகக் கலி" (செய் -148)

என்றதனால், பரிபாடலுள் கொச்சகம் வரும்வழித் தரவும் சரிதகமும் இடையிடை வருதலும் கொள்க என்பர் இளம்பூரணர்.

**கொச்சகம் பெயர்க்காரணம் - பேராசிரியர் கருத்து**

"கொச்சகம் என்பது ஒப்பினாகிய பெயர் ஓர் ஆடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகம் எனப்படும். அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப்பட்டது" (தொல். பொரு. 433 பேரா) எனச் சுவைபட விளக்குவர் பேராசிரியர்.

**அராகமெ**ன்பது ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கி வரத்தொடுப்பது அதன் பெருமைக்கு எல்லை ஆறடி சிறுமைக்கு எல்லை இரண்டடி.

**சரிதகம்** என்பது பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பதோர் உறுப்பு. இ∴து ஆசிரிய இயலான் அல்லது வெண்பாவியலான் அமையும். சுரிதகமின்றியும் பரிபாடல் முடிவுபெறும்.

**எருத்தெ**ன்பது இரண்டடிச் சிறுமையும் பத்தடிப் பெருமையும் கொண்ட ஓர் உறுப்பு. பாட்டிற்கு முகம் தரவு ஆதலானும் கால் கரிதகம் ஆதலானும் இடைநிலை தாழிசை. கொச்சகம், அராகம் என்பவாதலானும் எருத்து என்பதைக் கழுத்தின் புறமெனக் கொண்டுத் தரவைச் சார்ந்து வரும் உறுப்பு என விளக்குவர் இளம்பூரனர்.

**சொற்சீரடியும் முடிகியலடியும் பரிபாடலில் பயின்றுவரும்**

427. சொற்சீர் அடியும் முடுகியல் அடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.

(இ-ள்) சொற்சீர் அடியும் முடுகியலாக வரும் அடியும் பரிபாடற்கு உறுப்பாய் வரும்.

**சொற்சீரடி**யாவது, சொல்லே சீராம் தன்மையைப் பெற்று வருவது அஃதாவது அசை பிரிப்பின்றி முழுச்சீராய் வருவது.

**முடுகிய**லாவது. ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப் பயிலத் தொடுப்பது.

## சொற்சீரடி இலக்கணம்

428. கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்
முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்
ஒழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

(இ-ள்) பாட்டின்றித் தொடுக்கப்படும் கட்டுரைக்கண் வருமாறு போல எண்ணொடு புணர்ந்து வருதலும், நாற்சீரடியென முழுமைபெற்ற அடியன்றி குறைந்த சீரான் வருதலும், ஒழியசையாகி வருதலும் வழியசையாகி வருதலும் என்றிவ்வாறு சொல் தானே சீராகும் தன்மையைப் பெற்று நிற்றல் சொற்சீரடிக்கு இயல்பாகும்.

**கட்டுரை வகையான் எண்ணொடு புணர்தல்**

கட்டுரைக்கண் வருமாறு போல ஈரடியான் பலவாகியும் ஓரடியான் பலவாகியும் எண்ணொடு புணர்ந்து வருதல்.

(எ-கா) "வடவேங்கடந் தென்குமரி
ஆயிடை"

எனவும்.

"அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு"
"ஆ ஏ ஒ அம் மூன்றும் வினா"

எனவும் வரும்.

**முற்றடி இன்றி குறைவு சீர்த்தாகி வருதல்**

நாற்சீரடியான் முழுமையாக வருதலின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் வருதல்.

(எ.கா) "நின்னொக் கும்புகழ் நிழலவை
பொன்னொக்கும் உடையவை"

**ஒழியசையாகி வருதல்**

ஒழிந்த அசையினை உடைத்தாய் வருதல். அஃதாவது அசையாம் தகுதியொழிந்து வருதல். வேறு சீா் வந்து சேருமானால் அசையெனப் பிரிக்கப்படும்.

(எ.கா) ‘ஒருசாா்’ என்பது ஒழியசை.

**வழியசை புணா்ந்து வருதல்**

வழியசை என்பது தன்னொடு பின்னும் அசை வந்து சோ்வதற்குரியதாய் நிற்பது. அஃதாவது சீா் வந்து தொடுக்காது ஓா் அசை வரத் தொடுப்பது.

(எ.கா) ‘ஆங்கு’ என வருவது வழியசை.

**<u>வினாக்கள்:</u>**

1. சீா்களின் வகைகளை விரித்து எழுதுக.
2. செய்யுளின் உறுப்புகளை சான்றுடன் விவரி.
3. பாவிற்குரிய அடிகள் குறித்து விளக்குக.
4. பாக்களின் ஓசை குறித்து தொகுத்துரைக்க.
5. ஆசிரியப்பாவின் வகைகளை விவரி.
6. செய்யுளுக்குரிய தொடைகளாக தொல்காப்பியா் கூறுவனவற்றை விவரி.
7. மூவசைச் சீா்களை எடுத்துரைக்க.
8. வெண்பாவின் வகைகளை விவரி.
9. தொடை என்றால் என்ன? தொடையின் வகைகளை விளக்குக.

## அங்கதச் செய்யுள் இலக்கணம்

429. அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

(இ-ள்) அங்கதம் என்பதைக் குற்றமற ஆராயின் செம்பொருள் எனவும், கரந்தது எனவும் இருவகைப்படும்.

அங்கதம் என்பது எள்ளி நகையாடற்குரியது. அஃது இக்காலத்துக் கேலிச்சித்திரம் போன்றது. அது செம்பொருள் அங்கதம் (வெளிப்படையாக மொழிவது). பழிகரப்பு அங்கதம் (மறைத்து மொழிவது) என இருவகைப்படும்.

### செம்பொருள் அங்கதம்

430. செம்பொரு ளாயின் வசையெனப் படுமே.

(இ-ள்) செம்பொருள் அங்கதம் வசையெனப் பெயா் பெறும்.

வசையென்பது வெளிப்டையாக எள்ளி மொழிதல்.

(எ.கா) "இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம் - மருமர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்(டு)
ஒட்டைச் செவியும் உள"

என்பது வெளிப்படையாக எள்ளியது.

**பழிகரப்பு அங்கதம்**

431. மொழிகரந்து மொழியின் அது பழிகரப் பாகும்.

(இ-ள்) தான் மொழியும் வசையை மறைத்து மொழியின் அது பழிகரப்பு அங்கதம் எனப் பெயர்பெறும்.

பழிகரப்பாவது வசையை அதற்குரிய சொல்லால் வெளிப்படையாக மொழியாது மறைத்துக் கூறுவது.

(எ-கா) "நன்றாய்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்தன் எனமதியா - வன்திறத்து
நின்றொலிக்குந் தானையோ டெல்லா நிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்"

இப்பாடலில் செங்கோல் மன்னனது இளவலானவன் தான் மட்டுமன்றித் தன் புடையொடும் பகைவர்முன் எதிர்நிற்க இயலாது உடைந்துபோன பழியினை வெளிப்படையாக மொழியாது, 'குன்றெறிந்த சேந்தனைப் போல் எறிந்தான்' என மறைத்து மொழிந்தமையால் இது பழிகரப்பாயிற்று.

வள்ளுவர் பெருமான் சுயவரைக் குறித்து 'தேவரனையர் கயவர்' எனவும் 'நன்றறிவாரிற் கயவர்' எனவும் மறைத்து உரைத்தலும் காணலாம்.

தொல்காப்பியர் 'பெருந்திணை' எனக் குறிசெய்தலும் இதன்பாற்படும்.

**எல்லாச் செய்யுளும் இரண்டு வகையில் அடங்கும்**

432. செய்யுள் தாமே இரண்டென மொழிப.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட செய்யுட்கள் எல்லாம் இரண்டு வகைப்படும். அவையாவன செவியுறைச் செய்யுள், அங்கதச் செய்யுள் என்பன.

**செவியுறைச் செய்யுளுக்குரிய உரிப்பொருள்கள்**

433. புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்.

(இ-ள்) புகழொடும் பொருளொடும் புணர்ந்து வரும் செய்யுள் செவியுறைச் செய்யுள் எனப் புலவர் கூறுவர்.

ஒருவரது புகழொடும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருளொடும் அமையப் பாடப்படுவன செவியுறைச் செய்யுட்கண் அடங்கும்.

எனவே அங்கதச் செய்யுள் நீங்கலாக ஏனைச் செய்யுட்கள் அனைத்தும் செவியுறைச் செய்யுட்களே என்பது இதனால் துணியப்படும்.

**அங்கதச் செய்யுட்குரிய உரிப்பொருள்கள்**

434. வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.

(இ-ள்) வசையொடும் நசையொடும் புணர்ந்து வரும் செய்யுள் அங்கதச் செய்யுள் எனப் புலவர் கூறுவர்.

அங்கதச் செய்யுளாவது எண்வகை மெய்ப்பாடுகளுள் நகைச்சுவை தோன்றக்கூறுவது. அவ்வாறு கூறுகையில் ஒருவருடைய குற்றத்தை வெளிப்படையாக எள்ளி நகைப்பது வசையின்பாற்படும். ஒருவர் குற்றத்தை மறைமுகமாக எள்ளி நகைப்பது நசையின் பாற்படும்.

**கலிப்பாவின் வகைகள்**

435. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழோடு கலிநால் வகைத்தே.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பாட்டு, கொச்சகம், உறழ்கலி எனக் கலிப்பா நான்கு வகைப்படும்.

"……………………………..
ஐந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படுஉம் காட்சித் தாகும்"

என அகத்தியனார் ஓதுதலின் கலிப்பா அகப்பொருளுக்கு உரித்தென்பது விளங்கும்.

**ஒத்தாழிசைக் கலிப்பா** - ஒத்தாழிசை என்னும் உறுப்பு பயின்று வருவது. அ∴தாவது, தாழிசை மூன்று ஒத்து வருவது. அளவாலும் பொருளாலும் ஓசையாலும் ஒத்து வருதலின் ஒத்தாழிசை எனப்பட்டது.

**கலிவெண்பா** - கலித்தளை தட்டு வெண்பா ஓசை பெற்று வருவது. **கொச்சகம்** - வெண்பா வகைகள் இடையே கலந்து வருவது. **உறழ்கலி** - வினாவும் விடையுமாக உறழ்ந்து வருவது.

**ஒத்தாழிசைக்கலி இரண்டு வகை**

436. அவற்றுள்,
ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும்.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிப்பா இரண்டு வகைப்படும்

**ஒத்தாழிசைக் கலிப்பாவில் ஒருவகை**

(நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா)

437. இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென
நடைநவின் றொழுகும் ஒன்றென மொழிப.

(இ-ள்) தாழிசை, தரவு, சுரிதகம், அடைநிலைக்கிளவி என்ற நான்கு உறுப்புகளையும் பெற்று வருவது ஒத்தாழிசைக் கலிப்பாவில் ஒரு வகைத்தாகும்.

அது **நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா** எனப்படும்.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பதே கலிப்பாவிற்குக் கிடக்கை முறையாம் எனினும் இப்பாவிற்கு ஒத்தாழிசை சிறந்ததாகலின் இடைநிலைப்பாட்டை முற்கூறினார்.

**இடைநிலைப்பாட்டு** - தாழிசை
**போக்கு** - சுரிதகம். வைப்பு. வாரம், அடக்கியல் என்பனவும் இதனையே குறிக்கும். இது பாட்டை முடித்து நிற்கும் உறுப்பு.
**அடைநிலைக் கிளவி** - தனிச்சொல் இது தாழிசைக்குப் பின்னர் வரும் தாழிசை தோறும் தனிச்சொல் வருதலும் உண்டு.

(எ-கா) “பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
ஆடெழில் அழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பதொன் றுடையேன்மன் அதுவந்தான்.

இது தரவு.

தொன்னலந் தொலைபீங்கியாம் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநம் காதலர் துறந்தேகும் ஆரிடைக்
கன்மிசை உருப்பறக் கனைதுளி சிதறென
இன்னிசை யெழிலியை இரப்பவும் இயைவதோ:

புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெ.ஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ:

ஒளியிழாய் ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளியொரீஇக் காதலர் அகன்றேகும் ஆரிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ:

இவை தாழிசை.

எனவாங்கு,

தனிச்சொல.

செய்பொருட் சிறப்பெண்ணிச் செய்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி
வறனோடின் வையத்து வான்தருங் கற்பினாள்
நிறனோடிப் பசப்பூர்தல் உண்டென
அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே" (கலி -16)

இது சுரிதகம்.

இப்பாடல் நான்கடித் தரவும், நான்கடியான் மூன்று தாழிசையும், தனிச்சொல்லும், ஐந்தடிச் சுரிதகமும் வந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

**தரவுக்கு அடிவரையறை**

438. தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.

(இ-ள்) தரவாவது நான்கடிச் சிறுமையும் பன்னிரண்டடி உயர்வும் பெற்று இடைவரும் அடியெல்லாவற்றானும் வரப்பெறும்.

எனவே தரவு ஒன்பது அடிபெறும் என்றவாறு.

(எ.கா) "வயக்குறு மண்டிலம்" (கலி. -25) என்னும் பாட்டில் தரவு பன்னிரண்டு அடியான் வந்தது.

**இடைநிலைப்பாட்டு அல்லது தாழிசைக்கு அடியளவு**

439. இடைநிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபின என்ப.

(இ-ள்) இடைநிலைப்பாட்டு (தாழிசைகள்) தாவின் அளவைவிடச் சுருங்கி வரும் இயல்பினை உடையன என்பர்.

தரவின் சுருங்கி வரும் என்றமையால், அதன் இழிபாகிய நான்கடியின் சுருங்கி மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் ஒருபொருள் மேல் மூன்று அடுக்கி வரும்.

(எ-கா) "இலங்கொளி மருப்பில்" (கலி. -23) என்னும் பாட்டில் தாழிசை இரண்டடியான் வந்தது.

"உண்சுடன் வழிமொழிந்து" (கலி. – 22) என்றும் பாட்டில் தாழிசை மூன்றடியான் வந்தது

**அடைநிலைக் கிளவி நடைநவின்று வருதல்**

440. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்

நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப.

(இ-ள்) அடைநிலைக்கிளவியாகிய தனிச்சொல் தாழிசைக்குப் பின்னர் நடத்தலைப் பயின்று வரும் எனக் கூறுவர்.

(எ.கா) ‘ஆங்கு’ என வரும் இது பெரும்பாலும் கலிப்பாவில் தாழிசைக்குப் பின்னே வரும் தாழிசை தோறும் வருதலும் உண்டு.

“வெல்புகழ் மன்னவன்”(கலி. – 118) என்னும் பாட்டில் தாழிசைதோறும் வந்தது.

**சுரிதகத்திற்கு அடி வரையறை**

441. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே.
தரவியல் ஒத்தும் அதனகப் படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.

(இ-ள்) சுரிதகம் என்பது வைப்பெனவும் படும். அது தரவோடு ஒத்த அளவினதாகியும் அதைவிடக் குறைந்த அளவினதாகியும் குற்றந் நீர்ந்த பாட்டின் இறுதிநிலையை உணர்த்தி நிற்கும்.

கலிப்பாவில் கரிதகம் என்பது கட்டுரைகளில் வரும் முடிவுரையைப் போன்றது. அது பாடலின் கருத்துக்களைத் தொகுத்து வைப்பதால் ‘வைப்பு’ எனப்படும் என்பர். அதனுடன் முடிவதால் ‘போக்கு’ எனவும். சுருங்கி முடிவதால் ‘கரிதகம்’ எனவும் முன்னைய கருத்துக்களை அடக்கிக் கூறுவதால் ‘அடக்கியல்’ எனவும், முன்னைய கருத்துகள் மீண்டும் சொல்லப்படுவதால் ‘வாரம்’ எனவும் இது பெயர் பெறும்.

சுரிதகம் தரவியலைப் போல நான்கடிச் சிறுமையும் பன்னிரண்டடி பெருமையும் உடைத்தாயும், அதனின் குறைந்த மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும். இது துள்ளலோசைத்தாகி நிரைமுதல் வெண்சீர் பெற்று ஆசிரியத்தாலோ வெண்பாவாலோ வரும்.

(எ.கா) “பாடின்றி பசந்தகண் பைதல பனிமல்க” (கலி - 16) என்னும் பாட்டில் கரிதகம் ஐந்தடியான் வந்தது.

“ஆறறியந்தனர்”. என்னும் கலியில் சுரிதகம் மூன்றடியான் வந்தது.

**ஒத்தாழிசைக் கலிப்பாவில் மற்றொரு வகை**

442. ஏனை யொன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

(இ-ள்) ஒத்தாழிசைக் கலிப்பாவின் மற்றொரு வகை முன்னிலையிடத்துத் தேவரைப் பராவும் பொருண்மைத்து ஆகும்.

**தேவர்ப்பராவுதலில் இருவகை**

443. அதுவே,
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே.

(இ-ள்) தேவரைப் பராவுதற் பொருண்மையானது வண்ணக ஒத்தாழிசைக்கலி எனவும், ஒருபோகு ஒத்தாழிசைக்கலி எனவும் இருவகைப்படும்.

### வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா வருமாறு

444. வண்ணகம் தானே,
தரவே தாழிசை எண்ணே வாரமென்று
அந்நால் வகையில் தோன்றும் என்ப.

(இ-ள்) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவானது தரவு, தாழிசை எண். சுரிதகம் என்று சொல்லப்பட்ட நால்வகை உறுப்பினாலும் அமையும் என்பர்.

**வண்ணகம்** - வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகம் எனப்பட்டது. தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறுவிப் பின்னர் அத்தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின் அப்பெயர் பெற்றது என்பர்.

**எண்** - கலியுறுப்புகளில் ஒன்று. இது அம்போதரங்கம் எனப்படும் இது நீர்த்திரை போல் வரவரச் சுருங்கி வருதலின் அம்போதரங்கம் எனப்பட்டது. (அம்போதரங்கம் - நீர்த்திரை)வாரம் - சுரிதகம்.

### வண்ணக ஒத்தாழிசைக் கலியின் தரவு

445. தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

(இ-ள்) வண்ணக ஒத்தாழிசைக் கலியின் தாவு நாள்கும் ஆறும் எட்டுமாகிய அளவடியினாலே வரும்.

ஈண்டு நேரடி என்றது கொச்சகத் தரவு போல வாராமைக்கு என்று கொள்க. சொல்லப்பட்ட ஒன்பது அடியினும் மூன்றடியே இதற்கு வருவதென்றவாறாயிற்று.

நான்கும் ஆறும் எட்டும் என்றமையான், இஃது இரட்டைப்பட வருதலன்றி, ஒற்றைப்பட்ட அடிகளால் வராது என்பது பேராசிரியர் கூற்று.

### வண்ணக ஒத்தாழிசைக் கலியின் தாழிசை

446. ஒத்து மூன்றாகும் ஒத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்றும் என்ப.

(இ-ள்) வண்ணகக் கலியின் தாழிசை தம்முள் அளவொத்து மூன்றாகி வரும் அவை தரவிற் சுருங்கித் தோன்றும் என்பர்.

### வண்ணக ஒத்தாழிசைக் கலியின் சுரிதகம்

447. அடக்கியல் வாரம் தரவோ டொக்கும்.

(இ-ள்) வண்ணகக் கலிக்கு அடக்கியல் எனப்படும் சுரிதகம் தரவுக்குச் சமமான இலக்கணத்தைப் பெற்றுவரும்.

எனவே வண்ணக ஒத்தாழிசைக் கலியின் சுரிதகம் நான்கும் ஆறும் எட்டுமாகிய அடிகளில் வரும்.

**வண்ணக ஒத்தாழிசைக் கலியின் 'எண்' வருமாறு**

448. முதல்தொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.

(இ-ள்) முதலில் தொடுத்த உறுப்புப் பெருகிப் பின் தொடுக்கும் உறுப்புச் சுருங்கி வருவது எண் ஆகும்.

அதனை இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடியான் வருவன நான்கும், சிந்தடியான் வருவனழு எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். தொல்காப்பியருக்கு அது வரையறையிலவாம் என்பர் இளம்பூரணர்.

(ஈரடியான் வருவன தலையெண் அல்லது பேரெண்: ஓரடியான் வருவன இடையெண்: இருசீரான் வருவன கடையெண்: ஒரு சீரான் வருவன சிற்றெண் என வழங்கப்படும்)

**தனிச்சொல் இன்றி எண்ணிடையிட்டு வருதல்**

449. எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் அல்லாக் காலை யான.

(இ-ள்) தனிச்சொல் என்னும் உறுப்பு இல்லாதவழி மேற்சொல்லப்பட்ட எண் ஒரோவொன்று இடையொழிந்து வருதலும் குற்றமாகாது. அவ்வாறு வருங்கால் அது ஒருபோகு எனப்படும்.

**சின்னம்** -தனிச்சொல் எண் இடையொழிதல் ஒரோவொன்று இடையிட்டு வருதல்.

இதனால் வண்ணக ஒத்தாழிசைக்கலிக்குத் தனிச்சொல் என்னும் உறுப்புண்மை பெறப்படும். தனிச்சொல் வரும்வழி ஏனைய தரவு, தாழிசை எண், சுரிதகம் என்னும் உறுப்புகள் இடையொழியாமல் வருதல் வேண்டும்.

**ஒருபோகு** -தனிச்சொல் இன்றி எண் இடையிட்டு வந்தவழி, அது வண்ணகம் எனப்படாது, **ஒருபோகு ஒத்தாழிசைக்கலி** என வழங்கப்படும். (ஒருபோகு - ஒருறுப்பு போகியது)

**வண்ணக ஒத்தாழிசைக் கலிக்கு எடுத்துக்காட்டு**

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்த
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்வளை கழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புனல் இழிகுருதி அகலிடம் உடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்"

இது தரவு.

முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரள்திண்தோட் போர்மலைந்த மறமன்னர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலம்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ
கலியொலி வியனுலகம் கலந்துடன் நனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதார் உடம்பொடு மறம்பிதிர எதிர்கலங்கச்
சேணுயர் இருவிசும்பிற் செகுத்தநின் சினமாமோ:

படுமணி இனநிரை பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்படர வீழ்ந்துதிறம் வேறாக
எருமலி பெருந்தொழுவில் இறுத்ததுநின் இகலாமோ:

இவை மூன்று தாழிசை.

இலங்கொளி மரகதம் எழில்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையோய் மானு நின்னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொன்னும்
பொருகளி றட்டோய் புரையும் நின்னுடை:

இவை பேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை,
தண்கடர் உறுபகை தணித்த ஆழியை;
ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை,
வலிமிகு சகட மாற்றிய அடியினை:

இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ
புணர்மருதம் பிளந்தோய் நீஇ
நீர்கலம் அளந்தோய் நீஇ
நிழல் திகழ்ஐம் படையோய் நீ

இவை இடையெண்.

ஊழிநீஇ, உலகுநீஇ, உருவநீஇ, அருவுநீஇ,
ஆழிநீஇ, அருளும்நீஇ, அறமும்நீஇ, மறமும்நீஇ,

இவை சிற்றெண்.
எனவாங்கு.
தனிச்சொல்.
அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்

கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வேல் அச்சுதன்
தொன்று முதிர்கடல் உலகம் முழுதுடன்
ஒன்றுபு திகிரி உருட்டுவோ னெனவே:

இது சுரிதகம்.

இப்பாடல் தரவு. மூன்று தாழிசை, பேரெண், அளவெண் இடையெண், சிற்றெண், தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்கள் வந்து வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ஆயிற்று.

இவ்வாறு வருவதனை ஒருசார் ஆசிரியர் **'அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா'** எனக் கூறுவதாக இளம்பூரணர் நவில்வர்.

### ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பா இரண்டு வகைப்படும்

450. ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும்.

(இ-ள்) ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பாவின் இயல்பும் இரண்டு வகைப்படும.

### ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பா வகைகள்

451. கொச்சக ஒருபோகு அம்போ தரங்கமென்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்.

(இ-ள்) ஒருபோகு ஒத்தாழிசைக் கலிப்பாவானது கொச்சக ஒருபோகு அம்போதரங்க ஒருபோகு என இருவகைப்பட வரும்.

### கொச்சக ஒருபோகு இலக்கணம்

452. தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிசை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக ஒருபோ காகும் என்ப.

(இ-ள்) தரவு முதலான உறுப்புகளுள் தரவின்றித் தாழிசை முதலிய உறுப்புகளைப் பெற்றும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும், எண்ணாகிய உறுப்புக்களை இடையிட்டுத் தனிச்சொல் வாராதொழியினும், அடக்கியலாகிய சுரிதகமின்றித் தரவுதானே அடிநிமிர்ந்து முடியினும், ஒத்தாழிசைக்குரிய யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின் வேறுபட்டு காமப்பொருளாய் வரினும் அவை கொச்சக ஒருபோகு எனப்பெயர் பெறும் என்பர்.

(எ.கா) "நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாக" (கலி. - 149) என்னும் பாடல் தரவின்றித் தாழிசை முதலியன பெற்று வந்த கொச்சக ஒருபோகு.

“செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு” (கலி - 19) என்பது தாழிசையின்றித் தரவு முதலியன பெற்று வந்த கொச்சக ஒருபோகு.

“மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்” (கலி. - 133) என்பது எண்ணிடையிட்டுத் தனிச்சொல் குன்றி வந்த கொச்சக ஒருபோகு.

“பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி” (கலி. – 21) என்பது அடக்கியலின்றி அடிநிமிர்ந்து வந்த கொச்சக ஒருபோகு.

**கொச்சக ஒருபோகு அடிவரையறை**

453. ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே.

(இ-ள்) கொச்சக ஒருபோகு பத்தடிச் சிறுமையும் இருபதடிப் பெருமையும் உடைத்தாய் வரும்.

**அம்போதரங்க ஒருபோகு அவைரையறை**

454. அம்போத ரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரம் சிறுமைக் கெல்லை.

(இ-ள்) அம்போதரங்க ஒருபோகு அறுபதடிப் பெருமை பெற்று வரும். சிறுமைக்கு எல்லை அதன் செம்பகுதியாகிய முப்பது அடியாம்.

**செம்பால் வாரம்** - செம்பகுதி அறுபதில் பாதியாகிய முப்பது அடி.

**அம்போதரங்க ஒருபோகின் உறுப்புகள்**

455. எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்
அடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே.

(இ-ள்) எருத்து (தரவு), கொச்சகம், அராகம், சிற்றெண், அடக்கியல் (சுரிதகம்) என்னும் ஐந்தும் அம்போதரங்க ஒருபோகின் உறுப்புகளாம்.

எருத்து – தரவு, கொச்சகம், வெண்பாவியலான் அமைந்த உறுப்பு. அராகம் ஈரடியானும் பலவடியானும் குற்றெழுத்து நெருங்கிவரத் தொடுப்பது. சிற்றெண ் - ஓரசை, ஈரசை உறுப்புகள். சுரிதகம் பாட்டின் முடிவு.

இவ்வுறுப்புகள் பரிபாடலிலும் பெற்று வரும்.

**பரிபாடலுக்கும் அம்போதரங்க ஒருபோகுக்கும் வேறுபாடு**

எருத்து முதலாகிய உறுப்புகள் முறையே பயின்று வருவது அம்போதரங்க ஒருபோகாம்.

அறுபதடியில் குறைந்து முறை பிறழ்ந்து வருவனவும், அறுபதடியின் மிக்கு ஒத்து வருவனவும் பரிபாடலாம்

**அம்போதரங்க ஒருபோகுக்கு எடுத்துக்காட்டு**

"கண்ணகன் இருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்நறும் பிடவமும் தவழ்கொடித் தவளமும்
வண்ணவன் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பன்மலர்த் துதையத்
தழையுங் கோதையும் இழையும் என்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மடமொழி மாயத் தவருள் இவள்யார்
உடம்போ டென்னுயிர் புக்கவள் இன்று;

இது தரவு.

ஒஒ இவள் பொருபுகல் நல்வேறு கொன்பவ ரல்லால்
திருமாமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாருங் கேட்ப அறைத்தறைந் தெப்பொழுதும்
சொல்லால் தாப்பட்டவள்:
சொல்லுக பாணியேம் என்றார் அறைகென்றாம் பாரித்தார்
மாணிழை யாறாகச் சாறு:
சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்குவா யெல்லாம்
மிடைபெறின் நோரத் தகைத்து.

இவை கொச்சகம்.

தகைவகை மிசைமிசை பாவியர் ஆர்த்துடன்
எதிரெதிர் சென்றார் பலர்:
கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்
துருத்தெழுந் தோடின்று மேல்:

இவை அராகம்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர்பலர்:

இவை சிற்றெண்.

அவருள், மலர்மலி புகலெழ அவர்மலி மணியுரை நிமிர்தோன் பிணைஇ
பெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் தோன்றி
வருத்தினான் மன்றஅவ் வேறு:

இது முடுகியலடி வந்த கொச்சகம்.

ஏறெவ்வங் காணா எழுந்தார் எவன்கொலோ
வேறுடை நல்லார் பகை
மடவரே நல்லாயர் மக்கள் நெருநல்
அடலேற் றெருத்திறுத்தார்க் கண்டுற் றின்று
முடலேறு கோட்சாற்று வார்.

இலையம் கொச்சகம்,

ஆங்கிளி

இது தனிச்சொல்.

"தன்மைப் பாணி தர தெழுஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்
திண்தோள் திறலொளி மாயப்போர் மாமேனி
அந்துவ ராடைப் போதுவனோ டாய்ந்த
முறுவலாள் மென்றோள் பாராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துரை"

இது சுரிதகம்.

இப்பாடல் எருத்து முதலிய உறுப்புகள் முறையே வந்த அம்போதரங்க ஒருபோகு. (தாழிசை வாராமையால் ஒரு போகாயிற்று)

**கலிவெண்பா அல்லது வெண்கலிப்பா இலக்கணம்**

456. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே.

(இ-ள்) ஒரு பொருளைக் குறித்து இறுதியடியளவும் வெண்டளை பெற்று வெண்பா இயலால் திரிபின்றி முடிவது கலிவெண்பா எனப்படும்.

இதனை வெண்கலிப்பா எனவும் வழங்குவர். திரிபின்றி முடிதலாவது பிற கலிப்பாக்கள் போல பலவுறுப்புகள் தழுவி வருதலின்றி பாட்டு முழுவதும் ஒரேயுறுப்பாய் வருதல்.

'வெள்ளடி இயலால்' என்றமையான் கலிவெண்பாவின் ஈற்றடி முச்சீராய் முடிவுறும் என்பது தெளிவு அவ்வாறு வருங்கால் வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் முடிவனவும், பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான் முடிவனவும் கொள்ளப்படும்.

(எ-கா) "மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
கரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்கும் கடுமையு காடென்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறின்

அன்புறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின் அதுவல்ல
தின்பமும் உண்டோ எமக்கு”

இது வெண்டளையான் வந்த கலிவெண்பா

“தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாம்
……………………………………………
யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற
நோயும் களைகுவை மன்” (கலி. - 111) என்னும் முல்லைக்கலி அயல் தளையான் வந்த கலிவெண்பா.

**ப.ஃ.றொடை வெண்பாவிற்கும் கலிவெண்பாவிற்கும் உள்ள வேறுபாடு -இளம்பூரணர் விளக்கம்**

கலிவெண்பாவானது நெடுவெண்பாட்டிற்குரிய இலக்கணம் பெற்று வருதலின் ப.ஃ.றொடை வெண்பா எனல் வேண்டும். அவ்வாறன்றி வெண்கலிப்பா என்றது என்னையெனில், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், எனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் சொல்லப்பட்ட அகப்பொருள் ஏழனுள்ளும் ஏதேனும் ஒருபொருளைக் குறித்து எனைக் கலிப்பாக்களைப் போலத் தரவும் தாழிசையும் தனித்தனிப் பொருளாக்கிச் சுரிகத்தால் தொகுத்து முடிதலின்றித் ஒரே உறுப்பாய் முடிவது கலிவெண்பாவாம்.

புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் ப.ஃ.றொடை வெண்பா எனவும், பரிபாடற்கு உறுப்பாய் வரும் ப.ஃ.றொடை வெண்பாக்களைப் பரிபாடல் எனவும், கொச்சகக் கலிப்பாவிற்கு உறுப்பாய் வரும் ப.ஃ.றொடை வெண்பாவைக் கொச்சகக் கலிப்பா எனவும் கூறுதலே தொல்காப்பியர் கருத்தென்று கொள்ள வேண்டும்.

இவ்வாறு விளக்கம் செய்வர் இளம்பூரணர்.

**கொச்சகக் கலிப்பா இலக்கணம்**

457. தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே.

(இ-ள்) தரவாகிய உறுப்பும் சுரிதகமாகிய உறுப்பும் பாட்டின் முதலிலும் முடிவிலும் வருதலின்றி இடையிடை வந்து தோன்றியும், ஐஞ்சீரடி பல வந்தும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி முடுகியலடி என்னும் ஆறுறுப்பினையும் பெற்றும், மேற்சொல்லப்பட்ட உறுப்புகளை உடைத்தாகியும் இலதாகியும் வெண்பாவியலால் புலப்படத் தோன்றும் பாநிலைவகை கொச்சகக் கலிப்பாவாகும் என்று இலக்கணமறிந்த புலவர் கூறுவர்.

‘மிடைந்தும்’ என்னும் உம்மையால் தரவும் சுரிதகமும் இடையிடையன்றி இயற்கை முறைமையால் வருதலும் கொள்க என்பர் இளம்பூரணர். (இயற்கை முறைமை - வரிசைப்படி)

ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசையாகிய உறுப்பு மிக்கு வருமாறுபோலக் கொச்சகக் கலிப்பாவிற்கு வெண்பாவாகிய உறுப்பு மிக்கு வருதல் இயல்பு.

(எ.கா) **கலி.26ஆம் பாடல் வருமாறு**

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலால்
நீள்நாக நறுந்தண்தார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே,

இது தரவு. (இதனுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது)

அவனுந்தான், ஏனல் இதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறாலென ஏணி இழைத்திருக்குங்
கானகல் நாடன் மகன்;

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான்;

காந்தள் கடிகமழும் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்தோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்மையரும்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

இவை மூன்றும் கொச்சகம். (இதன்கண் முதற்பத்தியில் கூன் வந்தது. இரண்டாவது பத்தி ஆசிரியவடியான் வந்தது.)

எனவாங்கு.

தனிச்சொல்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்ந்தரைத்தாள் யாய்:

இது சுரிதகம். (வெண்பா வடிவில் இடை வந்தது)

அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;

இவையிரண்டும் கொச்சகம்.

நல்லாய்.

தனிச்சொல்.

நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தந்நாண்தாந் தாங்குவார் என்னோற் றனர்கொல்:

இது பேரெண்.

புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ:

விண்டோய்கன் னாடனும் நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போல் படர்கிற்பீர் மற்கொலோ:
பண்டறியா தீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பன் மற்கொலோ:

இவை இரண்டும் தாழிசை.

மைதவழ் வெற்பன் மணஅணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்களும் கண்களோ:

இது பேரெண்.

என்னைமன், நின்கண்ணாற் காண்பன்மன் யான்
நெய்தல் இதழுண்கண் நின்கண்ணா கென்கண்மன்:

இதுவும் கொச்சகம்.

எனவாங்கு,

தனிச்சொல்.

“நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
நகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக
வேய்புரை மென்றோட் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடனீங்கச்

சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழில் உண்கணும் பொலிகமா இனியே”

இது சுரிதகம்.

இப்பாடலில் தரவு, கொச்சகம், தனிச்சொல், தாழிசை, பேரெண் கொச்சகம், தனிச்சொல், சுரிதகம் என உறுப்புகள் மயங்கி வந்து கொச்சகக் கலிப்பா ஆயிற்று.

**உறழ்கலிப்பா இலக்கணம்**

458. கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே.

(இ-ள்) கூற்றும் மாற்றமும் விரவி வந்து சுரிதகமின்றி முடிவது உறழ்கலிப்பாவிற்கு இலக்கணமாகும்.

கூற்றும் மாற்றமும் - ஒருவர் கூற்றும் அதற்கு மற்றவர் கூறும் பதிலும், மிடைந்து வருதல் - மாறிமாறி விரவ வருதல்.

கொச்சகக் கலிப்பாவின் பின் உறழ்கலியைக் கூறியமையால் அதன் உறுப்புகள் ஒப்பன இதற்கு உறுப்பாகக் கொள்ளப்படும்.

(எ.கா) “யாரிவன் என்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரல்நீ வந்தாங்கே மாறு;

இது தலைமகள் கூற்று.

என்னிவை ஒருயிர்ப் புள்ளின் இருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவல்நீ கூறினென்
ஆருயிர் நிற்குமா றியாது.

இது தலைவன் கூற்று.

ஏஎ, தெளிந்தேம்யாங் காயாதி எல்லாம்வல்
எல்லா பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தல்நின் வஞ்ச முரைத்து:

இது தலைமகள் கூற்று.

மருந்தின்று, மன்னவன் சீறில் தவறுன்டோ நீ நயந்த
இன்னகை தீதோ இலேன்;

இது தலைமகன் கூற்று.

மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎம் எனநெருங்கில் தப்பினேன்

என்றடி சேர்தலும் உண்டு. (கலி-89)

இது தலைமகள் கூற்று.

இப்பாட்டு கூற்றும் மாற்றமும் கலந்துவந்து சுரிதகமின்றி முடிந்தவாறு காணலாம். இறுதியில் வந்தது சுரிதகம் ஆகோதோ எனில், அது முதலினும் இடையினும், வந்த பொருளினைத் தொகுத்து முடியாமையின் சுரிதகம் எனப்படாது என்பர்.

## அளவியல்

### பாக்களுக்கான அடிவரையறை

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பாவுறுப்புகள், அங்கதச் செய்யுள், பரிபாடல் என்பன அடிவரையறையுடைய செய்யுட்களாகும்.

### ஆசிரியப்பாவிற்கு அடியளவு

459. ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிர மாகும் இழிபுமூன் றடியே.

(இ-ள்) ஆசிரியப்பாவின் அடியளவு சிற்றெல்லை மூன்றடி பேரெல்லை ஆயிரம் அடியாகும். இடைப்பட்ட அடியானும் வரும்.

(எ.கா) "நீல மேனி வாலிழை பாகத்
தொருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே" (ஐங்குறு. கடவுள் வாழ்த்து)

என்பது மூன்றடியான் வந்த ஆசிரியப்பா.

பத்துப்பாட்டுகளுள் ஒன்றான மதுரைக்காஞ்சி 782 அடியான் வந்த ஆசிரியப்பா. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் நீண்ட அளவிலான ஆசிரியப்பாக்கள் உள்ளன.

**வஞ்சிப்பாவிற்கு அடியளவு**

தொல்காப்பியர் வஞ்சிப்பாவிற்கு அடிவரையறையினைத் தனியாகக் குறிப்பிடவில்லை. "ஆசிரிய நடைத்தே வஞ்சி" (104) என்று கூறுவதைக் கொண்டு வஞ்சிப்பாவிற்கும் ஆயிரம் அடிப்பேரெல்லை கொள்ளப்படும் என்பர் இளம்பூரணர்.

பத்துப்பாட்டுகளுள் பட்டினப்பாலை, கூத்தராற்றுப்படை ஆகியவற்றுள் வஞ்சியடிகள் மிகுதியாக வந்துள்ளன.

### வெண்பாவிற்கு அடியளவு

460. நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே
குறுவெண் பாட்டிற் களவெழு சீரே.

(இ-ள்) நெடுவெண் பாட்டிற்குப் பேரெல்லை பன்னிரண்டு அடி குறுவெண்பாட்டிற்குச் சிற்றெல்லை ஏழு சீராகும்.

நெடுவெண்பாட்டு - **பஃறொடை வெண்பா**. குறுவெண் பாட்டு - **குறள் வெண்பாவும் சிந்தியல் வெண்பாவும்**. அவற்றுள் குறள் வெண்பாவே அளவில் சிறிதாகலின் அஃது எழுசீரான் வரப்பெறும். அஃதாவது இரண்டடி முதலடி நான்கு சீர், இரண்டாம் அடி மூன்று சீர் ஆக ஏழுசீர். குறுவெண்பாட்டின் பெருமைக்கு எல்லை மூன்று அடி. மூன்றடியான் வருவது சிந்தியல் வெண்பா எனப்படும்.

நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு என்றமையான் அவற்றின் இடைப்பட்ட ஒத்த அளவினதாகிய பாட்டும் உளதென்பது பெறப்படும். அ∴து **அளவியல் வெண்பா** எனப்படும். அளவியல் வெண்பா நான்கடியான் வரும்.

நான்கடியின் மேற்பட்டவை நெடுவெண்பாட்டு (ப∴றொடை வெண்பா) எனப்படும். எனவே நெடுவெள்பாட்டிற்குச் சிற்றெல்லை ஐந்தடி என்பதும், பேரெல்லை பன்னிரண்டு அடி என்பதும் தெளிவாகின்றது.

(எ.கா) ‘ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகளைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்” (குறள் -69)

இது குறன் வெண்பா.

“அறிந்தானை யேத்தி அறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செல்வ னுரைப்பச் - சிறந்தார்
செறிந்தமை யாராய்ந்து கொண்டு” (யாப்.வி.ப.226)

இது சிந்தியல் வெண்பா.

“அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை” (நீதிநெறி. விளக். - 2)

இது அளவியல் வெண்பா.

“பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானை நன்றென்றாளும் அந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருந்தார்நன் றென்றேன் தீயேன்” (யாப்.வி.பக். 237)

இது ப∴றொடை வெண்பா.

**அங்கதப்பாட்டிற்கு அடியளவு**

461. அங்கதப் பாட்டளவு அவற்றோடு ஒக்கும்.

(இ-ள்) அங்கதப் பாட்டாகிய வெண்பாவுக்கு அளவு முற்கூறிய வெண்பா அளவினை ஒக்கும்.

அ∴தாவது சிற்றெல்லை இரண்டு அடியும் பேரெல்லை பன்னிரண்டு அடியும் பெற்றுவரும்.

(எ.கா) இருமர் மணிவிளக்கத் தேழிலோர் கோவே
குருடேயு மன்றதின் குற்றம் - மருடீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்(டு)
ஒட்டைச் செவியும் உள.

இது நான்கடியான் வந்த அங்கதப் பாட்டு,

### பாட்டு வகைகளில் அடிவரையறை இல்லாதன

462. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகைநிலை மரபின் அடியில என்ப.

(இ-ள்) கலிவெண்பாட்டு, கைக்கிளைச் செய்யுள், செவியும் வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து என்று சொல்லப்படும் பாட்டு வகைகள் அடிவரையில்லாத மரபினையுடையன என்பா்.

எனவே இவை பொருள் முடியுங்காறும் வேண்டிய அடிகள் பாடப்பெறும் என்றவாறு.

### மருட்பாவினால் பாடப்பெறும் செய்யுட்கள்

463. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

(இ-ள்) புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியுறை வாழ்த்து என்னும் மூன்று திறப்பட்ட செய்யுட்களும் ஆராயின், வெண்பா தொடங்கி ஆசிரியப்பாவினால் சிறப்புற முடியும் இயல்பின என் கூறுவா்.

இவ்வாறு முடிவதனை ‘மருட்பா’ என வழங்குவா்.

### பரிபாடலின் அடியளவு

464. பரிபா டல்லே நாலீ ரைம்பது உயா்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.

(இ-ள்) பாடாளது இருத்தைந்தடி சிற்றெல்லையும் நானுறடிப் பேரல்லையும் பெற்றுவரும்.

(நாலீரைம்பது - நானூறு)

எனவே இடைப்பட்ட அடியானும் வரப்பெறும் என்றவாறு.

### பாக்களின் அடியளவு மேற்கூறியபடி வரும்

465. அளவியல் வகையே அனைவகைப் படுமே.

(இ-ள்) பாக்களுக்கான அடியளவு மேற்கூறிய வலையில் அமையும்.

### அடிவரையறை இல்லாத செய்யுட்கள்

எழுவகை யாப்புகளில் பாட்டின் இலக்கணமும் அடியளவும் கூறினாா். இனி அடியளவில்லாத யாப்பு வகைகள் குறித்து விளக்குகின்றாா்.

### எழுவகை யாப்புகளில் அடிவரையறை இல்லாதன ஆறு

466. எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்

அடிவரை இல்லன ஆறெனு மொழிப.

(இ-ள்) எழுவகைப்பட்ட யாப்பின் இயல்பினை ஆராய்ந்தால், அவற்றுள் அடி வரையறை இல்லாதன ஆறுவகையென மொழிவர்.

**எழுவகை யாப்பாவன:**

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி. அங்கதம், முதுசொல் என்பன இவற்றுள் பாட்டு நீங்கலாக ஆறுவகை யாப்பும் அடிவரை இல்லாதனவாம்.

## அடிவரையறை இல்லாத அறுவகை யாப்புகள்

467. அவைதாம்

நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான.

(இ-ள்) அடி வரையறை இல்லாத யாப்பு வகை ஆறு, அவையாவன: நூல், உரை, புதிரொடு கூடிய பிசி (விடுகதை), ஏதுவைக் காட்டிப் பொருளை விளக்கும் முதுமொழி, மறைமொழியாகக் கிளக்கப்படும் மந்திரம், கூற்றிடையே வைத்த குறிப்புமொழி (அங்கதம்) என்பனவாம்.

பிசியெனினும் விடுகதையெனினும் ஒக்கும் முதுமொழிவெனினும் பழமொழியெனினும் ஒக்கும். மந்திரமெனினும் வாய்மொழியெனினும் ஒக்கும். அங்கதம் எனினும் சொற்குறிப்பு (குறிப்பு மொழி) எனினும் ஒக்கும். 'குறிப்பு மொழி' என்றமையால் அது செம்பொருள் ஒழித்துப் பழிகரப்பினைக் குறித்து நின்றது.

## நூல் யாப்பின் இலக்கணம்

468. அவற்றுள்,

நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

(இ-ள்) (மேற்கூறிய யாப்பு வகைகளுள்) நூல் என்பது, சொல்ல எடுத்துக்கொண்ட பொருள் தொடக்கம் முதல் முடிவுவரை மாறுபாடில்லாமல் தொகையினும் வகையினும் விளக்கிக்காட்டி,

அதனகத்து அடங்கிய பொருளினை விரித்துரைத்தற்கேற்ற சொல்லமைப்போடு பொருந்தி நுண்ணிதாக உணர்த்துதல் அதன் பண்பாகும்.

நுண்ணிதின் உணர்த்தலாவது நோக்குப்படச் சுருங்கிய சொல்லான் உணர்த்துதல்.

**நூல் நான்கு வகைப்படும்**

469. அதுவே தானும் ஒருநால் வகைத்தே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நூல் நான்கு வகைப்படும்.

**நூலின் வகைகள்**

470. ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஒத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படங்கிய பிண்டத் தானும் என்று
ஆங்கனை மரபின் இயலும் என்ப.

(இ-ள்) ஒரு பொருளைக் குறித்து வரும் சூத்திரம், இனமாகிய பொருள்களின் தொகுப்பாகிய ஒத்து, இனங்கள் பலவற்றுக்கும் பொதுவாகிய படலம், இம்மூன்று உறுப்புகளையும் தன்னகத்தே கொண்ட பிண்டம் (முழுப்பொருள்) என்று நான்குவகை மரபினால் அமைந்தது நூல் எனப்படும்.

ஒத்து - இயல், படலம் - அதிகாரம்

சூத்திரம் என்னும் ஒருறுப்படங்கிய நூலுக்கு எடுத்துக்காட்டு **இறையனார்க்களவியல்**. (இது 60 சூத்திரங்கள் மட்டும் உடையது)

சூத்திரமும் ஒத்தும் என்னும் ஈருறுப்புடங்கிய நூல் **பன்னிருபடலம்**.

சூத்திரம், ஒத்து, படலம் என்னும் மூன்றுறுப்பு அடங்கிய பிண்டத்துக்கு எடுத்துக்காட்டு **தொல்காப்பியம்**.

**சூத்திரம்**

471. அவற்றுள்,
சூத்திரம் தானே ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நூல்வகைகளுள் சூத்திரம் என்பது கண்ணாடியின் நிழல்போல, ஆராய்தலின்றிப் படித்தவுடன் பொருள் நன்றாக விளங்கும்படி யாப்பின் கண்ணே தோன்ற யாக்கப்படுவதாகும்.

எ.கா) "எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்ப.:. தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" (தொல். எழுத்து -1)

என வரும்.

**ஒத்து**

472. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.

(இ-ள்) மணிகளில் ஒத்த இனங்களை ஒருங்கே வரிசைப்படுத்தி வைத்தாற்போல ஓரினப் பொருளை ஒருசேர வைப்பது ஒத்து உயர்மொழிப்புலவர் கூறுவர்.

ஒத்து - இயல்

(எ.கா) வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு என்றாற்போல வருவன.

**படலம்**

473. ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

(இ-ள்) ஓரினமாகிய நெறியின்றி பலநெறியான் விரவி வந்து பொருளால் பொதுமொழித் தொடர்புற அமையின் அது படலம் எனப்படும்.

படலம் - அதிகாரம்

(எ.கா) **பொருளதிகாரம்** (அகத்திணையியல், புறத் திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பது இயலுக்கும் பொதுமொழி 'பொருளதிகாரம்' எனப் பெயர்)

**பிண்டம்**

474. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவர் அது பிண்டம் என்ப.

(இ-ள்) சூத்திரம், ஒத்து, படலம் என்னும் மூன்று உறுப்புக்களையும் உள்ளடக்கிய தன்மைத்தாய் வருவதனைத் தொன்மொழிப் புலவர் பிண்டமெனக் கூறுவர்.

(எ.கா) **தொல்காப்பியம்** - இது 1602 சூத்திரம், 27 ஒத்து (இயல்) மூன்று படலம் (அதிகாரம்) ஆகியவற்றின் பிண்டமாகத் திகழ்கின்றது.

**உரையாப்பின் இலக்கணம்**

உரையின் வகை

475. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைவகை நடையே நான்கென மொழிப.

(இ-ள்) **பாட்டிடை வைத்த குறிப்பாவது –** பாட்டினிடையே வைக்கப்பட்ட உரைக்குறிப்புகள்.

(எ.கா) 'ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்' என்னும் குறிஞ்சிக் கலியுள்.

"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து" (கலி - 56) என்றது உரைக்குறிப்பு.

"கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார்அர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோவிலுட்
காலை முரசம் கனைகுரல் இயம்புமாதலின்
நெய்ம்முறை நமக்கின் றாகுமென
ஐயைதன் மகளைக்கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமு தமகள் வந்துதோன்றுமன்" (சிலப். ஆய்ச்சியர்க் குரவை)

என்பதும் உரைக்குறிப்பு. சிலப்பதிகாரத்தில் இத்தகைய உரைக்குறிப்பினை நூல்முழுவதும் பரக்கக் காணலாம். அதனால் அது 'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப்படுகின்றதும் அறியலாம்.

**பாவின் றெழுந்த கிளவி** என்பது - பாக்கள் அல்லாது தோன்றும் சொல்வகை. அஃதாவது உலக வழக்கில் ஒரு பொருளைக் குறித்து நிகழ்த்தும் உரையாடல்.

**பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி** என்பது - பொருள் தொடர்பில்லாத பொய்ம்மொழி. அஃதாவது ஒருவர் துன்பத்தில் இருக்கும்போது அவர் கவனத்தைத் திசைதிருப்புதற்காகக் கட்டியுரைத்தல்.

(எ-கா) நெடுநல்வாடையில் தலைவனைப் - பிரிந்திருக்கும் தலைவியை ஆற்றுவித்தற்காகச் செவிலியர் ஒன்றுகூடிச் சிறியவும் பெரியவுமான கதைகள் உரைத்ததாக அறியலாம். அதனை,

"செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்

குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி”  (நெடுநல். 153-154)

என்னும் அடிகள் உணர்த்தக் காணலாம்.

**பொருளொடு புணர்ந்த நகைமொழி** என்பது - பொருளோடு கூடிய நகைமொழி அஃதாவது ஒருவரிடத்துக் குற்றம் கண்டபொழுது அவரைத் திருத்துதற்காகக் கூறப்படும் நகைமொழி.

(எ.கா) “வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூக்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே”

என்பது மடலேறுவல் என்ற தலைவனுக்குத் தோழி நகைத்தோன்ற கூறியது. (உயிர்களிடத்து அன்புடையீராதலின் மடலேறமாட்டீர் என்பது)

**உரை இரண்டு வகைப்படும்**

476. அதுவே தானும் இருவகைத் தாகும்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உரை யாப்பானது கதை கூறும் திறத்தால் இரண்டு வகைப்படும். அவை: மகளிர்க்கு உரைப்பனவும், மைந்தர்க்கு உரைப்பனவும் ஆகும்.

**பொய்ம்மொழியும் நகைமொழியும் உரைத்தற்குரியார்**

477. ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

(இ-ள்) மகளிர்க்கு உரைக்கும் பொய்ம்மொழி (கட்டுக்கதை) செவிலிக்குரியது. மைந்தர்க்கு உரைக்கும் நகைமொழி எல்லார்க்கும் உரியது.

‘எல்லார்க்கும்’ என்றது தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன். பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர். கண்டோர் என்னும் வாயிலோரைக் குறித்து நின்றவாறு.

**பிசி அல்லது விடுகதை**

478. ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே.

(இ-ள்) ஒப்புமைத் தன்மையோடு பொருந்திய உவமைப் பொருளும். சொல்லப்படும் சொல்லினால் துணியப்படும் பொருளும் என்று பிசி இரண்டு வகைப்படும்.

(எ.கா) “அச்சுபோல் பூப்பூக்கும் அமலேயன்ன காய்காய்க்கும்”

விடை : **பூசணிக்காய்**

“கத்திபோல் இலையிருக்கும் கவரிமான் பூப்பூக்கும்”

விடை : **வேம்பு**

இவை ஒப்பொடு புணர்ந்த உவமமாய் வந்தன.

“நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடு நீரிற் காக்கை”

விடை : **நெருப்புத் துண்டு**

(செய்யான் - சிவந்த நிறமுடையவன்)

இது தோன்றுவது கிளந்த துணிவாகி நின்றது.

## முதுமொழி (பழமொழி)

479. நுண்மையும் சுருக்கமும் ஒளியு முடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

(இ-ள்) நுண்மை சுருக்கம், ஒளியுடைமை, மென்மை இலக்கணங்கள் அமையுமாறு தோன்றிக் கருதிய பொருணை முடித்தற்கு வரும் காரணத்தைக் குறித்த சொல் முதுமொழி என்பர்.

நுண்மை - நுட்பமுடைமை, ஒளியுடைமை - அறிவுத்தெளி, மென்மை - எளிமை. ‘ஏது நுதலிய’ என்றது பழமொழியைக் காரணம் காட்டி உண்மையை விளக்குதல் ஆகலான்.

(எ.கா) “பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்ப்பரோ?”

என்னும் பழமொழி, களவில் புணர்ந்த தலைவன் பிரிவினால் தலைவியின் உடல்வாட அவ்வாட்டத்தின் உண்மைக் காரணத்தை அறியாத செவிலி ‘இது தெய்வத்தான் வந்தது’ எனக் கருதி வெறியாட்டெடுத்த செய்தியைப் பழித்துரைப்பதாய் அமைகின்றது.

## மந்திரம் அல்லது வாய்மொழி

480. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.

(இ-ள்) நிறைந்த மொழியினையுடைய மாந்தர் தமது ஆணையாற் சொல்லப்பட்ட மறைந்தசொல் மந்திரம் எனப்படும்.

**நிறைமொழி மாந்தர்** - நிறைந்த மொழியினையுடைய மாந்தர். உள்ளத்தாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மையுடைய மாந்தர். உள்ளத் தூய்மையுடையவரே சொல்லினும் செயலினும் தூய்மையுடையவராயிருப்பர் என்பது உலக நியதி.

**ஆணை** - ஏவல். நிறைமொழி மாந்தர் ஒன்றைப் பார்த்து ஆணையிட அஃது அவர்க்கு அந்நொடியே பணியும் என்பது நிதரிசனம்.

**முறைமொழி** - மறைந்து நின்ற சொல். அ∴தாவது எளிதில் வெளிப்படாத ஆனால் தேவை வரும்போது மட்டும் வெளிப்பட்டுப் பயனை விளைவிக்கும் சொல் மந்திரம் எனப்படும். இதனைத் தமிழ் மந்திரம் எனவும், வாய்மொழி எனவும் வழங்குவர்.

கற்புக்கரசியர், முனிவர், அரும்பொருள் ஆயும் அந்தணர், அறநெறியாளர், துறவியர் ஆகியோர் வாய்ச்சொற்கள் மந்திரமாகிப் பயனளிக்க வல்லவை.

திருமூலரின் திருமந்திரம் படிப்பவர்க்குப் பதி, பசு, பாசங்களின் இயல்புகள் அறியத்தோன்றி உறுதி பயத்தலின் 'தமிழ் மந்திரம' எனப்படுகின்றது. அவ்வாறே திருவருட்பா. திருவாய்மொழி. திருமுருகாற்றுப்படை போன்றவையும், திருக்குறள் போன்ற அறநூல்களும் மந்திரமாகப் போற்றப்படுகின்றன .

**குறிப்புமொழி அல்லது அங்கதம்**

481. எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே.

(இ-ள்) எழுத்தும் சொல்லும் உணர்த்தும் பொருளோடு பொருந்தாது அப்பொருளின் புறத்தே வேறொரு பொருள் தோன்றுமாறு மொழியப்படுவது குறிப்புமொழி அல்லது அங்கதம் எனப்படும்.

மேல் அங்கதம் (செய்- 120) என்று சொல்லி ஈண்டு குறிப்புமொழி என்றதனால் இச்சொல் வசை குறித்து வரும் என்பர் இளம்பூரணர்.

(எ.கா) "எழுபதை எட்டியும் எட்டுமுழ வேட்டிகட்டி
இன்னும் பதினாறு வயது பருவத்தீர்"

என்றவழி 'இன்னும் பெண் கொடுப்பாரின்றி அலைகின்றீர்' எனக் குறிப்பினால் வசை மொழிதலாயிற்று.

**நாட்டுப்புற இலக்கியம்**

இசைப்பாடல் வகை - பண்ணத்தி

482. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே.

(இ-ள்) பாட்டின்கண் கலந்த பொருளை உடைத்தாகிப் பாட்டுக்களின் இயல்பையுடையன பண்ணத்தி என்னும் செய்யுட்களாம்.

பண்ணை உடையது பண்ணத்தி எனப்படும். இளம்பூரணரும் 'பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி என்றார்' என்பர்.

'பாட்டின் இயல' என்றதனால் பாட்டினைப் போல பண்ணும் அடியளவும் கொண்டவை இவையென்பது விளங்கும். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலான இசைத்தமிழ் நூல்களில் ஓதப்படுவன என்பர் இளம்பூரணர்.

'பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி' என்பர் பேராசிரியர். "எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப்

பொருள்களைப் பண்ணத்தி என்ப" என்பது. அவையாவன: நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும், மோதிரப்பாட்டும், கடகண்டும் முதலாயின" என அவர் மேலும் விளக்கிக் கூறுவர்.

**பிசியினது இயல்பை உடையது பண்ணத்தி**

483. அதுவே தானும் பிசியொடு மானும்.

(இ-ள்) பண்ணத்தியானது பிசியினது தன்மையைப் பெற்று வருதலும் உண்டு.

பிசியானது இரண்டடி அளவினதாய் வருதலின் பண்ணத்தியும் இரண்டடியான் வருதலும் உண்டு.

(எ-டு) "கொன்றை வேய்ந்த செல்வன் அடியை
என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே"

இது பிசியினது அளவையொத்து இரண்டடியான் வந்த பண்ணத்தி.

**அடிநிமிர் பாட்டு அல்லது பாவினம்**

484. அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினும் கடிவரை யின்றே.

(இ-ள்) நாற்சீரடியின் மிக்கு வரும் பாட்டுவகை பன்னிரண்டாகும். அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவும் கொள்ளப்படும்.

'நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே' (செய் - 31)

என்றமையான், நாற்சீரடியின் மிக்கு வருவதனையும் இருசீரடி முதலிய எல்லா அடிகளானும் மூன்றடிச் சிறுமையாக ஏறி வருவனவற்றையும் 'அடிநிமிர் பாட்டு' என வேறு பெயர் கொடுத்துக் கூறினார்.

அடிநிமிர் பாட்டினைப் **பாவினம்** என வழங்குவர். அது பன்னிரண்டு வகைப்படும்.

**பாவினம் பன்னிரண்டு**

ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும் தாழிசை, துறை, விருத்தம் என்ற மூன்றினையும் உறழப் பாவினம் பன்னிரண்டாகும்.

**தாழிசை** நான்கு - ஆசிரியத் தாழிசை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என்பன.

**துறை** நான்கு - ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என்பன.

**விருத்தம்** நான்கு - ஆசிரிய விருத்தம், வஞ்சி விருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என்பன.

**ஆசிரியத் தாழிசை**

ஆசிரியத் தாழிசையாவது மூன்றடி ஒத்து வருவது. அவ்வழி ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடைத்தென்று கூறுவர்.

(எ-டு) "நீடற்க வினையென்று நெஞ்சின் உள்ளி

நிறைமலர்ச்சாந் தொடுபுகையும் நீரும் ஏந்தி
வீடற்குந் தன்மையின் விரைந்து சென்று
விண்ணொடு மண்ணிடை நண்ணம் பெற்றி
பாடற்கும் பணிதற்கும் தக்க தொல்சீர்ப்
பகவன்றன் அடியிரண்டும் பணிது நாமே” (யாப்.வி.ப. 264)

என்பது மூன்றடி ஒத்து வந்தது. அளவடியின் மிக்கு வந்தவாறு காணலாம்.

“கன்று குணிலாக் கனியுதிர்ந்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி:

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி:

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.” (சிலப். ஆய்ச்சி)

என்பது மூன்றடியான் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை.

**வஞ்சித்தாழிசை**

வஞ்சித் தாழிசையாவது குறளடி நான்கினால் ஒருபொருள் மே மூன்றடுக்கி வருவது.

(எ-டு) மடப்பிடியை மதவேழந்
தடக்கையால் வெயில்மறைக்கும்
இடைச்சுரம் இறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்;

இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்
அருஞ்சுரம் இறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்;

பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயில்மறைக்கும்
காடகம் இறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண். (யாப். வி. ப. 24)

என வரும்.

இவை மூன்றடுக்கி வரினும் அளவடியின் வாராமையால் கொச்சகவொருபோகு ஆகாமை அறியலாம்.

**வெண்டாழிசை**

சிந்தியல் வெண்பா ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவதனை வெண்டாழிசை என்பர்.

எ -டு) "அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல் ;

ஏடி அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்;

பாவாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்" (யாப். வி. ப. 244)

என வரும்.

**கலித்தாழிசை**

கலித்தாழிசையாவது அடிவரையறையின்றி ஒத்து வந்து ஈற்றடி சில சீர் மிக்கும் குறைந்தும் வருவது.

(எ-டு) "வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்திங்காள்
கேள்வரும் போழ்தின் எழாதாய்க் குறாஅலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்திங்காள்" (யாவ்.வி.ப. 330)

என வரும்.

இது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருங்காலும் ஈற்றடி நாற்சீரின் மிக்கு வருதலால் கொச்சக ஒருபோகாகாது கலித்தாழிசையெனவே படும்.

**ஆசிரியத் துறை**

நான்கடியாய் இடையிடை சீர்குறைந்து வருவது ஆசிரியத்துறை எனப்படும்.

(எ-டு) "கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்உள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி அகன்று போக
நரையுருமே றுங்கை வேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுதல் அஞ்சுதும் வாரலையோ" (யாப்.வி.ப. 265)

என வரும். இதன்கண் மூன்றாமடி சீர் குறைந்து வந்து ஆசிரியத்துறை ஆயிற்று.

**வஞ்சித்துறை**

குறளடி நான்கினால் தனித்து வருவது வஞ்சித்துறை எனப்படும்.

(எ-டு) முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய் குருத்தீன்றன

மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் வரவுகாண்குமே”

என வரும்.

**வெண்டுறை**

மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சீர்குறைந்து வருவது வெண்டுறை எனப்படும்.

(எ-டு) “குழலிசைய வண்டினங்கள் கோளிலைய செங்காந்தட் குலைமேல் பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்” (யாப்.வி.ப. 246)

என வரும். இதன்கண் இறுதியடிகள் சீர்குறைந்து வந்துள்ளமை காணலாம்.

**கலித்துறை**

கலித்துறையாவது நெடிலடி நான்கினால் வருவது. அஃதாவது ஐஞ்சீரான் வருவதும், பதினாறும் பதினேழும் எழுத்துப் பெற்று நான்கடியான் வருவனவுமாம்.

(எ-டு) “யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையும் எல்லாம் கரியன்றே” (யாப். வி. ப. 332)

என்பது ஐஞ்சீரான் வந்த நெடிலடி. இது நேரசை முதலாகிப் பதினாறு எழுத்தான் வந்தது.

“கனிய நினைவொடு நாடொறுங் காதல் செயுமடியார்க்
கினிய னவனொரு வின்னாங் கிலமெவ ரும்வணங்கப்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே” (மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை - 20)

என்பது நிரையசை முதலாகி பதினேழு எழுத்தான் வந்த நெடிலடி.

**ஆசிரிய விருத்தம்**

அறுசீரடி முதலாகிய மிக்க அடியினான் நான்கடியும் ஒத்து வருவது ஆசிரிய விருத்தமாகும்.

(எ-டு) “இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள் எனப்பெயர்
இனவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புகொண் டெதிர்ந்தெழ
நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு

பொருதல தவியாதே”                (சூளாமணி. குலியாண - 51)

என வரும். இதன்கண் நான்கடியும் அறுசீரான் வந்தவாறு காணலாம்.

**வஞ்சி விருத்தம்**

முச்சீரடி நான்காகி வருவது வஞ்சி விருத்தமாகும்.

(எ-டு) “இருது வேற்றுமை இன்மையால்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேல்தடங் கையினாய்”(சூளாமணி. சீயவதை. 170)

என வரும்.

**வெளிவிருத்தம்**

நான்கடியானாயினும் மூன்றடியானாயினும் அடிதோறும் தனிச்சொல் பெற்று வருவது வெளிவிருத்தமாகும்.

(எ-டு) ஆவா என்றே அஞ்சினா் ஆழ்ந்தாா் - ஒரு சாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டாா் - ஒரு சாரார்
மாமா வென்றே மாய்ந்தனா் நீந்தாா் - ஒரு சாரார்
ஏகிா் நாய்கீா் என்செய்தும் என்றாா் - ஒரு சாரார்

என வரும்.

**கலி விருத்தம்**

நாற்சீரடி நான்கினால் வருவது கலிவிருத்தமாகும்.

(எ-கா) “தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
வேம்பழுத் தளித்தன சுளையும் வேரியம்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே” (சூளாமணி.நகர.14)

என வரும்.

**இளம்பூரணா் கருத்து**

ஆசிரியா் இளம்பூரணா் ‘பண்ணத்தி எனினும் பாவினம் எனினும் ஒன்றே’ எனக் குறிப்பிடுவா். மேல் ‘பாட்டின’ இயல பண்ணத்தி என்றமையான், இவையும் பாட்டினைப் போல பண்ணும் அடியளவும் கொண்டு இலங்குதலானும் இசைப்பாடல்களில் அதிகம் பயின்று வருதலானும் அவா் அவ்வாறு கூறியிருப்பாா் எனலாம்.

**அளவியல் குறித்த முடிவான கருத்து**

485. கிளரியல் வகையில் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே.

(இ.ள்) இங்குக் கூறப்பட்ட வகையினால் சொல்லப்பட்டனவற்றை ஆராயுங்காலத்து அளவியல்வகை மேற்கூறியவாறு பாகுபடும்.

**அளவியல் பாகுபாடு அமையுமாறு கருத்து**

செய்யுளாவது அடிவரையறையுள்ளனவும் அடிவரையறை இல்லனவுமென இருவகைப்படும். அவற்றுள் அடிவரையறை உள்ளன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்னும் நால்வகைப் பாக்களும். தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களும் ஆகும். அடிவரையறை இல்லாதன நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்புமொழி என்னும் அறுவகை யாப்புகளும் ஆகும்.

**திணை**

486. கைக்கிளை முதலா எழுபெருந் திணையும்
முற்கிளந் தனவே முறையி னான.

(இ.ள்) திணையாவது கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என முறைமையினால் முன்பு கூறப்பட்ட ஏழுமாகும்.

**திணை** என்பது ஒழுக்கம். செய்யுளில் காணப்படும் அகம், புறம் என்னும் மக்கள் ஒழுகலாறுகளை அறிதற்குக் கருவியாய் இருப்பது திணை எனப்படும்.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாகவுள்ள ஏழும் அகத்திணை எனப்படும். அது.

"கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (அகத்.1)

என்னும் அகத்திணையியல் நூற்பாவான் அறியலாம்.

முற்கூறப்பட்ட முறைமையெனவே அகத்திணையைச் சார்ந்து பிற்கிளக்கப்பட்ட புறத்திணை ஏழும் கொள்ளப்படும். அவையாவன: :

| | | |
|---|---|---|
| கைக்கிளைப் புறம் | - | பாடாண் திணை |
| முல்லைப் புறம் | - | வஞ்சி |
| குறிஞ்சிப் புறம் | - | வெட்சி |
| பாலைப் புறம் | - | வாகை |
| மருதப் புறம் | - | உழிஞை |
| நெய்தற் புறம் | - | தும்பை |
| பெருந்திணைப் புறம் | - | காஞ்சி |

இவற்றை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என வரிசைப் படுத்தி உரைப்பர்.

எனவே அகத்திணை ஏழும் புறத்திணை ஏழுமாகத் திணை பதினான்கு வகைப்படும் என்பது.

**கைகோள் வகை**

களவு

487. காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்

பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென் றாங்கநால் வகையினும் அடைந்த
சார்வோடு மறையென மொழிதல் மறையோர் ஆறே.

(இ-ள்) இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற நான்கு வகையானும் அவற்றைச் சார்ந்து வருகின்ற கிளவியானும் வருவன களவென்று கூறுதல் மறையோர் நெறியாகும்.

**இயற்கைப் புணர்ச்சி**யெனினும் காமப்புணாச்சியெனினும் ஒன்றே அ∴து ஒத்த தலைவனும் தலைவியும் தாமே கூடும் கூட்டம்.

**இடந்தலைப்பாடாவது**, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து மீண்ட தலைவன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று தலைவியை எதிர்ப்படுதலாகும்.

**பாங்கற்கூட்டமாவது**, தலைவன் தலைவியை அடையப் பாங்கன் துணைநிற்றல்.

**தோழியிற் கூட்டமாவது**, தலைவன் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகத் தலைவியைக் கூடுதல்.

**கற்பு**

488. மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

(இ-ள்) மறைந்தொழுகும் ஒழுக்கமாகிய களவு வெளிப்படுதலும், களவொழுக்கமின்றித் தலைவியின் பெற்றோர் கொடுப்பக் கொள்தலும் என்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது, மகிழ்தலும் புலத்தலும் ஊடலும் ஊடல்தீர்த்தலும் பிரிதலும் என்று இவற்றொரு கூடி நடைபெறுவது கற்பென்னும் ஒழுக்கமாகும்.

**கற்பு** என்பது மணவாழ்வு அ∴தாவது கருத்தொருமித்துக் களவின்கண் கூடி இன்புற்ற காதலர் இருவரும் பலரும் அறிய மணந்து வாழும் வாழ்க்கை.

களவு வெளிப்பட்டபின் வரைதல், களவு வெளிப்படுமுன்பே வரைதல் என்று திருமணம் இரண்டு வகைப்படும். தலைவனும் தலைவியும் நிகழ்த்தும் களவொழுக்கம் பிறரறிய வெளிப்பட்டது என்ற எண்ணம் தலைவிக்கும் தோழிக்கும் ஏற்பட்டபின் தலைவன் தலைவியை மணந்து கொள்வது **வெளிப்பட வரைதல்** எனப்படும்.

களவொழுக்கம் பிறரறிய வெளிப்படா முன்பே தலைவியின் பெற்றோர் கொடுப்பத் தலைவன் தலைவியை மணந்து கொள்வது **வெளிப்படாமை வரைதல்** எனப்படும். இவ்விருவகை மணத்திற்கும் கரணம் இன்றியமையாதது என்பதனால் இயல்நெறி திரியாது என்று கூறினார். தமர் - பெற்றோர், பெற்றோர் இல்வழி ஆசிரியரும், மாமனும், சான்றோரும், தெய்வமும் மகட்கொடை வழங்குதற்குரியவர் ஆவர்.

மகிழ்ச்சியும் புலவியும் ஊடலும் உணர்த்தலும் பிரிவும் கற்பு வாழ்க்கையில் மாறிமாறி நிகழ்ந்து கொண்டேயிருப்பவை. **மகிழ்தல்** - இல்லொழுக்கம், புணர்ச்சி முதலியவற்றால் மகிழ்ச்சியடைதல். **புலவி** - இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது வெறுக்கக் கருதியவழி ஒருவரையொருவர் கோபம் கொண்டவர்போல ஒழுகுதல். **ஊடல்** - புலவியின் முதிர்ச்சி ஊடல்

எனப்படும். **உணர்வு** - ஊடல் உணர்த்தல். அதாவது தலைவன் தன்னில் தவறில்லை என்பதை எடுத்துக்கூறி தெளித்தல். **பிரிவு** - பொருளுக்காவது, பரத்தையிடத்தாவது, ஓதல் முதலியவற்றிற்காவது தலைவன் தலைவியை விடுத்துச் செல்லுதல்

**கைகோள் என்பது மேற்கூறப்பட்ட இரண்டும் ஆகும்.**

489. மெய்பெறும் அவையே கைகோள் வகையே.

(இ-ன்) செய்யுட்களில் பொருள்பெற வருகின்ற களவு, கற்பு என்னும் இவ்விரண்டுமே கைகோள் வகைகளாகும்.

**கூற்று**

களவின்கண் கூற்று நிகழ்த்தற்கு உரியவர்

490. பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு
அளவியல் மரபின் அறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரியவர் என்ப.

(இ-ள்) பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, சிறப்புமிகு தலைவன், தலைவி என்று சொல்லப்பட்ட கலந்தொழுகும் மரபினையுடைய அறுவகையோரும் களவொழுக்கத்தின்கண் கூற்று நிகழ்த்தற்கு உரியவராவர்.

கலந்தொழுகுதல் - ஒருவரை யொருவர் மனம்விட்டுப் பேசுதல் கிளவி கூற்று.

**பார்ப்பான் -** உயர்ந்த குலத்தானாகிய தோழன், பாங்கன் ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானுமாகிய தோழன்.

**கற்பின்கண் கூற்று நிகழ்த்தற்கு உரியவர்**

491. பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

(இ-ள்) களவின்கண் இன்றியமையாச் சிறப்பினையுடைய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என்னும் அறுவரோடு பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்றும் அறுவரையும் கூட்டி, பன்னிருவரும் தொன்று தொட்டு வரும் மரபினால் கற்பொழுக்கத்தின்கண் கூற்று நிகழ்த்தற்கு உரியவராவர்.

**பிறர் எடுத்து மொழிதலல்லது தாமே கூறா மரபினவர்**

492. ஊரும் அயலும் சேரி யோரும்
நோய்மருங் கறிநரும் தந்தையும் தன்ஐயும்
கொண்டெடுத்து மொழியப் படுதல் அல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்.

(இ-ள்) ஊரிலுள்ளாரும், அயல்மனையில் உள்ளாரும், சேரியிலுள்ளாரும், காமநோயின் கடுமையைக் குறிப்பால் அறிவாரும், தந்தையும், தமையனும் ஆகிய இவர்கள் கூற்றாகப் பிறர் எடுத்து மொழிதவல்லது தாமே கூறினாராகச் செய்யுள் செய்தல் இல்லை.

காமநோயின் தன்மையைக் குறிப்பால் அறிபவர்- வேலன் கட்டுவிச்சி முதலானோர்.

(எ-டு) "எந்தையும்
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்" (அகம் - 12)

என்பது தந்தை கூற்றாகத் தோழி கூறியது.

**தலைவனோடும் தலைவியோடும் நற்றாய்**
**கூற்று நிகழ்த்தல் இல்லை**

493. கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.

(இ.ள்) தலைவனோடும் தலைவியோடும் நற்றாய் கூற்று நிகழ்த்துதல் முற்றிலும் இல்லையாகும். எனவே நற்றாய் ஏனையோரை நோக்கியே கூறுவாள் என்பதாகும்.

**நற்றாய் முதலானவருடனும், தலைவன்**
**தலைவியுடனும் கண்டோர் கூற்று நிகழ்த்துவர்.**

494. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

(இ-ள்) அழகிய நொடியணிந்தவரான நற்றாய், தோழி, செவிலி முதலிய மகளிரோடும், தலைவனோடும், தலைவியோடும் வழயின்கண் கண்டோர் கூற்று நிகழ்த்துதல் கண்டதாகும்.

எனவே ஏனையோருடன் அவர் கூற்று நிகழ்த்துதல் இல்லையாகும்.

**சுரவழியிடையே தலைவன் தலைவியை உறுதி கூறற்கும் உரியன்**

495. இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன்.

(இ-ள்) உடன்கொண்டு செல்லுங்கால் சுரவழியிடையே தலைவன் தலைவியை உலகவழக்கு நெறியானே உறுதிமொழி கூறி அழைத்துச் செல்தற்கும் உரியன்.

தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்லுங்கால் அவள் மென்மையுடையளாதலால் அவளுக்கு அச்சம் தோன்றாமலிருக்க யாதொரு தீமையும் வாராது காப்பேன் என் உலகியல் வழக்கினானே அவளுக்கு உறுதிமொழி கூறிக் கொண்டு செல்வான்.

(எ-டு) "நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்

நுமர்வரின் மறைகுவன் மாஅ யோளே". (நற் - 362)

மெல்லியல் மகளிர்முன் வன்மை கூறல் பொருந்தாதாயினும் உலகியல் கருதி அவ்விடத்துக் கூறுதல் வழுவாகாது என வழுவமைத்தவாறு.

### தலைவனும் தலைவியும் அல்லாத ஏனையோர்க்குரிய கூற்று மரபு

496. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே.

(இ-ள்) தலைவனும் தலைவியும் அல்லாத பதின்மரும் அத்தலைவனும் தலைவியுமாகிய இருவரோடும் முன்னர் கூறிப்போந்த மரபினால் இடமும் காலமும் பார்த்து எடுத்து மொழிதற்கும் உரியர்.

**எடுத்து மொழிதலாவது**, அறம் பொருள் இன்பங்களுக்குத் தகாத சொற்களை எடுத்துக் கூறுதல். அஃதாவது தலைவனைப் பார்ப்பானும் பாங்களும் கழற்றும், தோழி இயற்பழித்தலும், தலைவியைச் செவிலி யலைத்தலும், பாணர் கூத்தர் பாசறையிற்சென்று கூறுதலும் தோழி தலைமகனை வற்புறுத்தலும் முதலாயின.

முன்னம் - இடமும் காலமும்.

'ஒழிந்தோர்' என்பதனைக் 'கண்டோர்' எனப் பொருள்கொள்வர் நச்சினார்க்கினியரும் பேராசிரியரும்.

### கேட்போர்

### தலைவன் கூற்றையும் தலைவி கூற்றையும் அவரொழிந்த பதின்மர் கேட்பர்

497. மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்
நினையுங் காலைக் கேட்குநர் அவரே.

(இ-ள்) தலைவி கூற்றையும் தலைவன் கூற்றையும் கேட்போர், நினைத்துப் பார்க்குமிடத்து அவரொழிந்த பதின்மருமாவர்.

**கேட்போர்** - இக்கூற்று இன்னார்க்குச் கூறுகிறது எனத் தெரிவித்தல்.

**பதின்மார்** - பார்ப்பான் முதலியோர்.

### பார்ப்பார், அறிவர் கூற்றினை எல்லோரும் கேட்பர்

498. பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

(இ-ள்) பார்ப்பார், அறிவர் என்று சொல்லப்பட்ட இருவரது கூற்றும் இன்னார்க்கு என்னும் வரையறை இல்லை. அது, நூல்களில் கண்டவாறு எல்லோரும் கேட்கப் பெறுவர்.

பார்ப்பார், அறிவர் என்றும் இருவர் கூற்றும் அறிவுரையாதலின் அதனை எல்லாரும் கேட்டறிவர் என்றவாறாம்.

அறிவர்-முக்காலமும் நன்குணர்ந்த புலமையோர்.

**தலைமகளைச் சுட்டாப் பரத்தை, வாயில் கூற்றால் பயனில்லை**

499. பரத்தை வாயில் எனவிரு கூற்றும்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

(இ-ள்) பரத்தை கூற்று, வாயில் கூற்று என வேறுபட வந்த இவ்விருவகைச் கூற்றும் தலைமகளைச் சுட்டாதபோது பயனில்லையாகும்.

அகத்திணையொழுக்கத்து முக்கியக் கருப்பொருளாக இருப்பவள் தலைவியே ஆவாள். எனவே அவள் கேட்குமாறு கூற்று நிகழ்த்தப் பெறும். அவ்வாறன்றித் தமக்குத் தாம் பேசுதல் பயனற்றதாகும்.

**வாயில்கள் தங்களுக்குள் உசாவிக் கொள்வர்**

500. வாயில் உசாவே தம்முளும் உரிய.

(இ-ள்) வாயில்கள் உசாவும் போது கிழத்தியைச் சுட்டாது தங்களுக்குள் உசாவிக் கொள்ளுதலும் உரித்து.

உசாவுதல் - உரையாடுதல்

**சொல்லுந் போலவும் கேட்குந போலவும் அமையும் மக்களல்லாப் பொருட்கள்**

501. ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல் பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்.

(இ-ள்) ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், தனிமைத்துயரை மிகுதிப்படுத்தும் பொழுது, பறவை, நெஞ்சம் எனச் சொல்லப்பட்ட பதினொன்றும் அவை போல்வன பிறவும் தாம் கருதிய நெறியானே ஒன்றைச் சொல்லுவன போலவும் கேட்பன போலவும் சொல்லியமைப் பெறும் என்று புலவர் கூறுவர்.

மேல் “நோயும் இன்பமும்” (தொல். பொரு. பொருள்-2) என்னும் சூத்திரத்துச் “சொல்லா மரபின் அவற்றொடு கெழிஇச் செய்யா மரபில் தொழிற்படுத்தடக்கியும்” எனப் பொதுவகையாற் கூறினார். ஈண்டு ஞாயிறு முதலிய சொல்வது போலவும் கேட்பது போலவும் தலைமக்களால் கூற்று நிகழ்த்தப் பெறும் எனக் கூற்றுவகையால் எடுத்துரைக்கின்றார்.

**புலம்புறு பொழுதாவன** : தனிமைத் துயரினை மிகுவிக்கும் மாலையும் யாமமும் எற்பாடும் காரும் கூதிரும் பனியும் இளவேனிலும் போல்வன’ என்பர் பேராசிரியர்.

(எ.கா) “பழிதபு ஞாயிறே பாட்றியா தார்கட்

கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தனென் நெஞ்சம்
அழியத் துறந்தானைச் சீறுங்கால் என்னை
ஒழிய விடாதீமோ என்று" (கலி. -143)

இதில் **ஞாயிறு** கூறப்பட்டது.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (குறள் - 1118)

இதனுள் **திங்கள்** கூறப்பட்டது.

"உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிது நனி விரையல் என்னும் ஆயிடை" (நற். 284)

இதனுள் **அறிவு** கூறப்பட்டது.

"நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே" (சிலப். கானல்)

இதனுள் **கடலும் கானலும் புள்ளும் மரனும்** கூறப்பட்டன.

"மாலைநீ
தையெனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்" (கலி -108)

இதில் **மாலை** கூறப்பட்டது.

"வருந்தினை வாழிய நெஞ்சே" (அகம் - 79) என்பதன்கன் **நெஞ்சு** கூறப்பட்டது.

பிறவும் என்றதனால்.

"மன்றப் பனைமேல் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டும் அறிதியோ
மென்தோள் ஞெகிழ்த்தான் தகையல்லால் யான்காணேன்
நன்றுதீ தென்று பிற" (கலித் -142)

என்பதில் **மாந்தளிர்** கூறப்பட்டது.

### களன் (இடம்)

502. ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப.

(இ-ள்) ஒருவழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினைநிகழ்ச்சி இடமென்று சொல்லுவார் .

இதனால் செய்யுளில் கூறப்படும் பொருள் நிகழ்ச்சி இன்னவிடத்து நிகழ்ந்தது என மெய்ப்பட அறிந்தின்புற முடியும்.

**ஒருநெறிப் படுதலாவது** -அகமாயினும் புறமாயினும் ஒரு பொருள் மேல் வருதல்.

**ஓரியல் முடிதலாவது** -அகத்தின்கண் களவு, கற்பு என்பனவற்றில் ஒன்றைப் பற்றியோ அல்லது அவற்றின் விரிவகையாகிய இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டம் முதலியவற்றுள் ஒன்றைப் பற்றியோ வருதல். அவ்வாறே புறத்தின்கண் நிரைகோடல், மீட்டல், மேற்செலவு, எயில் வளைத்தல் என்பனவற்றுள் ஒன்றைப் பற்றி வருதல்.

**கரும நிகழ்ச்சி** -மேற்கூறிய பொருள்பற்றி யாதானும் ஒரு வினை நிகழும் இடம். இன்னும் தன்மை முன்னிலை படர்க்கை. என்பனவும் கொள்ளப்படும்.

(எ.கா) “செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை” (குறள் -1151)

என்றவழி கற்பென்னும் கைகோளில் பிரிவுப் பொருண்மை நிகழுமிடம் வந்தது. இது முன்னின்றானைக் கூறுதலின் முன்னிலை இடமாயிற்று.

“அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண்டு அற்றால் -செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கொண்டார்
நேரார்கைக் கொண்ட நிரை” (புறங்,கரந்தை -1)

என்றவழி புறத்திணைக்கண் நிரைமீட்டல் பொருண்மை நிகழுமிடம் வந்தது. இது படர்க்கையானைத் தொழிற்படுத்தியுரைத்தது.

**காலம்**

503. இறப்பே நிகழ்வே எதிரா தென்னுந்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உள்ளப்
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்.

(இ-ள்) இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமெனச் சொல்லப்பட்ட மூவகைக் காலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சியை ஆராய்ந்துணருமாறு பொருள் நிகழ்ச்சியுரைப்பது காலம் என்னும் உறுப்பாகும்.

(எ-கா) “முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே”

இ஁து இறந்த காலத்தின்கண் புணர்ச்சியுண்மை தோன்ற வந்தது.

“அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர்” (நற் -10)

இப்பாடலில் ‘அண்ணாந் தேந்திய வனமுலை’, ‘பொன்னேர் மேனி, மணியில் தாழ்ந்த நன்னெடுங் கூந்தல்’ என்னும் தொடர்கள் நிகழ்காலத்து இளமைப்பருவம் தோன்ற வந்தன.

‘நீத்தல் ஓம்புமதி’ என்பது எதிர்காலம் குறித்து வந்தது.

**பயன்**

504. இதுநனி பயக்கும் இதன்மா றென்னும்
தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே.

(இ-ள்) யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி இதன் பின்பு இதனைப் பயக்கும் என விரித்துக் கூறாது முற்கூறிய சொல்லினானே தொகுத்துக் கூறுதல் பயன் எனப்படும்.

(எ.கா) “சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவரல் ஆறே”

இதனால் பயன் ‘வரைந்து கோடல் வேண்டும்’ என்பது.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (குறள் - 323)

இதனால் பயன் நன்மை வேண்டுவோர் இவ்வாறு செய்தல் வேண்டும் என்பது.

**மெய்ப்பாடு**

505. உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

(இ-ள்) யாதானுமொன்றைக் கூறியவழி அதன்கண் அமைந்துள்ள பொருண்மையை ஆராய்ந்துணர்தலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்.

(எ.கா) “ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார் பெடுக்க வல்லேன்
என்போல் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்துசின் சிறிதே” (புறம் - 255)

இப்பாடலில் **அழுகை** என்னும் மெய்ப்பாடு பயின்று வந்தது அதன் நயத்தினைச் சிறிது காணலாம்.

போர்க்களத்தில் தன் கணவன் விழுப்புண் பட்டான் எனக் கேள்வியுற்ற அவன் மனைவி அவ்விடத்திற்குச் சென்று அவனைக் காண்கின்றாள். அவன் மார்பில் விழுப்புண்பட்டு இறந்து கிடக்கிறான். ‘ஐயோ’ என அரற்றிக் கூவ முனைந்தவள் “அழுகுரல் கேட்டால் புலி வந்துவிடுமே!

அது என்னை அடித்துச் சென்றுவிட்டால் இந்தப் பதுமமுகத்தைக் காணமுடியாதே” என அஞ்சுகிறாள். அவனைத் தன்மார்போடு அணைத்துக்கொள்ள விரும்புகிறாள். அவன் அகன்ற மார்பினைத் தூக்கி எடுக்கும் வலிமை அவளுக்கு இல்லை. அதனால் தன்னை இத்தகைய நிலைக்கு ஆளாக்கிய கூற்றம் தன்னைப் போல் பெருந்துயர் அடைவதாக எனச் சாபமிடுகின்றாள் அவள் பேதையுள்ளம் அவன் இறந்துபட்டான் என எண்ணவும் மறுக்கின்றது. அதனால் “அன்பே! வளையலணிந்த என் முன்கையினைப் பற்றிக்கொள். அந்த மலைநிழலை நோக்கிச் சற்று நடத்திச் செல்கிறேன், வா” என அழைக்கின்றதாகப் பாடல் அமைந்துள்ளது.

கணவனை இழந்த காதலியின் அவல உணர்வுகள் இப்பாடலில் புலவர் பெருமானால் வெளிப்படுத்தப்படுகின்றன.

### மெய்ப்பாடு குறித்த முடிபு

506. எண்வகை இயனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின ததுவே.

(இ-ள்) அம்மெய்ப்பாடானது நகை, அழுகை, இளிவரல், மருட்கை. அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டுவகை நெறியில் சிறிதும் பிழையாமல், முன்னே மெய்ப்பாட்டியலில் கூறிய அதே இலக்கணத்தைக் கொண்டு முடிவதாகும்.

**மெய்ப்பாட்டியலில் கூறப்பட்ட இலக்கணமாவன**

அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகிய நகை முதலிய தலைமை மெய்ப்பாடுகள் எட்டும் அவை தோன்றுதற்கு ஏதுவாகிய ‘எள்ளல்’ முதலிய முப்பத்திரண்டு பொருள்களும், அவற்றின் வேறுபட்டு வரும் ‘உடைமை’ முதலாகிய முப்பத்திரண்டு சார்புநிலை மெய்ப்பாடுகளும், அகத்திணைக்கே சிறப்பாக வரும் மெய்ப்பாடுகளும் ஆம். அவற்றின் விரியினை மெய்ப்பாட்டியலில் காணலாம்.

### எச்சம்

507. சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்.

(இ-ள்) கூற்றினாலும் குறிப்பினாலும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்திய கிளவி எச்சம் என்னும் உறுப்பாகும்.

‘முடிவுகொள் இயற்கை’ என்றதனால் செய்யுட்கண் கூறப்பட்டதற்கு அப்பால் கொணர்ந்து முடிக்கப்படும் பொருள் எச்சம் என்பது புலனாகும். அது கூற்றெச்சம், குறிப்பெச்சம் என இருவகைப்படும்.

(எ.கா) “செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானை
கழறொடிச் சேஎய் குன்றம்

குருதிப் பூவின் குலைக்காந் தட்டே” (குறுந் -1)

**கூற்றெச்சம்**

இது தோழி கூற்றாக அமைந்த பாடல். இதனைத் தோழி தலைவற்குச் சொன்னதாகக் கொண்டால் கூற்றெச்சம். அஃதாவது “இது கிடைத்தற்கரிய பொருளன்று; எம்முடைய மலையிடத்தும் நிரம்ப உள்ளது” எனத் தலைவன் கொணர்ந்த ‘கையுறையை மறுத்துக் கூறுவதாகக்’ கொள்ளும் போது அது கூற்றெச்சம் எனப்படும்.

**குறிப்பெச்சம்**

இதனைத் தோழி தலைவிக்குக் கூறியதாகக் கொண்டால் குறிப்பெச்சம். அதாவது, தலைவன் வரவினையுணர்ந்த தோழி அவளைக் குறியிடம் சேர்த்தற் பொருட்டு “யான் செங்காந்தட் பூக்கள் நிரம்பவுள்ள குன்றம் சென்று பூக்கொய்து வருவேன். நீ தெய்வம் உறையும் அவ்விடத்திற்கு வரவேண்டா; அதுவரை இப்பொழிவிடத்தே நிற்பாயாக”, எனத் தலைவியை இடத்து உய்த்து நீங்கியதாகக் கொள்ளும்போது அது குறிப்பெச்சம் எனப்படும்.

**இளம்பூரணர் விளக்கம்**

“பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சமாகும். எனவே, சொல்லெச்சம் குறிப்பெச்சம் என எச்சம் இருவகையாயின. அது எச்சவியலுள் ‘பிரிநிலை வினை’ என்னும் சூத்திரத்துள் (தொல்.சொல்.எச்ச - 34) பிரிநிலையென்பது முதலாகச் சொல்லப்பட்ட எண்வகையானும் வருவன சொல்லெச்சமாம். குறிப்பென்று ஓதப்பட்டது குறிப்பெச்சமாம்” என உரையும் விளக்கமும் கூறுவர் இளம்பூரணர். சொல் என்னும் சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் எனப்படும் என்பதும், தத்தம் குறிப்பினால் பொருளுரைப்பது குறிப்பெச்சம் எனப்படும் என்பதும் அவர் கருத்து.

(எ-டு) ‘பசித்தேன் பழஞ்சோறு தா என நின்றான்’ என்புழி. பசித்தேன் பழஞ்சோறு தா எனச் **‘சொல்லி’** நின்றான் என சொல் என்ற சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் எனப்படும்.

**‘விண்ணென விசைத்தது’** என்பது குறிப்பெச்சம். **‘விண்’** என்ற குறிப்பையே விசைத்தது எனப் பிறிதுசொல் நோக்காது தத்தம் சொற்கொண்டு பொருள் முடிதலின் இது குறிப்பெச்சம் ஆயிற்று.

**முன்னம்**

508. இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்று
அவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.

(இ-ள்) இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத்தகுமெனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியை உரைப்பது முன்னம் எனப்படும்.

எனவே இடமும் காலமும் உணர்ந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலும் செய்யுளுறுப்பாம்.

இடம் என்று கூறினாரேனும் வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் காலமும் கொள்ளப்பட்டது.

ஒரு பாடலைப் படித்தவுடன் அதன்கண் இடம்பெறும் கூற்றுக்குரியார் யார் என்பதும் அது எந்தச்சூழலில் கூறப்பட்டது என்பதும் உணரும்படிப் பாடல் அமைய வேண்டும். அப்பொழுதுதான் படிப்பவர் அப்பாடலின் முழுப்பொருளையும் சுவைத்து இன்புற முடியும். எனவே பாடலின் பொருள் நிகழ்ச்சியைத் தெளிவாக உணர்த்துகின்ற இடமும் காலமுமாகிய சூழல்கள் முன்னம் எனப்படும்.

(எ-டு) “நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே!” (குறுந் - 6)

இ∴து தலைவன் பரத்தமையை நினைத்துத் தலைவி கூறியது.

“இடையிரவு நள்ளென்ற ஒலியினை உடையதாகவுள்ளது. மக்கள் எல்லாரும் சொல்லவிந்து அமைதியாகத் துயில்கின்றனர். உலகத்திலுள்ள எல்லா உயிர்களுமே துயின்றன. யான் ஒருத்தியே நிச்சயமாகத் துயிலாதவளாயினேன்” என்பது இப்பாடற்பொருள்.

இப்பாடலில் இடையிரவு (யாமம்), தோழியும் பிறரும் அமைதியாகத் துயில்தல், உலகின் எல்லா பகுதியிலுமுள்ள பறவை, விலங்குகள் கூட ஆரவாரமின்றித் துயில்கின்ற சூழல், தலைவி மட்டும் தனிமைத் துயரால் வருந்துதல் போன்ற காலமும் இடமுமாகிய சூழல்கள் ஆராய்ந்துணர்ந்து தெளிவாகப் பொருள் விளங்கும்படி ஆசிரியரால் விளக்கப்படுகின்றமை அறிக

**பொருள் வகை**

509. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
இதுவா கித்திணைக் குரிப்பொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

(இ-ள்) இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமுமென்று சொல்லப்பட்டவை வழுவு நெறியின்றி, இத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகை என்பர்.

எனவே இது பாட்டிற்கு இயல்பாகவுள்ள உரிப்பொருளின் வேறுபட்டு வரும் பொருள் என்பது இனிது விளங்கும்.

ஒரு பாட்டிற்குரிய இன்றியமையாத அடிக்கருத்து உரிப்பொருள் எனப்படும். உரிப்பொருள் சிறக்கத் துணைநிற்பன முதலும் கருவுமாகும். இவை தவிர இன்பம், துன்பம், புணர்வு, பிரிவு, ஒழுக்கம் என்னும் அறநெறிகளில் ஒன்றோ பலவோ பாட்டின்கண் புனையப்பட்டிருக்கும் இவை பாட்டின்கண் அடங்கியுள்ள உட்பொருள் எனப்படும். இந்த உட்பொருள்களுக்குப் பொதுவாய் அதன் புறச்சட்டமாகத் திகழும்படிப் புலவனால் வகுத்தமைக்கப்படும் பொருளினையே பொருள்வகை எனத் தொல்லாசிரியர் மொழிவர்.

(எ-டு) “அரிதாய அறன்எய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தரும்எனப்
பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய்! வலிப்பல்யான் கேஎள்இனி:

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்

கடியவே கனங்குழாய்! காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே;

இன்பத்தின் இகந்தொரிஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே;

கல்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
தலால் துன்னருந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே.

எனவாங்கு.

இனைநலம் உடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே" (கலி -11)

இப்பாடலில் பிரிவாகிய உரிப்பொருளும், காட்டு வருணனையும் நண்பகலுமாகிய முதற்பொருளும் களிறு, புறா, மான் ஆகிய கருப்பொருட் செய்தியும் உரைக்கப்படுகின்றன. தலைவியின் நலம் வாடுதலும் காட்டின் கொடுமையுமாகிய இடும்பையும் உயிரினக் கருப்பொருளாகிய இறைச்சிப் பொருள்களின் ஒழுக்கங்களுமாகிய உட்பொருள்கள் நெறிப்பட விளக்கப்பட்டுள்ளன.

இனி இப்பாடலின் தொடக்கத்தில் இவ்வுட்பொருள்களுக்கெல்லாம் பொதுவாய் 'செல்வத்தின் சிறப்பும்' பாடலின் இறுதியில் தலைவன் வருகைக்குரிய அடையாளங்களான (சகுனங்கள்) 'பல்லி இசைத்தல்', 'இடக்கண் துடித்தல்' போன்ற பொதுவான பொருள்களும் புலவரால் வகுத்துரைக்கப்பட்டுள்ளமை காணலாம்.

**துறை**

510. அவ்வம் மாக்களும் விலங்கும் அன்றிப்
பிறஅவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே.

(இ-ள்) அகப்பொருளாகிய ஏழு பெருந்திணைக்கும் புறப்பொருளாகிய ஏழு பெருந்திணைக்குமுரிய மாந்தரும், பரந்துபட்ட மாவும் புள்ளும் மரமுமன்றிப் பிற அவண் மயங்கி வரினும் திறம்பட ஆராய்ந்து, தத்தமக்குரிய பண்போடும் மரபோடும் முடியின், அவ்வாறு திறப்பாடுடைத்தாய் வருவது துறையென்று கூறப்படும்.

புள்ளும் மரமும் என்பன உம்மையால் வருவிக்கப்பட்டன.

திறம்பட ஆராய்ந்து என்பது - இடமும் காலமுமாகிய முன்னத்தின் வைத்து உணர்தல்.

திணையின் உட்கூறு 'துறை' எனப்படும். புறப்பாடல்கள் துறையெனவும், அகப்பாடல்கள் கூற்று எனவும் வழங்கப்படும். அகப்பாடல்களிலும் அறத்தொடு நிற்றல், இல்செறித்தல், பகற்குறி, இரவுக்குறி, இயற்பழித்தல் எனத் துறைப்பெயர்கள் குறிக்கப்படுவதுண்டு. அகப்பாடல்களிலாயினும் புறப்பாடல்களிலாயினும் அவ்வவற்றிற்குரியனவாக வரைந்து கூறப்பட்ட மக்களும் விலங்கு

முதலியவும் அல்லாது பிற மக்கள் விலங்கு முதலிய வரினும் ஒரு குளத்து நீருண்ணும் துறைபோல அவற்றை இடத்திற்கு ஏற்பவும் காலத்திற்கேற்பவும் ஆராய்ந்து தத்தமுக்குரிய பண்போடும் மரபோடும் ஒருமுகப்பட்டு வருவதனைத் தனித்தனிக் கூறாக்கியுரைப்பது துறையென்னும் உறுப்பாகும்.

(எ-டு) "ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் ஊர்க்கால்" (கலி -56)

குறிஞ்சித் திணைக்குரிய இப்பாடலில் நெய்தற்குரிய ஞாழலும் மருதத்திற்குரிய இளமரக்காவும் இடம்பெறினும் புணர்ச்சியாகிய உரிப்பொருளான் இறுதலின் குறிஞ்சித்துறை உறுப்பான் வந்தது.

இச்சூத்திரம், மேல் திணைமயக்கம் கூறிய சூத்திரத்தின்கண் அடங்காதோவெனில், ஆண்டு பூவும் புள்ளும் முதலிய கருப்பொருள் மயங்குவதற்கு இலக்கணம் கூறினார்; இது, மக்களேயன்றித் தலைவனும் தலைவியும் மயங்குமாறும் நான்கு திணையும் ஒன்றினோடொன்று மயங்குமாறுங்கூறி அது புலவரால் செய்து கொள்வதோர் உறுப்பெனவும் விளக்குதற்பொருட்டு வேறு கூறினார் எனலாம்.

**மாட்டு**

511. அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.

(இ-ள்) பாட்டுப்பொருள் அகன்ற நிலையில் கிடப்பினும் அன்றி. அணுகிய நிலையில் கிடப்பினும் அவற்றின் பொருள் சேர்ந்து முடியுமாறு உணரச்செய்து செய்யுள் செய்யும் வழக்கத்தினை மாட்டு என மொழிவர்.

மாட்டுதல் - ஒன்றையொன்று அவாவி நிற்கச் செய்தல், அகன்ற மாட்டு, அணுகியு மாட்டு என மாட்டு இருவகைப்படும்.

**அகன்ற மாட்டு**

அகன்ற நிலையில் விலகிக் கிடக்கும் பாட்டுப் பொருளைச் சேர்த்துப் பொருள் காணுமாறு செய்யுள் செய்தல் அகன்ற மாட்டு எனப்படும்.

(எ-டு) பட்டினப்பாலையுள், "
"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே" (பட்டினப் 218-220)

என நின்ற அடிகள், திருமாவளவன் சிறையிலிருந்து தப்பித்தது, அவன் செய்த பல்வகைப் போர்கள், போரினால் பாழ்பட்ட மன்றங்கள் நகரங்கள், திருமாவளவன் கழிபெரும் ஆற்றல், அவன் நாடு பண்படுத்தியமை, இன்பச்சிறப்பு ஆகியவற்றை இடையிட்டுச் சென்றுப் பின்னும்.

"திருமாவளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானம்அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே" (பட்டினப் 299-301)

என்னும் அடிகளோடு இயன்று பொருள் முடிந்தவாறு காண்க.

**அணுகிய மாட்டு**

அணுகிய நிலையில் விலகிக் கிடக்கும் பாட்டுப் பொருளைச் சேர்த்துப் பொருள் காணுமாறு செய்யுள் செய்வது அணுகிய மாட்டு எனப்படும்.

(எ-டு) “திறந்திடுமின் தீயலை பிற்காண்டு மாதா்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம் உறந்தையா்கோள்
தண்ணார மாா்பிற் றமிழா் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு”

என வரும். இப்பாடலில் இறுதியடியாகிய ‘கண்ணாரக் காணக் கதவு’ என்பது முதலடியின் திறந்திடுமின். என்பதனோடு இயைந்து பொருள் முடிந்தவாறு காணலாம் இதனை பிற்காலத்தாா் பூட்டுவில் பொருள்கோள் என்பா்.

மாட்டு இன்பம் பயத்தல் கருதிச் சங்கச் சான்றோா் அதனை நெடும்பாட்டுகளில் மிகுதியும் அமையுமாறு செய்து செய்யுள் யாத்தன பிற்காலத்தில் தொடா்நிலைச் செய்யுள் செய்தவா்களும் கதைப்பாடல் இயற்றியோரும் அவ்வின்பம் கெடாமல் காத்து வருகின்றனா் என்பது அறியத்தக்கது.

**மாட்டும் எச்சமும் இன்றியும் பாட்டு வரப்பெறும்**

512. மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினும் தொடைநிலை பெறுமே.

(இ-ள்) மாட்டு, எச்சம் முதலிய உறுப்புகள் இல்லாமல் பொருள் தொடா்ந்து அமையும்படிச் செய்யுள் செய்யினும் அதுவும் பாட்டென் அமைவுறும்.

எனவே எச்சம், மாட்டு என்றும் உறுப்புகள் ஏனைய உறுப்புகள் போல அத்துணை இன்றியமையாதனவல்ல என்பது இனிது விளங்கும்

**வண்ணம்**

513. வண்ணந் தானே நாலைந் தென்ப.

(இ-ள்) வண்ணம் இருபது வகைப்படும் என்று கூறுவா்.

வண்ணம் என்பது பாவின்கண் நிகழும் ஓசை விகற்பமாகி சந்த வேறுபாடு. வண்ணம் பலவகைப்படும். தொல்காப்பியா் இருபது வகையான வண்ணங்களைக் குறிப்பிடுகின்றாா். பிற்காலத்தவா் நூறும் பலவுமாகிய வண்ணங்களைக் குறிப்பிடுவா். அவை யாவும் இருபது வகையுள் அடங்கும் என்பா்.

**இருபது வகை வண்ணங்கள்**

514. அவைதாம்,
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீா் வண்ணம் குறுஞ்சீா் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று
ஆங்கனம் மொழிப அறிந்திசி னோரே.

(இ-ள்) வண்ணங்கள் இருபது. அவையாவன; பாஅ வண்ணம். தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீா் வண்ணம்,

குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று வண்ண வேறுபாட்டினை அறிந்த சான்றோர் அவற்றை வகைப்படுத்தி உரைப்பர்.

**பாஅ வண்ணம்**

515. அவற்றுள் பாஅ வண்ணம் சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.

(இ-ள்) மேற்கூறியவற்றுள் பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலின்கண் பயின்று வரும்.

(எ-டு) 'அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு'. (தொல். எழு நூன்மரபு -31)

'கொல்ல ஐயம் எல்லே இலக்கம்' (தொல் சொல் இடை - 20)

என வரும்.

இது நூற்பாவின்கண் அதிகம் பயின்று வருதலான் நூற்பா **வண்ணம்** எனவும் வழங்குவர்.

**தாஅ வண்ணம்**

516. தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.

(இ-ள்) தாஅ வண்ணமாவது இடையிட்ட எதுகையான் வரும்.

(எ-டு) "தோ**டா**ர் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உன்கண் பைதல் கலுழ
வா**டா** அவ்வரி ததைஇப் பசலையும்
வைகல் தோறும் பைப்பயப் பெருக
நீ**டா**ர் இவணென நீள்மணங் கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழீ
வா**டா**ப் பௌவம் அறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓ**டா** மலையன் வேலில்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே" ( யாப். வி. ப. 381)

என வரும். (தாவுதல் - இடையிட்டு வருதல்)

**வல்லிசை வண்ணம்**

517. வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.

(இ-ள்) வல்லெழுத்து மிக்கு வருவது வல்லிசை வண்ணமாகும்.

(எ-டு) "வட்டோட்டி யன்ன வனமுடப் புன்னைக்கீழ்க்
கட்டிட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழைப்பூத்
தொட்டிட்டுக் கொள்ளும் கடல்சேர்ப்பன் நின்னொடு
பட்டொட்டி யுள்ளம் விடாது நினையுமேல்
விட்டொட்டி நீங்காதே ஒட்டு." (யாப்.வி.ப. 382)

என வரும்.

**மெல்லிசை வண்ணம்**

518. மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

(இ-ள்) மெல்லெழுத்து மிக்கு வருவது மெல்லிசை வண்ணமாகும்.

(எ-டு) "பொன்னின் அன்ன புன்னை நுண்தாது
மணியின் அன்ன நெய்தலங் கழனி
மனவென உதிரும் மாநீர்ச் சேர்ப்ப
மாண்வினை நெடுந்தேர் பூண்மணி யொழிய
மம்மர் மாலை வாநீ
நன்மா மேனி நயந்தனை எனினே" ( யாப். வி. ப. 382)

என வரும்.

**இயைபு வண்ணம்**

519. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

(இ-ள்) இடையெழுத்து மிக்கு வருவது இயைபு வண்ணமாகும்.

(எ -டு) "வால்வெள் ளருவி வரைமிசை இழியவும்
கோள்வல் உழுவை விடரிடை இயம்பவும்
வாளுகிர் உளியம் வரையகம் இசைப்பவும்
வேலொளி விளக்கிநீ வரினே
யாரோ தோழி வாழ்கிற் போரே" (யாப்.வி.ப. 383)

என வரும்.

**அளபெடை வண்ணம்**

520. அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

(இ-ள்) அளபெடை பயின்று வருவது அளபெடை வண்ணமாகும்.

(எ-டு) "தாஅட் டாஅ மரைமலர் உழக்கி
பூஉக் குவளைப் போஒ தந்திக்
காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய்
மாஅத் தாஅள் மோஒட் டெருமை" (யாப்.வி.ப. 158)

என வரும்.

**நெடுஞ்சீர் வண்ணம்**

521. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்,

(இ-ள்) நெட்டெழுத்துப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும்.

(எ-டு) "நீரூர் பானா யாறே காடே
நீலூர் காயாப் பூவீ யாவே
காரூர் பானா மாவே யானே
யாரோ தாமே வாழா மோரே
ஊரூர் பாகா தேரே
பீரூர் தோளாள் பேரூ ராளே" (யாப்.வி.ப. 383)

என வரும்.

**குறுஞ்சீர் வண்ணம்**

522. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

(இ-ள்) குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாகும்.

(எ-டு) "ஊறுபெய லெழிலி தொகுபெயல்
பொழியச் சிறுகொடி அவரை பொரிதளை யவிழக்
குறிவரு பருவம் இதுவென மறுகுபு
செறிதொடி நலமிலை யழியல்
அறியலை அரிவை கருதிய பொருளே" (யாப். வி. ப. 384)

என வரும்.

### சித்திர வண்ணம்

523. சித்திர வண்ணம்
நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே.

(இ-ள்) நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சார்ந்து வருவது சித்திர வண்ணமாகும்.

(எ-டு) "ஒரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்" (குறுந். - 231)

என வரும்.

### நலிபு வண்ணம்

524. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்

(இ-ள்) ஆய்தம் பயின்று வருவது நலிபு வண்ணமாகும்.

(எ-டு) "அஃகாமை செல்வத்துக் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்" (குறள் - 178)

என வரும்.

### அகப்பாட்டு வண்ணம்

525. அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.

(இ-ள்) செய்யுள் இறுதியடி முடியாத் தன்மையான் முடிந்து நிற்பது அகப்பாட்டு வண்ணமாகும்.

(எ-டு) "பன்மீன் உணங்கற் படுபுள் ளோப்பியும்
புன்னை நுண்தாது நம்மொடு தொடுத்தும்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி
தோழி நீங்காமை சூளில் தேற்றியும்
மணந்ததற் கொவ்வான் தணந்து புறமாறி
இனைய னாகி ஈங்குனைத் துறந்தோன்
பொய்த லாயத்துப் பொலங்கொடி மகளிர்
கோடுயர் வெண்மணல் ஏறி
ஓடுகலம் எண்ணும் துறைவன் தோழி" (யாப்.வி.ப. 385)

இப்பாடல் இறுதியடி ஆசியப்பாவிற்குரிய ஏகாரம் முதலியவற்றால் முடியாது இடையடி போன்று முடியாத் தன்மையின் முடிந்து வந்துள்ளமையால் அகப்பாட்டு வண்ணமாயிற்று.

### புறப்பாட்டு வண்ணம்

526. புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்.

(இ-ள்) முடிந்தது போன்று முடியதாகி வருவது புறப்பாட்டு வண்ணமாகும்.

(எ-டு) "நிலபுமணல் அகன்துறை வலவ னேவலின்
எரிமணிப் புள்ளினம் மொய்ப்ப நெருநலும்
வந்தன்று கொண்கள் தேரே இன்றும்
வருகுவ தாயின் சென்று சென்று
தோன்றுபு துதைந்த புன்னைத் தாதுகு
தண்பொழில் மெல்லக வனமுலை நெருங்கப்
புல்லின் எவனோ மெல்லியல் நீயும்
நல்காது விடுகுவை யாயின் அல்கலும்
படர்மலி உள்ளமொடு மடல்மா வேறி
உறுதுயர் உலகுடன் அறியநம்
சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே". (யாப்.வி.ப. - 385)

என வரும் இப்பாடல் ஏகாரத்தில் முடிந்தும் 'நீ நல்க வேண்டும்' எனப் பொருள் முடிவு பெறாமையால் புறப்பாட்டு வண்ணமாயிற்று.

**ஒழுகுவண்ணம்**

527. ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்.

(இ-ள்) ஓசையான் ஒழுகிக் கிடப்பது ஒழுகு வண்ணமாகும்.

(எ-டு) "அம்ம வாழி தோழி காதலர்
இன்முன் பனிக்கும் இன்னா வாடையொடு
புன்கண் மாலை அன்பின்று நலிய
உய்யலள் இவளெடை உணரச் சொல்லிச்
சொல்லுநர்ப் பெறினே செய்ய வல்ல
இன்னளி யிறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே" (யாப். வி. ப.386)

என வரும். இப்பாடல் அடிதோறும் ஆற்றொழுக்கு போல ஓசை ஒழுகி வந்தவாறு காணலாம்.

**ஒருஉ வண்ணம்**

528. ஒரு உ வண்ணம் ஒருஉத்தொடை பயிலும்.

(இ-ள்) நீங்கின் தொடையாகித் தொடுப்பது ஒரூஉ வண்ணம் எனப்படும்.
அது செந்தொடையாகும் என்பர் இளம்பூரணர்.

(எ-டு) "தொடிநெகிழ்ந் தனவே கண்பசந் தனவே
யான்சென் றுரைப்பின் மாண்பின் றெவனோ
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளிற் பொதுளிய அலங்குலை நெடுவெதிர்
பொங்குவால் இளமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே" (யாப்.வி.ப. 386)

என வரும்.

**எண்ணு வண்ணம்**

529. எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.
(இ-ள்) எண் பயின்று வருவது எண்ணு வண்ணமாகும்.

(எ-டு) "நிலம் நீர் வளிவிகம் பென்ற நான்கின்
அளப்பரியையே
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை" (பதிற்றுப் - 14)

எனவரும். இதில் நிலமும் நீரும் வளியும், விசும்பும் என எண் பயின்று வந்துள்ளமையை அறியலாம்.

**அகைப்பு வண்ணம்**

530. அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.
(இ-ள்) அறுத்தறுத்து இயல்வது அகைப்பு வண்ணமாகும்.

(எ-டு) "தொடுத்த வேம்பின்மிசைத் துதைந்த போந்தையிடை
அசைத்த வாரமலைப் பட்டு ரண்ணனென்பான்
இயன்ற சேனைமுர சிரங்குங் தானையெதிர்
முயன்ற வேந்தருயிர் முருக்கும் வேலினவன்" (யாப்.வி.ப. 387)

என வரும் இதன் கண் தொடுத்த வேம்பின் மிசை, 'துதைந்த போந்தையிடை' என ஓசை அறுந்து அறுந்து செல்வதைக் கன அறுத்தறுத்து இயல்வது இடையிட்டு இடையிட்டு வருவது.

**தூங்கல் வண்ணம்**

531. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.
(இ-ள்) வஞ்சியுரிச்சீர் பயின்று வருவது தூங்கல் வண்ணமாகும்.

(எ-டு) "வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்" (பட்டினப். 1-2)

இதன்கண் வெண்சீரல்லாத மூவசைச்சீர் (வஞ்சியுரிச்சீர்) பயின்று வந்தமை காணலாம்.

**ஏந்தல் வண்ணம்**

532. ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

(இ-ள்) சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்க வருவது ஏந்தல் வண்ணமாகும்.

(எ-டு) கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலுங் - கூடல்
அரும்பிய முல்லை அரும்பவிழ் மாலைப்
பிரிவில் பிரிவே பிரிவு. (யாப். வி. ப. 388)

இதில் கூடல், அரும்பு, பிரிவு என்று சொல்லப்பட்ட சொற்களே மீண்டும் சொல்லப்பட்டவாறு காணலாம்.

பிற்காலத்தவர் இதனைச் 'சொற்பொருள் பின்வருநிலையணி' என்பர்

**உருட்டு வண்ணம்**

533. உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்.

(இ-ள்) அராகம் தொடுப்பது உருட்டு வண்ணமாகும்.

(எ-டு) "தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்" (யாப்.வி.ப. 299)
என்பது அராகம்.

**முடுகு வண்ணம்**

534. முடுகு வண்ணம் முடிவறி யாமல்
அடியிறந் தொழுகி அதனோ ரற்றே .

(இ-ள்) நாற்சீரடியின் மிக்கு அராகத்தோடு ஒத்து வருவது முடுகு வண்ணமாகும்.

(எ-டு) "நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறிஇ" என்பது அறுசீரடியான் வந்தது.

**வண்ணம் குறித்த முடிபு**

535. வண்ணம் தாமே அவையென மொழிப.

(இ-ள்) வண்ணமாவன மேற்சொல்லப்பட்ட இருபதுமாகும்.

**இளம்பூரணர் விளக்கம்**

"மேல், வண்ணம் தானே நாலைந் தென்ப'

எனக் கூறினார். மீண்டும் கூறியதென்னையெனில் அது தொடைவகையால் இருபதாயினும் வேறோராற்றால் பாகுபடுப்பப் பலவாம் என்று அறிவித்தல் பொருட்டாம். அவை குறில் நெடில் பலவாம் வல்லினம் மெல்லினம் இடையினம் என நிறுத்தி அகவல், ஒழுகிசை, வல்லிசை, மெல்லிசை என்ற நான்கினோடும் உறழ இருபதாம். அவற்றைத் தூங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என்பனவற்றோடு உறழ நூறாம். அவற்றைக் குறிலகவல் தூங்கிசை வண்ணம், நெடிலகவல் தூங்கிசை வண்ணம் என ஒரு பேராசிரியர் பெயரிட்டு வழங்குவர். இவ்வாறு விளக்கம் தருவர் இளம்பூரணர்

**வனப்பு வகைகள்**

வனப்பு என்பது செய்யுட்குரிய வடிவும் பொருளும் உணர்வும் சார்ந்ததோர் அழகு எனலாம்) அ∴து அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டு வகைப்படும். எண்வகை வனப்பும் பெரும்பான்மையும் தொடர்நிலைச் செய்யுட்கே உரியன எனப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் நவில்வர். ஆனால் அவை தனிநிலைச் செய்யுட்கே உரியன என்பது இளம்பூரணர் கருத்து. நன்றாக ஆராயுமிடத்து வனப்புகளில் சில தனிநிலைச் செய்யுட்களில் காணப்படுவனவாகவும், சில தொடர்நிலைச் செய்யுட்களில் காணக்கூடியனவாகவும் உள்ளன என்பது புலனாகும்.

**அம்மை**

536. சின்மென் மொழியால் சீர்புனைந்
தியாப்பின் அம்மை தானே அடிநிமிர் பின்றே.

(இ-ள்) சிலவாகிய எளிய சொற்களால் தொடுக்கப்பட்ட அடிநிமிர்பில்லாத செய்யுள் அம்மை என்னும் வனப்பினதாம்.
அடிநிமிர்பில்லாத - குறைந்த அடிகளையுடைய பாடல்கள்.

(எ-டு) "அறிவினான் ஆவதுண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போற் போற்றாக் கடை" (குறள் - 227)

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

**அழகு**

537. செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே.

(இ-ள்) செய்யுட்குரிய சொல்லினால் இனிய ஓசைபட சீர் புணர்த்து யாக்கப்படும் செய்யுள் அழகு என்னும் வனப்பாகும்.

(எ-டு) "துணியிரும் பரப்பகம் குறைய வாங்கி
மணிகிளர் அடுக்கல் முற்றிய எழிலி
காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப

நெடுவரை மருங்கில் பாம்பென இழிதரும்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே" (யாப்.வி.ப. 377)

என வரும்.

**தொன்மை**

538. தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே.

(இ-ள்) உரையொடு பொருந்திய பழைமைத்தாகிய பொருள்மேல் பயின்று வருவது தொன்மை என்னும் வனப்பாகும்.

(எ-டு) இராம சரிதமும், பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல் வருஞ்செய்யுள் என்பர் இளம்பூரணர்.

பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் போன்றவை என்பர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.

**தோல்**

539. இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.

(இ-ள்) இழும் என்னும் மெல்லிய மொழியால் விழுமிய பொருளை எடுத்துரைப்பினும், பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னும் வனப்பாம்.

(எ-டு) "பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி எளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லைத் தீமை யில்லைச்
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோர் யார∴ திருவழி இறுகென" (மார்க்கண்டேயனார் காஞ்சி)

என்றது இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது.

"திருமழை தலைஇய இருள்நிற விசும்பு" (மலைபடுகாடாம்) என்னும் கூத்தராற்றுப்படை பரந்த மொழியான் அடிநிமிர்ந்து வந்தது.

**விருந்து**

540. விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.

(இ-ள்) முன்புள்ளார் சொன்ன நெறிபோய் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது விருந்து என்னும் வனப்பாகும்.

(எ-டு) அந்தாதி, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களும் இக்காலத்துச் சிறுகதை, புதினம், புதுக்கவிதை போல்வனவும் விருந்தின்பாற் படும்.

**விருந்து** - புதியது. "புதிதாகப் புனைதலாவது, ஒருவன் சொன்ன நிழல்வழியின்றித் தானே தோற்றுவித்தல் என்றும் இது பெரும்பான்மையும் ஆசிரியப்பாவைக் குறித்தது" என்றும் இளம்பூரணர் குறிப்பிடுவர்.

**இயைபு**

541. ஞகாரை முதலா னகாரை ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபெனப் படுமே.

(இ-ள்) ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வரும் செய்யுள் இயைபு என்னும் வளப்பாகும்.

(எ-டு) சாத்தனாரால் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்கு வேளிரால் செய்யப்பட்ட பெருங்கதையும் போல்வன.

**புலன்**

542. தெரிந்த மொழியான் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

(இ-ள்) வழக்கிற் பயின்று வரும் சொல்லினால் செம்மையாகத் தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமல் பொருள் தோன்றுவது புலனென்னும் வனப்பாகும்.

(எ-டு) "பாற்கடல் முகந்த பருவக் கொண்மூ

வார்செறி முரசின் முழங்கி ஒன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவள் திருமுகம் காணக் கடுந்தேர்
இன்றுபுகக் கடவுமதி பாக உதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுடைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே" (யாப்.வி.ப. - 379)

என எடுத்துக்காட்டுவர் இளம்பூரணர். 'சேரி மொழியால் செவ்விதிற் கிளந்து' எனப் பாடங்கொண்டு பள்ளு, குறம் எனக் காட்டுவோரும் உளர்.

### இழைபு

543. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.

(இ-ள்) ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடங்காது ஆசிரியப்பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் வனப்பாகும்.

(எ-டு) "போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு நீங்கி
நீர்வாய்க் கொண்ட நீல மூர்வாய்
ஊதை வீச ஊர் வாய
…………………………………
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு
…………………………………" (யாப்.வி.ப. 380)

இப்பாடலில் முதலடியில் நான்கெழுத்தும், இரண்டாம் அடியில் ஐந்தெழுத்தும், மூன்றாமடியில் ஆறெழுத்தும், நான்காமடியில் எட்டெழுத்தும், பதினேழாமடியில் இருபதெழுத்தும் எனக் குறளடி முதலா ஐவகை அடியும் முறைப்பட வந்துள்ளன. அத்துடன் வல்லின மெய்கள் மிகவும் குறைவாகப் பயின்றுள்ளமை அறியலாம்.

### யாப்பிற்குப் புறநடை

544. செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவன உளவெனினும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.

(இ-ள்) இதுகாறும் செய்யுளிடத்துப் பொருள்பெற ஆராய்ந்து நுட்பமாக உரைக்கப்பட்ட இலக்கணத்தின் வழுவியன போன்று தோன்றுவன உளவாயின் அவற்றையும் முன்சொல்லப்பட்ட இலக்கணத்தோடு மாறுபடாமல் முடித்துக் கொள்ளுதல் தெளிந்த அறிவுடையோர் கடன்.

இவ்விறுதி நூற்பா செய்யுளியலுக்கான புறநடையாகவும் அவையடக்கியல் வாழ்த்தாகவும் அமைந்துள்ளது.

சான்றோரால் ஆக்கப்படும் இலக்கணமாவது காலத்திற்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் வகையில் அமைய வேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியத்தில் புதுமை தோன்றுவது இயற்கை. பிள்ளைத்தமிழ், பள்ளு, குறம் போன்ற சிற்றிலக்கியங்கள் அவ்வகையில் தோன்றியனவாகும். அவ்வாறு புதுப்புது இலக்கியங்கள் தோன்றும்போது அவை முன்பு கூறிய இலக்கணத்தோடு ஒப்பவில்லையெனப் புறக்கணிப்பது அறமாகாது. புதுமையிலும் சில பழைமைக் கூறுகள் படிந்து கிடப்பது உண்மை. தெளிந்த அறிவுனையுடைய இலக்கியத் திறனாய்வாளரும் உரையாசிரியரும் அவற்றை ஆராய்ந்துணர்ந்து முன்பு சொல்லப்பட்ட இலக்கணத்தோடு தொடர்புபடுத்தி அமைத்துக்கொள்தல் அவர் கடமையாகும் என ஆசிரியர் இச்சூத்திரம் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

மேற்கூறிய அறிவுரைக்கேற்ப உரையாசிரியரும் புதிய இலக்கண ஆசிரியரும் அருந்தொண்டாற்றி வருவரேயானால் தமிழ் என்றும் சீரிளமைத் திறம் குன்றாமல் சிறந்தோங்கும் என்பது உறுதி.

**வினாக்கள்:**

1. தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்புகள் குறித்து எழுதுக.
2. வண்ணம் தானே நாலைந்து என்ப – விளக்குக.
3. மந்திரம் என்றால் என்ன?
4. உரையின் வகைகளை விவரி.
5. முன்னம் என்பதனை சான்றுடன் விளக்குக.
6. பண்ணத்தியின் இயல்பினை விவரித்து எழுதுக.
7. அடிநிமிர்வில்லாச் செய்யுள் வகை குறித்து விளக்குக.
8. அங்ககத்தின் இரண்டு வகைகளை குறித்து விளக்குக.
9. மாட்டு – விளக்குக.

## 4. மரபியல்

மரபு என்னும் சொல்லுக்கு வழக்கு என்பது பொருள்.

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நன் 388)

என நன்னூல் ஆசிரியரும் மரபினைப் போற்றிச் சென்றுள்ளார்.

அகம், புறம் என்னும் இருதிணைக் குறித்து வரும் செய்யுளைப் படித்துணர்தற்கும், அப்பொருள்கள் அமையச் செய்யுள் புனைதற்கும் முன்னோடியாக உலகியல் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பன்னெடுங்காலமாக வழங்கி வரும் சொற்பொருள் பற்றிய மரபியல் அறிவு நன்கு கைவர வேண்டும். காலந்தோறும் புலவர் பெருமக்கள் இலக்கியங்களில் பயன்படுத்திய பல்வேறு சொற்கள், சொற்பொருட் சிறப்புக்கள் ஆகியவற்றைப் பின்வரும் தலைமுறையினர் தெளிவாக அறிந்துகொள்வரேயானால் அவ்வறிவு ஐயத்திற்கிடனின்றிச் செய்யுட்பொருள் உணர்தற்குத் துணைநிற்கும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தொல்காப்பியர் மரபியற் செய்திகளைக் கூறுகின்றார்.

மரபியல் பிழை நேர்ந்தால் பொருள் கொள்வதில் குழப்பம் ஏற்படும் என்பது தொல்காப்பியரின் வலுவான கருத்து. அதனை அவர்,

"மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்" (மரபியல் - 95)

என்ற நூற்பாவான் உணர்த்தியுள்ளார். அதனால் செய்யுளில் கூறப்படும் பெயர், வினை, இடை, உரி என்னும் இயற்சொற்களையும், ஏனைத் திரிசொல், திசைச்சொல் வடசொல் என்பவற்றையும் எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது தான் மரபு என எடுத்துரைக்கின்றார்.

"மரபே தானும்
நாற்சொல் இயலான் மரபுவழிப் பட்டன்று" (செய் - 76)

என்பது நூற்பா. அது கருதியே இருதிணைப் பொருட் குணமாகிய இளமையும், ஆண்மை பெண்மை பற்றிய வரலாற்று முறைமையும் உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும் அவை பற்றிய உலகியல் மரபும் நூன்மரபும் இவையெல்லாம் நன்கு தெளிமாறு மரபியலை வகுத்துள்ளார் என்பது புலனாகும்.

'இவ்வோத்து இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட பொருட்கு மரபு உயர்த்தினமையான் மரபியல் என்னும் பெயர்த்து' என்பர் இளம்பூரணர்.

### இளமைப் பெயர்கள்

545. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறிமென்(று)
ஒன்பதும் குழவியொ டிளமைப் பெயரே.

(இ-ள்) மாற்றுதற்கரிய சிறப்பினையுடைய இருவகை வழக்குச் சொல் மரபினைக் குறித்துச் சொல்லப்புகின் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி என்பவற்றோடு குழவியையும் சேர்த்து இவ்வொன்பதும் உயிரினங்களின் இளமைப் பெயர்களாம்.

இருவகை கை வழக்கு - உலகியல் வழக்கு, செய்யுள் வழக்கு என்பன. ‘குழவியோடு’ எனப் பிரித்துக் கூறியது என்னையெனில் ஏனையவையும் ‘குழவி’ எனப், பொதுப்பெயரான் வழங்கப்படுதல் எனலாம்.

எனவே இளமைப் பெயர் எனினும் குழவிப்பெயர் எனினும் ஒக்கும்.

### ஆண்பாற் பெயர்கள்

546. ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப.

(இ-ள்) ஏறு. ஏற்றை, ஒருத்தல்,களிறு, சே(சேவு), சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் என்னும் பதினைந்தும் இவை போல்வன பிறவும் இலக்கியத்து கூறப்பட்ட ஆண்பாற் பெயர்களாம்.

பிறவும் என்றதனால் ஆண், விடை, கிடாய் என வருவனஷ் கொள்ளப்படும்.

### பெண்பாற் பெயர்கள்

547. பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.

(இ-ள்) பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை. அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு என்பனவற்றோடு அழகமைந்த பிடி என்பதையும் சேர்த்துக் கூறப்பட்ட பதின்மூன்றும் பெற்பாற் பெயர்களாம்.

## இளமைப்பெயர்ப் பாகுபாடு

### ‘பார்ப்பு’, ‘பிள்ளை’ - பறப்பவற்று இளமைப்பெயர்

548. அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

(இ-ள்) மேற் சொல்லப்பட்டனவற்றுள் பார்ப்பு, பிள்ளை ஆகிய இரண்டும் பறப்பனவற்றுக்கு இளமைப் பெயராய் வரும்.

(எ.கா) கிளிப் பிள்ளை, பருந்துப் பார்ப்பு என வரும்.

### தவழ்பவையும் மேற்கூறிய பெயர் பெறும்

549. தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன.

(இ-ள்) தவழ்ந்து ஊர்வனவும் மேற்கூறிய பார்ப்பு, பிள்ளை என்னும் பெயர்களைப் பெற்றுவரும்.

(எ.கா) “தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை” (ஐங்குறு-41)
கீரிப்பிள்ளை என வரும்.

**குட்டி**

550. மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு
ஆங்கைவை நான்கும் குட்டிக் குரிய.

(இ-ள்) மூங்கா வெருகு, எலி, முதுகில் மூன்று கோடுகளை கொண்ட அணில் ஆகிய நான்கும் குட்டி எனப்பெயர் பெறும்.

மூங்கா - கீரி; வெருகு - காட்டுப் பூனை

(எ.கா) கிரிக்குட்டி, வெருகுக் குட்டி, எலிக்குட்டி, அணிற்குட்டி என வரும்.

**குட்டிக்குரியன 'பறழ்' எனவும் வழங்கப்பெறும்**

551. பறழ்எனப் படினும் உறழாண் டில்லை.

(இ-ள்) மேல் குட்டிக்குரியனவாகக் கூறப்பட்ட மூங்கா முதலியன பறழ் எனப்படினும் தவறொன்றும் இல்லை.

கிரிப்பறழ், வெருகுப்பறழ், எலிப்பறழ், அணிற்பறழ் எனவரும்.

**குருளை**

552. நாயே பன்றி புலிமுயல் நான்கும் ஆயுங் காலைக் குருளை என்ப.

(இ-ள்) நாய், பன்றி, புலி, முயல் நான்கும் ஆராயுங்காலத்துக் குருளை எனப் பெயர்பெறும்.

(எ.கா) "சாய்செவிக் குருளை" (நாய்) - (சிறுபாண்-130)

"விழியாக் குருளை மென்முலை சுவைப்பக்
குழிவயின் துஞ்சும் குறுந்தாட் பன்றி"

"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு" (பட்டினப். - 221)

"குருளை கோட்படல் அஞ்சிக் குறுமுயல்"
என வரும்

**நரியும் 'குருளை' எனப் பெயர்படும்**

553. நரியும் அற்றே நாடினர் கொளினே.

(இ-ள்) ஆராயுங் காலத்து நரியும் குருளை எனப் பெயர்பெறும்.

இதனை மேலதனோடு சேர்த்துக் கூறாமையால் சிறுபான்மை வரப்பெறும் என்றவாறு.

**நாய் முதலிய ஐந்தும் 'குட்டி', 'புறழ்' எனவும் வழங்கப்பெறும்**

554. குட்டியும் பறழும் கூற்றவண் வரையார்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்தும் குட்டி, பறழ் எனவரினும் நீக்கப்படாது.

நாய்க்குட்டி, நாய்ப்பறழ், பன்றிக்குட்டி, பன்றிப்பறழ், புலிக்குட்டி, புலிப்பறழ், முயல்குட்டி, முயல்பறழ், நரிக்குட்டி, நரிப்பறழ் எனவரும்.

**நாய்ஒழிந்த நான்கும் 'பிள்ளை' எனவும் பெயர்பெறும்.**

555. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

(இ-ள்) மேற்சொல்லப்பட்டவற்றுள் நாய் ஒழிந்த பன்றி, புலி, முயல், நரி ஆகிய நான்கும் 'பிள்ளை' எனப் பெயர் கொள்ளினும் தவறொன்றுமில்லை.

பன்றிப்பிள்ளை, புலிப்பிள்ளை, முயற்பிள்ளை, நரிப்பிள்ளை எனவரும்.

**மறி**

556. யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்
ஓடும் புல்வாய் உளப்பட மறியே.

(இ-ள்) ஆடு, குதிரை, நவ்வி, உழை, விரைந்தோடும் புல்வாய் உளப்பட ஐந்தும் 'மறி' என்று வழங்கப்படும்.

ஆட்டு மறி, குதிரைமறி, நவ்விமறி, உழைமறி, புல்வாய் மறி எனவரும். நவ்வி, உழை, புல்வாய் என்பன மான் வகைகள்.

**குரங்கு குட்டி எனப்பெயர் பெறும்**

557. கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப.

(இ-ள்) மரக்கிளைகளில் தங்கும் குரங்குக்கு இளமைப்பெயர் குட்டி எனவும் கூறுவர்.

குரங்குக்குட்டி என வரும். கோடுவாழ் குரங்கு என்பது ஊகமும் முகவும் என்பர் இளம்பூரணர்.

**குரங்குக்கு மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் பெயரும் உண்டு**

558. மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான.

(இ-ள்) மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் இளமைப் பெயர்களும் குரங்குக்கு உண்டு

குரங்கு மகவு, குரங்குப் பிள்ளை, குரங்குப் பறழ், குரங்குப் பார்ப்பு எனவரும்.

**கன்று**

559. யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
மானோ டைந்தும் கன்றெனற் குரிய.

(இ-ள்) யானை, குதிரை, கழுதை, கடமை, மான் என்னும் ஐந்தும் கன்று என்னும் பெயர் பெறுதற்குரியனவாம்.

யானைக்கன்று, குதிரைக்கன்று, கழுதைக்கன்று, கடமைக் கன்று, மான்கன்று எனவரும். (கடமை - மான்வகை)

**எருமையும் மரையும் கன்று எனற்குரித்து**

560. எருமையும் மரையும் வரையார் ஆண்டே.

(இ-ள்) எருமையும் மரையும் கன்று எனப்பெயர் பெறுதல் நீக்கப்பட மாட்டாது.

எருமைக் கன்று, மரைக் கன்று எனவரும். (மரை-இனம் )

**கவரியும் கராகமும் கன்று என்பப்படும்.**

561. கவரியும் கராகமும் நிகரவற் றுள்ளே.

(இ-ள்) கவரிமானும் காரகமும் மேற்கூறியன போல கன்று எனப்படும். (கராகம் - கரடி); கராம் எனப் பாடமோதி முதலை எனப்பொருள் கொள்வர் பேராசிரியர்.

கவரிக் கன்று, கராகக் கன்று எனவரும்.

**ஒட்டகமும் கன்று எனப்படுதல் உண்டு.**

562. ஒட்டகம் அவற்றோ டொருவழி நிலையும்.

(இ-ள்) ஒட்டகமும் ஒரோவழி மேற்கூறியவை போல கன்று எனப்பெயர் பெறுதல் உண்டு. ஒட்டகக்கன்று எனவரும்.

**குழவி**

563. **குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.**

(இ-ள்) குஞ்சரம் எனப்படும் யானை குழவி எனப்பெயர் பெறும். யானைக் குழவி எனவரும்.

**ஆவும் எருமையும் குழவிப் பெயர் பெறும்**

564. ஆவும் எருமையும் அதுசொலப் படுமே.

(இ-ள்) ஆ, எருமை என்பனவும் குழவிப் பெயர் பெறும். ஆன் குழவி, எருமைக் குழவி என வரும்.

**கடமையும் மரையும் குழவி எனப்படும்.**

565. கடமையும் மரையும் முதனிலை ஒன்றும்.

(இ-ள்) கடமை, மரை முதலிய மான் இனங்களுக்கு முற்கூறிய குழவிப்பெயர் பொருந்தும். கடமைக்குழவி, மரைக்குழவி எனவரும்.

**குரங்கும் முசுவும் ஊகமும்கூட குழவிப் பெயர் பெறும்.**

566. குரங்கும் முகவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய.

(இ-ள்) குரங்கு, முக, ஊகம் ஆகிய மூன்றும் நன்கு ஆராயுமிடத்து குழவி எனப்பெயர் பெறுதற்குரியனவாம்.

குரங்குக் குழவி, முசுக்குழவி, ஊகக்குழவி எனவரும்.

**மக்கட்குரிய இளமைப் பெயர்கள்**

567. குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே.

(இ-ள்) குழவி, மகவு என்று சொல்லப்பட்ட இரண்டு மாத்திரமே மக்கட்கு உரித்தான இளமைப் பெயர்களாம்.

மக்கட் குழவி, மக்கண்மகவு எனவரும்.

**ஓரறிவுயிர்க்குரிய இளமைப் பெயர்கள்**

568. பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே.

(இ-ள்) பிள்ளை, குழவி, கன்று, போத்து என்று சொல்லப்பட்ட நான்கும் ஓரறிவுடைய உயிரினங்களுக்கு இளமைப் பெயராகக் கொள்ளவும் பெறும்.

உம்மை எதிர்மறையாதலின் **கன்று** என்றலே பெரும்பான்மை.

கமுகம் பிள்ளை, கமுகங்கன்று, தெங்கம்பிள்ளை, தெங்கங்கன்று, கருப்பங்கன்று, கருப்பம் போத்து எனவரும்.

**நெல்லும் புல்லும் மேற்கூறிய இளமைப் பெயர் பொருந்தாதாகும்**

569. நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே.

(இ-ள்) நெல், புல் என்னும் ஓரறிவுயிர் இரண்டனுக்கும் மேற்கூறிய இளமைப் பெயர் பொருந்தாதாகும்.

எனவே இவற்றுக்கு இளமைப் பெயர் 'நாற்று' எனப்பெறும்.

**இளமைப் பெயர் குறித்த முடிவான கருத்து**

570. சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல் திலவே.

(இ-ள்) இது காறும் சொல்லிப் போந்த மரபினையுடைய இளமைப் பெயர்தாமே சொல்லப்படாதனவற்றுக்கும் பெயரேயன்றிப் பிறிதில்லையாகும்.

'பிறிதில்லை' என்றதனால் ஒன்றற்குரியவற்றைச் சொல்லப்படாத மற்றொன்றிற்குப் பொருந்துமாற்றால் கொள்ள வேண்டும் என்பதறியப்படும்.

எடுத்துக்காட்டாக உடும்பு, ஓந்தி, பல்லி முதலிய கூறப்படாதனவற்றை, கூறப்பட்டுள்ள அணில் இலக்கணத்தோடு பொருந்தக் காண வேண்டும். சிங்கத்திற்கும் புலிப்பாற்படுத்திக் காணவேண்டும். இவ்வாறு பிறவற்றிற்கும் பொருத்தமுறக் காணலாம்.

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தியுரைத்த உயிர்களின் பாகுபாடு**

571. ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

(இ-ள்) **ஓரறிவுயிராவது** - உடம்பினால் தொட்டுணரும் அறிவினையுடைய உயிர். அஃதாவது உடம்பினால் தண்மை, வெம்மை, வன்மை, மென்மை போன்ற உணர்வுகளை மட்டும் உணரும் அறிவுடைத்தாதல்.

**ஈரறிவுயிராவது** - உடம்பினால் அறியும் அறிவோடு நாவினால் சுவைத்தறியும் அறிவுமுடைய உயிர். அஃதாவது நாவினால் கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் (இனிப்பு) என்பவற்றை அறிதல்.

**மூவறிவுயிராவது** - உடம்பினாலும் நாவினாலும் அறியும் அறிவோடு மூக்கினால் முகர்ந்தறியும் அறிவுமுடைய உயிர். அஃதாவது மூக்கினால் நன்னாற்றல் தீயநாற்றம் என்பவற்றை அறிதல்.

**நான்கறிவுயிராவது** - உடம்பினாலும், நாவினாலும், மூக்கினாலும் அறியும் அறிவோடு கண்ணினால் பார்த்தறியும் அறிவுமுடைய உயிர். கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம் என்பவற்றை அறிதல்.

**ஐந்தறிவுயிராவது** - உடம்பினாலும், நாவினாலும், மூக்கினாலும், கண்ணினாலும் அறியும் அறிவோடு செவியினால் கேட்டறியும் அறிவுமுடைய உயிர். செவியினால் அறியலாகும் ஓசை வேறுபாடும் அதனால் அறியும் பொருள் வேறுபாடும் அறிதல்.

**ஆறறிவுயிராவது** - மேற்கூறிய ஐந்தறிவோடு மனத்தாலறியும் அறிவுமுடைய உயிர். மனத்தினாலறிவதாவது, இதுபோல்வன வேண்டும் எனவும், இது செயல்வேண்டும் எனவும், இ∴து எத்தன்மைத்து எனவும் அனுமானித்தல். அனுமானமாவது புகை கண்டவழி நெருப்புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்புண்டென்று அனுமானித்தல்.

இவ்வாறு நன்றாகத் தெளிந்து உணரவல்ல சான்றோர் உலகத்து உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக வகைப்படுத்தி உரைத்துள்ளனர்.

### ஓர் அறிவுடையன

572. புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(இ.ள்) (ஓரறிவு - உடம்பினால் தொட்டுணரும் அறிவு)

புல்லும் மரமும் என்று சொல்லப்பட்ட இருவகையும் ஓரறிவுடைய உயிர்கள். அத்தகையன பிறவும் உளவாம். புல்லாவன புறத்தே வயிரம் கொண்டவை. மூங்கில், பனை போல்வன. மரமாவன அகத்தே வயிரம் கொண்டவை. வேம்பு பலா போல்வன.

பிறவும் என்றதனால் கொட்டி, தாமரை, கழுநீர் என்பனவும் கொள்ளப்படும்

### ஈரறிவுடையன

573. நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(ஈரறிவு - தொடுவுணர்வும் நாவறிவும்)

(இ-ள்) நந்தும் முரளும் ஈரறிவுடைய உயிர்கள். அத்தகையன பிறவும் உளவாம்.
நந்து - நத்தை: முரள் - சிப்பி
பிறவும் என்பன - சங்கு, கிளிஞ்சல், ஏரல்

### மூவறிவுடையன

574. சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(மூவறிவு - தொடுவுணர்வும், நாவறிவும், மூக்கறிவும்)

(இ-ள்) சிதலும் எறும்பும் மூவறிவுடைய உயிர்கள். அத்தகையன பிறவும் உளவாம்.

பிறவும் என்பன - ஈசல், அட்டை

**நான்கறிவுடையன**

575. நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(நான்கறிவு - தொடுவுணர்வும், நாவறிவும், மூக்கறிவும், கண்ணறிவும்)

(இ-ள்) நண்டும் தும்பியும் நான்கறிவுடைய உயிர்கள். அத்தகையன பிறவும் உளவாம்.
தும்பி - வண்டு
பிறவும் என்பன - ஞிமிறு, கரும்பு என்னும் வண்டினங்கள்.

**ஐயறிவுடையன**

576. மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(ஐயறிவு - தொடுவுணர்வும், நாவறிவும், மூக்கறிவும், கண்ணறிவும், செறியறிவும்)

(இ-ள்) விலங்கும் பறவையும் ஐந்தறிவுடைய உயிர்கள். அத்தகையன பிறவும் உளவாம்.

பிறவும் என்பன - பாம்பு, மீன், முதலை. ஆமை.

**ஆறறிவுடையன**

577. மக்கள் தாமே ஆற்றி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(ஆறறிவு - தொடுவுணர்வும். நாவறிவும் மூக்கறிவும். கண்ணறிவும், செவியறிவும், மன அறிவும்)
(இ-ள்) மக்கள் எனப்படுபவர் ஆறறிவுடையவர். அத்தகைய பிறப்பு பிறவும் உளவாம்.

பிறவும் என்பன - தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர்

**ஒருசார் விலங்கும் ஆறறிவுயிராம்**

578. ஒரு சார் விலங்கும் உளவென மொழிப.
(இ-ள்) விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுடையனவாம்.
அவையாவன: கிளி, குரங்கு, யானை என்பன.

**ஆண்பாற் பெயர் வரையறை களிறு**

579. வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.
(இ-ள்) யானையில் ஆணினைக் களிறு என விதந்து கூறுதல் உரியதாகும்.

வேழம் - யானை

**பன்றியில் ஆணும் களிறு எனப்படும்**

580. கேழற் கண்ணும் கடிவரை இன்றே.
(இ-ள்) பன்றியிலும் ஆணினைப் களிறு என்றல் நீக்கப்படாது.

கேழல் - பன்றி.

**ஒருத்தல்**

581. புலவாய் புலிஉழை மரையே கவரி
சொல்லிய கராமோடு ஒருத்தல் ஒன்றும்.

(இ-ள்) புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம் என்று சொல்லப்பட்ட அறுவகையுயிரின் ஆண்பாலும் ஒருத்தல் எனப் பெயர் பெறும்.

கராம் - முதலை, புல்வாய், உழை, மரை, கவரி என்பன மானினங்கள்.

**கொம்புடைய யானையும் பன்றியும் ஒருத்தல் எனப்படும்**

582. வார்கோட் டியானையும் பன்றியும் ஒருத்தல்.

(இ-ள்) நீண்ட கொம்பினையுடைய யானையும் பன்றியும் ஒருத்தல் என்னும் ஆண்பாற் பெயர் பெறும்.

**எருமையில் ஆணும் ஒருத்தல் என்பர்**

583. ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்.
(இ-ள்) எருமையில் ஆணினை ஒருத்தல் என்றலும் ஏற்புடைத்தாகும்.

**ஏறு**

584. பன்றி புல்வாய் உழையே கவரி
என்றிவை நான்கும் ஏறெனற் குரிய.

(இ.ள்) பன்றி. புல்வாய், உழை, கவரி என்ற இந்நான்கின் ஆணினையும் ஏறு எனக் கூறுதல் உரியதாகும்.

**எருமையும் மரையும் பெற்றமுன் ஏறு எனப்பெயர்**

585. எருமையும் மரையும் பெற்றமுன் அன்ன.

(இ-ள்) எருமை, மரை, பெற்றம் (காளை மாடு) என்பனவற்றின் ஆணும் ஏறு எனப் பெயர் பெறும்.

**கடல்வாழ் சுறர்வும் ஏறு எனப்படும்**

586. கடல்வாழ் சுறவும் ஏறேனப் படுமே.

(இ-ள்) கடல்வாழ் சுறாவின் ஆணும் ஏறு எனப் பெயர் பெறும்.

587. பெற்றம் எருமை புலிமரை புல்வாய்

மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே.

(இ-ள்) பெற்றம் (காளை மாடு), எருமை, புலி, மரை, புல்வாய் என்று இவை யாவும் போத்து என்னும் ஆண்பாற் பெயர் பெறும்.

**நீர்வாழ்வனவும் போத்து எனப்படும்**

588. நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய.

(இ-ள்) நீர்வாழ் சாதியான முதலை முதலானவற்றின் ஆண்பாலும் போத்து எனப் பெயர் பெறுதற்குரியனவாம்.

**மயிலும் எழாஅலும் போத்து எனப் பெயர் பெறும்**

589. மயிலும் எழ்ற அலும் பயிலத் தோன்றும்.

(இ-ள்) மயில், எழாஅல் ஆகிய இரண்டின் ஆணினைப் போத்து எனக்கூறுதல் பெருவழக்காகும்.
எழாஅல் - வல்லூறு

**இரலை, கலை**

590. இரலையும் கலையும் புல்வாய்க் குரிய.

(இ-ள்) இரலை, கலை என்பன புல்வாய்க்குரிய ஆண்பாற் பெயர்களாகும்.

**கலை என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரித்து**

591. கலையென் காட்சி உழைக்கும் உரித்தே
நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.

(இ-ள்) கலை என்னும் பெயர் உழைக்கும் உரித்து. அப்பெயர் முசுவிற்கும் நிலைத்ததாகும்.

**மோத்தை, தகர், உதள், அப்பர்**

592. மோத்தையும் தகரும் உதளும் அப்பரும் யாத்த என்ப யாட்டின் கண்ணே.

(இ-ள்) மோத்தை, தகர், உதள், அப்பர் என்னும் ஆண்பாற் பெயர்கள் ஆட்டிற்குரியன வாகும்.

**சேவல்**

593. சேவல் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே.

(இ-ள்) கரிய பெரிய தூவியினையுடைய மயில் அல்லாத சிறகுடைய பறவை இனங்கள் எல்லாம் சேவல் என்னும் ஆண்பாற் பெயர் பெறும்.

**ஏற்றை**

594. ஆற்றலொடு புணரந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.

(இ-ள்) ஆற்றல் மிக்க ஆண்பாற் கெல்லாம் ஏற்றை என்னும் பெயர் உரித்தென்று கூறப்படும்.

(எ-டு) 'குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை' (நற். - 36)

என்புழி ஆண்புலியைக் குறித்து நின்றது.

'கொடுந்தாள் முதலைக் கோள்வல் ஏற்றை' (குறுந். - 324)

இ.்.து ஆண்முதலையைக் குறித்து வந்தது.

## ஆண், பெண் பெயர் பகுப்புமுறை

595. ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய
பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய
காண்பவை அவையவை அப்பா லான.

(இ-ள்) உயிரினங்களின் உடலமைப்பைக் கொண்டு ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் காண்டலால் ஆண்பால் உயிர்கள் அனைத்தும் ஆண் என்னும் பொதுப்பெயர் பெறத்தகும். பெண்பால் உயிர்கள் அனைத்தும் பெண் என்னும் பொதுப்பெயர் பெறத் தகும்.

இச்சூத்திரம் இறந்தது காத்தலும் எதிரது போற்றலுமாம். ஆண்பாற்குரிய சிறப்புப் பெயர்கள் களிறு முதலாக ஒதினார். இனி பெண்பாற்குரிய சிறப்புப்பெயர்கள் பிடி முதலாகக் கூற விழைகின்றார். செய்யுட்கண் பயிலப் பெறும் இத்தகைய சிறப்புப் பெயர்கள் கற்றுத்துறைபோகிய வல்லார்க்கன்றி அரைகுறை பாக்கிசாலிகள் முற்றிலும் அறிவாரல்லர். எனவே அவர்க்கென்று ஒரு விதிமுறை வகுத்துக் கூறுகின்றார். அத்தகையவர் உயிரினங்களின் உடல் தோற்றத்தைக் கொண்டு ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் காணவேண்டும் எடுத்துக் காட்டாக யானைக்குக் கொம்புண்மை யறிந்து ஆண் எனவும், இல்லாமை கண்டு பெண் எனவும் அறியலாம். அவ்வாறே மயிலுக்குத் தோகையுண்மை கொண்டு ஆண் என்றும் இல்லாமை கொண்டு பெண் எனவும் ஊகிக்க முடியும். அவ்வாறே ஏனைய உயிரினங்களையும் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

அவ்வாறு அடையாளம் கண்டுணர்ந்த ஆண் உயிரி எதுவாயினும் அதனைச் சிறப்புப் பெயரானன்றியும் பொதுப்பெயரான் கூறத் தகும். (எ-டு) ஆண் யானை, ஆண் மயில், ஆண் குரங்கு, ஆண் எலி என வரும்.

அவ்வாறே பெண் உயிரியையும் அதற்குரிய சிறப்புப் பெயரானன்றி பொதுப் பெயரான் கூறத்தகும். (எ-டு) பெண் யாணை, பெண் மயில், பெண் குரங்கு, பெண் எலி, பெண் புறா என வரும்

## பெண்பாற் பெயர் வரையறை

### பிடி

596. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

(இ.ள்) பிடி என்னும் பெண்பாற் பெயர் யானைக்குரியதாகும்.

(எ-டு) "பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே

என வரும்.

### பெட்டை

597. ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை
பெட்டை என்னும் பெயர்க்கொடைக் குரிய.

(இ-ள்) பெட்டை என்னும் பெண்பாற் பெயர் ஒட்டகம், குதிரை, கழுதை, மரை என்பனவற்றிற்குரியது.

**பறவைகளுக்கும் பெட்டை என்று பெயர்**

598. புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.

(இ-ள்) பெட்டை என்னும் பெயர் பறவைகளுக்கும் உரியதாகும்.

**பேடை, பெடை**

599. பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்.

(இ-ள்) பேடை, பெடை என்பனவும் ஆராயுமிடத்து முற்கூறிய பெட்டை என்னும் சொல்வழக்கினோடு ஒன்றி வரும்.

இது பறவையினத்துக்கு வருதல் பெரும்பான்மை.

**அளகு**

600. கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழும் காலை அளகெனல் அமையா

(இ-ள்) அளகு என்னும் பெண்பாற் பெயர் ஆராயுமிடத்து, கோழி, கூகை என்னும் இரண்டிற்குமல்லது வாராது.

**மயிலுக்கும் அளகு என்னும் பெயர் உண்டு**

601. பெண்பாலான
அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே.

(இ-ள்) அளகு என்னும் பெண்பாற் பெயர் மயிலுக்கும் உரியதாகும்.

**பிணை**

602. புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடின் பிணையெனப் பாடுமே.

(இ-ள்) பிணை என்னும் பெண்பாற் பெயர் புல்வாய், நவ்வி, உழை, கவரி என்னும் மான் வகைகளுக்கு உரியதாகும்.

**பிணவு**

603. பன்றி புல்வாய் நாயென மூன்றும்
ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை.

(இ-ள்) பிணவு என்னும் பெயரானது பன்றி, புல்வாய், நாய் என்னும் மூன்றனுக்கும் பொருந்தும் என்பர்.

**பிணவல்**

604. பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.

(இ-ள்) பிணவல் என்பதும் முற்கூறிய பன்றி, புல்வாய், நாய் என்னும் மூன்றிற்கும் உரிய பெண்பாற் பெயராம்.

**ஆ**

605. பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.

(இ-ள்) ஆ என்னும் பெண்பாற் பெயர் பெற்றம், எருமை, மரை என்னும் மூன்றற்கும் வழங்கப்படும்.
பெற்றம் - பசு, மரை - ஈண்டு காட்டுப் பசு

**பெண், பிணா (மக்கட் பெயர்கள்)**

606. பெண்ணும் பிணாவும் மக்கட் குரிய

(இ.ள்) பெண், பிணா (பிணவு) என்னும் இரண்டும் மக்கட் சாதிக்குரிய பெண்பாற்பெயர்களாம்.

607. எருமையும் மரையும் பெற்றுமும் நாகே.

(இ-ள்) நாகு என்னும் பெண்பாற்பெயர் எருமை, மரை, பெற்றம் என்னும் மூன்றற்கும் வழங்கப்படும்.

**நீர்வாழ் நத்தையும் நாகு எனப்படும்**

608. நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.

(இ-ள்) நீர்வாழ் சாதியுள் ஒன்றான நந்தும் (நத்தை) நாகு எனப்படும்.

**மூடு, கடமை**

609. மூடும் கடமையும் யாடல பெறாஅ.

(இ-ள்) மூடு, கடமை என்னும் பெண்பாற் பெயர்கள் ஆட்டிற்குரியனவாய் மட்டும் வரும்.

**பாட்டி**

610. பாட்டி என்ப பன்றியும் நாயும்.

(இ-ள்) பாட்டி என்னும் பெயர் பன்றிக்கும் நாய்க்கும் உரியதாகும்.

**நரியும் பாட்டி எனப் பெறும்**

611. நரியும் அற்றே நாடினர் கொளினே.

(இ-ள்) நரியும் ஆராயுமிடத்து பாட்டி எனப் பெயர்பெறும்.

**மந்தி**

612. குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி.

(இ-ள்) மந்தி என்னும் பெயர் குரங்கு, முசு, ஊகம் என்னும் மூன்றற்கும் உரியது.

| | |
|---|---|
| தொகுத்துக்காண்டல் | - பெண்பாற் பெயர் வரையறை |
| பெண்பாற்பெயர் | - உயிர்வகை |
| பிடி | - யானை |
| பெட்டை | - ஒட்டகம், குதிரை, கழுதை, மரை, புள் |
| பேடை, பெடை | - புள், ஒட்டகம், குதிரை, கழுதை, மரை |
| அளகு | - கோழி, கூகை, மயில் |
| பிணை | - புல்வாய், நவ்வி, உழை, கவரி |
| பிணவு | - பன்றி, புல்வாய் |
| பிணவல் | - பன்றி, புல்வாய் |
| ஆ | - பெற்றம், எருமை, மரை |

| | |
|---|---|
| பெண். பிணா | - மக்கட்சாதி |
| நாகு | - பெற்றம், எருமை, மரை,நத்தை |
| மூடு, கடமை | - ஆடு |
| பாட்டி | - பன்றி, நாய், நரி |
| மந்தி | - குரங்கு. முசு,ஊகம், நரி |

### கடியலாகாச் சிறப்பு வழக்குகள்

613. குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகிணைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த வழக்கின் உண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.

(இ-ள்) குரங்கினுள் ஆணினைக் கடுவன் என்றும், மரத்தில் வாழும் கூகையைக் கோட்டான் என்றும், சிவந்த வாயையுடைய கிளியைத் தத்தை என்றும், கொடிய வாயையுடைய காட்டுப் பூனையைப் பூசை என்றும், குதிரையுள் ஆணினைச் சேவல் என்றும், இருள்போலும் கருமை நிறமுடைய பன்றியை ஏனம் ஏனம் என்றும், எருமையுள் ஆணினைக் கண்டி என்றும் மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தோடு மாறுபட்டு வரினும் உலகத்தார் வழக்கினோடு பெரிதும் பொருந்தி வருதலின் இவ்வாறு வருவன மரபியல் அறிவினரால் கடியப்படமாட்டாதனவாம்.

ஏற்றை - ஆண்; கிள்ளை - கிளி; பூசை - பூனை

### இதுவரைக் கூறியன ஆணும் பெண்ணும் பிள்ளையும் பற்றிய மரபுகளாகும்

614. பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.

(இ-ள்) பெண்பாற் பெயரும், ஆண்பாற் பெயரும், பிள்ளைப் பெயரும் பற்றிய மரபுகள் இதுவரைக் கூறப்பட்டனவாம்.

### நான்குவகை வருணத்தார்க்குரிய மரபுகள் அந்தணர்க்கு உரியவை

615. நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய.

(இ-ள்) முப்புரி நூல், கரகம், முக்கோல், மணையிருக்கை என்பன ஆராயுங்காலத்து அந்தணர்க்குரியனவாம்.

### அரசர்க்கு உரியவை

616. படையும் கொடியும் குடையும் முரசும்

நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.

(இ-ள்) படை, கொடி, வெண்கொற்றக் குடை, முரசு, போர்ப்பயிற்சி மிக்க குதிரை, யானை, தேர், அடையாள மாலை, மணிமுடி என்பனவும் இவைபோலப் பொருந்தி வருவன பிறவும் தேர்ச்சி மிகக் செங்கோல் அரசர்க்குரியனவாம்.

பிறவும் என்றதனால் அரியணை, கவரி, கழல், அரண் என்பனவும் கொள்ளப்படும்.

**அந்தணர்க்குரிய மரபுகள் சில அரசர்க்கும் பொருந்தும்**

617. அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமார் உளவே.

(இ-ள்) அந்தணர்க்குரியவற்றுள் சில அரசர்க்குப் பொருந்தி வருவனவும் உள.

அவையாவன "அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும்"

(புறத் - 15) என்று கூறப்பட்டனவற்றுள் ஒதுவித்தல், ஏற்றல் என்னும் இரண்டு நீங்கிய ஈதல், வேட்டல், வேட்பித்தல், ஒதல் என்னும் நான்குமாம்

**அரசர்க்குரியன அந்தணர்க்குப் பொருந்த வருதலில்லை**

618. பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழமைப்பெயர்
நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.

(இ-ள்) பரிசிலும், பாடாண்திணைத் துறைக்குரிய பெயர்களான நெடுந்தகை, செம்மல் என்பனவும் அவைபோல்வன பிறவுமாகிய அரசர்க்குரியனவற்றை அந்தணர்க்குப் பொருந்துமாறு உரைப்பதில்லை.

இப்பொருண்மையும் அரசர்க்கும் உரித்து அந்தணர்க்கும் உரித்து என்பர் இளம்பூரணர்.

**எல்லார்க்கும் உரியன**

619. ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே.

(இ-ள்) ஊர்ப்பெயரும், தமது இயற்பெயரும், சிறப்புப் பெயரும் தத்தம் தொழிற்கேற்ற கருவியும் எல்லாக் குலத்தவரையும் சார்த்தி வரப்பெறும்

**தலைமைக் குணச்சொல்**

620. தலைமைக் குணச்சொலும் தத்தமக் குரியதோர்
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப என்ப.

(இ-ள்) தலைமைக்குணம் உடையவராகக் கூறுதலும் அவரவர் நிலைமைக்குப் பொருந்துமாறு எடுத்துரைக்க வேண்டும்.

**தலைமைக் குணச்சொல்** - ஒருவரது பண்பை உயர்த்திக் கூறப்படும் சொல். அஃது இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் ஆகாது என்பது.

**படைவகை பெறுவோர்**

621. இடையிரு வகையோர் அல்லது நாடின்
படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.

(இ-ள்) அரசரும் வணிகரும் அல்லாதோர் படைக்கலவகை கூறப்பெறார் எனப் புலவர் கூறுவர்.

**இடையிரு வகையோர்** - நாற்குலத்தினும் இடைப்பட்ட அரசரும் வணிகரும். இவரே போர்ப்பயிற்சி உடையவர். அதனால் அவர் படைக்கலம் ஏந்துதற்குத் தகுதியுடையவர். ஏனைய அந்தணரும் வேளாளரும் அத்தகைய பயிற்சி பெறாதவர் ஆவர்.

**வாணிபத்திற்குரியோர்**

622. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.
(இ-ள்) வைசிகன் என்பான் வாணிகம் செய்து வாழ்பவன் ஆவான்.
வைசிகன் - வணிகன், வாணிகம் - வாணிபம்

**வைசிகர் உழவுத்தொழில் புரிதலும் வரையார்**

623. மெய்திரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான.

(இ-ள்) உண்மையாக ஆராய்ந்தால் எட்டுவகையான உணவுப்பொருள்களை விளைவிக்கின்ற உழவுத்தொழிலும் வணிகர்க்கு விலக்கன்று.

**செய்தி** - தொழில், **எண்வகை உணவு** - நெல், காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல் (மூங்கில்), கோதுமை என்பர் இளம்பூரணர்.

**கண்ணியும் தாரும் வணிகர்க்கும் உண்டு**

624. கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே.
(இ-ள்) வணிகர்க்கும் கண்ணியும் தாரும் சொல்லப்பெறும்

கண்ணி - தலையில் அணிவது, தார் - கழுத்தில் அணிவது.

**வேளாண் மாந்தர்க்குரியவை**

625. வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.
(இ-ள்) வேளாண் மாந்தர்க்கு உழுது உண்பதல்லது வேறுவகைத் தொழில் இல்லையென மொழிவர்.

வேளாண் - மாந்தர் வேளாளர்

**வேளாளரும் அரசரிடத்துப் படையும் கண்ணியும் பெறுவர்.**

626. வேந்துவிடு தொழிலின் படையும் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.

(இ-ள்) வேந்தன் ஏவியதைச் செய்யும் தொழில் காரணமாகப் படையும் கண்ணியும் வேளாண் மாந்தரும் பெறுதற்குரியவர்.

மேல் அகத்திணையியலில்,

“வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரிஇய
ஏனோர் மருங்கினும், எய்திடன் உடைத்தே” (அகத் -34)

என வேளாளர்க்குத் தூது உரித்தென்று கூறினார், ஈண்டு படையும் கண்ணியும் கூறுகின்றார். இதனால் வேளாளருள்ளும் தேர்ந்த நூலறியும் போர்ப்பயிற்சியும் உடையோரும் வாய்க்கப் பெற்றிருந்தனர் என்பது விளங்கும்.

**அந்தணர்க்கு அரச தகுதியும் உண்டு**

627. அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

(இ-ள்) அந்தணர்க்கு அரசர்க்குரிய தகுதியும் நீக்கப்படாது.

அந்தணர் அமைச்சராகவோ புரோகிதராகவோ ஆகியவழி அவர் அரசரோடு ஒருதன்மையராக மதிக்கப்படுவர். அதன் பயனாக அரசர்க்குரிய கொடியும், குடையும், கவரியும், தாரும் முதலியன அளிக்கப்படும்.

**அரசனால் சிறப்பு பெற்ற வணிகரும் வேளாளரும் எய்தும் சிறப்பு**

628. வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் ஆரமும் தேரும் மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய.

(இ-ள்) மன்னரால் சிறப்பு பெற்ற மரபினையுடைய வணிகரும் வேளாளரும் அவரைப் போலவே வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம், தேர், குதிரை என்பனவற்றை எய்தற்குரியவர்.

மன்பெறு மரபின் ஏனோர் - மன்னால் பட்டம் பெற்ற வணிகரும் வேளாளரும்.

**இழிகுணமுடையார்க்கு வில், வேல் முதலியன அருளப்படாது**

629. அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.

(இ-ள்) அரசனால் சிறப்பு பெற்றவராயினும் இழிகுணம் உடைய வணிகர்க்கும் வேளாளர்க்கும் வில், வேல் முதலியன அருளப்படுதல் இல்லை.

படைவீரராவார் காமம் வெகுளி முதலிய இழிகுணம் உடையராயின் கருதிய கருமத்தில் பொறுப்பின்றி உடனூழியரைப் பகைக்கவும் வருத்தவும் கூடும். ஆதலால் வணிகரும் வேளாளரும் ஒரு காலத்து அரசனால் சிறப்பு பெற்றவராயினும் அவரிடத்து உயர்குணம் இன்றாயின் அவர்க்கு வில், வேல் முதலிய அரசர்க்குரிய பொருட்களை ஆளும் தகுதியின்றாகும். அது,

“சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்

இல்லாயின் வெல்லும் படை”          (குறள் - 765)

என்னும் வள்ளுவர் கூற்றானும் அறியப்படும்.

**புல், மரம் பற்றிய செய்திகள்**
**புல் எனப் பெயர் பெறுபவை**

630. புறக்கா ழனவே புல்லெனப் படுமே.

(இ-ள்) புறப்பகுதி வயிரமுடைய ஓரறிவுயிர்கள் புல் எனப் பெயர் பெறும்.

(எ-டு) தெங்கு, பனை, கமுகு, மூங்கில் என்பன.

**மரம் எனப் பெயர் பெறுபவை**

631. அகக்கா ழனவே மரமெனப் படுமே.

(இ-ள்) உட்பகுதி வயிரமுடைய ஓரறிவுயிர்கள் மரம் எனப் பெயர் பெறும்.

(எ-டு) மா, பலா, இலுப்பை, புளி

**புல்வகையின் உறுப்புக்கள்**

632. தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

(இ-ள்) தோடு, மடல், ஓலை, எடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை எனச் சொல்லப்பட்டனவும் இவைபோல்வன பிறவும் புல்வகைகளுக்கு உறுப்பாக வருமெனப் புலவர் கூறுவர்.

ஈண்டுக் கூறப்பட்ட உறுப்புக்கள் அனைத்தையும் ஒரு பனைமரத்தில் காணமுடியும். அவை பனந்தோடு, பனைமடல், பனையோலை பனையேடு, பனையிதழ், பனம்பாளை, பனைஈர்க்கு, பனங்குவை என அழைக்கப்படும்.

புற வயிரமும் உள்வயிரமும் இல்லாத இவ்வுறுப்படைய வாழை, ஈந்து, தாமரை. கழுநீர் என்பன புல்லின்பாற்படும் என்பர் இளம்பூரணர்.

**மரவகை உறுப்புக்கள்**

633. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வரூஉம் கிளவி என்ப.

(இ-ள்) இலை, முறி, தளிர், தோடு, சினை (கிளை), குழை, பூ, அரும்பு, நனை (மொக்கு) இவை உள்ளிட்டனவும் இவைபோல்வன பிறவும் எல்லாம் மரத்துக்குரிய உறுப்புக்களாம்.

முறி - முற்றாத இலை; சினை - கிளை; குழை - கொத்துடன் கூடிய இலை, நனை - மொக்கு.

ஈண்டுக் கூறப்பட்ட உறுப்புக்கள் அனைத்தும் ஒரு புன்னை மரத்தில் காணலாம். இவை புன்னையிலை, புன்னைமுறி, புன்னையந்தளிர், புன்னையந்தோடு, புன்னையஞ்சினை, புன்னையங்குழை, புன்னைப்பூ, புன்னையரும்பு, புன்னையந்நனை எனப் பெறும்.

புறவயிரமும் உள்வயிரமும் இல்லாத இவ்வுறுப்புகளைக் கொண்ட முருக்கு, தணக்கு என்பன மரத்தின்பாற்படும்.

**புல்லுக்கும் மரத்துக்கும் பொதுவான உறுப்புக்கள்**

634. காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன.

(இ-ள்) காய், பழம், தோல், செதிள், வீழ்து என்று சொல்லப்பட்ட உறுப்புக்கள் புல், மரம் இரண்டனுக்கும் பொதுவாய் வழங்கப்படுவனவாகும்.

முற்கூறப்பட்ட இருவகைக்கும் பிற்கூறலின் காய் முதலான பெயர்கள் அவ்விருவகைக்கும் பொதுவெனப்படும்.

வீழ் -வீழ்து (விழுது)

(எ-டு) புளியங்காய், பனங்காய் எனவும், புளியம்பழம், பனம்பழம் எனவும், புளியந்தோல், பனந்தோல் எனவும், புளியஞ்செதிள், பனஞ்செதிள் எனவும், ஆலம் விழுது, தாழை விழுது எனவும் வரும்.

தாழையானது பூவும் கோடும் புறவயிர்ப்பின்மையுமாகிய மரத்துக்குரிய தன்மைகள் உளவேனும் புல் என்றலே பெரும்பான்மை.

**உலகம் உணர்த்தும் பாடமும் சொல்மரபும்**

635. நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

(இ-ள்) உலகமானது நிலம், நெருப்பு, நீர், வளி, வானம் என்னும் ஐந்தும் அவற்றின்கண் விளங்கும் பொருளும் கலந்து வேற்றுமையின்றி நிற்கின்றது. அவ்வாறே உலகத்துப் பொருள்களைக் குறித்து வழங்கும் இருதிணை ஐம்பாற் பெயர் மரபுகளையும் எவ்வித மாறுபாடும் தோன்றாதவாறு திரிபற்ற சொற்களால் தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவியமைந்தாற்போல இவ்வுலகமானது நிலம், நெருப்பு, நீர், வளி, விண் என்னும் ஐம்பெரும் பொருளால் விரவியுள்ளது. எனினும் அஃது எவ்வித வேறுபாடுமின்றி பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாக்கினாற்போல எல்லாப் பொருட்களானும் நிரம்பி ஒருருப் பெற்று எவ்வித வேறுபாடுமின்றி இலங்குகின்றது. அவ்வாறே உலகத்துப் பொருள்களைப் பற்றிய பெயர்களும் உயர்திணை, அஃறிணை எனவும் ஆண், பெண்,

பலா். ஒன்று, பல எனவும் விரவிக் கிடக்கின்றன. எனினும் அவற்றின் இயற்கையாய் அமைந்த மரபுகளை இது சிறிது என்றும் இ்.து ஏற்றம் என்றும் வேற்றுமை தோன்றாதவாறு திரிபற்ற சொற்களால் புணா்க்க வேண்டும்.

**மரபுநிலை திரிதல் செய்யுட்கு மரபாகாது**

636. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னான.

(இ-ள்) மரபுவழிப்பட்ட சொல்லினால் செய்யுள் செய்யப்படவேண்டும் என்பது விதியாதலின் மரபுநிலை திரிதல் செய்யுட்கு ஆகாது.

எனவே எந்தவொரு செய்யுளாயினும் மேற்கூறப்பட்ட விதியுள் அடங்குமாறு செய்யப்படவேண்டும் என்பது.

'செய்யுட்கில்லை எனவே, வழக்கினுள் திரியவும் பெறும். அவை வழக்கினுள் ஆணினைப் போத்து என்றல் போல்வன' எனக் கூறுவா் இளம்பூரணா்.

**மரபுநிலை திரிந்தால் பொருள் வேறுபடும்**

637. மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்.

(இ-ள்) செய்யுட்கண் மரபுநிலை திரிந்து வரின் பொருள் வேறுவேறாகும்.

அ்.தாவது சொற்பொருள் வேறுபடும். புலவன் கருதிய பொருளைத் துய்க்க இயலாமற் போகும்.

**வழக்கெனப் படுவது உயா்ந்தோா் மேற்றே**

638. வழக்கெனப் படுவ துயா்ந்தோா் மேற்றே
நிகழ்ச்சி அவா்கட் டாக லான்.

(இ-ள்) இலக்கிய நிகழ்வுகள் அனைத்தும் உயா்ந்தோா் ஒழுகலாற்றோடு கூடி வருவன. ஆதலால் வழக்கு என்பது உயா்ந்தோா் வழக்காற்றையே குறிப்பதாகும்.

எனவே பாயிரத்துள் 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி' என்ற வழியும் வழக்கு என்றது உயா்ந்தோா் வழக்கினையே குறித்து நின்றது. இழிந்தோா் வழக்கு வழக்கெனப்படாது என்பது தெளிவு.

**முதல்நூல், வழிநூல் என நூல் இருவகை**

639. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தான் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

(இ-ள்) மரபுநிலை திரியாத மாண்பினையுடையதாய் இயற்றப்படும் நூலானது முதல்நூல், வழிநூல் என இரு வகைப்படும்.

## முதல் நூல்

640. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

(இ-ள்) இயல்பாகவே வினையின் நீங்கியவனும் விளக்கம் பெற்ற அறிவினையுடையவனுமான முதல்வனால் இயற்றப்பட்டது முதல் நூல் எனப்படும்.

(எ-டு) அகத்தியம்.

## வழிநூல்

641. வழியெனப் படுவ தன்வழித் தாகும்.
(இ-ள்) முதல் நூலினைப் பின்பற்றி இயற்றப்படுவது வழிநூல் எனப்படும்.

(எ-டு) தொல்காப்பியம். இது அகத்தியத்தின் வழிநூல்.

## வழிநூல் இயல்பு நான்கு

642. வழியின் நெறியே நால்வகைத் தாகும்.

(இ-ள்) வழிநூலின் இயல்பு நான்கு வகைப்படும்.

## வழிநூலின் நால்வகை இயல்புகள்

643. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனை மர பினவே.

(இ-ள்) முதனூலாசிரியன் விரித்துச் செய்தததனைத் தொகுத்துச் செய்தலும், தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும், அவ்விரு வகையினையும் தொகைவிரியாகச் சொல்லுதலும், பிறமொழிப் பனுவலைத் தம்மொழியிற் செய்தலும் என வழிநூல் செய்யும் நெறி நால்வகைப்படும்.

அக்காலத்தில் வடநூலினை தமிழில் மொழிபெயர்த்தலே மொழிபெயர்ப்பாகக் கொள்ளப்பட்டது. அதற்கு எடுத்துக்காட்டு கம்பராமாயணம், வில்லிபாரதம் போல்வன.

## இலக்கணநூலின் இலக்கணம்

644. ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலென மொழி நுணங்குமொழிப் புலவர்.

(இ-ள்) கருத்தமைந்த சூத்திரத்தான் இயன்று, உரை வேண்டின் காண்டிகை முதலியவற்றால் பொருட்தெளிவு தோன்றும் படித்தாய் பத்துக் குற்றமின்றி நுண்ணிதாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திரவுத்தியோடு புணரின் நுட்பமான மொழிப்புலமையுடைய புலவர் அதனை நூல் எனக் கூறுவர்.

### இலக்கண நூலுக்கு மேலும் ஓர் இலக்கணம்

645. உரையெடுத் ததன்முன் யாப்பினும் சூத்திரம்
புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்
விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு
புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் படுமே.

(இ-ள்) சூத்திரத்தின் முன்னர் உரையைக் கூறி விளக்கியும் சூத்திரப் - பொருள் குற்றமற விளங்கக் காண்டிகையுரை புணர்த்தும் அவற்றோடு இப்பொருள் இவ்வாறு கூறுக என விதித்தும் இப்பொருள் இவ்வாறு கூறற்க என விலக்கியும் பொருந்துமாற்றால் ஆராய்ந்து இலக்கணநூல் இயற்றவும் பெறும்.

ஆசிரியனால் சூத்திரத்தோடு உரையும் கூட்டி எழுதுப்பெற்ற இலக்கணநூல் மாறன் அலங்காரம்.

### நூற்பாவின் (சூத்திரத்தின்) இலக்கணம்

646. மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி
அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.

(இ-ள்) மேல், தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து யாத்தல் என்னும் நால்வகை யாப்பினுள் ஒன்றை உட்பொருளாகக் கொண்டு சிலவாகிய சுருங்கிய எழுத்துக்களால் இயன்ற செய்யுளாகி செய்யுட்பொருளை விளக்கிக் கூறுதற்கேற்ற உரையினை தன்னகத்தே அடக்கி நுண்ணிய பொருண்மையோடு பொருந்திய சொல்லினதாகிக் கெடுதலில்லாத துணைச் சூத்திரங்களை உடையதாகி அளந்தறிய முடியாத அரும்பொருட் சிறப்பினையுடைத்தாய் பல்லாற்றானும் பயன்மிகவுடையது சூத்திரத்தின் இலக்கணமாகும்.

### காண்டிகை உரை

647. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

(இ-ள்) குற்றமில்லாத சூத்திரம் சொன்ன இயல்பின்படி பொருளை மறைவின்றி விளக்குவது காண்டிகை உரையாகும்.

### காண்டிகை உரை மேலும் ஓர் விதி

648. விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக்காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

(இ-ள்) சூத்திரத்தில் அமைந்த சொற்பொருள் விட்டு விலகுதலின்றிப் பொருந்தி நின்று, சூத்திரம் குறித்து நின்ற பொருளை முடித்தற்கான ஏதுக்களுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் பொருந்தும் முறையில் விளக்கியுரைப்பது காண்டிகை உரையின் இயல்பாகும்.

### விருத்தியுரை

649. சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே.

(இ-ள்) சூத்திரத்துள் சொல்லப்பட்ட பொருள் மட்டுமன்றி அப்பொருளினை நிலைநாட்டுவதற்கு இன்றியமையாததாகி அவற்றொடு தொடர்புடையனவாய் வரும் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து உரைப்பது விருத்தியுரை எனப்படும்.

உரையென்றது விளக்கவுரையையே குறிக்கும் என்பது அறிஞர் முடிபு.

### விருத்தியுரை அமையுமாறு

650. மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமைக் கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்.

(இ-ள்) சூத்திரத்துள் சொல்லப்பட்ட செய்தியினை மாத்திரை முதலாக அடிநிலைகாறும் இடைமறித்து வினவியும் அதற்கேற்ப விடைகளும் உடையனவாகச் செய்து, தனது நூலானும் முந்தைய நூல்களானும் ஐயமும் மயக்கமும் முழுமையாய் நீங்கும்படிச் செய்து தெளிவாக ஒருபொருளைப் பொருத்தமுற எடுத்துரைத்துத் துணிவோடு விளக்குதல் விருத்தியுரையின் இலக்கணமாகும்.

### சிதைவு அல்லது குற்றம்

651. சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை யாயின் மற்றது சிதைவே.

(இ-ள்) மேலே குறித்த சூத்திரம், காண்டிகை, உரை முதலிய இலக்கணங்கள் அனைத்தும் மாண்புற அமையினும் நூலாசிரியரின் கருத்தோடு மாறுபட்டு வரின் அது சிதைவு (குற்றம்) எனப்படும்.

சிதைவு - கூறியது கூறல் முதலிய குற்றங்கள்.

### முதல்நூல் சிதைவின்று

652. சிதைவில என்ப முதல்வன் கண்ணே.
(இ.ள்) முனைவன் செய்த முதல்நூலின் கண்ணே சிதைவுகள் என்பன இலவாம்.

### வல்லோனால் யாக்கப்படாவழி வழிநூல் சிதைவுறும்

653. முதல்வழி யாயினும் யாப்பினுள் சிதையும்
வல்லோன் புனையா வாரம் போன்றே.

(இ-ள்) இசை வல்லோனால் வகுக்கப்படாத இசைப்பாட்டு சிதைவுறுமாறுபோல, முதல்நூலின் வழியே படைக்கப்படும் நூலும் வல்லோனால் யாக்கப்படாதவழிச் சிதைவுறும்.

**நூலுக்குரிய பத்துக் குற்றங்கள்**

654. சிதைவெனப் படுபவை வசையற நாடின்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்று விரியாகும்.

**நூலில் காணப்படும் பத்துக் குற்றங்கள்:**

(இ-ள்)

கூறியது கூறல் - ஒருகால் கூறியதனைப் பின்னும் கூறல்

மாறுகொளக் கூறல் - ஒருகால் கூறிய பொருளோடு மாறுகொள்ளுமாறு பின் கூறல்.

குன்றக் கூறல் - தான் கூறப்போவதாகக் கூறியவற்றுள் சிலவற்றைப் பின் கூறாதொழிதல்.

மிகைப்படக் கூறல் - அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளும் கூறுதல்.

பொருளில கூறல் - முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக்கு ஒவ்வாதன கூறல்.

மயங்கக் கூறல் - கேட்டார்க்குப் விளங்குமாறின்றிக் கூறல். பொருள்

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல் - பொருள் யாக்கப்பட்ட சூத்திரம் சந்தவின்பமின்றி இருத்தல்.

புழித்த மொழியான் இழுக்கக் கூறல் - முன்னோர் பழியுடைத்தென்று வெறுத்து ஒதுக்கிய சொற்களால் குற்றம்படக் கூறல்.

தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல் - மரபு வழியன்றித் தானே ஒன்றைப் படைத்துக்கொண்டு பொருத்தமற மொழிதல்.

என்ன வகையினும் மனங்கோள் இன்மை - எழுத்தினாலும், சொல்லினாலும் பொருளினாலும் பிறருக்குப்

புரியாவகையில் கூறல்.

இவ்வாறு கூறப்பட்ட பத்தும் இவை போல்வன பிறவும் நூலின்கண் அமையும் பத்துக் குற்றங்களாகும்.

### எதிர்மறுத்து உணர்தல்

655. எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே.

(இ-ள்) எதிர்மறுத்து உணரும் வகையில் கூறுவாராயின் அவ்வாறு வருவனவும் குற்றமேயாம்.

(எ-டு) ‘பாவஞ் செய்தவன் நிரையம் புகும்’ என உணர்த்த வேண்டித் ‘தவஞ் செய்தவன் சுவர்க்கம் புகும்’ என்றல்.

இவ்வாறு ‘சுவர்க்கம் புகும்’ என்றதனால் ‘நிரையம் புகும்’ என்னும் கருதிய பொருள் தோன்றாமையான் குற்றமாயிற்று என்பர் இளம்பூரணர்.

‘எதிர்மறுத் துணரின் திறத்தவும் அவையே’ எனப் பாடம் கொண்டு மேற்கூறிய குற்றங்களின்றி அவற்றிற்கு மாறுபட்ட குணங்களுடைத்தாதல் நூலிற்கு அழகாகும் என உரைவிளக்கம் தருவர் பேராசிரியர்.

### முப்பத்திரண்டு உத்திகள்

656. ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்று முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழிதல்
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்
பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகம் கூறல்
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையால் சுருங்க நாடி

மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

**தந்திரவுத்தி முப்பத்திரண்டு:**

நூற்குப் பொருந்திய உத்திவகை முப்பத்திரண்டு. அவையாவன:

**நுதலியது அறிதல்** - சூத்திரத்திற் கூறப்பட்ட பொருளுணர்த்தலன்றி, இதன் கருத்து இதுவென உணர்த்தல் அஃதாவது 'எழுத்தெனப் படுவ' (நான்மரபு -1) என்னும் சூத்திரத்துள் எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல்.

**அதிகார முறைமை** -முன்னர் பலபொருளை அதிகரித்த வழிப் பின்னும் அம்முறையானே விரித்துணர்த்தல். அஃதாவது உயர்திணை அஃறிணையென அதிகரித்து ஆடூஉ வறிசொல் (கிளவியாக்கம் -2) என்னும் சூத்திரத்தான் நிறுத்த முறை பிறழாமல் உயர்திணை கூறல்.

**தொகுத்துக் கூறல்** -வகைபெறக் கூறவேண்டுவனவற்றைத் தொகுத்துக் கூறல்.

(எ-டு) "எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ. தென்ப"

என வரும். இன்னும் பல சூத்திரங்களில் கூறிய பொருளை இத்துணையும் கூறப்பட்டது இதுவெனக் கூறலுமாம்.

(எ -டு) "தூக்கியல் வகையே யாங்கென மொழிப" (செய்யு - 83) என வரும்.

**வகுத்து மெய்ந்நிறுத்தல்** - தொகைபடக் கூறிய பொருளை வகைபடக் கூறில்.

(எ-டு) அவற்றுள்,
அஇஉ
எஒ வென்னும் அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப"

என வரும்.
**மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்** - சூத்திரத்துப் பொருள் பலபடத் தோன்றுமாயின் முற்பட்ட சூத்திரத்திற் கொக்கும் பொருளுரைத்தல்.

**மொழியாததனை முட்டின்றி முடித்தல்** - எடுத்தோதாத பொருளை முட்டுப்படாமல் உரையினால் முடித்தல். இதனை உரையிற்கோடல் என்பர்.

(எ-டு) "சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே" (மரபியல்-105)

என வருதல்.

**வராததனால் வந்தது முடித்தல் -** ஒருங்கு எண்ணப்பட்ட பொருளொன்றனைப் பகுத்துக் கூறியவழி ஆண்டு வராததற்கு ஓதிய இலக்கணத்தை இதன்கண் வருவித்துணர்த்தல்.

**வந்தது கொண்டு வராதது முடித்தல்** - ஒருங்கு எண்ணப்பட்ட பொருளொன்றைப் பகுத்து இலக்கணம் கூறியவழி வராததன் கண்ணும் இவ்விலக்கணத்தைக் கூட்டி முடித்தல்.

**முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றம்** - முற்பட வரிசைப்படுத்திக் கூறிய பொருளை அவ்வகையாற் கூறாது முறைபிறழக்கூறல்.

(எ-டு) எழுத்ததிகாரத்துப் புள்ளிமயங்கியலுள் அத்தகைய சூத்திரங்களைக் காணலாம்.

**ஒப்பக்கூறல்** - ஒரு பொருளெடுத்து இலக்கணம் கூறிய வழி, அதுபோல்வனவற்றையும் அவ்விலக்கணத்தான் முடித்தல்.

**ஒருதலை மொழிதல்** - சூத்திரத்துப் பொருள் கவர்த்துந் தோன்றின் அதனுள் ஒன்றனைத் துணிந்து கூறல். 'ஒருதலை துணிதல்' என்பதும் இதுவேயாம். வடமொழியாளர் இதனை ஏகாக்கரம் என்பர்.

**தன்கோட் கூறல்** - பிற நூலாசிரியர் கூறியவாறு கூறாது தன்கோட்பாட்டால் கூறுதல்.

(எ-டு) "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" (தொல். சொல். சேனா -63)
என வரும்.

**உடம்பொடு புணர்த்தல்** - இலக்கண வகையால் கூறுதலின்றிச் சூத்திரத்துக் கூறிய அமைப்பினையே இலக்கணமாகக் கொள்தல்.

(எ-டு) "ஆரும் அருவும் ஈரோடு சிவணும்" (தொல். சொல் விளிமரபு - 21)
இதன்கண் ஆர், அர் என்பன உகரம் பெற்று வந்ததாகக் கொள்ள வேண்டும்.

**பிறனுடம்பட்டது தானுடம் படுதல்** - பிற நூலாசியன் உடம்பட்ட பொருட்குத் தானுடம்படுதல்.

(எ-டு) 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' (தொல். சொல். வேற்றுமையியல் 1)

**இறந்தது காத்தல்** - மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப்படாத பொருளைப் பின்வரும் சூத்திரத்தால் அமைத்தல்.

**எதிரது போற்றல்** - முன் கூறப்பட்ட சூத்திரத்தானே வருகின்ற சூத்திரத்துப் பொருளையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

(எ-டு) 'ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய
பெற்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய
காண்பவை அவையவை அப்பா வான' (மாபியல் - 51)

**மொழிவாம் என்றல்** - சில பொருளைக் கூறி அவற்றுள் ஒன்றனை இன்னவிடத்துக் கூறுவாம் என்றல்.

(எ-டு) 'புணரியல் நிலையிடைக் குறுகலும்...' (தொல். எழு. மொழி மரபு -2)

என்பதாம்.

**கூறிற் றென்றல்** - பலபொருளால் அதிகரித்தவற்றுள்(வரிசைப்படுத்தப்பட்டவற்றுள்)சிலபொருளை மேற்சொல்லப்பட்டன என்றல்.

(எ-டு) 'மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தனவே யென்மனார் புலவர்' (தொல்.பொரு. செய். - 2)

என வரும்.

**தான் குறியிடுதல்** - உலகின்கண் வழக்கின்றி ஒரு பொருட்கு ஆசிரியர் தாமே பெயரிடுதல்.

(எ-டு) உயர்திணை, அஃறிணை என்பன.

**ஒருதலையன்மை முடிந்தது காட்டல்** - ஒரு பொருளை ஓதியவழிச் சொல்வதற்கே உரித்தன்றிப் பிறபொருட்டும் பொதுவாக முடிந்தமை காட்டல்.

**ஆணை கூறல்** - ஒரு பொருளைக் கூறும்வழி ஏதுவினாற் கூறலன்றித் தன் ஆணையாற் கூறல் .

**பலபொருட் கேற்பின் நல்லது கோடல்** - ஒரு சூத்திரம் பல பொருட்கு ஏற்குமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கோடல்

**தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்** - தொகுத்துக் கூறிய சொல்லினாலேயே பிறிதொரு பொருள் வகுத்துக் காட்டல்.

(எ-டு) 'குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்' (விளிமரபு - 9)

என்னும் சூத்திரத்தால் மொழிமுதற் குற்றியலுகரமும் கோடல்.

**மறுதலைச் சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்** - பிற நூலாசிரியன் கூறின பொருண்மையைக் கெடுத்துத் தன்துணிபு கூறுதல்.

(எ-டு) ஆஈஊஏஐ
ஓஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப (நூன்மரபு -4)

என்றது குற்றெழுத்தின் விகாரம் என்பாரை மறுத்துக் கூறியது.

**பிறன்கோட் கூறல்** - பிற நூலாசிரியன் கொண்ட கோட்பாட்டினைக் கூறல்.

(எ-டு) 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' (வேற்றுமையியல் - 1) என்றல்.

**அறியாது உடம்படல்** - தான் அறியாத பொருளைப் பிறர் கூறியவற்றால் உடம்படுதல்.

(எ-டு) ‘ஏழாநகரம் இத்தன்மைத்து என ஒருவன் கூறியவழி அது புலனாகாதாகலின் அவன் சொன்னதற்கு உடன்படல்.

**பொருளிடையிடுதல்** - ஒரு பொருளைக் கூறியவழி அதற்கு இனமாகிய பொருளைச் சேரக்கூறாது இடையீடுபடக் கூறுதல்.

(எ-டு) “பெண்மை சுட்டிய” (பெயரியல் - 24)

என்றும் சூத்திரம் கூறிவிட்டு அதன் பகுதியாகிய ‘ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி’ என்பதனை இடையிட்டு வைத்தல்,

**எதிர்பொருள் உணர்த்தல்** - இனிக் கூறவேண்டியது இதுவென உணர்த்தல்,

**சொல்லின் எச்சம்**
**சொல்லியாங் குணர்த்தல்** - பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக் கண்டு ஆங்குர் சொல்லியவாற்றால் பொருள் கோடல்.

**தந்து புணர்ந்துரைத்தல்** - முன்னாயினும் பின்னாயினும் நின்ற சூத்திரத்துச் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினும் கொணர்ந்து புணர்ந்துரைத்தல்.

**ஞாபகங் கூறல்** - இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கோடல்.

(எ-டு) ‘அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா’ (நன்னூல் -171) என்புழி ஆகுறிது, மா குறிது எனவும், ஆமா குறிது எனவும் பொருள் படுதல்.

**உய்த்துக் கொண்டுணர்தல்** - ஒரு சூத்திரத்தான் ஓரிலக்கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை யுளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்.

(எ-டு) ‘பனியென வரூஉங் கால வேற்றுமைக்(கு)
அத்தும் இன்னும் சாரியை ஆகும்’ (உயிர் மயங் -39)

என்புழி பனியென்னும் சொற்கு அத்தும் இன்னும் சாரியையாம் எனினும் அவற்றுள் ஏற்பது ஒன்றாதலின் இன்னவிடத்து வருவது இதுவென உய்த்துணர்தல்.

இவ்வாறு ‘நுதலியதறிதல்’ முதல் உய்த்துக் கொண்டுணர்தல் - ஈறாகக் கூறப்பட்டன முப்பத்திரண்டு தந்திரவுத்திகளாகும். (தந்திரம் - நூல் )

நுண்மாண் புலவர் இயற்றியுள்ள நூலினை மேற்சொல்லப்பட்ட உத்திகளோடு கூடப் பொருள் ஆராய்ந்து, சொல்லிய அல்லாதனவாகிய பிற அவ்விடத்து வரினும் சொல்லப்பட்ட நெறியினால் சுருங்க ஆராய்ந்து மனத்தினால் நினைத்து குற்றமறத் தெரிந்து சொல்லிய இனத்தோடு பாகுபடுத்தி உரைத்தல் வேண்டும் என முடிபு கூறுகின்றார் ஆசிரியர்.

‘பிற அவண் வரினும்’ என்பதனால் மாட்டெறிதல், சொற்பொருள் விரித்தல், ஒன்றென முடித்தல், தன்னினம் முடித்தல் என்பனவும், ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, பருந்தின் வீழ்வு என்னும் சூத்திரக் கிடக்கையும், ஆதி விளக்கு, மத்திம தீபம், இறுதி விளக்கு என்னும் பொருள்கோள் நிலையும் கொள்ளப்படும் என்பர் இளம்பூரணர்.

**மாட்டெறிதல்** - முன்னொரு பொருள் கூறிப் பின்வருவதும் அதுபோலும் என்றல்.

(எ-டு) “மெய்யின் அளவே அரையென மொழிப்” (நூன்மரபு - 11)

“அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே” (நூன்மரபு - 12)

என வரும்.

**சொற்பொருள் விரித்தல்** - பதந்தோறும் பொருள் விரித்து வினாவும் விடையும் கூறுதல்.

**ஒன்றென முடித்தல், தன்னின முடித்தல்** - சொல்லப்பட்டவாற்றால் அவைபோல்வன பலவும் விடையாக வருதல்.

**ஆற்றொழுக்கு** - கருதிய பொருள் வழுவாமல் வரிசைப் படக் கூறுதல்.

**அரிமா நோக்கு** - முன்னும் பின்னும் கூறுகின்ற சூத்திரத்தினை இடைநின்ற சூத்திரம் நோக்குதல்.

**தவளைப் பாய்த்து** - இடையிட்டுக் கூறுதல்.

**பருந்தின் வீழ்வு** - பொருத்தமில்லாத பொருள் யாதானு மொரு காரணத்தால் இடைவருதல்.

**ஆதி விளக்கு** - ஆதியில் அமைந்த பொருள் அந்தத்தளவும் ஓடுதல்.

**மத்திம தீபம்** - இடைநின்ற பொருள் முன்னும் பின்னும் நோக்குதல்.

**இறுதி விளக்கு** - இறுதிநின்ற பொருள் இடையும் முதலும் நோக்குதல்.

**மரபியல் குறித்த ஆராச்சியாளர் முடிபு**

இவ்வதிகாரத்துத் தொல்காப்பியர் எழுதியன 635-ஆம் சூத்திரத்துடன் முற்றுப்பெறுகின்றன என்றும், எஞ்சிய 656 ஆறாம் சூத்திரத்தளவும் கூறப்பட்டன (மரபியல் 92 முதல் 112 முடிய 21 சூத்திரங்கள்) பிற்காலத்துப் புலவர் எவரோ எழுதிச் சேர்த்தவை என்றும் ஒருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர். அவர்கள் அவ்வாறு கூறுவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

“செய்யுளியலில் நூலைப் பற்றியும் அதன் பகுதிகளாகிய சூத்திரம், ஒத்து, படலம் என்பவற்றைப் பற்றியும், உரைநடை வகை பற்றியும் விளக்கிய ஆசிரியர் மீண்டும் அவற்றைப் பற்றி மரபியலில் கூறுதல் கூறியது கூறலாம். மேலும் இப்பொருள் பற்றிச் செய்யுளியலில் அமைந்த சூத்திரங்களையும் இவ்வியலில் உள்ள சூத்திரங்களையும் ஒப்ப வைத்து நோக்குங்கால் இவ்விருவகைச் சூத்திரங்களும் சொல் நடையானும் பொருளமைப்பானும் தம்முள் வேறுபாடுடையவாறு நன்கு புலப்படும். எனவே நூன்மரபு பற்றிய இச்சூத்திரங்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பிந்திய காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை எனவும், பிற்காலத்தவரால் எல்லா நூற்கும் பொதுப்பாயிரமாக இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் எனவும், அதனால் பின்வந்த உரையாசிரியர்கள் இச்சூத்திரங்களையும் தொல்காப்பியர் வாய்மொழி எனக்கொண்டு உரையெழுத நேர்ந்தது எனவும் எண்ணுதற்கு இடமுளது” என அவர் விளக்குவர்.

ஆயினும் நூலின் இலக்கணமுணர்த்தும் செய்யுளியல் சூத்திரத்தின் சொல்லமைதியையும் மரபியல் சூத்திரத்தின் சொல்லமைதியையும் நோக்குமிடத்து அவை இருவேறுபட்ட ஆசிரியரால் எழுதப்பட்டனவெனச் கொள்தற்கு இடனின்றி ஒத்தவியல்புடையனவாகவே காட்சி தருகின்றன எனவே செய்யுளியலில் யாப்பு வகைக்கேற்ப அடிவரையறையின்றாயினும் எடுத்துக்கொண்ட அடிக்கண் வடிவுற இன்னின்னவாறு யாக்கப்பட வேண்டுமென வரையறுத்துக் கூறினார், மரபியலில் மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தோடு எல்லா மரபினையும் கூட்டித் தலைமை தோன் உரைத்தார் எனக் கொள்வதே பொருந்துவதாகும். சுருங்கக் கூறில் முன்னோர் நெறியிற் பிறழாது நின்று. இலக்கியம் படைக்கும் படைப்பாளிக்கும் செய்யுட் பொருளினைத் துய்த்துணரும் அன்பர்க்கு மரபியல் ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்கின்றது எனலாம்.

**வினாக்கள்:**

1. உயிர்களின் பகுப்புமுறையை தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.
2. நூலின் இலக்கண மரபு குறித்து எழுதுக.
3. மரபியல் செய்திகளை தொகுத்துரைக்க.
4. இளமைப் பெயர்கள் குறித்து விரிவான விடையளி.
5. நூலின் பத்துவகை குற்றங்களாக தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?
6. முதல் நூல், வழி நூல் என்றால் என்ன?
7. நூலின் இயல்புகள் யாவை?
8. மக்கள் தாமே அறறி வுயிரே – விளக்குக.
9. நூற் சூத்திரம் என்றால் என்ன?
10. மரபியலில் கூறப்படும் ஆண்பாற் பெயர்கள் மற்றும் பெண்பாற் பெயர்களை விவரி.

**முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழியல்துறை**
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி.**